# பால நாகம்மாள் கதை

O-,8MKN3,8
N07
118116

ஓம்.

சற்குருவேபதி.

மீனாக்ஷியருள்பெருக.

# ாலநாகம்மாள் கதை.

இஃது,

தமிழ்ப்புலவராகிய

ஸ்ரீமா -பாலசுருபானந்தசுவாமிகள்

புளந்தராகிய

ம-ா-ா-ஸ்ரீ, வேலூர்

கன்னையநாயுடவர்களால்

இயற்றப்பட்டு,

ம-ா-ா-ஸ்ரீ வேலூர்

புசாமிமுதலியாரவர்களது

சென்னை—குனை,

அமெரிக்கன் டைமெண்ட் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

All Rights Reserved.

1907.

உ

சிவமயம்.

# பாலநாகம்மாள் கதை

## விளம்பரம்.

இக்கதையானது இதுவரைக்கும் நம [illegible] த்தாருக்கும் இன்னுதென் விளங்காதபடி யிருப்பதால் இதை [illegible] ங்கள் அம்மான் நடையாக ஆங்காங்கு சைவமிட்டு செ [illegible] பாஷையிலிருப்பதை தமிழ்பாஷையாகச் செய்திருக்கின்றோம் [illegible] றில் இக்கதைபடித்தால் மாதர்கள் தன்கணவனிடத்திலும் பாலத் [illegible] த்திலும் நடக்கவேண்டிய நீதியும் அஷ்டமா சாகஸம் செய்வதிலும் அமைக்கப்பட்ட அன்புடனும் பதிவிரதாதர்மம் இன்னதென செய்வவையாய் அறிந்திடலாரும் இத்தாரானது மாதர்க்குக்கைக்கண்ணாடி போல் காட்டுகிறதும் இதைபடித்தவர் மனதையும் கரைந்து எவ்வாறு நடக்கவேண்டியதோ அதுபோல் நடக்க மாதர்களுக்கும் புருஷருக்கும் புத்தியுத்திரப்பட்ட கதையாகும்.

[illegible]ஆர் குப்புசாமிமுதலியார்.

வேப்பேரிபொன்[illegible]

நெ. 58. [illegible]

ஓம்.


சர்குருவேநம:

மீனாக்ஷியருள்பெருக.

# பாலநாகம்மாள் கதை.

## காப்பு-வெண்பா.


சீர்பெருகப் பாலநாகம்மாள் சரித்திரத்தை யின்றுயான்
பேர்பெருக அம்மானைப் பேசிடவே—கூர்வடி
—வேலனுக்கு முன்பிறந்த வேழமுகத் தோன்பாதம்
சீலமுடன் நீ கோறு சீர்.



## கணேசர்த் துதி.

ஆதிக்கணபதியே ஆதரிக்கசயமையா
சித்திக்கணபதியே சீர்பாதம்யான் துதித்தேன்
வேழமுகத்தோனே விநாயகனேமுன்னடவாய்
மல்லிமுல்லையிருவாக்ஷி மலர்க்கொண்டுன்பாதத்தை

அல்லும்பகலாக அர்ச்சித்துபூஜைசெய்தேன்
பாதம்பணிந்தேனையா பார்வதிபாலகனே
உந்தனை தியானித்து உலகத்திலின்றுயான்
பாலநாகம்மாள்கதை பண்புடனேசொல்லலுற்றேன்
நாவுத்தவறாமல் நல்லோசைதாருமையா
ஏடுத் தவறாமல் யெழுத்துச்சோராமல்
சொல்லுந்தவறாமல் சத்தியனேகாருமையா
நீயேதுணையென்று நின்றேனேவையத்தில்
வேருந்துணையில்லை வேதாந்தமெய்ப்பொருளே
கார்க்கவுங்காலமையா வரந்தரவேண்டியிது
வந்துவரமருள்வீர் வாக்கினில்குடியிருப்பீர்
ஏழைமுகம்பாரும் இரசமயங்காருமையா
நம்பினவர்களை நாயகனேகாருமையா.



சரஸ்வதிதோத்திரம்.

வெண்பா.


அம்மா சரஸ்வதியே ஆனந்தக் கல்யாணி
நம்பினே னின்றேனம்மா நாதரியே—இம்மையிலே
உன்னைத் துதித்துயான் உலகத்தோர் நான்மதிக்க
கண்மணியேக் கதைச்சொன்னேன் காா்.



வாணிசரஸ்வதி வரந்தரவேணுமம்மா
உன்பாதம்யான் துதித்தேன் உகந்தென்னைக்காருமம்மா
கமலத்திலேபிறந்தாய் காருண்யசுந்தரியே
அண்டத்தொராகாரத்தில் ஆடும்திரிசூலி
வேதப்பொருளே வேதாந்தநாயகியே
சதுர்வேதக்காரணி சஹஸ்ரவேதகாரணி
நாவில்குடியிருக்கும் நாதாந்தபைரவியே
உன்னைத்துணைநம்பி உகந்திப்புவிமீது
பாலநாகம்மாள்கதை பண்புடன்சொல்லலுற்றேன்
குற்றங்களில்லாமல் குடியிருந்துக்காருமம்மா
சொல்லுக்கதிக்காரி சுழிதனிலாடும்தேவி
முக்கோணவிட்டினில் முகந்துதிர்க்கும்கல்யாணி
பிழைகளில்லாமல் பேதைதன்னைக்காருமம்மா
தாய்தந்தைநீயென்று தாரணியில்நம்பினேன்
இரசமயங்காக்கவே ஈஸ்வரியேவாருமம்மா
நாசிமுனியிலாடும் நாயகிசௌந்தரியே
தப்பிதமில்லாமல் தாயேயென்னைக்காருமம்மா
கார்க்கக்கடனுனக்கு கருணைசெய்யவேணுமிது
கண்ணாலேபார்த்துயென்னைக் காருமம்மாசரஸ்வதியே

## கதைச்சங்கம்.

(வசனம்.) ஸ்ரீ கைலாசபதியாகிய சிவசங்கரமூர்த்தி பார்வதி சமேதராய் நந்தி, பிருங்கி, முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிர ரிஷிகளும், புடைசூழ கொலுவமர்ந்திருக்குஞ் சமயத்தில், நாரதபகவான் தன் இருப்பிடம்விட்டு கைலாயத்திற்கு வந்து லோகரக்ஷகனாகிய சாம்பவமூர்த்தியை தியானித்து நிற்கையில், லோகபிராட்டியாகிய உமாதேவி நாரதரைப்பார்த்து ஓ நாரத முனிவரே, நீர் எந்த சமையத்திலும் திரிலோக சஞ்சாரியாய் திரிந்துக் கொண்டு வருவதால், இப் பிரபஞ்சத்தில் மானவ ஜென்மமெடுத்த மங்கைதனில் பதிவிரதை சிரோன்மணியாக இருக்கப்பட்ட பெண் பாவைகள் இருக்கின்றாராயென்று கேட்டமாத்திரத்தில் நாரதமுனி சொல்லத்தொடங்கினார், அம்மா யான் கண்டறிந்தமட்டும் சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லத் தொடங்கினார்.



உமாதேவிக்கு நாரதமுனிவர் பாலநாகம்மாள் கதைச்சொல்வது.


பட்டணமாம் பட்டணமாம் பார்புகழும்பட்டணமாம்
மேற்கேவெகுதூரம் மேன்மையானபட்டணமாம்
காசிக்குமேற்குதிசை கடல்சூழ்ந்தபட்டணமாம்
பூச்சக்கரபட்டணமாம் புகழ்பெற்றானன்று
அஷ்டலட்சுமிகளும் ஆடிக்குடியிருக்கவிடம்
நவபோஜராஜனும் நாடிராஜ்யமாண்டுவந்தார்
மந்திரிபிரதானிகளும் மகிழ்ந்துகட்டியங்கூறிவர
எக்காலங்கொட்டிவர இருப்புறந்தாசியாட
வேதகோஷ்டம்பாட வித்வான்கள்கொண்டாட
செங்கோல்பிடித்துமன்னன் சிறப்புடன்கொலுவமர்ந்து
ஆயிலொருக்கடமை அன்புடன்குடிகளிடம்
பெற்றுவாழ்ந்திருந்தார் பெருமையுடனாட்டில்
வைபோகங்கொண்டு வாழ்ந்திருந்தாரவ்வேந்தன்

பட்டத்துதேவியாகிய லட்சுமிதேவி புதல்வரில்லையென்று
தோழிமாருடன் துயரமடைவது.

இப்படியாகவே இசைந்துமேலட்சுமிதேவி
அந்தப்புரமதில் அன்பானதோழியுடன்
பெரியதோழிதன்னை பிரியமுடன்தானழைத்து



தோழியேநீகேளாய் தோகையின்மனக்கவலை
யென்றன்றுச்சொல்லுவேன் எந்தன்மனக்கவலை
நோர்க்காதநோம்பை நோர்த்தேனேயென்தோழி
ஆதிசிவனுக்கு அறுதினமும்யான்சென்று
எடுக்காதபுஷ்பமெல்லாம் யெடுத்தாயானர்ச்சித்தேன்
காசிதீர்த்தந்தன்னில் கண்டியான்ஸ்நானஞ்செய்தேன்
அன்னதானங்களை ஆவலுடன்யான்செய்தேன்
கானகபூமிதன்னில் கண்டுதண்ணீர் பந்தலிட்டேன்
கோதானம்பூதானம் கெம்பீரமாய்யான்செய்தேன்
இத்தனைகோடிதர்மம் யின்பமுடன்யான்செய்தும்
எதுப்பயனில்லை என்தோழியேதுச்செய்வேன்
இப்படியாகச்சொல்லி யிருகண்ணில்நீர்சொரிந்தாள்
இதைக்கண்டுதோழிதான் இசைந்துமேசொல்லலுற்றாள்
அம்மாவேநீர்கேளும் ஆகாயமேயென்தேவி
அய்யநீட்டவிதிபோலாகுமேயென்தேவி
ஈசன்செயலன்றி யேதும்பலிக்காதம்மா
ஆயாசபடவேதுநீயல்ல துரிதமுடனென்தேவி
இப்படியாகவே தேறுதலைசெய்துவிட்டாள்
அந்தச்சமயத்தில் அந்தப்புரந்தோழிச்சென்றாள்.



(லட்சுமம்மாதேவி தன்கணவன் அந்தப்புரம் வந்தபிறகு
பாலகரில்லையென்று துயரமடைவது)

கொலுச்சாவடிவிட்டு கிருபையுடனவபோஜராஜன்
அந்தப்புரம்வருக அனைக்கண்டுலட்சுமிதேவி
ஜலமெடுத்துயெதிரில்வைக்க தயவுடன்யவ்வேந்தன்
ஸ்நானபானஞ்செய்து சந்தனபொட்டுமிட்டு
நேமவிஷ்ணுடைகளை நிகழுடன் தீர்த்துக்கொண்டு
தங்கத்தட்டிதன்னில் தருந்தக்காய்கறிகளுடன்
மெய்ச்சாதத்துடனே நீர்மோரைக்கொண்டுவந்து
எதிரில்வைக்கவே இச்சையுடன்வேந்தனும்
போஜனமரித்து புகழுடன்யவ்வேந்தன்
மஞ்சத்தின்மீது மன்னவனும்சயனித்தான்
இந்தநல்சமயத்தில் இசைந்துமேலட்சுமிதேவி
ஸ்நானங்கள்செய்து தலையாற்றிக்கொண்டைப்போட்டு
மையிட்டுபொட்டிட்டு மகிழ்பூஷணந்தான்பூண்டு
பட்டுச்சேலைக்கட்டி பகுந்தரவிக்கைதான்போட்டு
தருந்தோழியுடன் தனியறைக்குதான்வந்தாள்
ஏலக்காய்ஜாதிக்காய் இடிலவங்கம்வாள்மிளகு
பாக்குடன்தானிடித்து பக்குவமாய்பொடிசெய்து
கணவனுக்குக்கொடுத்து கூடவெற்றிலைசருள்கொடுத்தாள்
தாம்பூலந்தரித்துமவர் சந்தோஷமாயிருக்கையிலே
கணவன்யெதிராக கருணையுடன்தானமர்ந்து
கேட்டலோநாயகா கிருபையுடனென்வார்த்தை
பல்லக்குயேரிக்கொண்டு பார்முழுதுமாண்டபோதில்
நீதித்தவராமல்நீ செங்கோல்பிடித்தபோதில்
ஆணைகள்கட்டி அரசாண்டிருந்தப்போதில்
அம்மாவென்றழைக்க அருமையாயேதும்காணோம்
அப்பாவென்றழைக்க ஆண்குழந்தைக்காணோமையா
உம்மைப்போல்வேந்தர் உகந்துபாலரைத்தானேபெற்றார்
என்னைக்கண்டபோதும் ... பெற்றுசென்று
இப்படியாக இசைந்தும்மகேட்பாருண்டு
... சொல்லாளும் ... புவிமீது
... பிறந்து ... நின்னா ...
பழுக்காமல்லொன்றுமல் பார்க்கச்செடியலென்று
பாலகில்லாத பாழ்மனையில்போஜனங்கள் ...



அருகேசிபாகேசிகள் அன்புடன்புசிக்கமாட்டார்
காட்டில்மரமாக கடுகாய்வளர்ந்திருந்தால்
தச்சன்வுளியாலே தக்கப்படிசெதுக்குவானே
ஆறல்யென்வார்த்தை அன்புடன்கேளுமையா
வடக்குவெகுதூரம் வளர்ந்திருக்கும்மலைதன்னிலே
ஜடாமுனிமலைக்கு சீக்கிரமாய்போகவேண்டும்
நாகமுனியெதிரில் நான்சென்று தவங்கள்செய்து
புத்திரபாக்கியத்தை பெற்றுவாரேனென்கணவா
அந்தமொழிகேட்டு ஆனந்தவேந்தனும்
எந்தன்மொழிக்கேளாய் இளமயிலேகோதையரே
ஆசைக்கொண்டுநாளும் ஆற்றில்புறண்டப்போதில்
ஒட்டுவதுவொட்டுமே வொட்டாததுவொட்டாது
கானகவழிதன்னிலே கண்மணியேநடப்பாயோ
வெய்யல்பட்டால்தேகம் வேர்க்குமேயுந்தனுக்கு
வரங்கொடுக்கும்சிவப்பெருமான் வந்துக்கொடுப்பாரிங்கு
போகாதேகண்மணியே புத்திகளைகேட்பாயின்று
இந்தமொழிக்கேட்டாள் இளம்பருவலட்சுமியும்
வெய்யலும்தோனுது வேர்வையும்தட்டாது
பரமன்செயலிருந்தால் பாலன்வாய்பெற்றுவாரேன்
இல்லாமல்போய்விட்டால் இசைந்துயனைக்குவாரேன்
இப்படிச்சொல்லவே இசைந்துமேயவ்வேந்தன்
மந்திரியைதானழைத்து மகிழ்ந்துயவர்சொல்லலுற்றார்
பட்டத்துதேவிக்குப் பயித்தியங்கள்பிடித்தப்பா
கானகபூமிச்சென்று கடுந்தவங்கள்தான்புரிந்து
புத்திரபாக்கியத்தை பெற்றுவாராளாம்யென்தேவி
இப்படிபுவிமீது இசைந்துயெவர்செய்தார்கள்
இந்தமொழிகேட்டு யெடுத்துரைத்தான்மந்திரியும்
மன்னர்கேளும் அன்பானயென்வார்த்தை
முந்திப்பெரியவர்கள் முகந்துபுத்திரபாக்கியம்பெற
தேவியும்நாயகனும் தீவிரமாய்ஸ்நானஞ்செய்து
காவியாடைத்தரித்து காடுகளையேசென்று
பரமனைக்கோரியவர் பாரிதவங்கள்செய்து
புத்திரபாக்கியத்தைப் பெற்றுவந்ததுபோலாக

கதைதன்னில்சொல்லிட்டேம் கவர்டு மேயிருக்கிறேன்
போகவிடைத்தாரும் பெருமையுள்ளவென்றாயிக்கு
இப்படியாகவே இசைந்துமேமந்திரிசொல்ல
அந்தமொழிகேட்டு அருகிருந்தகாவலரை
அப்போயழைத்து யரிவேந்தன்சொல்லுற்றான்
காவலரேநீர்கள் கடுகப்புறப்பட்டுயின்று
தேவியுடன்கூடசென்று நீசிரமாய்வருவீரையா
இப்படிச்சொல்லி இசைந்துமேயனுப்பிவிட்டு
கொலுச்சாவடியைத்தேடி கொலுவேந்தன்வருகலானர்
அந்தநல்லச்சமயத்தில் அழகானலட்சுமம்மாள்

(லட்சுமிதேவியம்மாள் தவத்திற்குப்போகுதல்.)

வரிஞள்பல்லக்கு இளங்கொடியாலட்சுமம்மாள்
பல்லக்குவெடுத்தார்கள் பண்புள்ளபோயிகளும்
தாதிகள்புடைசூழ தருந்தமேளம்தான்முழங்க
காலுவீதிகள்தோரும் கலமாகசுத்திவந்தார்
இராமராமாவென்று இராமஸ்மரணைசெய்யலுற்றாள்
பூச்சக்ரப்பட்டணம்விட்டு போகுராள்காளகமும்
ஆறுகளிதாண்டி அன்பானக்காடுதாண்டி
புலிகள்வாழும்காட்டை புதுமையுடன்தான்தாண்டி
சாம்பிராணிவனந்தாண்டி சந்தனத்தோப்பைவிட்டு
ஜடங்கிமகாமுனி மலையருகில்காலும்வந்தாள்
மூன்றுயோசனைதூரம்முகந்தாயுச்சியிருக்குதையா
மூன்றுகாதிகளை மூந்தியமுழந்துக்கொண்டு
கடக்கும்பாதங்களெல்லாம் களிந்துகொப்பளித்தது
பாவிப்பிரம்மன்பெத்தன் ஓலைதனைக்கிழிக்கானே
இராமராமவென்று ஸ்மரித்தாளேலட்சுமிதேவி
ஜடங்கிமுனிமலைக்கு சீக்கிரமாய்வந்தாளே
மகாமுனியருகில் மாதுசெரேன்மனுவிவந்தாளே
பார்த்தாளேமுனிவரை பண்புடன்லட்சுமிதேவி
கண்மூடிவாய்மூடி கலக்கமிட்டுதானிருந்தார்
சிரசிற்புத்துதான் சிறப்புடன்வளர்ந்திருக்க
முனிவன்ஜடாபாரம் முகந்துவேராய்போகுதங்கு
இப்படிக்கொத்தவரின் பெதிராகவந்துநின்று



சரணம்சரணமையா சுவாமியேயன்சரணம்
சரணம்செய்தப்போதிலும் சுவாமிவாய்திறக்காரே
இப்படிக்கொத்தவரை எப்படிபேசச்செய்வேன்
சாபங்களிட்டுயான் செத்தாலும்பெரிதல்ல
அந்தச்சமயத்தில் அப்படியிவிதன்னை
பானையில்தான்போட்டு பண்புடன்ஜலமிட்டு
தனதுமொழுக்காலை தருந்தமடுப்புசெய்து
நீரிட்டுவொலைவைத்து சீக்கிரமாயம்மாது
குயில்குயிலெலுமெரிய தனக்குநேரடவில்லை
அந்தச்சமயத்தில் அழகானமுனிவனும்
இந்தவதிசயத்தை இன்பமாய்பார்த்திருந்தார்
பேசாமல்போய்விட்டால் பெரும்பழிகள்நமக்குச்சுற்றும்
என்றுயிவர்நினைத்து இளங்கொடியாள்வெதிரில்வந்து



ஜடங்கி மகாமுனிவர் லட்சுமிதேவியின் சவிஸ்தாரம் விசாரிப்பது.

எந்தவூரெந்ததேசம் இங்குவரக்காரியமென்ன
நீர்வாருதயமா முனிவர்யிருப்பிடத்தில்
நீவருககாரியமென்ன நீசொடினைசொல்லுமம்மா
இப்படிக்கேழ்க்கையிலே இசைந்துமேலட்சமம்மாள்
அப்பாவென்வார்த்தை அன்புடனேநீர்கேளும்
மேற்கேவெகுதூரம் பூச்சக்கிரபூமிதன்னில்
வாழ்கலபோதுராஜன் வரிசையுள்ளபத்தினியாள்
கோடானதிரவ்யங்கள் குவலயத்திலிருக்குதையா

ஆனைக்குதிரைகள் அநேகோடிருக்குதையா
பல்லக்குரதமும் பக்ஷமுடனிருக்குதையா
இத்தனையிருந்துமேநான் ஏதுபயன்காணவில்லை
கோத்திரம்சொல்வதற்கு குலவயத்தில்பாலனில்லை
சந்தானமில்லாமல் சுவாமியாண்வந்தேனையா
வரந்தருகாவிட்டால் வாழ்வனைக்குயான்போகேன்

வசனம்.

இப்படியெல்லாம் லட்சுமிதேவியம்மாள் சொல்லி முடிந்தவுடனே ஜடங்கிமகாமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

அம்மணிநீகேளாய் அழகுள்ளலட்சுமியே
பாலன்பாக்கியந்தான் பண்மையுடன்வுந்தனுக்கு
பிரமனெழுதவில்லை பாவியானென்செய்வேன்
இந்தவிதமிட்டு [illegible]
ஐயோதெய்வமேயென்று ஆயாசப்பட்டாளே
மலடியென்றென்னை மானிலத்தில்கூறுவாரே
இந்தவுடல்வைத்து இனியெவ்வாறானிருப்பேன்
பாதகியாவியை பக்ஷமுடன்போக்குறேன்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்மாமுனிவர்

வசனம்.

கேட்டீரா! ஜடங்கிமகாமுனிவரே அநேக தினமாயிருந்து என் கணவனை கேட்டப்படியால் சந்தானபலத்திற்கு போகும்படி இன்றைக்கு அருள்செய்தார் நீர் சந்தானபலன் கொடுக்குதீரா யல்லது என்னுயிரை உமது பாதத்தில் விடச்செய்ய சொல்லுகிறீராவென்று மூர்க்கமாய் கேட்டவுடனே முனிவனுக்கு இரக்கமுண்டாகி, சற்று நிதானிப்பாய் யான் சாஸ்திரத்தைப் பார்த்துச் சொல்லுகிறேனென்றுச்சொல்லி சாஸ்திரம் பார்க்கையில் இம்மாதுக்கு பெண்பிறந்தால் தாயிக்கு மரணமுண்டாகும் ஆண்புதல்வன் பிறந்தால் தந்தைக்கு மரணமுண்டாகும் இந்தச் சவிஸ்தாரத்தைச்சொன்னால் ஆயாசமடைவாள் இந்த அவஸ்தை நமக்கேன் நாம் தப்பித்துக்கொள்வது நலமென்று மர்மமாய் சொல்லத்தொடங்கினார்.

அம்மணிநீகேளாய் ஆயாசமடையாதே
பாலன்வரங்கொடுக்க பாரிலென்னாலல்ல
புத்திரபாக்கியம்பெருக புகழுபாயம்சொல்லுகிறேன்



யதென்றுக்கேட்டால் இம்மலைக்குவடபாகம்
ஈசான்யமூலையில் இருக்குதம்மாநாகபுத்து
அந்தப்புத்துமீது அமர்ந்திருக்குதுமாமரம்
அந்தச்செடிதன்னில் அடர்ந்திருக்கும்பழங்கள்தானும்
புத்துக்கும்செடிக்கும் புகழ்வந்தனம்நீசெய்து
செடியிலேதானேறி சிறப்புடன்பழமறுத்துக்கொண்டு
உனதுபட்டணம்சென்று உதயகாலமானவுடன்
சூரியஸ்நானம்செய்து சூக்ஷமபழரசம்பிழிந்து
மும்மூர்த்திகளைநினைந்து முகந்துநீயுமுண்ணுமம்மா
இந்தரசம்வுண்டால் அக்ஷணமேகர்பம்தாங்கும்
இன்னுமொருவார்த்தை அம்மணிசொல்லுகின்றேன்
புத்துதனில்சேஷன் பொருந்திதானிருக்குறான்
பல்தனைக்கொடுப்பானோ பாவியென்னசெய்வானோ
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்லட்சுமி
எந்தன்தலைவிதிப்போல் இப்போதுமுடியுதையா
இப்படிச்சொல்லி இசைந்துநடக்கலுற்றாள்
கைகளைவீசிக்கொண்டு கடுகநடக்கலுற்றாள்
பாவிதெய்வமே பார்மீதுயேன்பிறந்தேன்
பிரக்கசெய்தபாவி இறக்கச்செய்யலாகாதா

வசனம்.

ஸ்ரீராம ராமாயென்று ஸ்மரணை செய்துக்கொண்டுபோகுஞ் சமயத்தில் பிரம்மா விஷ்ணு மகேஸ்வரன் மூவரும் மாறுவேடந்தரித்து இம்மாதுக்கருகில் வந்து எங்கேபோகுறாய் என்றுக் கேட்டவுடன் அம்மாது அய்யாநான் நாகமுனீந்திரன் புத்துக்கு போகுறேனென்றுச் சொன்னவுடனே நாங்கள்வழிகாட்டுகிறோம் வாவென்று அழைத்துக்கொண்டுபோய் அதோ இருப்பது நாகபுத்து அதின்மேலிருப்பது தான் மாஞ்செடி அதோ இருப்பது பாதாள செங்கையென்று லக்ஷ்மிதேவிக்கு காட்டிவிட்டு மூவருமறைந்தார்.

அந்தச்சமயத்தில் அழகுள்ளலட்சுமி
திருப்பிதான்பார்க்க துணைவந்தவர்காணோமே
தவமுனிவர்களோ தனியாகவந்தவர்கள்
தேவாதிதேவரோ துணையாகவந்தவர்கள்
ஆச்சரியமடைந்து ஆயாசந்தானடைந்தாள்
புடவையிருக்கிகட்டி புத்துக்குவந்தனஞ்செய்து
லோகரக்ஷகனே லோபியைக்காருமென்று



லட்சுமிதேவி மாமரத்தில்வந்து வந்தனஞ்செய்து பழம்பறிப்பது.

மாஞ்செடியேறினாள் மகிழுடனம்மாது
ஆசைக்குப்பழங்களை ஆனவரைக்கும்தான்பறித்தாள்
ஏழுபழமேதான் இருந்ததுமடிதன்னில்
அதிகமாசைப்பட்டால் அளவுக்குகொரைவாச்சு
தெய்வசங்கல்பத்தால் இருந்ததுயேழுபழம்
நாசஞ்செயலோ இதுவென்னமாயமோ
என்றுதன்மனதில் யெண்ணிநின்றாளப்போது
இரண்டாந்தடவை ஏறினாள்மரத்தில்
அறுத்தாளேகூடைக்கொள்ள அழகானபழங்களை
செடிவிட்டிறங்கி சோதித்தாள்தன்மடியை
ஏழுபழமன்றி வேறுபழங்காணவில்லை
மூன்றாந்தடவைதான் முகந்துமவ்வாராச்சுது
அந்தச்சமயத்தில் அங்கிருந்தநாகந்தானும்
பணிசெண்டுசிரசுகளை பண்புடன்படமெடுத்து
உந்தன்பிராணத்தை உகந்துக்கொண்டுபோகுறேனென்று
செடியேறிவருவதை சிறப்புடன்பார்த்துவிட்டாள்



தேகம்நடுங்கியது தீவிரமாயப்போது
செடிமீதுவந்ததோர் சேஷனைக்கண்ணோக்கி
அய்யாநாகையா அடியாள்மொழிகேளும்
பாலர்வேண்டுமென்று பாவிமனயிச்சைக்கொண்டு
புத்திரபலத்திற்கு பெருமையுடனிங்குவந்தேன்
புத்திரர்களுண்டான புகழொன்பதாம்மாதத்தில்
நிறைந்தபௌர்ணமிக்கு நீர்வாரும்யென்மேடைக்கு
கண்டத்தைக்கடித்து கருணையுடன்நீர்போவீர்
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்நாகேந்திரன்
சொன்னமொழிதன்னை சுந்தரியேதப்புவாயோ
காலஞ்சென்றுவிட்டாள் கண்மணிமறப்பாயோ
இந்தநல்லமொழிதன்னை இலட்சுமிகேட்டாளே
பிசக்கிநடக்கேனையா பிரியமுள்ளநாகேந்திரா
ஒன்பதாம்மாதத்தில உகந்துநீர்வாருமையா
எந்தனுயிரை உந்தனுக்குயான்தருகின்றேன்
இதுகளைக்கேட்டான் இச்சையுடன்நாகேந்திரன்

(நாகேந்திரன் லக்ஷ்மிதேவியம்மாளுக்கு வரங்கொடுப்பது.)

உந்தனுக்குயேழு உகந்துபெண்கள்தான்பிறப்பார்
கடைசிபெண்ணுக்கு கனநாகம்மாவெனபேருமிடும்
இத்தனைக்கேட்டாள் இசைந்துமேலட்சுமிதேவி
அய்யோதெய்வமே அன்னிதமாகுமா
ஏழுப்பெண்களுமே இருந்தால்பேரைச்சொல்லுமா
ஆண்குழந்தையொன்றிருந்தால் ஆஸ்தானக்கழகாகும்
இந்தமொழிக்கேட்டு எதுச்சொன்னான்நாகேந்திரன்
ஆண்குழந்தைதந்தால் அடர்ந்தவேந்தன்மரணமாவான்
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்லட்சுமி
கணவனில்லாபாக்கியம் காத்திருக்கிதென்னபலன்
பாலனில்லாமல்போகுது பகர்ந்தகணவன்பாக்கியந்தாரும்
இந்தமொழிக்கேட்டு எதுச்சொல்வான்நாகேந்திரன்
உந்தனிஷ்டம்போல உகந்துவரம்யான்தந்தேன்
உந்தனுக்குமாரனுமே உத்தமியேசித்திக்கும்.
இப்படிச்சொல்லவே இசைந்துநாகம்சென்றது
புற்றுக்குள்நுழைந்தது பெருமையுள்ளநாகமன்று

இத்தனைப்பார்த்து இரங்கினாள்லட்சுமிதேவி
மடிதனைசோதிக்க மகிழ்பழம்பேழாச்சு
அதைத்-தங்கபெட்டியில்வைத்து தக்கப்படிபத்திரஞ்செய்தாள்
அந்தவிடம்விட்டு அப்போதேதானடந்தாள்
ஜடங்கிமுனிமலையைவிட்டு ஜடிதியில்தான்வந்தாள்
காமெலைகள்தாண்டி கரும்புவனம்தோப்பைவிட்டு
சாம்பிராணிமலைவிட்டு சந்தனதோப்புவிட்டு
மூன்றும்தினத்திலே பூச்சக்கிரபட்டணம்வந்தாளே
அந்தச்சமயத்தில் அருகிருந்தகாவலரை
இன்பமாய்தானழைத்து எடுத்துச்சொல்லலுற்றாளே
நீங்களிப்போசென்று நிகழுந்தன்வேந்தனுக்கு
எந்தன்வரவைச்சொல்லி இப்பவேவருவீர்கள்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்காவலர்கள்
ஓட்டம்நடையாகச்சென்று ஒருமிக்ககொலுவைத்தேடி
வேந்தனுக்குவந்தனங்கள் வேகமாய்செய்துநிற்க
கண்டானேவேந்தனும் காவலரைப்பார்த்து
ஆரடாகாவலரே ஆஸ்தானம்வந்தீர்கள்
என்னவிசேஷம் எந்தனுக்குச்சொல்லுவீர்
இந்தமொழிக்கேட்டார் இசைந்துமேகாவலர்
அய்யாவேநீக்கேளும் அன்பானயெங்கள்வார்த்தை
உங்களுடையதேவிதான் உகந்துதவஞ்செய்துவாரார்
வரமதைபெற்றுவாரார் வருவதைச்சொல்லச்சொன்னார்
இந்தமொழிகேட்டு எழுந்தானேவேந்தனப்போ
மந்திரிபிரதானிகளை மகிழுடனழைத்துக்கொண்டு
பட்டத்துதேவியை பண்புடனெதிர்கொள்ளவாரார்
எதிராகவந்துமே இருவருஞ்சந்தித்து
நாலுவீதிகள்தோறும் நலமாகசுற்றிச்செய்து
மேளதாளத்துடனே மேன்மையாய்கோலம்வந்து
அந்தப்புரமடைந்து அந்தநல்லசமயத்தில்
தேவிலட்சுமம்மாள் தினமாய்வேளை
திங்கள்பிறைதன்னில் திகழ்கொருப்பொருந்திருந்தாள்
செங்கைதொங்கவன்னமடை கெம்பீரமாய்தானும்வந்தாள்
சூரியஸ்நானமும் அத்தமாஸ்நானஞ்செய்தாள்
பட்டுப்புடவைக்கட்டி பண்புடனேயம்மாளு
தங்கச்சின்னமதை தானிதனைக்கொண்டெரச்சொல்லி



எழுப்பழங்களை இன்பமாய்சார்பிழைந்து
கர்ப்பூரதாபமிட்டு கடுகவந்தனஞ்செய்து
மும்மூர்த்திதேவரை முகந்துதான்நினைந்துக்கொண்டு
நாகசர்ப்பமதை நலமாகநினைந்துக்கொண்டு
ஜடங்கிமகாமுனியை தன்மனதில்நினைந்துக்கொண்டு
ரசம்தன்னையெடுத்துமே இன்பமுடன்தான்குடித்தாள்
அந்தக்ஷிணமதில் யத்தேவிகெர்பமாது
ஒங்கிவளர்ந்திட வுகந்துமேயம்மாது
தசமாதமானவுடன் தேவியும்போது
ஓடிவருவீர்கள் உகந்ததோர்தோழிமாரே
என்றுமில்லாகாசி இன்றுயான்கானலானேன்
பக்கம்பிளக்குதடி பாலன்வந்துருக்குதடி
கால்கள்தடுமாருதடி கண்களும்சோருதடி
இருந்ததுபோலிருந்து இருப்பக்கம்நோகுதடி
அந்தச்சமயத்தில் அருகிருந்ததோழிமாரும்
மருத்துவகிழவிதன்னை மகிழுடனழைத்துவர
ஓட்டம்நடையாகச்சென்று மருத்துவகிழவிதன்னை
பாட்டிநீவாடி பண்புடனேயெங்கள்தேவி
கெர்ப்பவேதனைதான் கெம்பீரமாய்படுகின்றாள்
வாடியென்றுசொல்லி வண்மையுடனழைத்துவர
மருத்துவகிழவிதான் மகிழ்ந்துதேவிதன்னைக்கண்டு
சற்றுநேரமட்டும் சிறப்புடனேபொருத்திருப்பாய்
அப்படிச்சொல்லவே அந்தநல்லசமயத்தில்
பட்டத்துதேவிக்கு பெண்பிள்ளைஜனனமாச்சு



லட்சுமிதேவியம்மாள் புதல்வரைப் பெறுவது.

இப்படியாக வேழப்பிள்ளைதானைப்பெற்றாள்
சிறுவருக்குநலம்வார்த்து சிறப்புடனேபொட்டுமிட்டு
தங்கத்தொட்டிதன்னில் தனிமையுடன்வளர்த்துவிட்டாள்
அந்தச்சமயத்தில் அன்பாலலட்சுமிதேவி
தோழிகளைத்தானழைத்து தோகையரேநீர்களும்
என்கொடியென்றன்பாலை வேந்தனுக்குக்காட்டுவீர்
இப்படிச்சொல்லவே இசைந்துமேமாதர்களும்
பாலகனையெடுத்துவந்து பக்கத்தில்தான்போட்டார்
தாயும்ஸ்தனம்கொடுக்க தக்கபடிபாலருண்ண
இந்தசெய்திதன்னை இசைந்துமேவேந்தன்கேட்டான்
சந்தோஷம்தானடைந்து சம்பிரமாயப்போது
வீதியலங்கரித்து வீதியெங்குந்தோரணமிட்டு
சர்க்கரைகற்கண்டு சிறப்புடன்தான்கொடுத்தார்

வசனம்.

இப்படியாய் வேந்தனுக்கு பாலர்பிறந்தாரென கேள்விபட்டுத சந்தோஷமடைந்து தன் நாடெங்கு மலங்காரஞ்செய்து சர்க்கரைக் கற்கண்டு பூரிக்கொடுத்திருக்குஞ் சமயத்தில் லட்சுமிதேவியம்மாள் தன் பாலருக்கு ஸ்நானம்செய்யவைத்து நெற்றியில் பொட்டுமிட்டு பட்டுபீதாம்பரங்கட்டி தன் பாலரைபார்த்துச் சந்தோஷமடைந்திருக்குஞ் சமயத்தில் வேந்தனந்தப்புரம் வருக அக்காலத்தில் லட்சுமிதேவி நாயகனைப்பார்த்து சொல்லலுற்றாள்.

கேட்டீரோநாயகா கிருபையுடனென்வார்த்தை
பாலனைப்பெற்ற பெருந்தகைநீயுமானீர்
மக்களைப்பெற்ற மாதுமேநானுமானேன்
மூன்றுமாதமிப்போ முழுத்துநடக்குதையா
பாலருக்கானதும் பேரிடநாள்பாரும்
இந்தமொழிகேட்டு வேந்தன்சந்தோஷித்தான்
ஆகட்டும்பெண்ணே அதியவுதயமானபின்பு
கொலுவிற்குயான்சென்று கோரும்படிசெய்கின்றேன்
இப்படிச்சொன்னவுடன் இசைந்துசூரியனுதித்தான்
காலக்கடன்தீர்த்து கடுகவேகொலுநாடி
வேந்தனுஞ்சென்றுமே வீற்றிருந்தார்கொலுதன்னிலே
மந்திரியைத்தானோக்கி மகிழுடன்சொல்லலுற்றார்
கேட்டீருமந்திரியே கிருபையுடனென்வார்த்தை



பாலருக்குப்பேரிட பண்புடன்வேதியனை
அழைத்துவரச்செய்வீர் அன்புள்ளகுருக்களை
அந்தமொழிகேட்டு அப்போதேமந்திரியும்
காவலரைதானழைத்து கடுகவேசொல்லலுற்றார்
காவலரேநீங்கள்சென்று கண்டுமேவேதியனை
வேந்தனழைத்ததாக வேகமுடன்சொல்லிநீங்கள்
அழைத்துவருகுவீர்கள் அன்புடன்வேதியனை
சொன்னவுடனே சேவுகரும்வோடலுற்றார்
வேதியரைக்கண்டு வந்தனஞ்செய்தாரே
ஐயாகுருக்களே அன்புடன்வேந்தனும்மை
அழைத்துவரச்சொன்னார் ஆஸ்தானகொலுவிற்கு
சொன்னமொழிகேட்டுச் சீக்கிரமாய்வேதியரும்
பட்டுக்கரைதோவத்தி பண்புடன்கட்டிக்கொண்டு
பஞ்சாங்கம்கட்டுதன்னை பண்புடன்தானெடுத்து
அக்களில்தானுமவைத்து அப்போநடக்கலுற்றார்
வேந்தன்கொலுவில்வந்து விப்பிரவருஞ்சேர்ந்தாரே
வந்ததோர்விப்பிரவர்க்கு வந்தனஞ்செய்தாரே



போஜமஹாராஜன் தர்பாரில் வேதியர் பாலருக்கு பேரிடுவது.


அய்யாக்குலகுருவே அமருவீராசனத்தில்
இப்படிச்சொன்னவுடன் அமர்ந்தானேயாசனத்தில்
வேந்தனைத்தான்பார்த்து வேகமாய்ச்சொல்லலுற்றான்
அய்யாவேவீரே கேளும் அன்புடன்யென்வார்த்தை
எதுக்குயென்களை இப்போதழைத்தீரையா
அழைத்ததோர்காரியத்தை அன்புடன்சொல்லுமையா
இந்தமொழிக்கேட்டு யெடுத்தாய்சொன்னான்வேந்தனும்
அய்யாவிப்பிரவரே அறியசான்சொல்லுகிறேன்
எந்தன்புதல்வருக்கு இன்பமுடன்பேருமிட
ஏழுப்புதல்வருக்கு இப்போதேபேருமிட
அழைத்தேனுங்களை அன்புடனிந்தவேளை
இந்தமொழிகேட்டு யெடுத்தாரேபஞ்சாங்கத்தை
பஞ்சாங்கப்பார்த்துமே பேருமிடயோசித்தார்
அய்யாவேபாலகரை அன்புடன்கொண்டுவாரும்
இப்படிச்சொல்லவே யெடுத்துவந்தார்பாலகரை
பாலகர்களைப்பார்த்து பார்ப்பாரும்சொல்லலுற்றார்
பேருமிடுகின்றோம் பெருமையுடன்பாலருக்கு
தலைசன்புதல்விக்கு திறமுடன்சொல்லுகின்றோம்
சூர்யநாகம்மாவென்று சொல்லலாகும்பேருதான்
இரண்டாம்புதல்விக்கு யெடுத்ததுசெந்திரநாகம்மாள்
மூன்றாம்புதல்வியை உத்திரகன்னியென்றழையும்
நான்காம்புதல்வியை தக்ஷணகன்னியென்றழையும்
ஐந்தாம்புதல்வியை பத்மசங்கம்பென்றழையும்
ஆறாம்புதல்வியை அழைப்பீர்முனிகன்னியென்று
ஏழாம்புதல்வி இன்பபாலநாகம்மாள்தான்
இப்படிப்பேர்களை இன்பமாயிட்டபின்பு
அந்தச்சமயத்தில் அதிபோஜராஜனும்
பேருமிட்டவிப்பிரவர்க்கு பெருமையுடன்வெகுமதிகள்
மூன்றுவஸ்திரங்கள் முந்தியாககொடுத்துவிட்டார்
வெகுமதிதானடைந்து விப்பிரவரும்நடக்கலானார்
இப்படியாக இருக்குமந்தச்சமயத்தில்
ஆறுவருடமாச்சு அழகுள்ளமூத்தப்பெண்ணுக்கு
பேசதானிருந்தாள் பெருமையுள்ளசூர்யநாகம்மாள்
தாயிடம்வந்து தான்கேட்கலுற்றாளே
அம்மாவேநீரேளும் அன்பாயென்னைப்பெற்றத்தாயே



பூஷணமில்லாமல் புவிதன்னிலிருக்கலாமா
இந்தமொழிக்கேட்டு யெடுத்துச்சொன்னாள்லட்சுமியும்
எந்தனைக்கேட்டால் யேதுபலன்உண்டாகும்
தந்தையைக்கேட்டால் தக்கபடிசெய்வாரம்மா
அந்தமொழிக்கேட்டு யேழ்வரும்நடக்கலுற்றார்
தந்தைக்கொலுத்தேடி இன்பமாய்வருகின்றார்
மக்கள்வருவதை மன்னவனும்பார்த்துவிட்டான்
எதிரில்வந்து பாலரையெடுத்துக்கொண்டு
கண்ணாய்கண்வளர்ந்த கண்மணியேயெங்குவந்தீர்
எங்களைப்பெற்றதோர் இன்பமுள்ளதந்தையே
பூஷணமில்லாமல் புவிதனிலிருக்கலாமா
எங்களைப்போல்மாதருக்கு யேலனமல்லாவோ
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்வேந்தனும்

வசனம்.

இந்தமொழிகளைக்கேட்டு சந்தோஷமடைந்து அன்றாட்டிலிருக்கப்பட்ட கம்மாளனையழைத்து பாலருக்கு தகுந்தபூஷணஞ் செய்யும்படி உத்திரவுசெய்தவுடன் கம்மாளன் சம்மதித்து இரண்டுதினத்தில் பூஷணங்களைக் கொண்டுவந்து கொடுத்துவிட அதை பாலருக்கிட்டு அழகுப்பார்த்து சந்தோஷ மடைந்திருந்தார்.



லட்சுமிதேவியம்மாள் வேதியரைப்பார்த்து பேர்னமி விசாரிப்பது.

இப்படியிருக்கவே இன்பமுடன்வேளர்தினத்தில்
அய்யமென்றுவிப்பிரவன் அன்புடன்வந்தாரே
வந்தவிப்பிரவனை வாஞ்சையுடன்வேந்தன்பார்த்து
அய்யாவிப்பிரவரே அடியாள்வார்த்தைகேளீர்
என்றைக்குபௌர்ணமியெனக்குமேசொல்லுமையா
இந்தமொழிக்கேட்டு யெடுத்துரைத்தான்விப்பிரவனும்
அம்மாயினிமேலும் அய்யநாளிருக்குதம்மா
இந்தமொழிக்கேட்டு யேதுசெய்தாள்லட்சுமியும்
அய்யோமக்களேயென்று அலறிதான்தானழுதாள்
மக்களேவுங்களை மாபாவிகாண்பதெப்போ
எந்தனுக்குமரணமே இப்போயமைச்சுதம்மா
தவமாதவமிருந்துதவப் புதல்வரையானும்பெற்றேன்
பாலர்சந்தோஷத்தை பார்க்காதப்பாவியானேன்
பாலர்கள்வீதியிலே பாலரோடியாடையிலே
தாயில்லாப்பிள்ளையென்று தள்ளிதுரத்தியடிப்பாரோ
எந்தனும்விப்போனால் இன்பமாயுங்கள்தந்தை
மாருகலியாணம் மகிழ்ச்சியாய்தான்செய்து
பத்தினிமொழிகேட்டுப் பாலகரைவெருப்பாரோ
சீருதான்செய்யாமல் சித்திரவதைசெய்வாரோ
இப்படிச்சொல்லி இசைந்துலட்சுமியழுதாள்
இதைகேட்டுவேந்தனும் மதிவேகமாய்வந்தாரே



லட்சுமிதேவி தன்கணவனோடு நாகம்வந்து பிராணம்போகவேண்டுமென்று சொல்வது.



கேட்டீரோநாயகா கிருபையுடனென்வார்த்தை
பாலர்கள்வரத்துக்காக நாகமுனியருகில்சென்று
நலங்களும்யான்புரிய தானதிந்நாகமுனி
மூப்பழங்களை இன்பமாய்க்கைகொடுத்தார்
பழத்தைக்கைக்கொடுத்து பார்த்தாரேநாகமுனி
உந்தன்பிராணமீது இச்சித்தேன்பெண்ணேயென்றார்
அந்தமொழிக்கேட்டு ஆகட்டுமென்றுச்சொன்னேன்
இன்றுதினத்திற்கு பூர்த்தியாச்சுயென்மரணம்
நான்சென்றபிறகு பாலகரைகாப்பீரோ
புத்தியறியாத புகழ்பெற்றப்பாலராச்சே
எப்படியாகவேதான் இப்பாலரைகாப்பீரையா
அந்தமொழிக்கேட்டு அனுருவேந்தனும்
கண்ணீர்ஜலம்விட்டு கண்ணைதுடைத்துக்கொண்டு
கொலுச்சாவடிச்சென்று கொப்பனவேதானமர்ந்து
கேட்டீராமந்திரிமாரே கிருபையுடனென்வார்த்தை
நாளைதினத்திற்கு நடுராத்திரிவேளைதன்னில்
நாகந்தான்வந்து நலமானயென்தேவியை
கடித்துயிர்வாங்கி கடுகவேபோய்விடுமாம்
வாக்குக்கொடுத்துவந்தாள் வண்மையுள்ளயென்தேவி
கொடுத்தவாக்குதன்னை கொப்பனவேபிசகமாட்டாள்
இந்தமொழிக்கேட்டார் இன்பமுள்ளமந்திரிமாரும்
அய்யாவேநீர்கேளும் அன்புடனெங்கள்வார்த்தை
இந்தகெண்டம்தன்னை இப்போதேகார்க்கின்றோம்
அந்தமொழிக்குவேந்தன் ஆச்சரியந்தானடைந்து
தப்பித்துத்தருவீரானால் தாரணியில்தெய்வமென்பேன்


வசனம்.

ஓ மகாராஜனே நீர் துயரப்படவேண்டாம் இதோ யாங்கள் அந்த அம்மணியுடைய பிராணத்தைக் காப்பாற்றித் தருகுரோமென்றுச் சொல்லி அந்தச் சாயந்திரம் தெருக்கோடியில் நாலு இரும்புத்தூணை நட்டு அது மத்தியில் ஏகாந்த பெட்டிசெய்து அந்தப்பெட்டி தன்னில் லட்சுமிதேவியைச்சயனிக்கச்செய்து கதவைமூடித்தாளிட்டு பெட்டிக்குச் சங்கிலிகள்கட்டி மேலுக்குத் தூக்கிவிட்டு அதின்கீழ் அகண்டமான காட்டுக் கட்டைக்கரியை எரியவிட்டு நாலுபுறமும் காவல் சூழ்ந்திருக்க மந்திரியும், வேந்தனும் கண்மேல் ரெப்பையிடா

மல் பார்த்துக்கொண்டிருந்தார் இப்படியிருக்கும் சமயத்தில் நாகம்மா
ளது புத்தைவிட்டு வெளியில் வந்துப்பார்க்க நீயின்வொளியைக்கண்
டு கோபமுண்டாகி தன் பிரேதமறைந்து அந்தலட்சுமி சபனித்திருக்
கும் பேழைக்குள் நுழைந்தபடியே யீச் சொல்லத்தொடங்கியது.

இப்படிச்செய்யலாமா இதுகல்வழியாயமாமோ
அந்தநாளில்சொன்னமொழி அல்பமாய்ப்பென்னலாமோ
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்லட்சுமிதேவி
என்றன் பிழைகளில்லை இப்போதுநாகேந்திரா
பாவிகளிப்படி பலவாராய்ச்செய்துவிட்டார்
என்றுமேலகுற்றமில்லை அய்யனேநீர்கேளும்
உந்தனிஷ்டப்படி யுகந்துமேசெய்யுமையா
இந்தமொழிகேட்டு மேதுச்சொன்னான்நாகேந்திரன்
நீபெற்றபாலகரை நலமாகபார்த்தயோ
பால்குடிக்கும்பாலருக்கு பாலைதான்கொடுத்தாயோ
எந்தன்மொழிகேளும் இன்பமுள்ளநாகேந்திரா
உந்தன்பசியார உகந்துமேபுசியுமையா
இப்படிச்சொல்லவே வெருந்தானேநாகேந்திரன்
கண்டத்தில்கடித்து கடுவிஷத்தைக்குடித்தானே
குடித்தவிஷத்திற்கு கேர்ரதயும்மூர்ச்சையானான்
மாயமாய்போய்விட்டாள் மகிழுடன்புத்திரரு
மூர்ச்சைத்தெளிந்துமே முகந்துமேசொல்லுகிறான்
இன்னமேனோதான் இருக்குறநீர்கள்காவல்தானும்
இந்தமொழிக்கேட்டார் இன்பமுள்ளமந்திரிமாரும்
வேந்தனையப்போது வேகமாய்பார்த்துமே
அய்யாவேநீர்கேளும் அன்பானவார்த்தைதான்
இனிபயமில்லைதான் என்னைப்பெற்றதாயிக்கு
அந்தச்சமயத்தில் அங்கிருந்தகாவலர்கள்
பெட்டியையுடைக்கிறார் பொறுமையுடன்பூமிமீது
பெட்டிக்குள்ளவைதன்னை புகழுடன்திறந்துவிட்டார்
இரத்தவெள்ளமது பூமியில்வோடிடவே
இந்தவிதத்தை வேந்தனும்பார்த்துவிட்டான்
கண்கள்சிவந்து கடுகவிச்சவைத்தெடுத்து
குத்திமரித்தானே கோவேந்தனச்சமயம்






நவபோஜமஹாராஜன் மந்திரிமாருடன் துக்கமடைவது.

அப்பாமந்திரிமாரே அன்பாயென்வார்த்தைகேளீர்
இனிவுடலைவைத்துயான் இவ்வுலகமாளமாட்டேன்
என்-பத்தினிபோனபின்பு பாருலகமாள்வேனோ
என்-தேவிதான்போனபின்பு தேருலகமாளலாமா
போகிறேனெனவென்று போர்வேந்தன்பெழுந்தானே
இத்தனையும்பார்த்திருந்து பெழுந்தாரேமந்திரிமார்கள்
இப்படிசெய்வது இதுநீதியல்லவையா
பாலர்முகப்பாரும் பார்வேந்தாயிவ்வேளை
தாயுமேமாண்டுவிட்டாள் தந்தையும்மாண்டுவிட்டால்
பாலரையார்காப்பார் பார்மீதுயென்கோவே
தாய்மாண்டபிற்பாடு தந்தைகாப்பதுவேண்டும்
இப்படிச்சொல்லியே இருக்கைப்பிடித்துக்கொண்டார்
அந்தச்சமயத்தில் அங்கிருந்தமந்திரிமார்கள்
மந்த்ரக்காரரையழைத்து மந்திரிக்கச்செய்தாரே
எந்தவேலையுமில்லை இளநாகம்கடித்தவிஷம்
அந்தச்சமயத்தில் ஆயாசமடைந்தானே
கண்விழித்துப்பார்த்தான் கருணையுடன்நாயகனை
இரண்டுகரம்தன்னை இன்பமாய்பிடித்துக்கொண்டு
கேட்டீரேநாயகா கிருபையுடனென்வார்த்தை
அறியாதப்பாலகரை அவனியில்விட்டேனிப்போ

சூதுவாதறியாத சுந்தரரைவிட்டேனையா
போகுதுயென்றாவி புகழுடன்கைலாசம்
மாருகலியாணம் மன்னவனேசெய்யவேண்டாம்
மாருதாயார்வச்சுவிட்டாள் மன்னவனேபாலகரை
சீருட்டிபாருட்டாள் சிறப்புபொன்றுசெய்யமாட்டாள்
இந்தமொழிக்கேட்டு இன்பமாய்வேந்தனும்
மாருகலியாணம் மாநிதயஞ்செய்யமாட்டான்
பானுசரதம்சத்தியம் பண்புடன்செய்துதந்தார்
அந்தமொழிக்கு அந்நடைக்கியேதுச்சொன்னாள்
புருடரைநம்பலாமா புகழுடன்பாரின்மீது
சத்தியங்கள்செய்திடுவார் சரசங்கள்யாடிடுவார்
இதுவெல்லாங்கேட்டான் இன்பமாய்வேந்தனும்



லட்சுமிதேவிக்கி நவபோஜமஹாராஜன் சத்தியஞ்செய்வது.

மாதே நீகேளும் மகிழுடனென்வார்த்தை
இதுவேசத்தியம் இனிமேசகேன்னுண்மையிது
எந்தனைமணமிட்ட இப்பெண்ணாயகா
பாலரைதான்வளர்த்து பக்குவமதிந்தபின்பு
தகுந்தபுருடரை தான்பேசிபாலருக்கு
கலியாணஞ்சீர்செய்து காட்சிகள்கண்டபின்பு



மாறுக்கலியாணம் மன்னவனேசெய்துக்கொள்வீர்
இனிபிராணம்நிற்காது யென்பாலரைக்காட்டுமையா
வேந்தனைப்பார்த்து வேககண்ணீர்தானும்விட்டாள்
சங்கராசிவமேயென்று தன்பிராணம்விட்டாளே
இதைக்கண்டுவேந்தனும் இனிதுக்கந்தானடைந்தான்
தாதிகளும்மந்திரிமாரும் தானழுதாரப்போது
நாட்டின்குடிகளெல்லாம் நால்புரமழுதார்கள்
கிழக்குமேடைதன்னில் சிறுவர்கள்யாடிருந்தார்
பழையசாதம்புசிய பாலர்கள்வந்தார்கள்
தாயிருக்கும்மேடைக்கு துரிதமாய்வந்தார்கள்
அம்மாவேயம்மாவே யெங்களைபெற்றதாயாரே
பசியெடுக்குதம்மா பழையசாதம்போடுமம்மா
எங்குபார்த்தபோதில் தாயில்லைமேடைமீது
தாதிகளைதான்பார்த்து தயவுடன்கேழ்க்கலானார்
எங்கள்தாயாரெங்கே யெங்களுக்குச்சொல்லுமம்மா
இந்தமொழிக்கேட்டார் இளம்பிராயதாதிகளும்
பாலரைக்கண்டவுடன் பலதாதிதுக்கங்கொண்டு
துக்கத்தையடக்கிக்கொண்டு மௌனமாயிருந்துவிட்டார்
பதில்மொழிசொல்லாமல் பலதாதிகளிருந்துவிட்டார்
நால்புரந்தன்னில் நலமாகதேடிவிட்டு
பாலநாகம்மாள் பண்புடன்சொல்லலுற்றாள்
அக்காவேநீர்கேளும் அன்புடனேயென்வார்த்தை
மாமன்வீட்டிற்கு மகிழ்ச்சியாய்போய்விட்டாள்
பாணுகண்டிபட்டணம் போய்விட்டாள்நமதுதாயார்
நாய்வரப்போறோமென்று நம்முடன்சொல்லவில்லை
இப்படிச்சொல்லியே மேடைமீதேறிப்பார்த்தார்
வீதிதன்னிலேதான் கும்பலாயிருக்கும்போது
அக்காவேநீர்கேளும் அன்புடன்யென்வார்த்தை
நமதுபட்டணத்தில் மாணிக்கம்விற்குதம்மா
கும்பலாய்ஜனங்களும் கூடிவாங்குறாங்கவிடத்தில்
நாமும்யதைதன்னை நலமாகவாங்கலாமே
நாய்வந்துகேட்டாள் நாணியிலகப்பட்டதென்போம்
விளையாடும்விடத்தில் யகப்பட்டதென்போமே
இப்படிச்சொல்லியே வந்தாரேயப்போது

முந்திராகவந்தாளே மூகக்குருர்யநாகம்மாள்
பெற்றதாயாரைப் பார்த்துவிட்டாள்கண்ணுலே
அப்போதங்கையே அன்பானநாகம்மா
நமதுதாயாரும் நலமாகசெத்துவிட்டாள்
அய்யோதங்கையே அவனியிலெப்போகாண்போம்
மாரிலேயனைத்துக்கொண்டு மகிழ்ச்சியாயழுதாகின்றார்
அன்பானதங்கையே யென்னைபெற்றதாயாரெங்கே
கோடுகொடென்றழுதாள் தோமலைப்பாலகரும்
மேனையேயென்தனை அன்பாய்பெற்றதாயாரே
பத்துமாதம்தன்னை பகர்ந்துயெம்மைசுமந்தாயே
நீரில்லாக்கிணறுதானும் நிலையில்லாபடக்காதானும்
பாரினில்பாதகராக பாவிகள்பிறந்தோமே
தாயென்றபாசையை தாரணியிலமறந்தோமே
அம்மாவேயம்மாவே யென்னைபெற்றதாயாரே
சொன்னடையாரிடுவார்கள் குவலயத்திலெங்களுக்கு
ஆடையாபரணங்கள் ஆர்தானிப்பூட்டுவார்கள்
பொட்டுதானிட்டுயெவர் பெருமைதன்னைபார்ப்பார்கள்
எங்கள்யழகுதன்னை யெவர்கண்டுசந்தோஷிப்பார்
தாயாரில்லாவிட்டால் தந்தையாதரிப்பாரோ
தாயாருக்கல்லவோ சீர்செய்யதான்தெரியும்
புருஷருக்கென்ன சீர்செய்யதான்தெரியும்
இந்தமொழிக்கேட்டு இன்பமாய்தந்தையும்
பாலரைப்பார்த்துயப்போ பகர்ந்துயழுதலரனுர்
நாட்டின்ஜெனங்களெல்லாம் நலமாயழுதனுற்றார்

வசனம்.

இப்படி மரணமடைந்த லட்சுமிதேவியை பாலர்பார்த்து துயரமடைந்து அழுஞ்சமயத்தில் இந்த கோரத்தைப்பார்த்து வேந்தனும் நாட்டின் குடிஜெனங்களும்துயரப்படவே அதின்பிறகு வேந்தன்தன் துக்கமதை ஆற்றிக்கொண்டு நல்லசந்தனக்கட்டை தேவதாரி குங்குமக்கட்டை முதலான கட்டைகளைக் கொண்டுவந்து காஷடமடுக்கி அதில் லட்சுமிதேவியை தகனஞ்செய்து விட்டு கர்மானுஷ்டானங்களை தீர்த்துக்கொண்டு பாலரோடு சந்தோஷமாயிருக்குஞ் சமயத்தில் அப்பாலகரை தாயின்மேல் ஞாபகமில்லாமல் இருக்கும் பொருட்டு கருந்த வாழை மாம்பழம் பலாப்பழம் கிச்சிலி முதலான பழங்களைக் கொண்டுவந்து பாலருக்குக்கொடுத்து சிறப்புடன் வாழுஞ்சமயத்தில்.






நவபோஜமஹாராஜன் தர்பாரில் குடிஜனங்கள்வந்து நீதிசொல்வது.

இப்படியாக இருக்குமந்தக்காலத்தில்
பட்டணத்திலிருக்கும் பலக்குடிஜெனங்களும்
பந்துஜெனங்களும் பலபேர்கொலுவமர்ந்து
அய்யாராஜேந்திரா அன்புடனேநீகேளும்
இப்படியிருப்பது இதுநீதியல்லவே
மாறுக்கலியாணம் மகிழ்ந்துமேசெய்துக்கொள்வீர்
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொன்னான்வேந்தனும்
இப்படிச்சொல்வது இதுநீதியல்லவே
மாறுக்கலியாணம் மகிழ்ச்சியாய்செய்யமாட்டேன்
பாலர்பிழைத்திருந்தால் பெரும்பாக்கியமதுவேயாகும்
எந்தனுடதேவிக்கு இன்பமாயானுமேதான்
சத்தியங்கள்தன்னை செய்துக்கொடுத்தேனே
மரணமடையும்போது மங்கைதான்யென்னைப்பார்த்து
மாறுக்கலியாணம் மகிழ்ச்சியாய்செய்யாதீர்
என்றுமேசொல்லி எந்தனுக்குத்திட்டஞ்செய்தாள்
அந்தமொழிதன்னை யன்பாகத்தள்ளமாட்டேன்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்பரிஜனங்கள்
மாறுக்கலியாணம் மன்னவனேயாடாவிட்டால்
உந்தன்சொனுவிர்க்கு உகந்துயாரும்வருகமாட்டார்
முன்னடைராஜ்யமென்று முகந்துமேசொல்வார்கள்
எங்கள்மொழிக்கேட்டு இன்பமாய்நடவுமையா
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொல்வான்வேந்தனும்
எத்தனைச்சொன்னபோதில் என்புத்திபிசக்கமாட்டேன்

வசனம்.

இப்படியெல்லாம் சொன்னமொழி கேட்ட வேந்தன் சம்மதமடையாமலிருப்பதை மந்திரிமார் தெரிந்துக்கொண்டு வேந்தனுடைய பெரிய புதல்வியான சூர்யநாகம்மாளைப்பார்த்து அம்மா இப்படி வேந்தன் இருப்பது அழகாகுமா நீங்கள் புத்தியறிந்தவர்கள் உங்களுக்கு சீராட்டுவதற்குறிய தாயாரிருந்தால் நலமல்லவா வேந்தனைக்கலியாணஞ் செய்துக்கொள்ளும்படி எத்தனைவிதமோ சொல்லிப்பார்த்தோம். கேழ்க்கவில்லை ஆகையால் உங்கள் தந்தைக்கு உகுந்தப்படிச்சொல்லி மறுக்கலியாணம் செய்துக்கொள்ளும்படி திட்டஞ்செய்வீரென்று சொல்லியதப்பு அம்மொழிக்கேட்டு சூர்யநாகம்மாள் சம்மதமடைந்து தந்தைவருக வெதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

சுந்திரமானதொரு சூர்யநாகம்மாளும்
நல்லதென் றுச்சொல்லி நலமாகயிருக்கையிலே
அவபோது வேந்தன் நாடிகொலுவைவிட்டு
பாலரையினைந்துக்கொண்டு பார்வேந்தன்தான்வருக
தந்தைவருவதை தனிமையுடனிருந்துக்கொண்டு



சூர்யநாகம்மாள் தந்தையை கலியாணஞ் செய்துக்கொள்ளும்படி புத்தி கூறுதல்.



தந்தைக்குயெதிரில்வந்து தலைவணங்கிதெண்டனிட்டு
எந்தனைபெற்றதந்தை இன்பமாய்நீர்கேளும்
சின்னவயதுதனில் சிறப்புடனேயாதரித்தீர்
சரைந்துவயதாச்சு இப்போதுயெங்களுக்கு
சேலைகள்கட்டவும் சிறப்புடன்நீர்வார்க்க
பெண்களுக்குதகுமேதான் புருஷருக்குதகுமோதான்
மறுக்கலியாணம் மன்னவனேயாடிருந்தால்
உங்களுக்குவந்ததேவி உகந்தெம்மையாதரிப்பாள்
ஆகையால்நீரிப்போ அழியவேகலியாணம்
தந்தையேசெய்துக்கொள்வீர் தாரணியோர்தான்மகிழ
இந்தமொழிக்கேட்டு ஏதுச்சொன்னான்மன்னவனும்
அம்மணிநான்பெற்ற அறிவுள்ளபாலகரே
உங்களுக்குயிந்தமொழி உகந்துசொன்னதாரம்மா
உங்கள்புத்தியாலே உவகித்துசொன்னீரு
கர்பனைசெய்தாரோ கருணையுள்ளபாலகரே
நான்பெற்றபாலகரே நாகம்மாநீகேளும்
உங்கள்தாயாருக்கு உகந்துசத்தியம்செய்துதந்தேன்
சத்தியம்பிசக்கமாட்டேன் தாரணியோர்தான்மகிழ
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொன்னாள்நாகம்மாள்
எந்தனுக்குதாயாரை இப்பவேகாட்டுமையா
மாண்டுவிட்டதாய்தானும் மண்டலத்தில்வருவாளோ
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்வேந்தனும்
அம்மாவேநீகேளாய் அன்புள்ளநாகம்மா
உங்கள்தாயார்போலாக உலகத்தில்கிடைக்கமாட்டார்
விரதங்கள்கெட்டபோதில் சுகமடையவேணுமம்மா
இப்படிக்கில்லாவிட்டால் ஏன்கலியாணம்செய்வது
இதுபோலசொல்லிவிட்டு யெழுந்துமேபோய்விட்டார்
இந்தசேதிதன்னை மந்திரிமார்தானறிந்தார்

வசனம்.

இப்படிச் சொன்னமொழிகளை மந்திரிமார் தெரிந்துக்கொண்டு இதற்குத்தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று மனதில்நினைந்து இடு மருந்தெடுத்து எண்ணைதன்னில் கலக்கி தாதிக்கையில் கொடுத்து இதை நாளையதினம் ஸ்நானஞ் செய்யுங்காலத்தில் வேந்தனுக்கு தலைக்குக் தேய்ப்பீரென்றுச் சொல்லிக்கொடுக்கவே அதுபோல் தாதி

கள் பெற்று மறுதினம் உதயத்துக்கெல்லாம் ஸ்நானஞ் செய்யவருக அச்சமயத்தில் எண்ணெய்த்தேய்த்து ஸ்நானஞ்செய்ய வைத்தார் வேந்தன் ஸ்நானம் செய்தப்பிறகு திவ்யபோஜனமருந்தி ரத்தினகசிதமாகிய மஞ்சத்தின்மீது சயனித்துக்கொண்டார்.

அப்போதுவேந்தன் ஆயாசம்தானடைந்து
மஞ்சத்தின்மீது மகிழ்ந்தநித்திரைசெய்தாரே
நித்திரைசெய்யவே நினைப்புற்றுக்கொண்டாரே
கலியாணமென்றுச்சொல்லி கனவுகண்டுதானெழுந்து
இப்படியிருப்பது நலமல்லவென்றுச்சொல்லி
எப்படியாகிலும் இப்புவியில்கலியாணம்
செய்துக்கொள்ளவேண்டும் சிறப்புடனேயிப்போது
என்றுமனமிட்டு யெழுந்துமேகாவலரை
அப்போதானழைத்து அதிவேந்தன்சொல்லலுற்றான்
ஆராடகாவலனே அதிவேகமாய்நீசென்று



நளபோஜவேந்தன் மந்திரியை அழைத்து கலியாணத்திற்கு பெண் தேடும்படி திட்டஞ்செய்யுதல்.

மந்திரிதன்னையே மகிழுடனழைத்துக்கொண்டு
சீக்கிரமாக சிறப்புடன்வாருமப்பா
என்றுமேசொல்லி நினைக்கலாயனுப்பிவிட்டார்



காவலரப்போது கடுகவேவோடிவந்து
மந்திரியெதிரில்வந்து வந்தனந்தான்செய்தார்
ஐயாவேவுங்களை அரிவேந்தனிப்போது
அழைத்துவரும்படி ஆக்கினையிட்டாரே
வாருமையாவென்று வகையுடனழைத்தாரே
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொன்னார்மந்திரியும்
ஆனால்வருகின்றேன் ஆடகாவலனேயிப்போது
என்றுமேசொல்லி யெழுந்தாயந்தான்மந்திரியும்
வேந்தன்றன்னில்வந்து வந்தனங்கள்செய்தாரே
ஐயாவேயிங்களும் அழைத்தக்காரியமேதையா
எங்களுக்குச்சொல்லுமே இன்பமாயிப்போது
இந்தமொழிக்கேட்டு யெடுத்துச்சொன்னான்வேந்தனும்
எந்தன்தேவிபோல உலகத்தில்தேவிதன்னை
இன்பமாய்நீர்சென்று இப்பவேதேடிதான்
கலியாணத்திற்கு கடுகமுடிவுசெய்துவாரீர்
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொல்வார்மந்திரிகளும்
உங்களிஷ்டம்போல ஊகந்துயான்தேடிவாறோம்
இப்படிச்சொல்லியே இசைந்துமேநடக்கலுற்றார்
மந்திரிகளிருவரும் மகிழ்ந்துமேபுறப்பட்டார்
காடுமலைத்தாண்டி கடுகவனங்கள்தாண்டி
ஆறுநதிகள்தாண்டி ஆவலாய்வருகின்றார்
இஞ்சிவனம்தாண்டி இருண்டவனந்தோப்பைவிட்டு
தேசதேசங்கள்தோறும் திரிந்துமேபார்க்கையில்
எங்குபார்த்தபோதில் இணையில்லைபெண்பாவை
ஜயனபட்டணம் நலமாகவந்துசேர்ந்தார்
அந்தநாட்டையாளும் அறிவுபெற்றதவளவேந்தன்
தவளவேந்தன்யெதிரில்சென்றார் தயவுடனமந்திரிகளும்
எதிரில்தான்வந்து இன்பவந்தனம்தான்செய்தார்
இவர்களைக்கண்டவுடன் இச்சையுடன்கேட்கலுற்றார்
எந்தனுடரந்தராஜ்யம் இங்குவரக்காரியமேது
வந்தசங்கதிகளை வகையுடன்சொல்லுமென்றான்
இந்தமொழிக்கேட்டு யெடுத்துச்சொன்னார்மந்திரிகளும்
ஐயாவேநீரேனும் அன்புடனேயெங்கள்...

வடக்கேவெகுதூரம் வாழ்வஜ்ரசக்கிரபட்டணம்
அந்தப்பட்டணத்தை அன்பாகயாண்டுவரும்
[illegible] வேந்தனுக்கு நலமுள்ளமாதுதான்
பாண்டுகுலமடக்கான் மகளாரை தான்செய்ய
இச்சைதான்கொண்டார் இப்பவேவுங்களிடம்
[illegible] மகிழுடன் தருவீரு
இந்தமொழிக்கேட்டு யேதுசொன்னான்வேந்தன்
அப்படியேதருகின்றேன் ஆனதோர்வேந்தனுக்கு
என்னென்னபணிகள்தான் ஈடுதான்கட்டுவீர்கள்
இத்தனைகேட்டார்கள் இன்பமுள்ளமந்திரியார்கள்
அய்யாவேநீகேளும் அன்புடனேயெங்கள்வார்த்தை
காப்புகொலுசுதான் கனமானவொட்டியானம்
பச்சைப்பதக்கமும் பகுர்த்தகெம்புபட்டிகையும்
இப்படிக்கொத்தநகைகள் இன்பமாய்கட்டுவோரும்
இந்தமொழிக்கேட்டான் இன்பமுள்ளதவளவேந்தன்
சந்தோஷந்தானடைந்து சம்பிரமாய்சொல்லலுற்றான்
உங்களிஷ்டம்போல உகந்துமேசெய்துக்கொள்வீர்


வசனம்.

இப்படிச் சொன்னவுடனே மந்திரிகள் சந்தோஷ மடைந்திருக்க அந்தச்சமயத்தில் அவ்வேந்தன் விப்பிரவரையழைத்து நாள் பார்க்கையில்இன்றுயெட்டாம் தினம் சுபலக்னமென்றுச்சொல்ல அது போல் மந்திரிகளுக்கு நிட்டஞ்செய்து எட்டாந்தினத்தில் வேந்தனையும் பந்து ஜனங்களையும் வரும்படி சொல்லியனுப்பி விட்டார் பிறகு போல் மந்திரிமார் புறப்பட்டு பூச்சக்கிரப் பட்டணமடைந்து வேந்தனைப்பார்த்து அய்யா நாங்கள் இந்த ஐம்பத்தைந்து தேசமும் சுற்றிப்பார்த்து எங்கும்மாது கிடையாதப்படியால் கடைசியாக நயனது பட்டணம் பரிபாலிக்கும் தவளவேந்தனிடம் விசாரிக்க அவ்வேந்தனுக்கு மாணிக்கதேவி யென்றொருமாதுயிருந்தது அதைப்பார்த்து அவ்வேந்தன் சம்மதிக்கும்படி மொழிகளாடி நானை எட்டாந்தினத்தில் முகூர்த்தம் வைத்துக்கொண்டு வந்தோமென்றுச் சொல்ல அம்மொழிக்கு சந்தோஷமடைந்து இந்தக்காரியம் உங்கள் தெய்வச் செயலென்று புறப்பட வேந்தனமிட்டான்.

அந்தச்சமயத்தில் அறிவுள்ளமந்திரிகளும்
ஏழுபல்லக்குயெடுத்துமே வெளியில்வைத்தார்



பல்லக்குதன்னிலே பாலனையேற்றிவிட்டு
கூடவுந்தாதிகளை கும்பலாகவருகச்செய்து
மன்னனையலங்கரித்தார் மகிழுடனவ்வேளை
கலியாணபுருடனைப்போல் கடுகவுலங்கரித்தார்
மேளங்கள்தான்முழங்க மிகுநாகசரமூத
போயிகள்தானுமே பல்லக்குயெடுக்கலுற்றார்
ஏழுமக்களுடனே இன்பமாயவ்வேந்தன்
சகலசம்பிரமாக தான்வந்தசேதிதன்னை
கேட்டானேதவளவேந்தன் கிருபையுடனிச்சேதி
பானகநீர்மோரு பக்குவமாய்தான்கொடுத்து
தாகந்தான்தீர்ந்தபின்பு தயவுடனேவிடுதிகாட்டி
விடுதியிலிருக்கச்சொல்லி வேகமாயவ்வேந்தன்
பவளகம்பம்நட்டு பச்சையாகபந்தலிட்டு
நாலுவீதிகளும் நலமாகயலங்கரித்து
முகூர்த்தங்கள்செய்ய முகந்துமேயின்றார்கள்



நவபோஜமகாராஜனுக்கு இரண்டாவதுகலியாணமாகுதல்.

வசனம்.

இப்படி நாடெல்லாம் அலங்கரித்து மாணிக்கதேவிக்கு நலுங்கிட்டு ஸ்நானஞ் செய்யவைத்து பிறகுவேந்தனை அலங்கரித்து கலியாணபந்தலுக்கு வேந்தனை அழைத்துவருஞ் சமயத்தில் மாணிக்கதேவி தாதிகள்.

மாணிக்கதேவிக்கு மகிழுடனலங்கரித்தார்
சம்பங்கியெண்ணெய்க்கொண்டு சாரமாய்த்தலைவாரி
ஜன்னல்பின்னலிட்டு நறுக்குநாகஸ்திரில்லுடன்
இருபாகஞ்செண்பகம் இருவாசில்லாரோஜாவும்
முல்லைமல்லிகையும் குலைமுடிகொண்டைபோட்டு
நெற்றிக்குச்சிட்டிகட்டி கோர்விழிக்குமையெழுதி
கஸ்தூரிபொட்டுமிட்டு கைப்பணிகளாதாரமூட்டி
கடைசிசேலைகட்டி குணமானமாதர்கள்
சுபமென்னுஞ்சொல்லி சுருக்காகபந்தல்தன்னில்
கலியாணப்பெண்ணுடன் கணவனைவிரல்பிடித்து
பந்தக்கால்சுற்றிவந்து பக்குவமாயமர்ந்தாரே

வசனம்.

இப்படிக்கு யிருவரும் அமர்ந்தவுடன் வேதியர் வேதகோஷ்டம் பாடி மாங்கல்யம் தரிக்கச்செய்து பிறகு சேஷையாரிசியிட்டு இருவ ரும் சாறேக்குபோருஞ் சமயத்தில் பாலர்மீது மோசம் வேந்தனுக்கு வருக இதை மாணிக்கதேவி தாயாரறிந்து இப்படி பாலர்மீது மோப களுடைய வேந்தனுக்கு நமது புகல்வியை தந்தோம் ஆனால் இவன் சொல்லி யோபகத்தை மாக்கடிக்கச் செய்யாமல் போவேணுமென்றுச்சொல்லி அந்தப்புர மடைந்தாள் இதற்குள் மாணிக்கதேவி பாலரிடம் வந்து பாலரைப்பார்த்து நிரக சூரியகாகம்மாள் தன் தந்தைக்கு வந்ததேவி யென அறிந்து அமருமடிச்சொல்ல அம்மாது யமர்ந்து அம்மா உங்கள் ஏழுபேர் நாமதேயமேது அடியாளுக்குந் தெரியச்சொல்லு மென்று கேட்க அதுபோல் பாலர்சொல்ல அதற்கு மாணிக்கதேவி சொல்லத் தொடங்கிறாள்.




மாணிக்கதேவி ஏழுபதல்வருடைய துக்கமாற்றி அலங்கரிப்பது.

உங்களுக்குமையிட்டு உகந்தெவரிட்டார்கள்
தலைவாரிக்கொண்டைதான் தாரணியில்யார்போட்டார்
இந்தமொழிக்கேட்டு இசைந்துபாலர்சொல்லலுற்றார்
சிற்றன்னையேநீகேளாய் சிறப்புடனெங்கள்மெழுதி
எங்களைபாருட்ட எவர்பாரிலிருக்குறார்
பிறந்தவுடனேதாயை போக்கடித்துக்கொண்டோமே
எங்கள்தந்தைதானும் இந்தக்கொண்டைபோட்டாரம்மா
எங்கள்தந்தைதானும் இந்தபொட்டுயிட்டாரம்மா
எங்கள்தந்தைதானும் இந்தசேலைகட்டினாரம்மா
தாயைநினைந்து தனிபாலர் துக்கமிட்டார்
கண்ணீர்சொரிய கலங்கயவர்யழுகலுற்றார்
இப்படியிவரழவே யெதிரிருந்தமாணிக்கதேவி
பாலரைதுக்கமாற்றி பண்புடன்சேலையுடன்
கண்களை நுடைத்து கடுகவேபாலருக்கு
ஜலங்கள்செய்யவைத்து தன்மையுடன்தலைவாரி
கொண்டையிட்டுபொட்டுயிட்டு குலங்கசந்தனம்பூசி
ஏழுபேர்பாலருக்கு இன்பசேலைதானுங்கட்டி
நிலைக்கண்ணாடியெதிரில் நிற்கவைத்துபார்க்கச்செய்தாள்
கண்ணாடிதன்னில்பார்த்து கடுகவேசொல்லலுற்றார்
பெண்களுக்கல்லவோ பிரியமதாயிருக்குமம்மா
புருடருக்கென்ன பாலர்சுகம்தெரியுமம்மா
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்மாணிக்கதேவி
சந்தோஷந்தானடைந்து சம்பிரமாய்ப்போகலுற்றாள்

வசனம்.

இப்படியாக மாணிக்கதேவி கங்கணத்துடன் பாலரிடம் வந்து அவரை சிங்காரித்து தேருதலை செய்துவிட்டுபோக ஐந்தாம் தினத் தில் கங்கணம்யவிழ்க்க அதன் பிறகு வேந்தன் இந்நாள் அங்கிட் டிலிருந்து மறுநாள் உதயத்துக்கெல்லாம் புறப்பட்டு பரிஜனங்களு டன் பூச்சக்கிரப்பட்டணம் வருக அந்தச்சமயத்தில் காவலர் யெதி ரே வோடிவந்து பட்டத்துயானை செத்ததென்று சொன்னவுடனே வேந்தன் மந்திரியைப்பார்த்து இதயென்ன விந்தையென்று கேட் டான் அதற்கு மந்திரி ஐயா அதுகாலஞ்சென்று மரணமடைந்துவிட் டது இதைப்பற்றி துயரப்படவேண்டாம் என்றுச் சொன்னவுடன் வேந்தன் மனக்கவலை அடைந்து நடக்கலுற்றான்.



நவபோஜமகாராஜன் பத்தினியோடு தங்நாட்டிற்குவருவது.


பட்டணத்துக்கப்போ பிரியமாய்வந்தாரே
நாலுவீதிகளும் நலங்கோலம்வந்தாரே
சிங்கதுவாரமாக சிறப்புடன்வந்தாரே
அந்தச்சமயத்தில் ஆண்தூலமப்போது
மடமடவென்று உடைந்ததுயெதிராக
இந்தநிசயத்தை பார்த்தீருமந்திரிமாரே
அந்தமொழிக்கேட்டு அங்கிருந்தமந்திரிகளும்
ஏதும்பேசாமல் இருந்தார்களந்தவேளை

வசனம்.

இப்படிச் சொன்னவுடனே சிலமாங்கல்யபெண்கள் கும்புக்கூடி கலியாணப்பெண்ணை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வர அந்தச்சமயத்தில் இடதுகால் வைக்கவே அடுக்கு பானைகள் சாய்ந்துவிட்டது இதைக்கண்டு வேந்தன் கேழ்க்க மந்திரிமார் ஏதும்பேசாமல் மவுனமாய் இருந்துவிட்டார் இம்மாது வந்த தெசையானது பால்பாண்டம் உடைந்தது தொட்டியிலிருந்ததொரு பசுமாடுகள் செத்தது இதை யறிந்து வேந்தன் தனியாக மேடைகட்டி அதில் அம்மாதை இருக்



கச்செய்து வேந்தன் அம்மாதுடன் வசனிக்காமல் வெறுத்து இருக்தான் இப்படியிருக்க டில்லிசேகுவர் வந்து வேந்தனை டில்லி ஜமாபந்திக்கு வரும்படிச்சொல்ல அந்தச்சமயத்தில் வேந்தன் புறப்பட்டுப் போக எத்தனமிட்டான் இதைக்கண்டு மாணிக்கதேவிபாலரையழைத்து அம்மா உங்களை தந்தையழைத்தால் சிரியதாயாரிடம் இருக்குறோமென்று சொல்லுங்கள் என்றுச்சொல்லிவிட அதுபோல் பாலர் தந்தையைப்பார்த்து ஐயா நீர் டில்லிக்குப்போய் வருமளவும் நாங்கள் சிற்றனையிடம் இருக்குறோமென்றுச்சொன்னவுடன் வேந்தன்மாணிக்கதேவியிடம் வந்து பாலரை காப்பாற்றும்படி திட்டஞ்செய்து விட்டுப்போக ஓர்தினம் அமாவாசை வந்தப்படியால் பாலரைப்பார்த்து மாணிக்கதேவி அம்மா நீங்கள் ஒருபொழுதயிருந்து பூர்ணசந்திரனைப்பார்த்துப் புசித்தல்.



மாணிக்கதேவி பாலருக்கு புத்திக்கூறுவது.

சந்திரனைப்போல்புருடன் சிறப்புடனமைப்பானம்மா
இந்தமொழிகேட்டுபாலர் சந்தோஷமடைந்தாரே
இரண்டுமணிநேரம் இச்சையுடனவிருந்து
அந்தச்சமயத்தில் சிற்றனையதான்பார்த்து
அம்மாவேயம்மாவே ஆட்சியுள்ளசிற்றனையே
பசியுமெடுக்குதம்மா பாலர்நாங்கள்தாளமாட்டோம்
அன்னமிடுமம்மா அன்புடனேயெங்களுக்கு
இந்தமொழிகேட்டாள் இன்பமாய்மாணிக்கதேவி
இருடிமுண்டைகளே இப்பவேசமிக்குறேன்
வெட்டுமொட்டுயென்றுதலையில் குட்டினாளப்போது


இந்தயடிப்பட்டு வெண்ணையிட்டார்பாலகரும்
ஐயோதெய்வமேயென்று அழுதுமேகின்றார்கள்
தந்தையின்பின்பற்றி போகாமல்நின்றோமே
இப்படிக்கெல்லாம் ஹிம்சைசெய்வாரென்றறியோம்
தந்தைவோரடிதான் தயவுடனடிக்கமாட்டார்
பெற்றதாயுமெங்களை பிரியமுடனடிக்கமாட்டாள்
இவள்கையாலடிப்பட இட்டானேப்பாவிபிரம்மன்
இப்படிதுக்கிக்க இதுக்கண்டாள்மாணிக்கதேவி
ஏழுப்பேருக்கப்போ இன்பமாய்பாண்டங்களை
பாண்டங்கள்தன்னில் தொண்டிகள்தான்செய்து
ஏழுப்பேர்கையில் இன்பமாய்தான்கொடுத்து
அம்மாவேபாலகரே அன்புள்ளசெல்வமாரே
உபவாசமிருந்து உகந்துநித்திரைசெய்யலாமா
தண்ணீரெடுத்துவருவீர் தயவுடனிப்போது
இந்தமொழிக்கேட்டார் இன்பமுள்ளபாலகரும்
அம்மாவேநீகேளும் அன்புள்ளசிற்றன்னையே
தாகமெடுக்குதம்மா தயவுடனேநீகொடுப்பாய்
இதைக்கேட்டயம்மாது அப்போதுசொல்லலுற்றாள்
தண்ணீரெடுத்துவந்தால் தாகமும்தருகின்றேன்
அப்போதுபாலர்கள் அன்புடனேசொல்லலுற்றார்
பாதைதெரியாதம்மா பண்புடனேதொரைக்குப்போக
இப்படிச்சொல்லியவர் எல்லோருமழுதார்கள்
மாணிக்கதேவியும் மகிழுடன்சொல்லுகின்றாள்



கிணற்றருகில் பாலகர் தாயைநினைந்து துக்கிப்பது.



தெருக்கோடிதன்னிலே தெப்பக்குளமிருக்கிறது
நீங்களுஞ்சென்று நீருடனெடுத்துவருவீர்
அந்தமொழிக்கேட்டு எல்லோருங்கடந்தார்கள்
இன்றைக்குநமக்கு இந்தகஷ்டம்வந்தது
பாவிவயிற்றினில் பெண்ணுப்பிறந்தோமே
பிறந்ததினத்திலே பெருமையுள்ளஎங்கள் தாயார்
கொல்லாமல்விட்டாளே கொடுமையுடனப்போது
தந்தைச்சொன்னமொழியை தரணியில்வெறுத்தோமே
கண்ணில்ஜலமொழுக சடுதிகடந்தாரே
கிணற்றிலருகில்வந்து கொப்பெனவேநின்றுக்கொண்டு
எப்படிமீளுவோம் இன்பமுள்ளயிக்கிணற்றில்
அம்மாடியம்மாடி அன்புள்ளயென்தாயே
பசியுமெடுக்குதம்மா பாவிகளுக்கிப்பேது
எங்கள்பசிதீர்க்க யெவரையுங்காணோமே
வாவென்றழைக்க வையகத்திலாருமில்லை
பிள்ளைகளென்றுச்சொல்லி பிரியமுடன்சாதமீய
ஆரையுங்காணோமே அந்தவனகானகத்தில்
இப்படிச்சொல்லிதான் ஏழுமக்களழுதார்கள்



ஏழுப்பாலகரும் பழவர்க்கங்களைப் பறித்துத்தின்பது.

வசனம்.

இப்படி பாலர் பசியால் பிலாபித்து அழுஞ்சமயத்தில் லட்சுமி தேவி நிரந்தரமாய், மா, பிலா, வாழை, கொய்யா, கிச்சிலி, இப்படிக் கொத்த செடிகளை நிர்மித்ததில் பழங்கள் இருக்கச்செய்ய இச்செ

டிகளைப் பார்த்து பாலர் சந்தோஷமடைந்து செடிகளோடி பழங்களைப்பறித்துத் தின்று கிணற்று ஜலத்தைக்குடித்து பசியாற்றிக்கொண்டு தண்ணீர் குடமெடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு நடக்கலுற்றார்.

தண்ணீர்குடத்தில் தண்ணீர்தான் கிடையாது
பொத்தல்வழியாக போச்சுதுஜலமெல்லாம்
கட்டிபேசேலைகள் கடுகநனைந்ததப்போ
சிறியதாயாரைப்பார்த்து சிறப்புடன்சொல்லலுற்றார்
அம்மாவேகேளாய் அன்புடனெங்கள்வார்த்தை
பானைகளெல்லாம் பொத்தலாயிருக்குதம்மா
இந்தமொழிக்கேட்டாள் இன்பமாய்மாணிக்கதேவி
என்னடிமுண்டைகளே இப்படிசெய்துவந்தீர்
கிணற்றிலுடைத்தீரா கீழப்போட்டுடைத்தீரா
இப்படிச்சொல்லியே இசைந்துகொம்பையெடுத்தாளே
வாடிமுண்டைகளென்று வருகையுடனடிக்கலானாள்
தெரித்தியடிக்க லுற்றாள் சிறுவரையப்போது
இந்தயடிப்பட்டு எதுச்சொன்னார்பாலகரும்
அம்மாசிற்றன்னையே அன்புடனெங்களை
என்னதப்பிதஞ்செய்தோம் இன்பமாயிப்போது
எங்களையடித்ததால் யெவருந்தன்கைப்பிடிப்பார்
தந்தையில்லாவேளையில் தாயிப்படியடிக்கலாமா
ஐயோதெய்வமேயென்று யலறிநடித்தாரே
அழுதுமப்போது ஆயாசமடைந்தார்கள்
அம்மாவேயெங்களுக்கு அன்னம்போடாவிட்டாலும்
தாகத்துக்காகிலும் தயவுடன்தாருமம்மா
இந்தமொழிக்கேட்டு பேதுசெய்தாளத்தேவி
தாகந்தருகின்றேன் தாமதமாயிருப்பீர்கள்
இப்படிச்சொல்லி இசைந்துமேமாணிக்கதேவி
பிழைக்கடைவழியாக பிரியமாய்தான்சென்று
எருக்கங்கள்ளிப்பாலை இன்பமாய்பிழிந்தாளே
சந்துப்பாஷாணத்தை சம்பிரமாய்ப்பொடிசெய்து
மூன்றுமொன்றாய்கலக்கி முகந்துமேகொண்டுவந்து
பாலுடன்தான்கலக்கி பிரியமாய்காய்ச்சினாள்
ஏழுக்கின்னத்தில் இன்பமாய்ஊற்றிவைத்து



வாராய்சூர்யநாகம்மா வகையுடன்தாகங்கொள்ள
செந்திரநாகம்மா சிறப்புடனேவருகுவாய்
பாலநாகம்மா பிரியமாய்வருகுவாய்
சாதமாகநேரஞ்செல்லும் தாகமதைகுடிப்பீரே
இப்படிச்சொல்லவே இச்சைக்கொண்டார்பாலகரும்
ஏழுபேருமப்போது யெடுத்தாரேகின்னங்களை
ஒன்றுமறியாத உத்தமபாலகர்தான்
சூதுவாதறியாத சந்திரபாலகரும்
காப்பியென்றுக்குடித்துவிட்டார் கணமுடனேபாலகரும்
குடித்தவிஷத்தில் குணமுடனேமாரடைக்க
என்னடிசிற்றன்னையே யெங்கள்தலைசுழற்றுதடி
கண்கள்சுழற்றுதடி காந்தல்போல்வேர்க்குதடி
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்மாணிக்கதேவி
எந்தன்கைப்பாலு விஷமாச்சோவுங்களுக்கு
உன்-தந்தைக்குவிஷமாச்சு உங்களுக்குவிஷமாச்சுதோ
பாவிசண்டாளி படுபாவிமாணிக்கதேவி
இட்டுகால்கொண்டு யெட்டியுதைத்தாளே
ஏழுபேரையப்போ யெட்டிமயிர்பிடித்தாளே
சிறியவீட்டில்தள்ளி சிறப்புடன்கதவடைத்தாள்
கதவையும்தாளுமிட்டு கடுகவேசயனித்தாள்
தாயில்லாபாலகர் தத்தளித்தார்வீட்டினில்
தாரைகளும்தள்ளுது நிற்கபாதம்தளருது
பெற்றதாயாரை பிரியமாய்நினைந்தாரே
அந்தச்சமயத்தில் அழகானலட்சுமிதேவி
மாயமாய்தான்வந்து மக்களுக்கப்போது
மாமிதுகொடுத்தவிஷம் பாலாகச்செய்தாளே
அந்தவிஷத்தில் அங்கிருந்தபாலகரும்
தட்டினதுபோலாக அப்போயெழுந்தார்கள்
கொஞ்சநேரம்பொருத்துக் கூப்பிட்டார்மக்களும்
பொழுதுமேபோச்சுதம்மா புகழான்சிற்றன்னையே
கதவைத்திறவம்மா கடுகபசியெடுக்குதம்மா
இந்தமொழிக்கேட்டு இன்பமாய்மாணிக்கதேவி
முண்டைதான்பெற்றெடுத்த மூதேவிபாலருக்கு
சாவுதான்வரவில்லை சண்டாளப்பாலருக்கு
அந்தச்சமயத்தில் அந்தப்பாவிலட்சுமிதேவி

பத்தாயிரைமுளகாய் பண்புடன் தானெடுத்து
அந்தவீட்டில்கொட்டி அக்கினியைமூட்டிவிட்டாள்
இந்தப்புகைதானும் இவர்களைசூழ்ந்திடவும்
மூச்சியும்பேச்சியும் மூக்குமேவாயில்லை
பெற்றத்தாயாரைப் பிரியமாய்நினைத்தார்கள்
மாண்டதோர்லட்சுமிதேவி மக்கள்படும்துயரம்பார்த்து
சாம்பிராணிவாசனைபோல் சப்பிரமாய்செய்துவிட்டாள்
பாலர்கள்செத்தாரென்று பண்புடன்மாணிக்கதேவி
கதவைத்திறந்தாளே கருணையாயப்போது
மக்களும்தான்பார்த்தார் மாணிக்கதேவியை
அங்கம்பசிக்குதம்மா அமுதைநீதாருமே
இந்தமொழிக்கேட்டாள் இன்பமாய்மாணிக்கதேவி
சொல்லத்தொடங்கினாள் சுந்திரப்பாலருக்கு
மக்களேநீங்களும் மகிழுடனென்வார்த்தைகேளீர்
உபவாசமிருந்து உலகத்தில்பலனென்ன
கோவிலுக்குப்போகாமல் கொப்பனவேசாதந்தின்றால்
விருப்புருடன்தான் விருபையுடனம்மப்பானம்பா
கோவிலைத்தான்தேடி கொப்பனையேபோகலாம்
எல்லோரும்வாருமே இன்பமாய்ப்போகலாம்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்பாலகரும்
சம்மதமடைந்து தாயென்றுபுறப்பட்டார்
ஏழுப்பேருடனே இன்பமாய்மாணிக்கதேவி
காட்டுமார்க்கமாக கடுகநடக்கலானார்
ஆனைப்புலிகள் அன்பாய்வாழுங்காட்டினில்
ஒண்டிக்கோவிலைக்கண்டால் உகந்துமாணிக்கதேவி
கோவிலருகில்வந்து கோவில்கதவுதான்திறந்தாள்
மக்களேநீங்கள்சென்று மாதேவியெதிரில்நின்று
நல்லபுருடரை நலமாயமைக்கச்செய்யுமென்று
வந்தனங்கள்செய்து வாருவீரென்றுச்சொல்ல
அந்தமொழிக்கேட்டு அன்பாகப்பாலகரும்
நல்லதுயென்றுச்சொல்லி நடந்தாரேமக்களும்
ஏழுப்பேருமாக இன்பமாய்கோவிலுக்குள்
போனவுடனே பொல்லாதச்சண்டாளி
பாதகிசண்டாளி படுபாவிமாணிக்கதேவி
கதவைத்தான்மூடி கடுகவேதாளிட்டாள்





கோவிலுக்குள் பாலகர் துயரமடைவது.

அந்தச்சமயத்தில் அங்கிருந்தப்பாலகரும்
ஐயோமுறையோவென கூச்சலிட்டழுதாரே
அம்மாசிற்றன்னையே அநீதம்செய்யலாமா
இப்படிச்செய்வது இதுவுனக்குத்தர்மம்மா
இந்தமொழிகளை இதுகேட்டாள்படுப்பாவி
கேளாமல்வந்தாள் கொடும்பாவிதன்மனைக்கு
ஏழுமக்களுமேதானிருந்தார் இருள்தன்னில்
எந்தனைப்பெற்ற இன்பமுள்ளதாயாரே
நாங்கள்பிறந்தபோது நலமானபிராணமதைத்
போக்காமலேன்வைத்தாய் பொல்லாதப்பாதகரை
இந்தஇருள்தன்னில் இம்சைகள்செய்தாளே
எங்கள்கஷ்டத்தை இனியார்தான்தீர்ப்பவர்

இப்படித்துக்கிக்க இதுக்கண்டாள்லட்சுமிதேவி
அந்தகோவிலுக்குள் அமைத்தாளேதென் கூண்டை
பிராணங்கள்போகாமல் பாலரைக்காப்பாற்றிவிட்டு
டில்லிபட்டணத்துக்கு சிறப்புடன்போய்விட்டாள்
அந்தச்சமையத்தில் அந்தநல்லகாலத்தில்
நவபோஜமகாராஜன்களிந்து நித்திரைசெய்திருந்தார்
நித்திரைதன்னிலே நிலமாகத்தான்சென்று
எழுந்திருப்வேந்தனே யென்பாலரெங்கேதான்
பாலரைவொப்பிவித்து பண்புடன்நானிரந்தேன்
காட்டில்கலக்கிவிட்டு கலக்கமுடன்நீருமே
நித்திரைசெய்யதான் உன்மனதுக்கொண்டீரோ
என்றுமேசொல்லி அரைந்தாளேமுதுகுதன்னில்
அடிப்பட்டமாத்திரத்தில் அலர்ந்தெழுந்தான்வேந்தனும்
அந்தச்சமயத்தில் அருகிருந்தமந்திரிமாரை
தானுமழைத்துதன்மையுடன் சொல்லலுற்றார்
கேட்டீரோமந்திரி கிருபையுடனென்வார்த்தை
செத்துவெகுநாளாச்சு சிறப்புடனேலட்சுமிதேவி
எந்தகாலத்திலும் யென்கினவில்வந்ததில்லை
இன்றுக்கினவில்வந்து இன்பமாயென்முதுகில்
இரண்டுகைகள்கொண்டு இன்பமாயடித்தாளே
பார்த்தீரோமந்திரிகளே பண்புடனென்முதுகை
பாலருக்கென்னமோ பலகஷ்டம்வந்ததங்கு
ஆகையாலென்கினவில் அன்புடன்தான்வந்தாள்

வசனம்.

மந்திரிகளே பாலருக்கு ஏது அபாயம் வந்ததோ தெரியவில்லை ஆகையால் நான் இராஜ்யத்துக்கு போகின்றேன் நீங்களிருந்து ஜமா பந்திப் பார்த்துக்கொண்டு வருவீரென்றுச் சொல்லி விட்டு டில்லி பாலூநாவைக் காணுதப்படிக்கி வேந்தன் புறப்பட்டு கடைவீதி வந்து பாலருக்கு வேண்டிய பழதினுசுகளை வாங்கிக்கொண்டு ரதகெஜதுரக பதாதிகளுடன் புறப்பட்டு தன் தேசம்வருஞ்சமயத்தில் தன்மேடையைப் பார்க்க பாலரைக் காணுதப்படிபரம் துக்கமடைந்து சொல்ல லுற்றான்.

வெளியேதான்போய்வருக வேகமாய்பாலகரும்
தந்தைவாருரென்று தனிவழிப்பார்ப்பரே



அப்படிப்பார்ப்பவரை இந்தவேளைக்காணோமே
பாலருக்கென்னமோ பார்மீதுகஷ்டங்கள்
என்னவந்ததோ யேதுமறியோமே
இப்படிச்சொல்லி இசைந்துமேடையுருந்தார்
பாலரையப்போது பண்புடனழைத்தாரே
பேருமிட்டுயழைக்க பெருமையுள்ளப்பாலகரும்
ஆருமில்லாதப்படியால் யேதுசெய்தானவ்வேந்தன்
நால்புரம்பார்த்தானே நலமுடனவ்வேந்தன்



நவபோஜ மஹாராஜன் மாணிக்கதேவியை பாலகர்
எங்கேயென்று கேட்பது.

வசனம்.

இப்படி நால்புரமும் பார்த்து எங்கும் தன் பாலரைக்காணுதப் படியால் மனவியாகூலமடைந்து மாணிக்கதேவியை அழைத்து அடி மாதே யென்பாலகர் எங்கேயென்றுக் கேட்டமாத்திரத்தில் இம்மொழிகேட்டு மாணிக்கதேவி ஓ நாயகா! உனது பாலகரை கேட்டீரே தவிர என்னை விசாரிக்காமல் போனீரே ஆனல் நமது பாலகரை லட்சுமிதேவி வந்து என்னையடித்து அலங்கோலஞ் செய்து பாலகரை அழைத்துக்கொண்டுப் போய்விட்டாள் என்றுச் சொன்னவுடனே வேந்தன் நிஜமென்று எண்ணமிட்டு ஐயோ தெய்வமே எங்குக்கொண்டுபோய்ப் பாலகரை ஒளிந்து வைத்திருக்கின்றளோ என துக்க

மடைந்து பல்லக்கு ஏறிக்கொண்டு காட்டுமார்க்கமாய் போகுஞ்சமய த்தில் அநேக விடங்களில் தேடவே அகப்படாமல் போனதால்சோக மடைந்து சிலதூரம் நடக்கலானார் அந்த மார்க்கத்தில் பாலகர் பாதக் குறி இருப்பதைப்பார்த்து சந்தேகமுற்று அம்மார்க்கமாகவே ஓ தூர் யநாகம்மா! ஓ செந்திராநாகம்மா! ஓ பாலநாகம்மா! என்றுபெயரிட்டு அழைத்த மாத்திரத்தில் கோவிலுக்குள் அகப்பட்டிருந்தபாலகர் வே ந்தன் துவனியைக்கேட்டு தந்தையென்று சொல்லத்தொடங்கினார்.

எங்களைப்பெற்ற இன்பமுள்ள தந்தையே
இந்தநல்லகோவில்தன்னில் அடைப்பட்டிருக்குறோம்
எங்களைப்பெற்று இப்படி விடலாமா
இந்தமொழிதானும் வேந்தனுங்கேட்டானே
ஓட்டம்நடையாக வோடியேதான்வந்து
கதவுதன்னைத்திறந்து கடுகவேபார்க்கையிலே
மக்கள்கோலத்தை மன்னவனும்பார்த்துவிட்டு
குப்போமுறையோவென கூவியழுதானே
பாலரையழைத்துக்கொண்டு பண்புடன்நாட்டிற்கு
தானுமேவந்து தன்ராமலிருக்கையிலே
அந்தநல்லச்சமயத்தில் அரிவேந்தன்பாலகரை
தினமொருமேனியாய் தேடிவளர்த்தாரே
இப்படியாகவே இருக்குமந்தச்சமயத்தில்
வேந்தனும்ப்போ விடியபோஜனம்தான்செய்து
தாம்பூலம்தரித்தான் தானறிந்தாள்நாகம்மாள்
தந்தையேயெனக்கு தயவிடியம்தான்தாரும்
இசைந்துமேவேந்தன் இன்பமாய்தருகவே
மறுவிசைகேழ்க்கவே மன்னவன்கோபித்து
அம்மணியென்னே ஆயாசம்படுத்துகிறாய்
உங்களுடையதாயார் உகந்தும்மைக்கொண்டுப்போய்
கானகத்தில்வைத்திருக்க கருணைதங்குமுகம்பார்த்தோ
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்நாகம்மாள்
தந்தையேகேளாய் தயவுடனென் வார்த்தை
டில்லிக்குநீரே நிகிரமாய்போனவுடன்
மறுநாள்தினத்தில் மங்கைமாணிக்கதேவி
எங்களைப்பார்த்து இசைந்துமேதானழைத்து
மக்களேநீங்கள் மகிழுடனேயின்றைக்கு



பூர்ண அமாவாசை புகழுடனொருப்பொழுது
இருப்பீர்களென்றுச்சொல்லி திட்டஞ்செய்தாள்யெங்களை
அப்படிச்சம்மதித்து அனைவருமிருந்தோமே
அந்தியானவுடனே அம்மாவேயெங்களுக்கு
பசிக்குதுயென்றுகேட்டோம் பண்புடனம்மாது
இல்லிப்பானைதந்து சிறப்புடனேயெங்களை
தண்ணிக்கொண்டுவருகதான் திட்டமுஞ்செய்தாளே
தண்ணிப்பாண்டத்தில் தண்ணியில்லாமல்போகையிலே
எங்களையடித்து இம்சைசெய்தாள்பாதகி
பசிக்குதுயென்றுகேட்டோம் பண்புடனுங்கள்தேவி
விஷத்தைக்கலக்கியே விஷக்காப்பிதான்கொடுத்தாள்
அத்தைதயுங்குடித்து அப்போதுப்பிழைத்தோமே
இப்படியிவர்கள் இசைந்துசாகவில்லையென்று
சின்னவீட்டில்போட்டு சிறுமிளகாய்தான்கொட்டி
தீயிட்டுயப்போது தேடியேதாளமிட்டாள்
ஈசன்கருணையால் இருந்தோமேயிருட்டனே
இப்படிநாங்கள் இசைந்துசாகவில்லையென்று
மறுநாள்யுதயத்தில் மங்களமாயெங்கள்வர
எங்களைப்பார்த்து மாணிக்கதேவியும்
அருமையுள்ளபாலரே அன்பாய்நீங்களுமே
கோவிலுக்குவாருவீர் கொப்பனேவேபோய்வருவோம்
என்றுமேயழைக்க இசைந்துமேநடக்கலானோம்
கானகமார்க்கமாய் கடுகவேயழைத்துவந்து
பாழானகோவில்தன்னில் பார்க்கவேதள்ளிவிட்டு
கதவைமூடியப்போ கனதாளமிட்டுப்போனாள்
இப்படியிருக்க யிசைந்துதாய்மேல்சொல்லலாமா
எங்கள்தாயுடனே இன்பமாய்நாங்கள்போனால்
உங்களுக்குபகப்பட்டு உகந்துமேவருவோமா
இந்தமொழிக்கேட்டு யெங்குமில்லாக்கோபங்கொண்டு
கண்கள்சிவக்க கடுமீசைதான்பதைக்க
பாவிச்சண்டாளி படுப்பாவிமூதேவி
இப்படிச்செய்தாளா இசைந்துமேயுங்களை
தேவிசொன்னமொழி தேடியிப்போவந்தது

வசனம்.

இப்படிப்பாலகரை வேந்தன் அழைத்து வந்து தினமொருமே னியும் பொழுதொரு வண்ணமாய் வளர்த்துக்கொண்டிருக்கும் சமயத்

தில் மாணிக்கதேவி தன் தாயாருக்கு வேந்தன்மொழி யாடாமலிருப்பதும் தன் மனைக்கு வாராதிருப்பதும் கடிதமொன்றாயெழுதி சேருவர் வசம் கொடுத்தனுப்ப காவலர் கடிதம் கொண்டுவந்து நயனப்பட்டணத்தில் இராநின்ற தவளவேந்தன் பட்டத்துத்தேவியாகிய குறவஞ்சியிடம் கொடுக்க அம்மாது அதை வாசித்துப்பார்த்து உடனே இடு மருந்தெடுத்து டப்பியில் அடைக்கச்செய்து ஓர்கடிதத்தில் இம்மருந்தை நின்னுடைசாதத்தில் இடும்படியெழுதி காவலன்வசம் கடிதம்கொடுத்தனுப்ப அக்கடிதம் கொண்டுவந்துகொடுக்க மாணிக்கதேவியதை வாசித்துப் பார்த்து சந்தோஷமடைந்து அதுபோல் செய்ய வெத்தனமிட்டு இருக்குஞ்சமயத்தில் மருந்திடும் காலம்பார்த்துக் கொண்டிருக்க ஓர்சமயத்தில் வேந்தன் ஸ்நானம் செய்யப்போன காலத்தில் மாணிக்கதேவி அம்மருந்தை சாதத்தில் கலக்கிவிட்டு தன் மனைக்கு வந்து விட்டாள் உடனே வேந்தன்வந்து சாதம் சாப்பிட்டு நித்திரைச்செய்ய அந்தப்புரஞ்சென்றார் இப்படியிருக்க.

மருந்துமயக்கத்தால் நித்திரைக்கொள்ளாமல்
மாணிக்கதேவிமீது மயக்கமுங்கொண்டானே
மக்களையொண்டியாக மன்னவன்விட்டுமே
மாணிக்கதேவிவாழும் மாளிகைக்குதானும்வந்தான்
அந்தச்சமயத்தில் அந்தநல்லமாதுமே
கதவைதான்தாழிட்டு கொப்பனவேநித்திரைசெய்தாள்
கதவண்டைவேந்தனும் கருணையாய்தான்வந்து
மாணிக்கதேவியென்று மன்னவன்கதவிடித்தான்
இதனையுங்கேளாமல் இருந்தாளேயம்மாது
மறுபடிவேந்தனும் மகிழ்ககதவைதானிடித்தான்
இந்தசப்தம்கேட்டு யெழுந்துமேயத்தேவி
இந்நேரவேளையில் இந்தநல்லகதவுதன்னை
தட்டுகிறதாரேதான் தயவுடன்சொல்லுமே
இந்தமொழிக்கேட்டு வதுச்சொல்வான்வேந்தனும்
என்னடிமாதரசே இளங்குயிலேகண்மணியே
கதவைதான்திறப்பாயடி கருணையாயிப்போது
அந்தச்சமயத்தில் அம்மாதுசொல்லலுற்றாள்
இத்தனைநாளாக யெங்குதான்போயிருந்தீர்
என்னைமறந்தீரோ பொன்சுகம்விட்டீரோ
பாலரைவிட்டுநீ பட்சமாய்வந்தீரோ
ஒண்டியாய்விட்டவரை உத்தமரேவருநலாமா



போகுவீர்போகுவீர் பொழுதாகிப்போச்சுது
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்வேந்தனும்
இனியுன்னைமறக்கமாட்டேன் இதுநிச்சயமென்றுநம்பு
மோகத்தைதீர்ப்பாயடி மோகனமாணிக்கம்
இதுவெல்லாங்கேட்டாள் இளமயில்தோகையரும்
அப்போதுசொல்லலுற்றாள் ஆனபூருவேந்தனுக்கு
நானும்தான்வேண்டுமானால் நலமுடனேபாலகரை
இந்தச்சமயத்தில் இப்போதுநீசென்று
பாலரைக்கொன்றுவிட்டு பக்ஷமாயிங்குவந்தால்
கதவையான்திறப்பேன் கருணையாயிப்போது
வேந்தனுங்கேட்டானே வேகமாயம்மொழியை
பத்துமாதம்சுமந்து பாரதவம்யான்செய்து
பெற்றப்பாலகரை பிரீதியாய்மனம்வந்து
எப்படிக்கொல்வது பென்மனம்தான்வருமா
இப்படிச்சொல்வது இதுநீதியல்லமாதே
உந்தன்பாலரானால் உகந்துநீசொல்லுவாயோ
உந்தன்மனம்வருமா உத்தமிநீசொல்லுவாய்
அந்தமொழிக்கேட்டு ஆனதோர்மாதுசொல்வாள்
கேட்டீரோநாயகா கிருபையுடனென்வார்த்தை
கொல்லாமல்போனாலும் கொப்பனவேயிப்போது
பாலகரையழைத்துக்கொண்டு பண்புடனேகானகத்தில்
விட்டுமேவந்தாக்கால் இப்போதேசந்தோஷிப்பேன்

வசனம்.

இந்தமொழிக்கேட்டு வேந்தன் சந்தோஷமடைந்து நாயகி உதபமானவுடன் பாலகரை அழைத்துக்கொண்டுப்போய் கானகத்தில் விட்டுவருகின்றேன் என்றுச் சொன்னவுடனே மாணிக்கதேவி சந்தோஷமடைந்து கதவைத்திறந்து வேந்தனை வரவழைத்து சந்தோஷமாயிருக்கும் சமயத்தில், கிழக்கு சூரியன் உதயமானவுடன் இதையறிந்து மாணிக்கதேவி ஏழுபாலகருக்கு விஷத்தைக்கலந்து ஏழுரொட்டிகளைகட்டி வேந்தன்கையில்கொடுத்து அப்பா நீர் தின்னவேண்டாம் பாலகரை துரோகம் செய்யாதேயென்று அவரிடந்தந்து கொஞ்சசாதம் மூட்டைகட்டி வேந்தனுக்குக் கொடுத்து அனுப்பினள். அம்மூட்டையை தோளில் மாட்டிக்கொண்டு பாலகரிடம்வந்து அழைக்கலுற்றார். அம்மா சூரியநாகம்மா சந்திரநாகம்மா இந்திரகன்னி பாலநாகம்மா

நீங்கள் எல்லோரும் எழுந்திருங்கள் நமக்கு இன்னாட்டில் கஷ்டமாயிருப்பதால் உங்கள் மாமன்மனைக்குப் போகலாம் வருவீரென் றழைக்க அப்போது சூர்யநாகம்மாள் தந்தையைபார்த்து ஓ தந்தையே இறவரைக்கும் மாமன்மார் வரக்காணேமே நீ சொல்வது புதிதாயிருக்கிறதென்று சொல்லவே அதற்கு வேந்தன் அம்மா நீங்கள்வந்து பாருங்களென்றுச்சொல்லி அழைத்துக்கொண்டு நடக்கலுற்றார் அந்தச்சமயத்தில் வேந்தன் மாணிக்கதேவிதந்த ரொட்டிகளை எழுபேருக்கும் கொடுத்தான் அதைப்பாலகர்பெற்றுக்கொண்டு மடியில் பதனம் செய்தார். இப்படியிருக்கக் கடைசி புதல்வியாகிய பாலநாகம்மாள் அந்தரொட்டியில் கொஞ்சம்புட்டு காகத்துக்குப்போட்டாள் காகம் தின்றவுடனே சுழன்று பூமியில்விழுந்து மரணமடைந்தது. இதைப்பார்த்து ஆச்சரியமுற்றுமறுபடியும்கொஞ்சப்புட்டு நாயிக்குப்போட்டாள் அது தின்றுமரணமடைந்தது இதையெல்லாம்பார்த்து பாலநாகம்மாள்சொல்லத் தொடங்கினாள்.



நவபோஜமஹாராஜன் எழுபாலகரை இட்டுக்கொண்டுகாட்டிற்குபோவது

அக்காவே அக்காவே அன்புடன்நீகேளும்
இந்தநல்லரொட்டிகளை இன்பமாய்சுட்டுதந்தாள்
பாஷாணம்தான்கலக்கி பக்குவமாய்சுட்டுதந்தாள்
நாமதைதின்றோமானால் நமனாகசாகவேண்டும்



எறிந்துவிடுவீர்கள் யெல்லோருமரொட்டிகளை
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்பெரியவள்
இங்குதான்போட்டாக்கா யெவராகிலுந்தின்றுமே
செத்துதான்போய்விட்டால் சுற்றுமேயுப்பாபம்
மண்ணைதான்தோண்டி மகிழ்ச்சியாய்ரொட்டிகளை
புதைத்துமேவைத்துவிட்டு போகுறார் தந்தைபின்னால்
சிலதூரம்தானடக்க சிறப்புடன்நாகம்மாள்
நடக்கமுடியாமல் நடக்குறாளப்போது
சூர்யநாகம்மாள் சொல்லுகிறாளப்போது
அய்யாவேநீகேளும் அன்புடனென்வார்த்தை
தங்கைநடக்காமல்தான் துயரப்படுகின்றாள்
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்வேந்தனும்
காட்டிலேகொம்பைதேடி கடுகதான்வொடைத்துமே
நடந்துவாவென்றுச்சொல்லி அடித்தாரேயப்போது
ஐயையோவென்றுச்சொல்லி அழுதாளேநாகம்மாள்
அந்தச்சமயத்தில் எதுச்சொன்னாள்மூத்தவள்
ஏனையாயடிக்குறீர் இப்போதுநீர்தானும்
தங்கைதன்னையிப்போ தயவுடன்யெடுத்துக்கொண்டால்
பாடுங்கள்வருகுமோ பாலகர்க்குதே
தாயில்லாப்பிள்ளைகளை தாமிப்படியடிக்கலாமா
ஐயோதெய்வமேயென்று அழுதாரேபாலகர்
அந்தச்சமயத்தில் அறியசூர்யநாகம்மாள்
தங்கையையப்போ தூக்கியெடுத்துக்கொண்டாளே
கானகமார்க்கமாக கடுகநடந்தாளே
அத்வானகானகத்தில் பொழுதுமேபோச்சுது
அந்தச்சமயத்தில் அரிவேந்தன்சொல்லலுற்றான்
என்மொழிகேளம்மா இன்பசூர்யநாகம்மா
பொழுதுமேபோச்சுது பொறுமையுடன்கானகத்தில்
நித்திரைசெய்துவிட்டு நிகழுதியமானவுடன்
மாமன்மார்வீட்டிற்கு மகிழுடன்போகலாம்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்பாலகரும்

வசனம்.

அந்தச்சமயத்தில் சூர்யநாகம்மாள் தந்தையைப் பார்த்து ஐயா எங்களுக்கு பசியதிகமாகிற சட்டுமுட்டை நீர் அழைத்திருக்கின்றீர்

அதில்கொஞ்சம் சாதமிருமையா வென்றுகேழ்க்க அதற்கு வேந்தன் அம்மா சாதமில்லா கானகத்தில் புலி கரடிகள் வந்தால் ஏது செய்வ தென்று மூன்று கருங்கல்லை மூட்டையாகக் கட்டியிருக்கின்றேன் தவிர சாதமல்லவே என்றுச்சொல்ல பாலகர் நிசமென்று நம்பி வழுப்பெருந் தந்தைச்சமீபத்தில் சயனித்துக்கொண்டார் அந்தச்சம யத்தில் பாலகர் நித்திரைச்செய்து விட்டார் இதையறிந்து வேந்தன் எழுந்து தாழம்தண்டையொன்று எடுத்துவந்து தன் பாகையதற்கு மாட்டி ஆடையும் கட்டி பாலகர் மத்தியில் படுக்க வைத்துவிட்டு பால கரை மோசஞ்செய்து தன்பதிக்குப்போகுறர்.

அந்தச்சமயத்தில் அரிவேந்தன்தானுமே
ஆற்றுக்கரையோரம் அன்பாகதானும்வந்து
கட்டுமுதவிழ்த்து கடுகபுசிக்கப்போனர்
அந்தமூட்டைதன்னில் அன்பாககல்லுதான்
இருக்கவேகண்டுவேந்தன் அப்போதுசொல்லலுற்றான்
சண்டாளப்பாவிநான் பாலர்மோசஞ்செய்தேனே
அந்தநிமிஷத்தில் அரிவேந்தன்தானுமே
மாணிக்கதேவிமீது மையலதுக்கொண்டுமே
நடையாநடைநடந்தான் நவமோசமகாராசன்
பூச்சக்கரப்பட்டணத்தை புகழுடன்தானும்வந்தான்
சகலசம்பிரமாக சையோகமாயிருந்தானே



மாணிக்கதேவியுடன் பாலகரைவிட்ட சங்கதிசொல்வது.



வசனம்.


இப்படியிருக்குஞ் சமயத்தில் பாலநாகம்மாள் அந்த தண்டு தன்னிலிருந்து தேள் ஒன்று கொட்டியது அப்போது ஐயோ தேள் கொட்டியது என்று அலரியெழுந்திருக்க மற்றவர்கள் எல்லாம் எழு ந்து என்னடி அம்மாவென்றுக்கேட்க அதைக்கேட்ட பாலநாகம்மாள் அக்கா ஏதோ தேள்கொட்டியது என்றுச்சொல்ல அதைக்கேட்ட சூர்யநாகம்மாள் அருகில் ஓர் தபசி தவஞ்செய்துக் கொண்டிருக்க அவ்விடத்தில் நெருப்பு எடுத்து வந்து வெளிச்சம் போட்டுப் பார்க்க தேள் அகப்படாமையால் அருகிலிருந்த தந்தையை எழுப்பலுற்றார் இதற்குள்ளாக கிழக்கு உதயமாச்சுது.

தந்தையேதந்தையே தயவுள்ளதந்தையே
கிழக்குவுதித்துதையா கிருபையுடன்யெழுந்திரும்
வெய்யற்படாமல் வேகமாய்நடந்துமே
மாமன்மார்பட்டணம் மகிழ்ச்சியாய்போகலாம்
இப்படிச்சொல்லவே ஏதுமொழிசொல்லவில்லை
முக்காடுதானெடுத்து முகந்துமேபார்க்கையிலே
தாழந்தண்டாக இருந்ததுயப்போது
அய்யோதங்கைமாரே அன்னிதமானேனே
தந்தையல்லவே தாழந்தண்டுயிருவாச்சு
மாரில்மோதிக்கொண்டு மகிழ்ச்சியாயழுதாரே
தாய்சொன்னமொழி நிசமாச்சுயிப்போது
தெருவில்விடுவாயென்று சிறப்புடன்சொன்னமொழி
தந்தையும்செய்துவிட்டு தாழந்தண்டாய்விட்டார்



தந்தை மரணமடைந்ததைப்பார்த்து பாலகர் துக்கமடைவது.

ஐயோ தந்தையே எங்கேதான் நீர்போனீர்
கானகந்தன்னில் எவ்வாறு பிழைப்போமையா
கோடிக்கோடென்றுதான் குழந்தைகளழுதாரே
அந்தச்சமயத்தில் அறிவுள்ளபாலநாகம்மாள்
அக்காவே நீ கேளும் அன்புடனென்வார்த்தை
தந்தைவயிற்றினில் தயவுடன் நாம்பிறந்தோம்
ஆகையால் நம்மும் அரியவே தந்தையை
தகனமேசெய்யலாம் தயவுடனிப்போது
அந்தமொழிக்கேட்டு எல்லோருங்கானகத்தில்
சுப்பல்தனைப்பொறுக்கி சுடுகாஷ்டமடுக்கினார்
நாராயணாவென்று நலமுடனே பிரேதமதை
ஆறுபேருமாக அன்பாகவெடுத்துக்கொண்டார்
தாழத்தோண்டி தன்னை தகனமுஞ்செய்துவிட்டார்
குளத்தினில் தானிறங்கி கொடுமைதானமுஞ்செய்துவிட்டு
பெற்றதோர் தாயாரை பிரியமாய் நினைந்துக்கொண்டு
தலைகளையாற்றிக்கொண்டு தனிமையாநிற்கையிலே
எப்படி நாம்பிழைப்போம் இந்தநல்லகானகத்தில்
பசியுமெடுக்குதய்யா பாவிகளுக்கிப்போது
இப்படிச்சொல்லியே இசைந்துமேயிருக்கையிலே
இவர்களெதிராக இசைந்துமாமிலைச்செடிகள்
நிர்மித்தாளவ்விடத்தில் நிமிஷத்தில் லட்சுமிதேவி



லட்சுமிதேவி நியமித்த பழச்செடிகளைப்பார்த்து பாலகர்
செடியேறிப்பழம்பறித்துத் தின்பது.



அந்தச்செடிகளை இன்பமாய்ப்பார்த்துவிட்டார்
செடிகளேத்தானுமேறி சிறப்புடன்பழங்களை
தின்றுமேபசியாறி சிறப்புடன்சலங்குடித்தார்
அத்வானகானகத்தில் அன்பாகயிவர்களுமே
எட்டுநாளாக இருந்தாரேயவ்வனத்தில்
அன்னம்பசிதானும் அன்பாகயெடுக்காமல்
தனியாயிருக்கும்படி தான்செய்தாள்லட்சுமிதேவி

இந்தப்பாலகர் இப்படியிருக்குஞ்சமயத்தில் வங்கபுரிப்பட்டணத்தை பரிபாலிக்கும் வேந்தன் வேட்டையாடுவதற்கு சேனைகளுடன் காட்டிற்குவந்து வேட்டையாடி வெய்யலில் ஆயாசப்பட்டதால் வேந்தனுக்கு தாகமெடுக்க அந்தக்காட்டில் எங்குந்தேடிப் பார்த்தபோதிலும் எங்கும் ஜலமில்லாதபடியால் திரிந்துவருஞ்சமயத்தில் ஓர் முனிசிரேஷ்டன் தபஞ்செய்திருப்பதையறிந்து அவனருகில்வந்து ஓ முனிபுங்கவா எங்களுக்கு தாகமெடுக்கிறது ஜலமிருக்குமிடஞ் சொல்லுமென்றுகேட்க முனிவன் பேசாமல் நிஷ்டையிலிருந்துவிட்டார். வேந்தனுக்கு கோபம்பிறந்து அந்தச்சமயத்தில் அருகில் மேய்ந்துக்கொண்டிருந்த ஆட்டைப்பிடித்து கழுத்தையறுத்து அதின் உதிரத்தை முனிபுங்கவன்மேல் தெளிக்க அந்த ரத்தமானது முனிமேல்பட்டமாத்திரத்தில் அவன் பனிரெண்டுவருடந் தபஞ்செய்யும் நிலையானது பிசகிடவே கோபம்பிறந்து வேந்தனைப்பார்த்து பிடியடா சாபமென்றுசொல்லி அடா சண்டாளா நீ உதயமுதல் சாயந்திரம் வரைக்கும் மனிடனாகவும் தீபம்வைத்த மாத்திரத்தில் வேங்கையாகக்கடவாய் உனது சேனைகள் குரங்குகளாகக் கடவாரென்று சாபமிட்டு இதுவல்லாமல் வீடுவாசலில்லாமல் காடே வீடாக சஞ்சாரஞ்செய்வாயென்று சாபமிட்டே இதைக்கேட்ட வேந்தன் ஏதுஞ்சொல்லாமல் நடக்கலானார் அங்கு ஓர் குளமிருப்பதைக் கண்டு தாகந் தீர்த்துக்கொண்டு சிலதூரம் நடக்கபொழுதுபோச்சுது அச்சமயத்தில் வேந்தன் புலியாகவும் சேனைகள் குரங்குகளாகவும் ஆனார்கள் அந்த இராத்திரியெல்லாம் காடு திரிந்து உதயமானவுடனே நிஜரூபமானார் அதன்பிறகு சாதம் சமைத்துக்கொண்டிருந்தார் இப்படியிருக்க அந்தக்கானகத்தில் பாலநாகம்மாள் முதலானவர்களும் செடிகளேறி பழங்களைப் பறித்துத்தின்று அதன்பிறகு அக்கா நமது தந்தை மாமன்மார் பட்டணம் அருகில் இருக்குதென்று சொன்னாரே அங்குமேயேதோ புகைவருகின்றது அங்கு நான் பட்டணம் போகலாமென்று ஓடிவருக வங்கபுரிவேந்தன் அருகில்வந்து

நிற்கவே ஐயோ இதுவென்ன ஊருமில்லை நாடுமில்லை யென்வந்தோமே யென்று அங்கிருந்த செடியருகில் நின்றுவிட்டார்.

அதன்பிறகு வேந்தன் இவர்களைப்பார்த்து இவர் எங்கிருந்து வந்தவரோ இவர்களைப் பார்த்தால் தெய்வீகப் பெண்களைப்போல் இருக்கிறது பொழுதுப்போனால் நாம் புலியாகி கானகமெல்லாம் திரிகின்றோம் இவர்கள் எங்கும் அகப்படவில்லையே விசாரிப்போம் என்று அருகில் வந்து அம்மா உங்கள் நாடேது தந்தைதாய் பெயரென்ன தெரியச்சொல்லென்றுக் கேட்க அதற்கு அப்பாலகர் எங்கள் தாய் தந்தை பெயர் எங்களுக்குத் தெரியாது எங்கள் பெயரும் தெரியாது உம்மை யாரழைத்தார் இங்குயேன் வந்தீரென்றுக் கேட்க அதற்கு வேந்தன் அம்மா நீங்கள் என்னுடன் பிறந்தவள் ஏது பயமில்லாமல் தந்தைதாய் பெயரும் உங்கள் பெயரும் சொல்லென்றுக் கேட்ட மாத்திரத்தில் பாலகர் சொல்லத்தொடங்கினர்.

வங்கமகாராஜனுக்கு பாலகர் தன்வரலாறு கூறுதல்.

ஐயாவேநீகேளும் அன்புள்ளயண்ணாவே
எனது தந்தைபெயர்தான் எழில்நவபோசவேந்தன்
எனது தாயார்பெயர்தான் எழில்லட்சுமிதேவம்மாள்
சூர்யவம்சமையா சுந்திரனேயெங்கள்குலம்
பூச்சக்கரப்பட்டணத்தில் புகழுடன்வாழ்ந்தோமையா
இந்தமொழிக்கேட்டான் இன்பமாய்யவ்வேந்தன்
ஆனால்நீங்களுமே அன்புடன்கானகத்திற்கு
வருகக்காரணமென்ன வகையுடன்சொல்லுமம்மா
அந்தமொழிக்கு அப்போது நாகம்மாள்
அண்ணாவேநீகேளும் அன்புடன்சொல்லுகிறேன்
நாங்கள்பிறந்தோர் ஒன்பதாம்மாதத்திலே
தாயுமிறந்துவிட்டாள் தந்தைவளர்த்துவந்தார்
இப்படிருக்கையிலே இன்பமாய்யெங்கள்தந்தை
மாதுக்கலியாணம் மகிட்சியாய்செய்துக்கொண்டார்
வந்ததோர்சிமாட்டி வையகத்திலெங்களை
செய்யாதயிம்சைகள் செய்தாளேயண்ணாவே
இம்சைகள்செய்வதை இதைக்கண்டாரெங்கள்தந்தை
மாமன்மார்பட்டணம் மகிழுடன்போவோமென்று
எல்லோரையுமழைத்துக்கொண்டு இன்பமாய்தான்வருகை



ஆரண்யமத்தியில் அன்பாய்பொழுதுபோச்சு
அத்வானகானகத்தில் அன்புடன்சயனித்தோம்
அருகில்படுத்திருந்தார் அன்புடனெங்கள்தந்தை
உதயமானவுடனே உடம்பொங்கிநாங்களெழுந்து
தந்தையைப்பார்க்கவேதான் தாழ்த்துஎன்றுமாய்விட்டார்
ஆருமில்லாப்பாவியாய் கானகத்தில்நின்றோமே
இந்தமொழிக்கேட்டு இன்பமாயவ்வேந்தன்
துயரப்படாதம்மா துணையாகயிருக்கிறேன்
இப்படித்தேருதலை இன்பமாய்தானுஞ்சொன்னான்

வசனம்.

இப்படித் தைரியஞ்சொல்லி பாலகரை அழைத்துவந்து போசனமிட்டு ஆதரித்தார் இதற்குள்ளாக பொழுதுபோவதற்கு நாலுமணி நேரமிருக்கிறது இதையறிந்து அவ்வேந்தன் சிப்பந்திகளை அழைத்து அடா சேனைகளே நான் இந்தப்பாலகரை அழைத்து வந்தேன் இனி யான் புலியாகுஞ்சமயம் வந்துவிட்டது இவர்களை புசித்து விடுவேன் ஆகையால் ஓர் பனமரவொயரம் அதிக சிக்கிரத்தில் பர்ணசாலை கட்டுமென்று சொன்ன மாத்திரத்தில் ஆறுபர்ணசாலை கட்டி இவர்களை அதில் இருக்கச்செய்து வேந்தனும் சேனைகளும் புலியும் குரங்குகளாய்விட்டார் இதுபோலாகவே தினந்தோறும் செய்துக்கொண்டு வந்தார் இப்படிருக்க.

பாலுகண்டி பட்டணம் பரிபாலிக்கும் வேந்தன் வேட்டைக்கு வந்து வேட்டையாடி அலர்ந்தபடியால் வேந்தன் சேகுவரையழைத்து இக்கானகத்தில் வங்கப்புரிவேந்தன் சாபமடைந்து புலியாயிருப்பதாய் கேழ்விப்படுகிறோம் தேடிவருவீரென்று சொல்ல சேகுவர் அறிந்து வந்து வேந்தனுக்குச்சொல்ல அம்மொழிக்கேட்டுவங்கவேந்தன் அருகில் வந்து ஐயா இக்கானகத்தில் நான் வேட்டையாட வந்தோம் எங்கும் தேவகப்படவில்லை என்றுக்கேட்டான் அருகிலிருந்த குளத்தைக் காட்டினர் அக்குளத்திற்குச்சென்று தாகமிரந்து வங்கவேந்தன் அருகில் வந்து அமர்ந்து ஐயா இந்தப்பர்ணசாலையில் யார் இருப்பது என்று கேட்டார் அதற்கு வங்கவேந்தன் அய்யா எனது தங்கைமார் இருக்கின்றார் என்றுச்சொல்ல இம்மொழிக்கேட்டு பாலுகண்டி வேந்தன் ஐயா இராசோத்தமா இவர்களுக்கு கலியாணமாகாது எனது புதல்வருக்கு தருவீராயென்று கேட்க அதற்குச்சம்மதமடைந்தார் அந்தச் சமயத்தில் பாலரை காட்டிப்புச் சொல்ல அதுபோல் பாலரை இ

க்கிக்காட்ட பானுகண்டி வேந்தன் இவரைப்பார்த்து ஐயா இராஜோத்தமா உன் உடன்பிறந்த பெண்பாவைகளேது உனது தந்தைக்கு நீங்கள் இருவரேதவிர வேறேது எனக்குத் தெரியாதா என்றுச்சொன்னவுடன் வங்கதேசத்து வேந்தன் இனி மர்மமிடலாகாது என்று யோசித்து ஐயா யான் சொல்வதைக்கவனிப்பீர் எப்படியென்றால் இவர்கள் தந்தை நவகோடீஸ்வரன் தாயார் லட்சுமிதேவி இருப்பிடம் பூசக்கிரப்பட்டணம் வம்சம் சூர்யவம்சம் தாயும் தந்தையும் இறந்து விட்டாரும் காட்டில் வந்திருக்க யான்கண்டு தங்கைமார்போல் இதுவரைக்கும் காப்பாற்றினேன் என்றுச்சொன்னவுடனே இதைக்கேட்ட வேந்தன் சொன்னதாவது ஓ வங்கவேந்தனே இவர்கள் என் உடன்பிறந்த லட்சுமிதேவி கெர்ப்பத்தில் பிறந்தவர் பத்துவருஷமாக அவர் வீட்டிற்கு நாங்கள் போகிறதில்லை எங்கள் வீட்டிற்கு அவர் வருகிறதில்லை ஆகையால் இவர்கள் என் மருமக்கமார்கள் என்றுச் சொன்னவுடனே இம்மாதர்கள் இதைக்கேட்டு இதுயாரோ தெரியவில்லை நம்மைக்காப்பாற்றியவரை யமர்த்திக்கொண்டு போக எத்தனமிட்டது போலிருக்கிறது என்று மூத்தவள் சொல்லவே இளையவளாகிய பாலநாகம்மாள் யோசித்து முந்தி நமது தாயார் சொன்னது உங்கள் மாமன் இராமவர்த்தி வேந்தன் பானுகண்டி பட்டணத்தில் இருப்பதாய் சொல்லி



பாலகர் ஏழுபேரும் தன்மாமனைப்பார்த்த துயரமடைவது.



இருக்கின்றார் என்று யோசித்து ஐயா உங்கள் தேசமேது வம்சமேதுதங்களுடைய பெயரேது என்று கேட்க அதற்கு அவ்வேந்தன் அம்மா இருப்பது பானுகண்டிப்பட்டணம் சந்திரவம்சம் யான் இராமவர்த்திவேந்தன் என்றுச் சொன்னவுடனே அப்பாலகர் இம்மொழிக் கேட்டு.

எழுபேரப்போது யெடுத்தாரேபெருந்தொண்டை
கானகம்தானதிர கடுகயழுதுபுரண்டார்
ஐயோமாமாவென்று யெல்லோருமழுதாரே
தாயும்மரணமானாள் தந்தையும்தான்மாண்டார்
கானகந்தன்னிலே காவென்றழுகலானோம்
துணையில்லாபட்சிபோல் துடித்தோமேகானகத்தில்
இவருமேயில்லாவிட்டால் இரையாகுவோம்வேங்கைக்கு
ஐயோமாமாவென்று அலரியழுதாரே
பாலகர்தானழுவே பார்வேந்தனப்போது
ஐயோமக்களே அவனியிலலையவிட்டு
பாவிபிரம்மனும் பார்த்திருந்தானேயிப்போது
இப்படியாக இசைந்துமேவேந்தனழுது
பாலரையப்போது பார்த்துகண்தான் துடைத்து
அந்தச்சமயத்தில் அருகிருந்தக்காவலரை
தானுமேயழைத்து தயவுடன்சொல்லலுற்றார்
அப்பாகாவலரே அதிவேகமாய்நீங்களிப்போ
நாட்டிற்குநீங்கள்சென்று நலமேழுபல்லக்கு
எடுத்துமேவருவீர்கள் இப்போதுவேகமாய்
இந்தமொழிக்கேட்டு இசைந்துமேகாவலர்கள்
பானுகண்டிபட்டணம் பண்மையுடன்வந்தாரே
ஏழுபல்லக்குதன்னை எடுத்தாரேயப்போது
நடையாநடைநடந்து நடந்துமேவந்துசேர்ந்தார்
வந்தோர்பல்லக்குதன்னில் வகையுடனேழுபேரை
அமரவேதான்செய்து அப்போயெடுத்துக்கொண்டு
பூசக்கிரப்பட்டணம் புகழாகவந்துசேர்ந்தார்
பாலகர்தன்னையே பிரியமுடன்மாமியும்தான்
பார்த்துசந்தோஷமிட்டு பக்குவமாய்வளர்த்துவந்தாள்

வசனம்.

இப்படியாக பாலகரைக் கொண்டுவந்தவுடன் மாமிபார்த்து சந்தோஷமடைந்து இவர்களை தினமொரு மேனியும் பொழுதொரு

வல்லாளராம் வளர்ந்துச் சொன்னேன் கதை இப்படியிருக்க இந்த இரி யவர்த்தி வேந்தனுக்கு ஏழுபுதல்வர் அவர்பேர் யாதெனில் முதல் புதல்வன் ஆரியவர்த்திவேந்தன் இரண்டாம் புதல்வன் [illegible]வர்த்தி வேந்தன் மூன்றாம் புதல்வன் பாபவர்த்திவேந்தன் நான்காம் புதல் வன் சாமவர்த்திவேந்தன் ஐந்தாம் புதல்வன் நாமவர்த்திவேந்தன் ஆறாம் புதல்வன் இராமவர்த்திவேந்தன் ஏழாம்புதல்வன் காமவர்த்தி வேந்தன் இப்படி இவரேழுபேரும் ஒரு தாய் வயிற்றினில் பிறந்த பெண்பாலைகளின் கலியாணம் செய்வோம் [illegible] [illegible] பார்த்திடவென விருமாசித்து இருந்தார் இவர் [illegible] அதிக கவிதேசிகர்பார்த்து அகட்டாமையால் சித்தமேவி[illegible] அன்று இளம் தாதும் தன் தேவியும் சந்தோஷமடைந்து இச்சமயத்திலம் நமது பாலகர்! கொண்டுவென்னைப் பூர்த்தியாக்கதென்று பேசிக்கொ ண்டு வேந்தன் சொல்லுவதைக் கேட்டு [illegible] அழைத்து ஐயா விட்டீர் வரீர் இந்த முகூர்த்தம் செய்யலாமென்று கேட்க விப்பிரர் இதை அறிந்து ஐயா இராசேந்திரக்காலைய [illegible] நல்லதென்று சொல்ல உடனே வேந்தன் சந்தோஷமாய் தன் நாடெங்கும் கலியாண பத்திரி கை நல்ல முகூர்த்தத்தில் ஏழுபேர்களுக்கும் விவாக முடித்து விட்டார் எப்படியென்றால் மூத்த புதல்வனுக்கு ஆரியாசக்கம்மாளும் இரண்டாம் புதல்வனுக்கு சந்திரகாந்தம்மாளும் மூன்றாம்புதல்வனுக்கு உத்தம கன்னிகையும் நான்காம் புதல்வனுக்கு [illegible] கன்னிகையும் ஐந்தாம் புதல்வனுக்கு பிங்கலக்கம்மாளும் ஆறாம்புதல்வனுக்கு [illegible] கன்னிகையும் ஏழாம் புதல்வனுக்கு பாலநாகம்மாள் [illegible] [illegible] பட்டணத்தில் சுகமேவுமாயிருந்தார்.

இப்படியிருக்கையிலே இவர் [illegible]
[illegible]
[illegible]
இப்படியிருக்க [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]





டில்லிபாதுஷா திவான்ஜியையனுப்பி தாலுக்காவை அமானுசெய்யச்சொல்வது.

அப்படியாகவே திவான்ஜியும்புறப்பட்டு
பூச்சக்கிரப்பட்டணம் புகமுடன் தானவந்து
வேந்தனைகேட்டார் வெகுவாய்கிஸ்திபணத்தை
ஏதுஞ்சொல்லாமல் இருந்தானேநவபோஜவேந்தன்
இத்தனைதான்பார்த்தார் இசைந்துதிவான்ஜியும்
வேந்தனையுந்தேவியை வெளிதன்னில்தான்தள்ளி
அந்ததாலுக்காவை அப்போதுமேயல்லமிட்டு
சேரவேண்டியவிராக்கத்தை சிறப்புடன்பெற்றுக்கொண்டு
டில்லிபட்டணமேசிறப்புடன்போய்சேர்தார்
அப்போநவபோஜவேந்தன் இசைந்துதன்தேவியோடு
அந்நாடுதன்னில் அயர்ந்துசிலநாளிருந்தார்
டில்லிபாதுஷாவுக்கு தீவிரமாய்யர்ஜிதன்னை
எழுதியும்பாதுஷாவும் யேதென்றுகேட்கவில்லை
இத்தனைதான்பார்த்து யேதுசொல்வானப்போது
யாதேசெண்பகமே மரகதமேமாணிக்கமே
இப்படிநாமிருக்க இசைந்துமேவுயர்வளர்க்க

வேண்டுமேயென் [illegible]
பார்த்தசந்திரமே [illegible]
விராதகனையோட்டித்து [illegible]
தம்பி [illegible]
[illegible]
இப்படிச்சொல்லியே [illegible]
[illegible]
இரண்டு [illegible]
பாலூர் [illegible]
[illegible]
நாங்கள் [illegible]
இப்படி [illegible]
இப்படிச்சொல்லியே [illegible]
விராதகனை [illegible]

[illegible]

வசனம்.

அந்தச்சமயத்தில் [illegible]



நதால் பாலகரை காட்டில்விட்டு வந்துவிட்டேன் அப்பா முதற்கொண்டு இப்படி கஷ்டமெல்லாம் அனுபவித்தோம் என்றுச் சொன்னவுடனே பாலகர் தந்தையைப்பார்த்து சொல்லத்தொடங்கினார்.

கர்மசண்டாளன் கடுகவேநீயாகும்
குலத்துரோகிநீயேயாகும் குவலயத்தில்வந்தனுடைய
பாலகர்நாங்களாகும் பக்குவமாய்கானகத்தில்
நாங்கள்நித்திரைசெய்ய நலமாகத்தாழ்ந்தண்டை
எங்களருகில்வைத்து இன்பமாய்நீயெழுந்து
மாணிக்கதேவியிடம் மகிழுடன்சென்றீரே
உதயமானவுடனே உப்போங்கிநாங்களெழுந்து
பார்க்கதந்தைநீர் பக்குவமாயதுண்டாய்நிறக
அய்யோதெய்வமேயென அழுதுதுடித்தோமே
எங்களைசெய்ததோர் இக்கொடியபாதகம்
இப்படியலைந்தீர் இதுவும்மைவிடுமோதான்
உனதுமூத்தமகள் இதோபாரும்சூர்யநாகம்மா
இரண்டாம்புதல்வி இதோபாரும்சந்திரநாகம்மா
மூன்றாம்புதல்வி இதோபாரும்வத்திரகன்னிகை
நான்காம்புதல்வி இதோபாருந்தக்ஷனகன்னிகை
ஐந்தாம்புதல்வி இதோபாரும்பகடசங்கம்மா
ஆறாம்புதல்வி இதோபாரும்முனிகன்னிகை
ஏழாம்புதல்வி நானேயாகும்பாலநாகம்மா
இப்படிச்சொல்லவே இசைந்துமேவந்தனும்
நல்கனைகுனிந்துமே தான்கண்ணீர்விட்டானே
அப்போதுநாகம்மா இசைந்துமேதந்தையை
தேறுதலைசொல்லியே துடைத்தாள்கண்ணீரைதான்
அந்தச்சமயத்தில் அருகிருந்தாதிகளை
இன்பமாய்காவழைத்து எடுத்துவரச்செய்தாள்தண்ணீரை
தந்தைக்குமேயண்ணையிட்டு ஸ்தானங்கள்செய்துவைத்தாள்
பட்டுச்சவுரைதோவித்தி பக்குவமாய்க்கட்டச்செய்தாள்
நெற்றிக்குதிலகமிட்டு நிகழ்தங்கவாழிலைபோட்டு
பருப்புபாச்சடியுடன் பத்துவகைகறிவர்க்கமும்
நெய்யிசாதமிட்டு நிகழுடன்புசித்தபின்பு
தாம்பூலந்தான்கொடுத்து சயனிக்கசெய்தாரே
இப்படியாகதந்தையை இன்பமாய்வளர்த்துவந்தார்
நவபோகம்வந்தனும் நலமாகயிருந்துவிட்டார்.

வசனம்.

[illegible]

இந்தபாலநாகம்மாள் கதைதன்னை

[illegible]



ஓம்

சற்குருவேநம:

மீனாக்ஷி யருள்பெருக.

# பாலநாகம்மாள்கதை

## இரண்டாம்பாகம்.

### காப்பு-வெண்பா.

பாலநாகம்மாள் பண்புள்ள கதைதன்னை
சீலமுட னிரண்டாம்பாகம் சொல்லிடவே—பாலனென்
திங்கள் சடையிலிட்ட திருநேத்திரதார னீன்ற
அங்கரவன் பொற்பாதம் கோரு.

வசனம்.

இப்படிருக்க பாலநாகம்மாள் பாணுகண்டி பட்டணத்தி லிரா னின்று வெட்பெருமானை பூசை செய்துவருஞ் சமயத்தில் சங்காமூர்த் தியருளால் அம்மாது கர்பனியாயிருக்க அந்தச்சமயத்தில் தன் புருஷ ன் முதலானவரும்.

மூத்தாரும்பேரும் முகர்ந்துதன்கணவனும்
பனிரெண்டுசேனையுடன் பண்புடன்புறப்பட்டு
மந்திரிபிரதானிகளை மகிழ்ந்துயழைத்துக்கொண்டு
கண்டிக்கோட்டைக்குக் காரியமாகபோய்விட்டார்
வேந்தர்களாளப்பட்ட விந்தையானபூமிதன்னில்
நாகற்றமுடியொன்று நல்மாகபிறந்தது
பிறந்தவுடனேதான் பக்கிரியும்பிறந்தானே
அவனுடையகோட்டை அழகென்னசொல்லவர்கும்
ஏழுக்கோட்டையும் இசைந்தவெள்ளிகோட்டைதான்
பதினொன்குமேடைகள் பண்புடனிருக்கிறது
அந்தநல்லமேடைநடுவில் யமைந்தாரேசிப்பிகள்
பனிரெண்டுஸ்தம்பம் மருந்திருக்கிறது
மருந்திதன்னிலே மாயபக்கிரியிருக்கின்றான்

நன்றாய்தமிழைதன்னை நலமுடன்வாசித்தவன்
வடதெலுங்குதன்னை வகையுடன்வாசித்தவன்
மந்திரக்காரனவன் மாயங்கள்செய்பவன்
அவனுடையமந்திரபூதம் அறிவிடத்தரமல்ல
எழுநூறுபூதமும் இணையில்லாசெம்பூதம்
முன்னூறுபூதம் முக்குந்தகரும்பூதம்
சிட்டிக்கைதான்போட்டால் சிறப்புடன்வரும்பேய்கள்
வண்ணாரப்பேயிதான் வன்மைதீட்டிபிடிக்குமாம்
அம்மட்டப்பேயிதான் அழகுக்கண்ணாடிகாட்டுமாம்
கொசவப்பேயிகள் கொண்டுவருஞ்சாதமும்
எடப்பேயிதான் ஆடுகளைக்கொடுக்குமாம்
பரப்பேயிதான் பிடிக்கும்கட்டைவெட்டிவரும்
கிழப்பேயிதான் கிருபைசரசமாடுமாம்
இப்படியிருக்கையிலே நாகள்ளூடிகரைதன்னில்
பூவரசன்செடிகளும் புகழாகயிருந்தது
அந்தச்செடிமீது அழகானபக்ஷிரெண்டும்
மேற்கேயிருந்து மேன்மையாய்வந்தது
செடிமீதுயமர்ந்து சிறப்பாய்மொழிபாடியது
இந்தபக்ஷிகளை இசைந்துபார்த்தான்பக்கிரியும்



வெளிகசக்கசெட்டியார்த்து பக்ஷி சொல்வது.

பெரியசூத்திரான பெயரெதுவணிகச்சங்கு
இன்பமாயவளைப்பார்த்து இசைந்துமேசொல்லலானான்



காமக்கிளியே கட்டழகிவணிகச்சங்கு
பார்த்தாயாபக்ஷிகளை பண்புடன்சோடியாக
இருந்துசரசமாக இன்பமாய்பேசுறது
இப்படிசரசமாக இசைந்துமேயிருப்பதற்கு
எனக்குமியாருங்காணேன் ஏதுசெய்வேன்பெண்ணரசி
இந்தமொழிக்கேட்டு இசைந்துயவஞ்சொல்லலானாள்
நானிருக்கவுனக்கென்ன நயமுள்ளபக்கிரி
அந்தமொழிக்கேட்டு ஏதுச்சொன்னான்பக்கிரி
தூத்தெரிக்கிழப்பிணமே தூரப்போடிநாற்றமடி
உன்னைப்பிடித்ததுபோல் உகந்தசக்காளத்திகொண்டுவாரேன்
இரண்டுபேர்சண்டைசெய்ய இசைந்துக்கண்ணாய்பார்க்குரண்டி
இப்படிச்சொல்லியவன் எடுத்தானேகருப்பூனையை
பூனையைக்கொன்றுபஸ்பம் புகழுடன்செய்தானே
இடதுக்கண்ணுக்குமையாய் இட்டானேயப்போது
கைதன்னிலஞ்சனம் கடுகவேபார்த்தானே
வடதேசமெல்லாம் வகையுடன்பார்த்தானே
வடதேசந்தன்னிலே வாழ்மாதுதோற்றவில்லை
தென்தேசமெல்லாம் தேடியவன்பார்த்தானே
தெற்குதேசந்தன்னில் திகைமாதுகாணவில்லை
கிழக்குதேசந்தன்னில் கிருபையுடன்பார்த்தானே
கிழக்குதேசந்தன்னில் கணமாதைக்காணவில்லை
மேற்குதேசந்தன்னில் போட்டானேயஞ்சனம்
அந்தநல்லபூமிதன்னில் அகப்பட்டாள்வொருமாது
பனிரெண்டாமயில்தூரம் பானுகண்டிபட்டணமாம்
இவனுடையஞ்சனத்தில் அகப்பட்டாள்நாகம்மாள்
வாடிவனக்குயிலே வரிசையுள்ளவணிகச்சங்கு
பானுகண்டிபட்டணத்திற்கு பக்ஷமாய்போகுறேன்
உனக்குத்தகுந்தமாதை உகந்தழைத்துவருகின்றேன்
எங்கடாசக்காளத்தி என்னடாபக்கிரி
இந்தமொழிக்கேட்டு ஏதுச்சொல்வான்பக்கிரி

வசனம்.

அடிநாயகி இன்றைக்கு பனிரெண்டு யோசனைதூரமுள்ள பானுகண்டி பட்டணத்தில் நவபோசமகாராஜன் ஏழுபுதல்வரில் கடைசி பெண்ணாகிய பாலநாகம்மாளை சிறையெடுத்து வருகின்றேன்.

கோமுட்டிவேஷத்தை கொப்பனவேபோட்டானே
அந்தநல்லவேஷமும் சரியல்லவெனக்கலைத்தான்
சன்யாசிவேஷமதை தானப்போட்டுக்கொண்டான்
பட்டுத்தோவத்தியை பாகைபோல்சுற்றினான்
நெற்றிக்குந்தானீறுபூசி நெகுஞ்சந்தனப்பொட்டுமிட்டான்
ருத்திராக்ஷமாலையை முடியாய்மாலையிட்டான்
விபூதிப்பையெடுத்து இடுப்பினில்சொருகினான்
கண்ணாடியெதிரில்வந்து கடுகயழகைப்பார்த்தான்
தன்னழகைதான்பார்த்து தான்மூர்ச்சைபடைந்தானே
மூர்ச்சைதெளிந்துமே முகந்துதானும்யெழுந்தானே
இந்தவேஷமாய்நான்சென்று இப்போயழைத்துவாறேன்
வாடிவணிகச்சங்கு வன்மையுடன்மொழிகேளும்
பானுகண்டிபட்டணம் பண்மையுடன்நான்போறேன்
மேடைகள்மருதியும் மேன்மையுடன்பத்திரம்
இந்தமொழிக்கேட்டு இன்பமுடன்வணிகச்சங்கு
படுப்பாவிபோனால் பானுகண்டிபட்டணத்தில்
உன்னைப்பலியிடுவார் உண்மையுடன்வேந்தரும்
இந்தமொழிக்கேட்டான் இன்பமாய்பக்கிரியும்
தந்திரியாஞ்செத்து தாங்கிலடிவணிகச்சங்கு
செருப்பாலடிக்குவேண்டி சொல்லாமொழிசொல்லாதடி
இத்தனையும்கேட்டானே இன்பமுடன்வணிகச்சங்கு
உனதுயிஷ்டம்போல் உண்மையுடன்நீபோவீர்
அந்தச்சமயத்தில் அன்புடன்பக்கிரியும்
மாயபல்லக்கு அன்புடன்செய்தானே
பித்திகொம்புதன்னை பேயிகள்தான்பிடித்தார்
முந்திகொம்புதன்னில் பேயிகளில்லையே
மந்திரபலத்தாலே மாயப்பல்லக்குநடக்கிறது
ஏறினான்பல்லக்கு இன்பமாய்பக்கிரி
நாகன்னாபூடிகரை நலமாகதாண்டினான்
பானுகண்டிபட்டணம் பாட்டையைதான்பிடித்து
இருண்டவனங்களும் யெலிமிச்சந்தோப்புகளும்
புலிகள்வனத்தைவிட்டு புதுவயனப்பட்டணம்வந்தான்
கிளிப்பட்டணம்வந்தான் இருமையுடனப்போது
தெங்காபட்டணம்வந்தான் கெம்பீரமாயப்போது
புலிவேந்தன்பட்டணம்விட்டு பானுகண்டியெல்லைவந்தான்



பானுகண்டிபட்டணத்தில் புகழ்நந்தவனங்கண்டானே
இறக்கினான்பல்லக்கு இன்பமாயவ்விடத்தில்
அந்தச்சமயத்தில் அந்தநல்லவனந்தன்னிலே
பரமசிவனைப்போல பரதேசிவேஷம்போட்டான்
சங்குசேமகலம்சம்பிரமாய் கைப்பிடித்தான்
பானுகண்டிப்பட்டணம் கோட்டைக்கெதிரேவந்து
சங்குதானெடுத்து சம்பிரமாய்ஊதினான்
அந்தசப்தம்கேட்டு அங்கிருந்தகாவலவன்
வந்தனம்சங்கமரே வந்தக்காரியமேதையா
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொன்னான்பக்கிரி
சுகமாய்சுகமடைவாய் சிறப்புடனேகாவற்காரா
நானுமேகாசியாத்திரை நலமாகபோகுறேன்
கோட்டைக்குள்போவதற்கு கோபமில்லாசெல்வுதாருய்
அந்தமொழிக்கேட்டான் அப்போதுகாவலனும்
போகவிடங்கொடுக்கேன் பொல்லாங்குநேரிடுமே
எந்தனுக்குவுத்திரவு இன்பமாய்வேந்தர்தந்தார்
அரிதேசிபரதேசிகள் அன்புமிகபிராமணன்வந்தால்
உழக்குப்பரிசியும் உப்பொங்கிகாசுதருக
தில்வுதந்துபோனார் சிறப்புடன்வேந்தரும்
அதற்குமிஞ்சியாரும் அளவுசொல்லமுடியாது
இந்தமொழிக்கேட்டான் இன்பமுடன்பக்கிரியும்
காவலனேநீகேளாய் கனமுடன்யென்வார்த்தை
இந்தவிடத்திலே இருக்கவேபோறதில்லை
இரண்டுமூன்றுவீடு இன்பமிச்சையெடுத்துக்கொண்டு
ஒருவேளைதானிருந்து உப்பொங்கிபோகுறேண்டா
இத்தனையும்தான்கேட்டான் இன்பமுடன்காவலனும்
வேந்தரிதைக்கேட்டால் வேகமென்சிரசுபோகும்
போகவழிவிடேன் போய்விடுவீர்பரதேசியே
இப்படிச்செல்லவே இதுகேட்டான்பக்கிரியும்
பிள்ளைகள்பெருத பெருப்பாதகன்நீயாருடா
ஐயாவேநீகேளாய் அன்புடன்பரதேசியே
பிள்ளைகளில்லாசெய்தி யெப்படியறிந்தீரையா
அடபோடாபாதகா அன்புடன்நீகேளாய்
இந்தநல்லநாட்டிற்கு இருக்குறேன்தெய்வமாக
பிள்ளைகளில்லாவிட்டால் பிள்ளைதரும்பரதேசியான்
பாலகரில்லாவிட்டால் பாக்கியந்தரும்பரதேசியான்



சந்நியாசியை காவலன் புத்திரபாக்கியம் கேழ்ப்பது.

வசனம்.

இப்படியாக மாயபக்கிரி மர்மமாய் சொல்லவே இதைக்கேட்டு காவலன் ஆச்சரியமடைந்து ஐயா நீர் இதுவரைக்கும் ஆருக்காகிலும் புத்திரபலன் கொடுத்ததுண்டா என்று கேட்டமாத்திரத்தில் இதைக் கேட்ட பக்கிரி அடாபாவிலே எனது ஞானதிஷ்டி தன்னில் அகப்படாதென்றது இதில்லாமல் இந்தக்கோட்டையிலிருக்கப்பட்ட பாலநாகம்மாளுக்கு சந்தானப்பலன் யானேகொடுத்தேன் இப்போது ஏழுநாளாச்சுது அம்மாது பிரசவித்தனென்று சொன்னவுடனே காவலன் பயமடைந்து நமது கோட்டைசங்கதி இதராளுக்குந் தெரியவராதே இவருக்கு எப்படிதெரிந்ததோ அறியோம் இவர்சாக்ஷாத்சாம்பவமூர்த்தியாயிருக்க வேண்டுமென்று சொல்லத்தொடங்கினான்.

வந்தனம்வந்தனம் வடகைலாசமூர்த்தியே
செய்தப்பிழைகளை சித்தம்வைத்துயாளுமையா
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொன்னான்பக்கிரி
உந்தனுக்குபுத்திரபலன் உகந்துயான் தருகின்றேன்
இப்படிச்சொல்லி யெடுத்தானேவிபூதியை
விபூதிதானெடுத்து வேந்தியவன்நெற்றியிலிட்டான்
கொஞ்சவிபூதியை கொடுத்தானேகைதன்னிலே
இந்தவிபூதியை இப்போதுயெடுத்துக்கொண்டு
உந்தனுக்குபேழுப்பேர் உகந்தபத்தினிமார்



அவர்கள்நெற்றிதன்னில் அன்பாகநீயிடுவாய்
வீட்டிலும்தொரையிலும் வேகமாய்நீபோடுவாய்
ஏழுப்பேர்வாயில் இன்பமாய்நீபோடுவாய்
இப்படிச்சொல்லி கொடுத்தானேவிபூதியை
அந்தவிபூதியை அன்பாகக்காவலனும்
கையிலேந்திக்கொண்டு கடுகநடக்கலுற்றான்
ஓட்டமாய்வோடிவந்து யழைத்தானேதேவிகளை
வாடியென்தேவிகளே வண்மையுடனின்றமே
புத்திரபாக்கியம் பெருவதற்குவிபூதியை
பெரியோர்கொடுக்க பிரியமாய்பெற்றுவந்தேன்
என்றுமேசொல்லி இட்டானேநெற்றிதன்னில்
கொஞ்சவிபூதியை கொப்பனவேவாயில்போட்டான்
வீட்டிலும்தொரையிலும் வேகமாய்தான்போட்டான்
போட்டநிமிஷத்திற்கு பிறந்தார்கள்கோடிபாலர்
பிறந்தவுடனே பிடித்தார்கள்தந்தைமடியை
தந்தையேபசிக்குதையா தயவுடன்சாதம்போடும்
என்றுமேபாலகர் இடைவிடாமல்படக்கிக்கொண்டார்
இந்தவேதனைப்பட இவனால்முடியாமல்
இந்தப்பாலருடன் இனிப்படமுடியாதென்று
ஓட்டமும்நடையாக ஓடியேதான்வந்தான்
பக்கிரியெதிரில்வந்து பண்புடன்தான்பார்த்து
பொதுமையாயோகியே பொருமையுடன்பாலர்பாக்கியம்
கோடிபாலகரை கொப்பனவேதந்தால்
எப்படிசகிக்கலாகும் இந்தப்பாலர்கோஷ்டம்
பாக்கியமெனக்குவேண்டாம் வைபோகதினகரா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பக்கிரியும்
உனதுயிஷ்டம்போல உகந்துபாலர் தருகின்றேன்
ஏழுப்புதல்வரை இன்பமாய்நான்தந்தேன்
ஏழுப்பாலருடன் இசைந்துநீவாழ்ந்திருப்பாய்
இப்படிச்சொல்லவே இருந்தபாலர்போய்விட்டு
ஏழுப்பாலகரை இசைந்துமேயமைத்துவிட்டார்
வாருமையாபரதேசி வகையுடன்மொழிகேளும்
கோட்டைக்குப்போவதற்கு கொப்பனவேயில்லைநாரேன்
சந்தடியில்லாமல் தாங்களும்போய்வருவீர்
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொன்னான்பக்கிரியும்

சங்கையான்வநாமல் சிறப்புடன்போகலாமா
எனக்குமந்ரவேண்டும் இன்பமாய்க்கார்க்கின்றேன்
இதுபோல்சொல்லவே எதுர்சொன்ருன்காவலனும்

வசனம்.

ஐயா பக்ஷியே இதோ நான் இருப்பது ஓர்வாயல் இப்படி ஏழுவாயலிருக்கிறது ஏழுவாயலுக்கும் ஏழுக்காவல் இருக்கிறது இரண்டாவது புலியும், மூன்றாவது கரடியும், நாலாவது காட்டுநாய், ஐந்தாவது காட்டானை, ஆறாவது சிங்கம், ஏழாவது ஆளி, இப்படிக்காவலிருக்க நீ எப்படிப்போகுவீர் என்றுச்சொல்ல இதைக்கேட்டு பக்ஷி அடா காவலனே போகத்தான் போகுவேன் இல்லாவிடில் திரும்பி வருகுகிறேன் என்றுச்சொல்லி மாயப்பக்ஷி புறப்பட்டாள்.

சிட்டிக்கைதான்போட்டு சிறப்புடன்பேய்களை
அப்போவரவழைத்து யன்புடன்சொல்லுகின்ருன்
கானகம்நீங்கள்சென்று கனமுடனேயெந்தனுக்கு
காட்டாட்டின்கறி கனக்காளாய்கொண்டுவாரீர்
தயிருசாதமும் தனியாலைக்கொடிகளும்
பழக்கொடிகளும் பண்புடனேகொண்டுவாரீர்
இப்படிச்சொல்லவே இதைக்கேட்டார்பேய்களும்
அந்தச்சமயத்தில் அன்புடனேதான்கொடுத்தார்
இத்தனையும்பெற்றுக்கொண்டு இன்பமாய்பக்ஷி
அந்தவாயல்தாண்டி அன்பாகயிரண்டாம்வாயல்
இரண்டாம்வாயல்வருக இருந்ததுபெரும்புலிதான்
இவளைக்கண்டவுடனே இரைச்சலும்போட்டது
அந்தப்புலியைக்கண்டு அன்புடனேபக்ஷி
ஆட்டுதொடைதன்னை அன்பாகதான்போட்டாள்
கறியைதின்பதற்கு கனமுடனே திரும்பியது
அந்தநல்லசமயத்தில் அந்தவாயல்தாண்டினன்
மூன்ரும்வாயலண்டை முகந்துபோதான்வந்தான்
கரடியுமப்போது கண்டதுபாதகனே
எகிறிதான்வருகவே இன்பமாய்பக்ஷியும்
அந்தநல்லசமயத்தில் அந்தட்டியேகாளானை
எதிரினில்போடவே யெடுக்கதிரும்பியது
அப்போதுபக்ஷி யந்தவாயல்தாண்டினன்
நான்காம்வாயலண்டை நல்லபாதகவந்தாகின்ருள்



காட்டுநாயுமிவளை கண்டுகுலைக்கலாச்சு
அந்தநாய்க்குமே அருந்துகறிதான்போட்டாள்
கறியைதின்பதற்கு கனமுடனே திரும்பியது
அந்தநல்லசமயத்தில் அந்தவாயல்தாண்டியே
ஐந்தாம்வாயலண்டை அன்பாகவந்துநின்ருள்
காட்டானையிவளைக் கண்டுகர்ஜித்தது
அப்போதுபாலைக்கொடி அன்பாகபோட்டானே
கொடியைதின்பதற்கு கொப்பனவே திரும்பியது
அந்தநல்லசமயத்தில் அந்தவாயல்தாண்டினன்
ஆரும்வாயலண்டை அன்பாகதான்வந்தாள்
அங்கிருந்தசிங்கம் அதட்டிகர்ஜித்தது
பழக்கொடியை பண்புடனேயிரைபோட்டான்
அந்தக்கொடியை அதுதின்கதிரும்பியது
அந்தச்சமயத்தில் அந்தவாயல்தாண்டினன்
ஏழாம்வாயலண்டை இருந்ததாயாளிதானும்
அந்தவாயல்தாண்டி அன்பாகதான்சென்று
பாணுகண்டி பட்டணம் நடுப்பட்டணம்வந்தாளே
உப்பரிகையருகினில் இருந்ததுகிணறுமொன்று
அந்தக்கிணற்றருகில் அதட்டிஆடினன்சந்தோதன்னை
அந்தச்சமயத்தில் அங்கிருந்தபாலகரும்
கும்பலாய்கூடி ஸ்ரீ குணமுடனிவனருகில்
இந்தநல்லபாலகரை இன்பமாய்ப்பார்த்தானே
அங்கிருந்தமண்ணெடுத்து அவனுமாட்டைதான்செய்தான்
ஓட்டைதானெடுத்து ஒருமிக்கமோறுசெய்தான்
சுப்பலைதானெடுத்து சுழிபாம்புதான்செய்தான்
இந்தநல்லவேடிக்கை இன்பமாய்பாலர்பார்த்தார்
அப்போதுபக்ஷியை அன்புடன்கேட்கலானுர்
ஐயாவுனதுபெயர் அறியவேசொல்லுமிப்போ
சொல்லுகிறேன்கேளென்று சுருக்காகபக்ஷி
ஜாலவித்தையாடும் பரிதேசிபாப்பையன்
இந்தபேரைக்கேட்டு யெடுத்துச்சொன்னார்பாலகரும்
இந்நாட்டுவேந்தர்கள் இங்குதானில்லையப்பா
வேண்டியவெகுமதிகள் வேகமாய்கிட்டுமையா
எங்கள்வேந்தர்தானும் இன்பமாயிப்போது
கண்டிக்கோட்டைக்கு கனமுடன்சென்றாரையா

வசனம்.

இப்படியிருக்க இந்தபக்கிரி ஆறுபேருமிடார் வீடுதேடி போவதற்கு உத்தேசமடைந்தான் அச்சமயத்தில் பாலநாகம்மாள் பிரசவிக்க எழுநாளாச்சுது அந்த இட்டுனன்னில் எல்லாம் தாதிகளும் அவ்வீட்டில் நின்றுவிட்டார். அதன் பிறகு இந்த ஆறுபேருக்கும் நாகமதிகிப்பதால் நாமேன்னு வாயலில் இருக்கப்பட்ட கிணற்றில் ஜலமெடுத்துக்கொண்டு வரலாமென்று எண்ணமிட்டு அவரவர் ஓர் செப்புக்குடமிடையில் வைத்து கிணற்றருகில் நடந்து வந்தனர் அந்தச்சமயத்தில்,

அவன்-மந்திரவித்தையில் மகாசிறந்தபக்கிரியாம்
ஆறுபேர்களும் அன்பாய்வரக்கண்டானே
இடையிலிருக்கும் இன்பசெப்புகுடத்தன்னில்
நிறயவராகன் நிர்மித்தானவ்வேளை
இந்தவித்தையை இன்பமாய்பார்த்தாரே
என்னசாமர்த்தியம் இந்தநல்லபரிதேசிக்கு
இன்னம்நமக்கு இதுபோல்பாக்கியம்தருவாரோ
சாம்பவமூர்த்தியோ ஷண்முகதேவனோ
பாலன்பிறந்தவேளை பண்பாய்நலமாச்சுது
குடத்தையெடுத்துக்கொண்டு கொப்பனவேதிரும்பினார்
மனைக்குவந்துமிவர் மகிழ்குடமிறக்கினார்
சிலகுடங்கள்நானும் செப்பகுடங்கல்லாச்சு
சிலகுடத்தில் சிறுவெட்டின்பின்னாயாச்சு
இந்தநல்லதிசயத்தை இன்பமாய்பார்த்தாரே
ஜாலத்திலெபருத்தவன்டி சன்யாசியிவனுக்கும்
இப்படிச்சொல்லவே இசைந்துமேபக்கிரி
சூர்யநாகம்மாள் சுந்திரமனைக்குவந்து
சந்தோஷமானினன் சப்பிரமாயப்போது
முகத்தில்முத்துகளை முகந்துமேகொண்டுவந்தார்
இந்தநல்முத்தை இசைந்துமேபெற்றுக்கொண்டு
விபூதிதானெடுத்து வேகமாய்பக்கிரி

வசனம்.

அம்மா இந்த விபூதியைக் கொண்டுபோய் நெற்றியிலிட சகலமான பிரேத பிசாசு பூதநாகஷ்ட வலம் பில்லி சூனியம் இதுகள் யாவற்றும் அணுகாது குருடாக்ஷம் அனுசரித்து சந்தோஷபடவேண்டுமென்று விபூதியை அம்மா நெற்றியில் இட்டான் அதன்பிறகு.



அந்தச்சமயத்தில் அழகானபக்கிரி
ஆறுபேர்மேடைக்கு யன்பாகதான்சென்றான்
சுகாந்தேகியென்று பிருசங்குதானுதிறன்
அந்தச்சப்தங்கேட்டு அதிவேகமாய்தாதிகளும்



தாதிகள் பரிதேசிக்குப் பிச்சையிடுவது.

பிச்சையெடுத்துக்கொண்டு பெருமையுடனே திரில்வந்தார்
வந்தேதார்தாதியை வாஞ்சையாய்பார்த்தானே
இந்தவீட்டிற்கு இசைந்தபட்டத்துத்தேவிதானு
அந்தமொழிக்கேட்டு அப்போதுதாதியுமே
பட்டத்துத்தேவியல்ல பண்புள்ளதோழிகள்நான்
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பக்கிரி
தாத்தரியாகுஞ்சோந் தாதிபிச்சைபெறலாமா
சாம்பவமூர்த்திக்கு சரியாகுமாயிந்தபிச்சை
பால்நாகுபிச்சையிட்டாள் பெருமையுடன்பெருவேனான்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்தாதிகளும்
ஐயாவேபரிதேசி அன்புடன்கேளுமையா
புருஷன்நீராதப்படி பிச்சையெவ்வாரிடுவாரையா
இந்தமொழிக்கேட்டான் இன்பமுடன்பக்கிரி
பரிதேசியானவர்க்கு பகரும்புருஷனுண்டுயேதடி
அந்தநாகாளுக்கு அன்பாய்சந்தானங்கொடுத்தேன்
பிச்சையிடாமல்போனால் பெருமையுடன்பாலகனை
அவன்பிராணம்தன்னையே அன்புடன்வாங்கிப்போறேன்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்தாதிகளும்
உடனுமந்தவேளையே உகந்துமேவோடிவந்து

அம்மாவேடீகேளும் அன்புடனேயென்வார்த்தை
இந்தவேளைதனக்கு இங்குவரும்பரிதேசியல்ல



பாலநாகம்மாளுக்கு தாதிகள் சொல்வது.

நீபிச்சைபோடாவிட்டால் கெடுபாலனைகொல்லுவானும்
இப்படிச்சொல்லியவன் இளசந்துபத்தியங்கூறுகின்றான்
இந்தமொழிக்கேட்டாள் இன்பமுடன்நாகம்மாள்
பயமதுதான்கொண்டு பண்மையுடன்தாதிகளை
அப்போயழைத்துமே அன்புடன்சொல்லலானாள்
தேசங்கள்திரிபவனோடு தேடிபத்தியங்கூறலாமா
நாந்தன்பாலகன்போனால் இருக்குமாயென்தனுயிர்
தாதிகளேநீங்கள் தயவுடன்வெண்ணீரை
கொண்டுவாருங்களடி கொப்பரைவேலைகளோடே
அந்தமொழிக்கேட்டு யப்போதுதாதிகளும்
வெண்ணீரைகொண்டுவந்து வேகமாய்வைத்தாரே
சுத்தஸ்லகமாய் அருங்காபகைகள்பூட்டி
பட்டுசேலைதன்னை பண்புடன்தானுடுத்தி
இருகையிதன்னிலே இன்பமுடன்தானெடுத்து
பரிதேசியைநோக பண்புடனேதான்வருக
கைசேர்க்கவில்லையதுமே கனமெட்டிசெப்பிக்க
அந்தச்சமயத்தில் அன்பானபாலகனும்
காவக்காரென்றுமே கண்டுயழுகலானான்



அந்தச்சப்தம்கேட்டு அப்போதுநாகம்மாள்
எந்தன்தவப்பாலா இளம்பாலவர்த்திராஜா
பரிதேசிக்கிப்போதுபண்புடனேபிச்சையிட்டு
வேகமாய்வருகிறேன் தாதிகளேதாலாட்டுவீர்
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பாலகனும்
என்னவென்றுபாலகன் யப்போதுயழுகலானான்
அம்மாவேநீகேளாய் அன்புடனேயென்வார்த்தை
பரிதேசியல்லவே பக்கிரியவனிப்போது
நாகள்ளபூடியை நலமாய்யாள்பவன்தான்
மாயக்காரனம்மா மாயப்பக்கிரியவனும்
அவனுக்குப்பிச்சை யன்பாகயிடவேண்டாம்
பக்கிரிகைதனிலே பண்பாயகப்படுவீர்
எந்தனுடதந்தைகள் இந்நாட்டிலில்லையே
தாயும்நீயுமேதான் வேறாய்பிரிகுவாய்
இப்படிச்சொல்லி இசைந்துபாலனழுதானே
பாலகன்சொல்லுமொழி பகர்ந்துதாய்க்குத்தெரியாது
தாய்சொல்லுமொழி தனிப்பாலன்யறிந்திட்டான்
அழுகாதேயென்குமாரா யழகுபாலவர்த்திராஜா
இப்படிச்சொல்லி இசைந்துகோடுயருகில்வந்தாள்
கோடுவெளிதன்னில் கொடும்பாவிநிற்கிறான்
இந்தப்புறத்தில் இசைந்துநாகாள்நிற்கிறாள்
பெருவீரேபரிதேசி பெருமையுடன்பிச்சையை
அந்தமொழிக்கேட்டு அப்போதுசொல்லுகிறான்
கோடுதாண்டிவந்தால் கொப்பனவேபிச்சைபெறுவேன்
கோடுதாண்டியானும் கொடுக்கமாட்டேன்பிச்சையை
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பக்கிரியும்
ஆணுலென்சமர்த்தை அன்பாகநீபாராய்
தொட்டிலிருக்கும்பாலகனை தோகையேகொண்டேகுவேன்
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்நாகம்மாள்
ஐயோயண்ணாவே அன்புடையபரிதேசியை
நீ-தந்தைதாயாச்சுதே நீபெற்றபுதல்வியாச்சே
உனதுபேரனிப்போ உகந்துயழுகுறானே
பால்கொடுக்கப்போரேன் பண்புடனேநீங்களிப்போ
பிச்சையைபெருமையா பாலகனழுகுறான்
இப்படிச்சொல்லியே இசைந்துநாகம்மாளும்

பாலகன்தொட்டிலண்டைபண்புடனேயோடிவந்தான்
காதுகாவென்றுமே கண்டுகொண்டுவிட்டானே
ஒன்றுமில்லாமலுமே பாம்போயழுகலானான்
தனுனகையோடிரம் நானுமேசபுற்றிதான்
பாலன்கைதன்னில் பண்புடன்கொடுத்தானே

வசனம்.

அந்தச்சமயத்தில் பாலகன் அழுதுக்கொண்டு என்ன சொல்லுகிறனென்றால் ஓ! அம்மணி? எனது பாட்டனுன ஹேமமுனி வேந்தன் காட்டிற்கு வேட்டைக்குப்போனார் அந்த கானகத்தில் காளியும் துர்க்கையும் அனேகதினமாய் போர்செய்துக் கொண்டிருந்தார். இப்படியிருக்க அம்மார்க்கமாய் இவர் சண்டையைப் பார்த்துக்கொண்டுபோக அவ்விடத்தில் பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன், இவர்க ளதற்குமுந்தி அங்கிருந்தார் இவர்க ளிவரைக்கண்டு ஓ! ஹேமமுனிவேந்தனே இந்த துர்க்கையும் காளியும் நிர்நிமித்தமாய் போர்செய்குறார் அவர்கலகத்தை சமாதானம் செய்யுமென்று சொன்னவுடனே வேந்தன் இதைக்கேட்டு ஐயா வீரசக்திகளிச்சந்தே என்னைக்கொன்றால் வறுசெய்வது ஆனாலும் பெரிதல்ல யான்சென்று சமாதானஞ் செய்கிறேனென்று அவர்கள் இருவர் இடம்சென்று அம்மா லோகரக்ஷகியே நீங்கள் இப்படி சண்டைசெய்வது நலமல்ல உங்களுக்கு மத்தியஸ்தஞ்செய்கிறேன் எப்படியென்றால், கிழக் கெல்லையில் காளியும், மேற்குயெல்லையில் பிடாரியும், இருக்கவேண்டும். இதோ உங்கள் இருவரும் இருக்குமிடத்திற்கு மத்தியில் எல்லைக்கல்லை நட்டுவைத்தேனென்று கல்லை நட்டு இருவரையும் சமாதானஞ் செய்துவிட்டார். அந்தச்சமயத்தில், பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன், இவர்கள் சந்தோஷமடைந்து செந்திராயுதம் மூன்று எனது பாட்டனுக்குக் கொடுத்தார். அந்தச் செந்திராயுதம், ஸ்டசமிவாகத்திலிருக்கிறது. அதை எடுத்துக்கொண்டுவந்து எனது தொட்டியில்வைத்தால் யானந்த பக்ஷியைக் கொல்லுகிறேனென்று சொன்னமொழியானது தாயிக்குத் தெரியவில்லை பாலகன் அழுவதைக்கண்டு தாதிகளோடு சொல்லத் தொடங்கினாள்.

தாதிகளேநீங்கள் தயவுடனேபாலகனை
தாலாட்டியின்று தயங்கித்திரைசெய்துவையீர்
இப்படிச்சொல்லியே இசைந்துநடந்துமே
நான்குகோடுகள்தாண்டி நலமாகவந்தாளே
இனியாகிலும்பிச்சை இன்பமாய்பிடியுமையா






பாலநாகம்மாள் பிச்சையிடுவது.

இந்தமொழிக்கேட்டு யேதுசொல்வான்பக்கிரி
கோடுதாண்டாமல் கொடும்பிச்சைவாங்கமாட்டேன்
அந்தக்கோடுகளை அன்பாகத்தாண்டிவந்தாள்
கண்டானேபக்கிரி கனமுடனேநாகம்மாளை
மூர்ச்சையுந்தானடைந்தாள் முகங்குமேபூமியில்விழ
மூர்ச்சையுந்தான்தெளிந்து முந்தியெழுந்துமே
ஜோல்ஞதனைப்பிடித்து பிச்சையைப்பெற்றுக்கொண்டு
விபூதியைதானெடுத்து வைபோகமாகவேதான்
பாலநாகம்மாளுக்கு பண்புடனேநெற்றியிலிட்டான்
சிவசாம்பமூர்த்தி சித்தமாய்க்காப்பாற்றுவான்
இப்படிச்சொல்லியே இசைந்துபாசிக்கூறினான்
பிச்சைதானிட்டுமே பெருமையுடன் திரும்பினான்
அவன்கையிலிருந்த மந்திரகோல்மூன்றுதான்
வெள்ளிப்பிரம்பெடுத்து வைத்தானேசிரசமீது
குபிலென்றுதானெரிந்து கலிஞ்சாம்பலாக
அந்தசாம்பல்தன்னை அடவாய்குப்பல்செய்தானே
செப்புக்கோலெடுத்து சாம்பல்மீதுதானும்வைத்தான்
அந்தநல்லசாம்பல் அழகுதகுப்நாயாக்க
நாயாகசெய்துமே நலமாகவிட்டானே
அந்தநல்லநாயும் அப்போதுபாலனிடம்
தொட்டியருகில்வந்து சுத்திசுத்தியழுதது
இதைக்கண்டுபக்கிரி இன்பமாய்ப்போது
அநுசேரபரியென்றான் அவனிடம்வந்தது

டால்ரொட்டி இன்னொன்று தயவுடன்தான்கொடுத்தான்
ரொட்டியும் ரூம் மெத்தென்டவேயில்லைநாயும்
தொல்லைக்குள்ளிருக்குது தின்னவொன்றும் தின்னுமல்
இப்படியிருப்பதை இதைக்கேட்டான் பக்கிரி
கழுத்துக்குக்கயிறையும் கனமுடனேதான்கட்டி
கையில்பிடித்துக்கொண்டு கடுகநடந்தானே
பாதுகன்றுபட்டணம் கோட்டைவாயல்வந்தானே
தலையாரிராமனும் காவலிருந்தானே
பக்கிரிதன்னையே பண்புடன்கண்டானே
நல்லாயிருக்குதையா நலமுள்ள பரதேசியே
இரண்டுநாளாக இவ்விடத்திலிருந்தால்
வேந்தர்பிதைக்கேட்டால் வேகமென்தலைபோகும்
போகும்போதுமக்கு புகழ்நாயிக்கிடையாதே
வருகும்போதிந்தநாயும் வந்தக்காரணமேதையா
இவ்விடத்துநாயியாகும் விடமாட்டேனிப்போது
இந்தமொழிக்கேட்டான் இன்பமாய்ப்பக்கிரி
அடாகாவலேனகேளு அன்புடனேகேளடா
நான்-காசிக்குப்போவதாய் கண்டுசினேகிதனையழைக்க
வருகுதல்ல வன்மையுடனின்நாயை
அழைத்துக்கொண்டுபோயி அக்காசியில்குளிக்கவைத்து
அழைத்துவாருமென்று அன்புடனேயிதைக்கொடுத்தார்



காவல்காரன் நாயைவிடாமல் மடக்குவது.



அவர்கள்கொடுத்தநாயை அழைத்துக்கொண்டுவருகின்றேன்
இதிலும்கொஞ்சபுண்ணியம் எந்தனுக்குச்சேருமப்பா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்காவலனும்
எவ்வளவுசொன்னாலும் விடமாட்டேனிந்தநாயை
இதுகளைக்கேட்டானே ஈனகுல அதிராகியும்
என்கெட்டுப்போகுராய் இன்பமுள்ளகாவலனே
இப்படிச்சொல்லவே இதைக்கேட்டுமேகாவலனும்
கெட்டுப்போனென்றுதான் கிருபையுடனொன்றுமே
பணிரெண்டுநரிசை பச்சபயர்கெட்டது
இருபதுகலமரிசி இன்பமாய்கெட்டுது
இன்னமென்னதான் இப்போதுகெட்டுப்போகிறது
இதுகளைக்கேட்டானே அப்போதுபக்கிரியும்
விபூதிதானெடுத்து வேகமாய்காவலன்மேல்
அள்ளித்தெளித்தானே அப்போதுவிபூதியை
அந்தச்சமயத்தில் அந்தநல்லகாவலனும்
பயித்தியம்பிடித்ததுபோல் பிணத்திகான்வாயாலே
பிசாசுப்பிடித்ததுபோல் வோடினான்கானகத்தில்
கானகமார்க்கமாய் காவலன்வோடினான்
அந்தச்சமயத்தில் அந்தநல்லபக்கிரியும்
நாயையழைத்துக்கொண்டு நலமாகவோடினான்
மூன்றுதினத்திலே முகத்துநாகன்னபூடி
அந்தநாகன்னபூடி அழகுகரையோரத்திலே
மௌலாலிப்பேட்டைக்கு மகிழ்ந்துமேவந்தானே

வசனம்.

அந்த மௌலாலிப்பேட்டை தன்னில் இருக்கப்பட்ட ஆலமரத்த ருகில் வந்து நாயைநிறுத்தி வெள்ளிப்பிரம்பை அதின்மேல் வைக்க வே அது சாம்பலாய்விட்டது. அதன்பிறகு, அந்தச்சாம்பலை குப் பலாக்கி செப்புப்பிரம்பால் தட்டவே அந்தச்சமயத்தில்.

கலகலவென்றுமே எழுந்தாளேநாகம்மாள்
அழகுடைய அன்னையைபோலே அப்போதெழுந்தாளே
குமரனைப்பெற்றதொரு கோமளாங்கியாக
பாலகனைப்பெற்றதொரு பண்புள்ளநாகம்மாள்
அழகில்சிறந்தவள் அன்புள்ளநாகம்மாள்
இவளைக்கண்டவுடன் பேதுச்சொன்னான்பக்கிரி


கோபமெங்கிலே கோரிக்கைதீர்ப்பாயடி
மோகநாங்கிலே முந்தவிடலாகாது
இத்தனையுங்கேட்டாளே இன்பமுடன்நாகம்மாள்
அன்னமொன்னுமே அங்குள்ளபரிதேசியே
தாயுந்தந்தையே தாம்பெற்றபுதல்வியாவும்
உனதுபோல்புதல்வன் உகந்தபழகுவான்
பால்கொடுக்கப்போகவேணும் பக்ஷமுடன்விடுமையா
இந்தமொழிக்கேட்டான் யப்போதுபக்கிரி
இத்தனைநாளுன்மேல் இச்சைவைத்துக்கொண்டுவந்தேன்
பொல்லாதமுரைகள்கொண்டு புகழ்ந்தபேசுகின்றாய்
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்நாகம்மாள்
பாவிசண்டாளா பாமலோபிபக்கிரி
உனதுமாயமெல்லாம் உகந்தபறிந்திட்டோமான்
பனிரெண்டுவருடம் பாரினில்நோன்புவைத்து
அந்நோன்புதானும் அன்புடனேதீர்க்கயின்பு
உனதுமொழிப்போலாக உகந்தபான்கேழ்க்கிறேன்
உனக்கேயென்பிராணம் உகந்தேதருகின்றேன்
இனியாருக்குபானும் இசைந்துபிராணம்நாப்போரேன்
இல்லாமொழிச்சொல்லி இசைந்தயெந்தன்கைப்பிடித்தாய்
பூமியைக்கிரியான் புகழ்ந்தசாபம்கொடுக்கிறேன்
அந்தச்சாபமிட்டால் அம்போவுன்னிலைமைத்து
பக்கிக்குயியரிந்திடுவாய் பத்தினிசொல்லிவைத்தேன்
இந்தமொழிகளை இசைந்தபக்கிரிகேட்டுவிட்டு
உள்ளம்நொடிங்கி உகந்தபயங்கொண்டானே

வசனம்.

ஆனல் இந்த பக்கிரியிடத்தில் வரச்சொன்னல் வருகிறது, போகச்சொன்னல் போகிறது, வட்டியுத்தம்செய்வது, முக்குமோடுமேடையேற்றுகிறது, வெள்ளிப்பிரம்பு, கருப்புப்பிரம்பு, செகப்புப்பிரம்பு, இந்தமூன்றிலும் மாயமிருக்கிறது பனிதருப்பமாகிறது, சாம்பலாய்ப்போகிறது நாயசப்ப்போகிறது, இப்படியாக அனேக வித்தைகளிருக்கிறது அவ்வபுருஷன் அநேக லகாருப்படியான மந்திரமும், சொக்கமந்திரமும், இவனிடத்தில் இல்லாதபடியால் பாலநாகம்மாள் சொன்னமொழிக்கு பயமடைந்து நடுநடுங்கி அதேப்பிரகாரம் நாகம்மாளை சாபம்செய்து தோல்ஞதன்னில் போட்டுக்கொண்டு தன்பட்டணக்கு நடந்தான்.



அவனுடையபத்தினி அழகுவணிகச்சங்குதான்
மருதிநாமனேரி வருவதைப்பார்க்கின்றாள்
பக்கிரியொருவனே வருகின்றானவ்வழியே
இவனுமேல்முடியுமா அம்மாதைகொண்டுவருக
பலமானவேந்தர் பார்த்துவிட்டால்கொன்றிடுவார்
இவனுக்குயெப்படி அகப்படும்மயம்மாது
இப்படியாகவே யோசித்துக்கொண்டிருக்க
பக்கிரிதானுமே பக்ஷமுடன்வந்துவிட்டான்
வாடிவணிகச்சங்கு வண்மையுடனிப்போது
உனக்குச்சக்காளத்தியை உகந்தயான்கொண்டுவந்தேன்
இருவரும்போர்கள்செய்ய இசைந்துகண்ணல்பார்க்கின்றேன்
இருவர்கள்தமாஷை இங்குயான்பார்க்கின்றேன்
இந்தமொழிக்கேட்டாள் இசைந்துவணிகச்சங்குமே
இல்லாமல்போனாலும் யென்மொழியாடுகிறாய்
பலமடைந்தவருடைய பார்புகழும்நாகம்மாள்
இந்தசண்டாளனுக்கு யெப்படியகப்படுவாள்
இப்படியாகவே யிசைந்துசொல்லிக்கொண்டிருந்தாள்
அந்தச்சமயத்தில் அறிவுகெட்டபக்கிரியும்
வந்தானேமருதிக்கு வகையுடனப்போது
வாடியென்கண்ணே வரிசையுள்ளவணிகச்சங்கு
உனக்குசக்காளத்தியை உகந்துயானுங்கொண்டுவந்தேன்



பாலநாகம்மாள் நிஜரூபங்காட்டுவது.

இருவரும்போர்கள்செய்ய இசைந்துமேபார்க்குறேன்
உங்கள்தமாஷை உகந்துமேநான்பார்க்கின்றேன்
எங்கடாபக்கிரி எந்தனுக்குக்காட்டடா
அந்தச்சமயத்தில் அந்தச்சாம்பலையிறைபோட்டான்
செப்புப்பிரம்பாலே சிறப்புடன்தட்டினான்
கலகலவென்றேச்சொல்லி வளையலும்சப்திக்க
பாலநாகம்மாளும் பண்புடன்யெழுந்தவுடன்
மேடைகள்மெத்தைகள் மின்னலுமடாச்சுது
இந்தக்கிரந்துக்கு மருதியெங்கும்வெளியாச்சுது
இம்மாதைக்கண்டு இசைந்துமேவணிகச்சங்கு
உன்தலையுடையாதோ துரோகசண்டாளபாதகா
இம்மாதையேனோ இங்குகொண்டுவந்தாய்நீ
அம்மாதைத்தீண்டினால் யப்போதுசாகுவாய்
என்வந்தாய்நாயே இந்தப்பாவிப்பின்னாலே
இந்தனைக்கேட்டானே யப்போதுபக்கிரியும்
தாத்தரிபாருஞ்சோதுாரப்போடிவணிகச்சங்கு
இவ்வாதமொழிச்சொல்லி யென்மேல்தாருச்சொல்லுமிருய்
மூக்கையும்நாக்கையும் முகந்துயான்பருபேண்டி
அடபோடாபாதகா ஆனதெனக்கென்னடா
நீ-எங்குதான்செத்தாலும் யெந்தனுக்குயென்னடா
அந்தவல்லிப்பக்கிரி அன்பாகநாகம்மாளை
மருதிதன்னிலே மகிழுடன்பயாச்செய்தான்


வசனம்.

அந்தசமயத்தில் பாலநாகம்மாளை மருதியில் கொண்டுவந்து விடவே அம்மாது கேட்டையா பக்கிரியெனக்கு பணிரெண்டு வருடம் கேடு கிருப்பரியந்திரம்வாயல்தாண்டி உட்பிரவேசிக்கலாகாது அப்படி மீரிவந்தால் தானிதேவிடைய நினைத்து உன் தலையுடையும்படி சாபமிடுவேன்.

இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பக்கிரி
உள்ளமகிழ்ந்தங்கே ஒன்றுமேபேசவில்லை
பக்கிரிதானுமே பள்ளியறைசேர்ந்தானே
இப்படியிருக்கையிலே யந்தவல்லச்சமயத்தில்
பானுகண்டிபட்டணத்தில் பாலநாகம்போனதின்பு
ஆறுப்பேரக்காமார் அழுதபுரண்டாரே



தாதிகள்மீங்களே தயவுடன்பாலகனை
பால்கொடுத்துவளர்ப்பீர் பண்மையுடன்பாலகனை
இந்தவீட்டிற்கெல்லாம் இவன்தானொருபிள்ளையாகும்
ஐயோகுமாரா அழகுபாலவர்த்திவேந்தா
நீபிறந்தவுடனே தாயைதுறந்தாயோ
ஞானமாகாமூர்த்தி தந்தைகள்தானுமே
கண்டிக்கோட்டைசீமைக்கு காரியமாகபோய்விட்டார்
தந்தைகள்தானும் இங்குயில்லாசமயத்தில்
பாவிப்பக்கிரி பண்புடனேவந்தானே
இப்படிச்சொல்லி இசைந்துயெல்லோரழுதாரே
தாதிகள்தானும் பாலகனைவளர்க்குறார்



குடிஜனங்கள் துயரமடைந்து கண்டிக்கோட்டைக்கு கடிதமெழுதுதல்.

அந்தப்பட்டணத்தில் இருக்குங்குடிஜனங்களும்
இந்தப்பக்கிரியும் எப்படிவந்தானோ
அப்படிவந்தவன் எப்படிபோய்விட்டான்
எங்களுக்குமே யேதுமொன்றுந்தெரியவில்லை
இந்தப்பட்டணத்தில் யாருந்தெரியவில்லை

வசனம்.

ஆகையால் நாளையதினம் கண்டிக்கோட்டையிலிருந்து நமதுவேந்தர் வீட்டிற்குவந்தால் ஏதுயெண்ணிக்கொள்வாரோ எங்கள்வீட்டை கொள்ளையடிக்க இருந்தீரோ யென்றுச்சொல்வாரோ இன்னமேது என்னைமிடுவாரோ தெரியாது. ஆகையால், இதற்குள்ளாக வேந்தனுக்கு இச்செய்கதியை அறிக்கைச் செய்யவேண்டும் என்றுச்சொல்லி கடி

தமெடுத்து கண்டிக்கோட்டைக்குக் கடிதமெழுதலானார் எப்படியென்றால் மகாகனம் பொருந்திய சூரவர்த்திவேந்தனே சந்திரவர்த்திவேந்தனே முதலானவர்களுக்கும் யெழுதியிருந்தது யாதெனில் இந்த பாணுகண்டிபட்டணம் சமீபத்திலிருக்கும் நாகவள்ளிபுரியென்கிற ஊரைப்பட்டமாயப்பக்கிரி வந்து நமது பாலநாகம்மாள் ஜலகமாடிய அழகான் பக்கிரிவந்து அவளையெடுத்துக் கொண்டுபோனான் அவன் வந்ததும்போனதும் யாருக்குந்தெரியாது. இப்போது காரியவர்த்திவேந்தனுக்கு நீல்லவன் ஜனித்து அப்பாலகனே நாதிகள் பால்கொடுத்து வளர்க்கிறார் இந்தசங்கதி நீங்கள் அறிவதற்கு கடிதமெழுதினேன் என்று கடிதமெழுதி லிகோடாசெய்து வேந்தனுடைய காவல்காரரையழைத்து இந்தக்கடிதம் கொண்டுபோய் வேந்தனுக்குக் கொடுமென்று சொல்ல இதைக்கேட்ட காவலர் ஐயா வேந்தன் எங்களை வேலையில் வைத்துக்கொண்டாலும் சரி தள்ளிவிட்டாலும் பெரிதல்ல அந்தநாடானது ஒன்பது யோசனைதூரம் சூரியனுடைய காந்தியகப்படாதக் காடு புலிகள்வாசம் செய்யுமிடம் என்றுச்சொன்னார் இதைக்கேட்டு குடிஜனங்கள்,

வேந்தர்களைவளர்த்த அழகானபெட்டைதன்னை
அந்தப்பெட்டைதன்னை அப்போதுக்கொண்டுவந்தார்
நாட்டிற்குவெளியில்வந்தார் நலமுடனேகுடிகளும்
கண்டிக்கோட்டைக்குப்போகும் மார்க்கந்தன்னில்நின்றார்
கேட்டீரோபெட்டையே கிருபையுடனிப்போது
உங்களைவளர்த்த பிரியமுள்ளவேந்தர்கள்
கண்டிக்கோட்டைக்குக் காரியமாகபோனாரப்பா
அவர்களிடம்போயி அன்புடனேநீசென்று
இந்தக்கடிதத்தை இன்பமாகக்கொடுத்து
வாருமென்றுச்சொல்லி வளைகழுத்தாகட்டினார்
விட்டாரேயப்போது வேகமாயந்தப்பெட்டைதான்
மேகங்கள்தன்னிலே மறைந்ததுபெட்டைதான்
மூன்றுதினத்தில் முகந்துகண்டிக்கோட்டைக்கு
வந்துமேசேர்ந்து வரண்டமேடைதன்னில்
வந்துமேகுந்தியது வகையுடனேபெட்டைதான்
அந்தச்சமயத்தில் அழகுகாரியவர்த்திவேந்தன்
பெட்டையைப்பார்த்தானே தீவிரமாய்ப்பொழுது
அன்னமேவாராய் அன்புடனேநீகேளும்
நாம்வளர்த்தபெட்டைதான் நலமாகவந்ததிங்கு
நாட்டுமீதியாபகம் நன்மையுடன்தானகொண்டு
பெட்டைவிட்டதுமே தீவிரமாய்வந்ததிப்போ




காரியவர்த்திவேந்தன் பெட்டையைப்பார்த்து அன்னமேசொல்வது.

வசனம்.

அந்தச்சமயத்தில் வேந்தரெல்லாம் மேடைமீது சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார் அப்போது காரியவர்த்தி வேந்தன் யெழுந்து பெட்டைதன்னையழைக்க.

அந்தமேடைமீது அழகாயமர்ந்திருந்த
பெட்டையைக்கண்டு தீவிரமாயழைத்தானே
அண்ணா-மணிதரைநம்பினல் மானிலத்திலேயதுல்ல
பாணுகண்டிபட்டணத்தில் பண்மையுடனிருந்தபெட்டை
நாம்-செத்தோமோபிழைத்தோமோ யென்றுபார்க்கவந்தது
வாயில்லாபட்சியிது வாஞ்சையிட்டுவந்தது
அந்தபெட்டைதன்னை அன்பாகத்தடவிக்கொடுத்தான்
கழுத்திலிருந்தவொரு கடிதத்தைப்பார்த்தானே
நமக்கு-சந்தோஷமோ துக்கமோ அண்ணாவேவாருமையா
ஆரும்போர்கேட்டாரோ அப்போகடிதமெடுத்து
கண்டத்தின்மீதுவைத்தார் கடுகமந்திரிகைப்பிடித்தார்
பாருமையாமகாராஜா புகழுடனேயிப்போது
இவர்தன்னிங்களும் இப்போதுசெத்திருந்தால்
அந்தப்பக்கிரிக்கு அங்குயேபயமுண்டு
செத்தாப்பாரை சீராட்டபோரீரையா
நாமிருந்தாலல்லவா நாடிக்கவேண்டுமையா
நீங்கவேன் துயர்படுகிறீர் நீணிலத்தின் சேனைகளிருக்க
இரண்டுகோடிபிரங்கியுடன் யுத்தத்திற்குப்போகலாமே
அவனைக்கொன்றல்லவோ மாதைக்கொண்டுவரவேண்டும்
இப்போதேபோகலாம் சனபக்கிரியைக்கொல்லலாம்
பாலநாகம்மாளை பண்மையுடன்கொண்டுவரலாம்
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொல்வார்வேந்தரும்
அம்மாளைக்கொண்டுவந்தால் அழகானயிந்நாட்டில்
வீட்டைவிட்டுப்போனவளை வேகமாய்க்கொண்டுவந்தால்
நம்மையப்போல்வேந்தர் நாலவர்கைபடாரோ
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்மந்திரியும்
பவித்திரங்களிடித்தோ பாருங்கும்வேந்தரே
ஸ்ரீராமசெந்திரன் செய்ததுவேதக்காரியம்
தசகண்டராவணன் சீராமஜானகியை

கொண்டிருந்தக்கொண்டு திருப்புடனுமயராதம்
லங்கையில்வாழச்செய்து இராவணனிருந்தையில்லை
அந்த இராவணனை யழுக்காசாயாகித்து
அந்தக்கவிதையை நிருபாட்கொண்டெதார்
அப்படி பழிமேந்த அழுக்காசையாலைகட்டாள்
அதுபோலப்பாக்கலாம் வென்னேராருமாருமையா
இப்படிச்சொல்லியே எல்லோருமாரப்பட்டார்
பனிரெண்டாயிரம் பார்த்திசேனாதிரா
புறப்பட்டாரப்போது புகழுடன்வேந்தரும்
இரண்டாயிரம்பிரங்கி வண்டிகள்வருகிறது
மூன்றுமியர்மந்திரிகளுடன் முகந்தேவேந்தர்வாரார்கள்



ஏழுபோர்வேந்தர்களும் சண்டைக்குப் புறப்படுதல்

தவசக்குரகம் அரயப்போருகிறார்
கணிபேர்தன்லேயே நிமிர்பாவழித்தார்கள்
கண்டுக்கொட்டைவிட்டு காவலுடன்அதினத்தில்
நாகம்மாள்கதை நல்லமக்கள்நேர்ந்து
போர்துரையெழுப்பிடுப முநாராமொரசிதிருக்கிறார்
நாவுப்பக்கப்பிரங்கி நல்லமக்கிருக்கியேதான்
மருந்துவெட்டடம்செய்து மனிழ்ந்துபேசட்டாரே
பிரங்கிபட்டயிடம் பொகுங்களில்கேல்லுதான்
சன்னுப்புகாரைதான் சிறப்புடன்விடுவேயில்லை
மந்திரக்காரரோடா மாயமானபக்கிரி



வசனம்.

கேட்டீரா மந்திரிகளே சந்தனே பிரங்கிகளே காட்டப்பேரதிலும் ஏதென்று கேள்க்கவில்லை இதைப்பார்த்தால் பாழ்கோட்டைப்போல் இருக்கிறது மனிதர் இருந்தால் மேடைமேதேரி பார்க்கமாட்டாரு யாருமில்லாததைப்போல்காட்டுகிறது இப்படிச்சொன்னவுடன்மந்திரி நிச்சனேபோட்டு அப்பேடைமீதேரிப்பார்க்க அதெருதுருடர் அகப்படவில்லை சிறைபிடித்துக்கொண்டு வந்த நாகம்மாள் மாத்திரம் கோட்டையில் இருக்கின்றாள் தவிர பக்கிரியென்றும் அகப்படவில்லை நாம்யாருடன் யுத்தம்செய்வது என்று மனவியாகுலமடைய இதற்குள்ளாக காவலன் ஒருவன் பக்கிரியைப்பார்த்து விட்டு ஐயா இராஜேந்திரா அதோ படுத்துக்கொண்டிருப்பவன் பக்கிரிதான் அதனால் அவனைமுந்தால் அகப்படமாட்டான் இதுதான்சமயம் அவனைக்கொல்வதற்கு என்றுச்சொன்னவுடனே வேந்தன் சந்தோஷமடைந்து பிரங்கிகளே கோட்டையின் கிழக்கு திசையில் அந்தருகலிகள் அவனை ஏதுஞ்செய்யவில்லை ஆனால் பக்கிரி சாயந்திரமே இரண்டாயிரம் ரொட்டிகள் இரண்டுகைப்பருப்பு மூன்று சட்டி நெய் அப்படியே லொட்டாக்களும் முப்பதுபடி சாராயம் அதோடுசெய்துக்கொண்டு பனங்காயளவு அபினிமேன்று பூரணிக்காயளவு மாஜியும் தின்று படுத்துக்கொண்டிருக்கின்றான் உதயமானவுடனே எழுந்திருப்பான் இதற்குள்ளாக எதாகிலும் காரியமிருந்து எழுப்பவேண்டுமானால் கசக்கிட்டாலும் ஆட்டுக்கல்லை தூக்கி ஒருவனும் ஆனைப்பிட்டு பிடிக்கச்செய்தாலும் எழுந்திருப்பது அதிகதூர்லபம் எழுப்பவேண்டுமானால் கெட்டப்பவாதனை செகப்பாய்காய்ச்சி அவன்காதில்விட்டு அழுவினால் எழுந்திருப்பானென்றுச சேவுவன் சொல்ல இதைகேட்டதும் வேந்தன் ஆச்சரியமடைந்து இருக்க அச்சமயத்தில் பக்கிரி முதல் பக்கிரியாகிய.

வக்கிரசக்குமப்போ வந்தானேமேடையிற்று
பார்த்தானேயிவர்களை பயமுறுகிராந்தே
எழுந்திடாதெழுந்திரும் சண்டைபக்கிரியே
அன்றுசொன்னவனே ஆயமாறைநான்கொள்ளடமென்று
பலகலருமவந்தாயிப்போ பண்புடன்காத்துக்கொண்டார்
எப்படியெழுப்பினான் ஏதென்றுமேதாம்கனியில்லை
கம்பானையைத்து கடிக்காடப்போடச்சொல்லி
கெட்டப்பாளையை சிவப்பாய்காய்ச்சினார்
காதில்அவன்காதில் ஊற்றியே எழுப்பினார்
அப்போதுபக்கிரி அசந்தேயுறங்கினான்

வசனம்.

அப்போது வேந்தர் பக்ஷியைப் பார்த்து இவன் யெழுந்திருக்க போகுறானென்று.

பக்ஷியை கண்டால் சுவேது.


பக்ஷியிட முபக்கம் பண்புக்குறிபிட்டாரே
பிரங்கிதன்னையே குறிப்புடன் சுட்டாரே
அந்தபடிபட அப்போது பக்ஷி
என்னடிசங்கு இங்கு குடிக்கிருதடி.
வலதுபக்கத்தில் வண்ணையுடன் சுட்டாரே
இந்தபடிபட்டு அப்போது பக்ஷியும்
காண்ணடிசங்கு இங்கு கொலுகடிக்குது.
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள் வனிதைச்சங்கு
சண்டாளபாதகா சீக்கிரமாய் யெழுந்திருப்பாய்
அன்புசொன்னமொழி இங்காசரியாச்சுதடா
பகைவர் வந்துவிட்டோ பகர்ந்துகொண்டார் நாலுபக்கம்
அந்தமொழிக்கேட்டு பாப்போயெழுந்தானே
வாடியம்மா பாலநாகு வகையுடனிப்போது
உன்னுடைய திசைகள் வகைக்கவேவந்தாரே
என்னுடைய சன்னடையை இன்பமாய்ப்பாராடி
இப்படிச்சொல்லித்தான் வேணியைப்போட்டானே
எரடிபெண்ணே இந்தநல்ல வேணிகன்னில்
பாரடியுந்தன் பலமான சேனைதனை
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள் நாகம்மாள்
பணிரெண்டு வருஷம் பண்புடன் பொருத்துக்கொண்ட
இப்படிச்சொல்லித்தான் வேசிநாகு இருவரும்
வேண்டைமீதிலே தான் பொன்னுடன் நாகம்மாள்

பாலநாகம்மாள் மேடையேரி கண்ணைக்கசக்கி கூத்தாடிகளைப் பார்த்தது.

பூ மேல் முதலாய் அன்புடனே பார்க்கவே
தனக்கானவேகுந்தான் பார்த்தாள் கண்ணாலே
பணிரெண்டுலக்ஷம் சேனைகளைப் பார்த்தாளே
அவர்களைப்பார்த்தமே வெகுவிபல் துக்கமுடன்
கண்ணில் ஜலம் சொரிய கதறியழுதாளே
இவளழுவதைத்தான் பக்ஷிபார்த்தான் பக்ஷி



எங்கடிபெண்ணே யழுகிறாய் இதற்கவே போடு
சேனைகளைப்பார்த்து சித்தம்பயமடைந்தாயோ
நானிருக்கும்போது உனக்கென்னபயமடி.
வேட்டையைவிட்டப்போ இருவரும் பிரக்கினார்
பாரடிபெண்ணே பண்புடனே என்பலத்தை
இப்படிச்சொல்லியே அப்போது பக்ஷியும்
லட்டியைத்தானெடுத்து லட்டிக்குப்பிராணந்தந்தான்
பிழக்குசேனைகள்மீது கிருபையுடன் மாறுவென்றான்
அப்போது லட்டிதான் ஆகாயப்பாக்குது
மூன்றுலக்ஷம்சேனையை முந்திதான்கொன்றது
மூன்றுமிஷமட்டும் யுகந்துயுத்தம்செய்தது
அவ்விரலட்டியென்று அழைத்தானேயப்போது
லட்டியைக்கையில்பிடித்து லகுவாகப்பிராணமதை
வாங்கியேபிறகுதான் வைத்தானே லட்டியைக்கீழே
இப்படியுத்தஞ்செய்ய இதுதெரியவே
குல்லாவையெடுத்துமே குறிப்புடன்தலைக்குப்போட்டான்
கம்பிளியைப்பக்கிழித்துநான் மிடிப்பிலேகட்டினான்
தூங்கிசொக்காயைதான் முடியாய்ப்போட்டுக்கொண்டான்
மந்திரவிபூதியை மகிழுடனெடுத்துக்கொண்டு
பிழக்குவாயல்பார்க்கம் சீறியெழுந்தானே
அப்போது வேசிகள் அன்புடன்பார்த்தாரே



பக்ஷியுடன் வேந்தர் சண்டைச்செய்வது.

வந்தான்பக்கிரியென்று வந்துசேனைச்சூழ்ந்துக்கொண்டார்
பனிரெண்டுசேனைகள்கூட பண்புடன்சூழ்ந்துக்கொண்டார்
கத்திபாலப்போது கடுகவேவெட்டினார்
சனையுங்கொட்டலும் அருந்தாவிழுந்தது
நாலுமணிநேரமாய் சண்டையடித்தாரே
கிழக்குகளத்திலே வெட்டுருளன்தலையை
அல்லாவெனக்குகோதான் அன்பாகதுணையிருப்பார்
குதாவெனக்குமே கூடத்துணையிருப்பார்
இப்படிச்சொல்லியே இசைந்துமோசைதானிறந்தான்
நாலுதிசைகளிலும் பண்பாகக்கொன்றார்கள்
அப்படியும்மவன் அப்பாறாவிழைத்தானே
பக்கிரியைப்பிடித்து பக்குவமாய்த்தலைகொய்து
கட்டிவேபண்பாகச்செய்தார் சொறுமாய்ஜலத்திலகலக்க
அந்தஜலத்திலவன் அப்போதேதானிறந்தான்

வசனம்.

அடா காரியவர்த்திவேந்தனே, சூரியவர்த்திவேந்தனே செந்திரவர்த்திவேந்தனே, இருவரைக்கும் எங்களுடைய சண்டையாச்சுது இனியென்ன நமாதை சற்றுபாரென்று சொல்லவே.

மந்திரிபுத்திரியை மகிழுடனே தான்பிடித்தான்
ஆனைகளெல்லாமப்போ கருக்கல்லாயாச்சுது
குதிரைகளெல்லாமப்போ ருத்துக்கல்லாச்சுது
ஒட்டைகளெல்லாமப்போ குண்டுக்கல்லாச்சுது
பிரஜைகளெல்லாம் நீண்டகல்லாச்சுது
சுரும்பேர்ப்போக்கள் மலைக்குன்றாச்சுது
அந்தகலைகைதனை யருப்புத்துசெய்தானே
மூன்றுப்போமந்திரிகளை மூகனறுத்துசெய்தானே
இப்படியாகவே இவர்களைச்செய்துவிட்டு
இருப்பினெனஞ்சுக்கு ஜீவனமாயப்போது
வாடிபோலக்கு வன்னைமடிகளிட்டபோது
கோடிலாங்கியெடுத்து கோர்க்கைத்திரட்டி
முத்தமிட்டுயெத்தன் மோகத்தைத்தீர்த்தடி
உங்கள்சேனைகளெல்லாம் மகத்துவமாய்ச்செய்துவிட்டேன்
உனக்குப்பயமில்லை ஒதுங்காதேகளுக்
இப்படியாகச்சொல்லவே இதுகேட்டாள்நாகம்மாள்



அருகிலேவாராதடா அந்துமூரிப்பட்டுப்போவாய்
உந்தன்தலையையும் ஒடிப்போடா தூரமாக
இளமையிலேகோகிலமே உன்மன்னர்துயரதங்கள்
பனிரெண்டுவருடம்போனால் பண்புடனுந்தனுக்கு
என்-பிராணத்தைதருவேன் பயப்படாதேபக்கிரியே
இத்தனையுங்கேட்டானே இன்பமாய்பக்கிரியும்
அந்தப்புரத்தினில் அன்பாகத்தான்சேர்ந்தான்
இப்படியிருக்க இன்புடன்வேந்தர்கள்
இந்த-சங்கதிகளையெல்லாம் கிரமாகபாலகன்யிக்கு
தெரிந்தாயப்போது தீவிரமாய்மாதருக்கு
அய்யோயென்தங்கைமாரே யிதக்கிடலாமோ
நமதுகுண்டைகள்போச்சு நாமெவ்வார்பிழைப்போமம்மா
இப்படிச்சொல்லியே யெல்லோருமழுதாரே
அக்காவேநீகேளாய் அன்பானசூரியநாகம்மா
ஆறுபேரும்மாண்டுவிட்டால் அன்பாகப்பாலகனை
ஆர்கையில்கொடுப்பது ஆசையுள்ளகுமாரனையும்
வீட்டின்பேரில்லாமல் போகுதேயின்றுடில்
நாமென்னாக்குபாலும் நலமாகசாகப்போறோம்
இந்தபாலபாலகனை யின்பாய்வளர்த்தாரும்
கலியாணஞ்செய்துவைத்து கண்குளிரப்பார்த்துவிட்டு
பிறகுசெத்தால்நமக்கு பெருமைதங்கிடுமேயம்மா
நமக்கு-எள்ளுந்தண்ணீரையுங்கனமாகத்தானிறைப்பான்
பாலன்மீதுயன்புவைத்து பாலகனைவளர்க்கலாம்
இப்படிவளர்த்துஅவர வயதையைந்தாச்சுதப்போ
ஐந்துவயதானவுடன் அன்பாகபாலகனை
பள்ளியில்போட பட்சமுங்கொண்டாரே
அந்தநல்லசமயத்தில் அங்காட்டிலிருக்கப்பட்ட
வாத்தியார் தன்னை வகையுடன்தானழைத்து
ஐயாவேநீர்கேளும் அன்புடனெங்கள்மொழி
இந்தநல்லபாலகனுக்கு இன்பமாய்நீரும்
படிப்புகள்கற்றுதான் பக்ஷமுடனேயுமையா
இப்படிச்சொல்லவே இசைந்துமேவாத்தியாரும்
நாளையதினத்திற்கு நல்லநன்றாயிருக்குதம்மா
அனுப்புவீர்பள்ளிக்கு அன்புடனேபாலகனை
கல்விதனைச்சொல்லி நலமுடனேமாதர்களே.

அப்போதுநூர்பாலகம்மா ளன்புடனேநாளுமே
மனக்கப்சரிசி மஞ்சுடனே ஆரப்போட்டு
கொழுக்கட்டைமுன்னைடைக்கு கொப்பரைவைத்தாங்கட்டி
கடலையுமேகலைத்து கனமுடைகள்தான்சுட்டு
பத்துவிதபச்சடிபருப்புமாகும் தான்சமைத்தார்
பாலகனுக்கப்போ பட்டமாய்நீர்வார்த்து
நிலையுந்தனட்டு சந்தனம்போட்டுவிட்டு
பட்டுவேஷ்டி வாத்தியார் பண்புடன்கட்டிச்செய்து
குணமிருவரையுமே குணமுடனேசெய்யச்செய்தார்
வாத்தியார்தானும் வகையுடன்வந்துமே
பாலகன்தைதன்னிலே பக்குவமாய்பாடத்தந்தார்



பாலவர்த்திவேந்தன் பாடசாலையில் வாசிப்பது.

ஹரிநமோசித்தமென்று அய்யருந்தான்சொல்ல
அந்தமொழிக்கேட்டு அன்புடனேபாலகனும்
அதுபோலச்சொல்லவே அய்யருஞ்சந்தோஷித்தார்
அந்தநல்லபாலகனை அன்புடனேபள்ளிக்கு
அழைத்துமேசென்றார் அய்யருமப்போது
அந்தவிதத்தில் அரிச்சுவடிதானும்படித்தான்
ஆத்திசூடியும் அறிவுறுங்கொன்றைவேந்தன்
எண்சுவடிலெக்கமும் இவையெல்லாந்தான்படித்தான்



வசனம்.

இப்படிப் பாலகனுக்கு எட்டுவயதிற்குள் எல்லாம் பாரதம், பாகவதம், சம்பூர்த்திசெய்தான். பதினோராவதுவயதில் பரதசாஸ்திரம் படித்தான் பனிரெண்டாம் வயதில் காவ்யத்தைப்படித்தான் பதிமூன்றும் வயதில் அலங்காரம் படித்தான். இதற்குள்ளாக வாத்தியாரைப் பார்த்து ஐயா இதுவெல்லாம் பூர்த்தியாகி விட்டது இனியேதாகிலுமிருந்தால் சொல்லென்று கேட்க. இதைக்கேட்டு வாத்தியார் சொன்னதியாதெனில் அப்பா இராஜகுலோத்தமா இதுதான் யான் கற்றறிந்த வித்தை இனி உனக்குச்சொல்ல என்தாலல்லவென்றுச் சொல்லவே பாலகன் சந்தோஷமடைந்து தாய்மாரிடஞ்சென்று வாத்தியாருக்கு வேண்டிய வெகுமானங் கொடுக்கச்செய்து சந்தோஷித்தபிறகு பாலகன் தாயாரைப்பார்த்து சொல்லத்தொடங்கினான்.

அம்மாவேநீகேளாய் அன்புள்ளதாய்மாரே
படித்ததுயினிபோதும் பகர்ந்துகொட்டடியான்சென்று
சாதனைசெய்துவாரேன் தக்கபடிவிடையீகுவீர்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்தாய்மார்கள்
செல்வகுமாரா சொல்வதைநீகேளாய்
நமக்குமுன்னோடா நியாயமில்லாகொட்டடிதான்
இதுவெல்லாங்கார்க்காமல் யிருந்திட்டால்நலமப்பா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பாலகனும்
அம்மாவேநீகேளாய் அன்புடனேயென்வார்த்தை
பிறைப்பதுபெரிதல்ல புவிதன்னில்கீர்த்திதான்
செத்தாலுங்கீர்த்திதான் சிறப்புடனிருக்கவேண்டும்
கொட்டடிக்குப்போகாமல் கொஞ்சநேரமிருக்கமாட்டேன்
இந்தமொழிக்கேட்டார் யிசைந்துமேதாய்மார்கள்
ஜட்டிகளைமூவரை சீக்கிரமழைத்தாரே
கேட்டீரோஜட்டிகளே கிருபையுடனென்வார்த்தை
எனதுபாலகனுக்கு இன்பமாய்கெரடிவித்தை
நல்மர்க்கமுனுக்கு நீங்களேசொல்லுமையா
அந்தநல்லஜட்டிகள் அன்பாகபாலகனை
கொட்டடிக்குயப்போது சம்பிரமாயழைத்துச்சென்றார்

வசனம்.

அடா பாலகனே எங்களுக்கு எதுக்காகத் கொண்டுவருவாயோ தெரியாது உனக்கு இந்தவித்தைகள் எப்படிவருகுமோ ஆனால் உனது இஷ்டமெல்லாம் முடிக்கவேண்டுமென்றுச் சொன்னவுடனே பாலகன்

இவர்களைப்பார்த்து ஐயா என்னை எதிரியாய்ச்சொல்லுகிறீர் அதைச் சொன்னால் அதுபோல் செய்கிறேனென்றுச்சொன்னவுடனே இட்டி கள் சொல்லத்தொடங்கினார்.

இருபக்ஷிகளை நீயடிக்கவேணுமப்பா
அப்படி நானடித்திட அன்பர்கையெடுத்தேனே
மூன்றுநாழிகைகளை முக்காலியெடுப்பாயே
அப்படியேயடிக்கிறேன் அன்புடனேபாருமையா
இந்துநாழிகைகளை அன்பாகவெடுப்பாயே
ஐயாவேவிங்கள்சேருடம் அன்புடனேயென்வார்த்தை
நானெடுக்கும்போது நலமுடனேகணக்கிடுவீர்
அதுபோலாகவே இந்நாழிகையெடுத்தானே
சந்தனப்பட்டாவும் சிறப்புடன்தான்செய்தானே
இரட்டைக்கோல்லைப்பிடித்து இன்பமாய்பாடினான்
பாணவந்தானெடுத்துப் பந்தையெல்லாங்காட்டினான்

வசனம்.

இதற்குள்ளாக பாலகனுக்கு பனிரெண்டுவயதாச்சுது கொட்டி விளையாட்டில் மகா சாமர்த்தியனாயிருந்தான் அப்போது அந்தமுனிவரை யும் பார்த்து எனக்கு நீங்கள் கற்றுதந்தீர், ஆனால் ஒருபக்கம் நீங்கள் இருப்பீர் யான் ஒருவன் ஒருபக்கமிருந்து இரட்டைக்கோலை செய் துப்பார்க்கலாமென்றுச்சொல்ல அதற்கு அவர் சம்மதபட்டார்.

கொம்புகள்தன்னை கொம்பனவேலைகைப்பிடித்தார்
மூவருமப்போது முகந்துமேபாலனையும்
அடிக்கப்புறப்பட்டார் அத்தயடிகளை
தடுத்துக்கொண்டானே தாயுடன்பாலகனும்
மூவரையப்போது முகந்துமேயடித்தானே
இதனையும்பார்த்தார்கள் இன்பமாய்மூவரும்
சந்தோஷமடைந்தார்கள் தயவுடன்பாலன்மீது
இப்படியிருக்க இன்பமாய்பொருஷத்தில்
வீட்டிற்குவருக வேகமாய்வந்தானே

வசனம்.

பாலகன் தன் வீட்டிற்கு வருஞ்சமயத்தில் அந்த வீதியில் சிலபு ருஷர் பொம்பரம் ஆடிக்கொண்டிருந்தார் அதைக்கண்டு அப்பா பாலக ரே அந்த பொம்பரம் தருவீர் நான் ஆடிப்பார்க்கின்றேன் என்றுச் சொன்னவுடனே அந்தப்பாலகர் இவனைப்பார்த்து ஐயா நீயாக்கிய



புருஷர் நீங்கள் வெள்ளிதன்னில் அல்லது பொன்தன்னில் செய்துக் கொண்டால் ஆகாதா நாங்கள் ஏழைகள் ஆகையால் மரக்கட்டைப் பொம்பரம் ஆடிக்கொண்டிருக்கின்றோம் எனக்கேன் இதுயென்றுச் சொன்னவுடனே ஐயா, நான் ஒருவிசை ஆடித்தருகின்றேனென்று கேட்க அதற்கந்தப்பாலகர் ஐயா, இதைக்கொடுத்தால் எங்கள் தந்தை தண்டிப்பாரென்றுச் சொன்னவுடனே பாலகன் கோபத்துடன் தன் வீட்டிற்குவந்து தாய்மார்களைக்கண்டு கேட்கலானான்.

அம்மாடியம்மாடி யென்னைப்பெற்றத்தாய்மாரே
என்னுபாட்டன்மார் யின்பமாயாடிருந்த
பொம்பரந்தானெங்கே புகழுடனேசொல்லுமம்மா
இந்தமொழிக்கேட்டுமேதுச்சொன்னாரப்போது.

வசனம்.

அடாயென் கண்மணியே உனது பாட்டனாராடிய பொம்பர மானது, இன்றைக்கும் டெட்டிபெட்டியில் இருக்கின்ற காளிகோவிலருகில் பொதிந்துபோயிருக்கிறது; அடா யென்செல்வமே, அதை உனது தந் தைமார் ஆட்டிப்பார்த்தும் அசையவில்லை. அதை, நீ எப்படி யெடுத் துவருவாயென்றுச் சொன்னவுடனே பாலகன் சொல்லத்தொடங்கி னான்.

மூன்றுகரிசையுரிசி முகந்துமேதாருமம்மா
முட்டைதுமியருமைக்கிடா முந்திதாருமம்மா
முப்பதுதேங்காயும் முகந்துமேதாருமம்மா
கர்ப்பூரசாம்பிராணி கனமுடன்தாருமம்மா
இந்தமொழிக்கேட்டு வேதுசெய்தார்தாய்மா
அப்படியேகொடுக்க யப்போதுபாலகனும்
இதுகளையெல்லாம் யின்பமாயெடுத்துக்கொண்டு
காளிக்கோவிலண்டை தேடிவந்தானே
அரிசியைத்தானெடுத்து யப்போபொங்கலைத்தா
காளியெதிராக கும்பத்தைக்கொட்டினான்
எருமைக்கிடாப்பொலி யின்பமாய்வெட்டினான்
ஆட்டுக்கிடாப்பொலி யப்போதுவெட்டினான்
கர்ப்பூரதீபத்தைக் கனமுடனேத்திவைத்தாகச்
சாஷ்டாங்கமாக வந்தனஞ்செய்தானே

1816



பாலவர்த்திவேந்தன் காளியை தியானிப்பது.

ஓம்காளிநீகேளாய் யிப்போ அயென்வார்த்தை
ஐம்கிலிம்சவ்வென்று யன்பா காயுச்சரிக்கேன்
ரீங்கிலிம்வசியென்று யின்பமாய்ப்பூஜித்தேன்
அம்மணிநீவந்து யன்பாகயெந்தனுக்கு
எனதுபாட்டன்மார்கள் யின்பமாய்ச்செத்தபின்பு
உனக்குயாகாரமதை யுகந்துமேகொடுக்கவில்லை
உந்தனுக்கிப்போது யுகந்துபாகாரம்பண்ணிகொடுக்கேன்
இப்போபொம்பரிது யின்பமனங்கொண்டேனே
இப்படிச்சொல்லவே யிதைக்கேட்டாள்காளிதேவி
சந்தோஷந்தானடைந்து தனதுபலத்தையெல்லாம்
பாலனுக்கப்போது பலமதைக்கொடுத்தாளே
அந்தச்சமயத்தில் யந்தநல்லபொம்பரத்தை
காற்றையுந்தாண்டி கடுகவேபாடினான்



பூமியில்நிற்காமல் புகழுடனேபரந்தது
நந்தவனத்தினில் நலமுடனேவந்தது
பட்டணமெங்குமே புகழ்துவ்ளிக்கேட்டது
இந்தயதிசயத்தை யன்னாட்டின்பிரஜைகளெல்லாம்
வந்துமேபார்த்தாரே வகையுடனேபொம்பரத்தை
அப்போதுஜெனங்களும் அன்பாகப்பேசிக்கொண்டார்
இந்தயதிசயத்தை யிவன்தந்தைகள்பார்த்தாரானால்
என்னசந்தோஷம் யவர்களுங்கொண்டிடுவார்
ஒருவராகிலும் யிருக்காமல்போய்விட்டார்
அவர்கள்வயிற்றினில் யன்பாகயிவன்பிறந்தான்
தாய்தந்தைமாருக்கு பேரெடுக்கபிறந்தானே
இப்படியாக வந்தஜனஞ்சொல்லிக்கொண்டார்
பாலகனப்போ பக்ஷமாய்வீட்டிற்கு
ஓடித்தான்வந்து உகந்துமேதாய்மாரை
அம்மாடியம்மாடி யென்னைப்பெற்றத்தாயாரே
பொம்பரந்தன்னை புகழுடனேகொண்டுவந்தேன்
எந்தனைப்பெற்ற யின்பமுள்ளத்தாயாரே
பனிரெண்டுகரிசை யரிசிதான்கொடுமம்மா
இப்படிச்சொல்லவே யப்படித்தந்தாரே
நந்தவனத்திலே நலமாகயடுப்புமூட்டி
சாதம்வடித்து சம்பிரமாயப்போது
அன்னதானங்கள் பண்புடன்தான்செய்தான்
இப்படிருக்கையிலே யிசைந்துமேவோர்தினத்தில்
அம்புவில்லைதானெடுத்து அன்பாகசரம்பிடித்து
நந்தவனத்திற்கு நலமாகவந்தானே
அந்தச்சமயத்தில் யந்தநல்லவேளையிலே
நாகம்மாயென்றதோர் நலமானமங்கைதானும்
தண்ணிக்குடமெடுத்துத் தண்ணிக்குவந்தாளே
குடத்தில்தண்ணீரெடுத்து குணமுடனேபுஜத்தில்வைத்தாள்
அப்போதுபாலகன் அன்புடனேவில்வித்தை
குறிபார்க்கவேண்டுமென்று குணமுடனேசரம்பிடித்து
அந்தக்குடத்தையும் அன்பாகத்தான்பார்த்து
அப்போதான்விடவே யந்தக்குடமுடைந்தது
அப்போதம்மாது அப்பாலகனைப்பார்த்துமே
வண்டாபயலே இந்தவேலைசெய்யலாமா
தாய்தந்தைகள்மாரை தின்னபிறந்தச்செய்துநீ

மிறைந்தவருகுராய் புளிந்தபர்நகிலே
பிரக்கா நாகம்மாள் போய்விட்டாளிப்போது
உனக்குமேமெனுதான் சாதீதான்வரவில்லை
அப்போதுபாலகனை அன்பாகச்சபித்தாள்
இந்தமொழிகேளீர் யின்பமாய்க்கேட்டானே
அம்மாநீகேளடி அன்பானநாகம்மா
நீயேதாய்தந்தை நானேபுன்பாலகன்
இப்போதுசொன்னமொழி யிசைந்துமேசொல்லுமம்மா
எனக்குத்தெரியாது நீபோடாபாலகா
நல்லவனானால் நியாயத்தைச்சொல்லாதும்
மூர்க்கன்யோகும் புன்னுடன்மொழியென்னடா
இப்படிச்சொல்லவே யிதுகேட்டான்பாலகனும்
அம்மாடியம்மாடி யன்புள்ளத்தாயாரே
என்னைப்பெற்றதாயார் எப்படி இறைப்போனாள்
என்-தந்தைதானெப்படி இறப்போனால்சொல்லுமம்மா
அந்தகாலந்தாம் யன்புடனேசொல்லுமம்மா
எனக்குத்தெரியாது நீபோடாபாலகா
இப்படிச்சொல்லி யிசைந்துமேயடங்கானே
அந்தமொழிதன்னை அப்போதுகேட்டானே
இந்தக்கத்தியாலே இப்போவுன்னைவெட்டுவேன்
பாரடியென்றுஅச்சொல்லி கட்டாகத்தியைப்பிடித்தான்
கத்தியைக்கண்டாளே நகநாகம்மாள்
உன்னங்கிகிக்கி உப்பெர்வடிதானுமப்போது
ஐயோபாலகா அடிபாதேயாத்திரேவந்தா
என்னைவெட்டாதேடா இப்போதுசொல்லுவேனப்பா
நானுஞ்சொல்லுறேன் மையுடன்கேளடா
உன்தாயாருனால் உத்தமபாலநாகம்மாள்
உன்தகப்பனை உத்தநாகவர்த்திவந்தவன்
உந்தனைஜனித்த உடன்தாய்முறந்திடைத்தில்
நாகன்அபுரியைப் பலமாகயான்பலத்
மாயப்பக்கி மாயமாகவந் தியே
பாலநாகம்மாளை பகர்ந்துகொண்டுபிடித்தானே
உன்தங்கைகளையனைத்தும் அழுதழுதுசிறைபோனார்கள்
ஆசையுள்ள தம்பிமார்கள் அழுதுகொண்டுபோனார்கள்
உன்பெரியதாயார்கள் உத்தமனாரர்த்தாக்கள்
அந்தமொழிக்கேட்டு அப்போதுபாலகனும்



பாதத்திலேவிழுந்து பகர்ந்தவந்தனஞ்செய்தானே
அம்மாநீகேளாய் அன்புள்ளநாகம்மா
இட்டாதேயென்னை இவிரமாயிப்போது
ஆசீர்வாதஞ்செய்வாய் அன்புடனேயிப்போது
இந்தமொழிக்கேட்டு இசைந்துமேநாகம்மாள்
சுகமாசுகமடைவாய் சுந்திரபாலவர்த்தியேவந்தா
உந்தன்தாயாரை உகந்துகொண்டுநீவருவாய்
அவனுடையகையாலே நீசாகமாட்டாய்பாலகனே
உந்தன்கையாலே அவனுக்குசாவுமுண்டு
இப்படியாசிதம்திகந்து இசைந்துதாம்பூலந்தனைக்கொடுத்தாள்
தாம்பூலம்பெற்றுக்கொண்டு தானுமேவந்தானே
வந்துக்கோட்டையை வண்மைகதனைப்பூட்டினான்
தனதுவீட்டைத்தேடி தானுமேபோகையிலே
பாலகன்வருவதை பார்த்தாரேதோழிமார்கள்
வெண்ணீரைக்கொண்டுவந்து வேகமாய்வைத்துமே
அழைத்தாரேபாலகனை அப்போதுதாதிகளும்
அந்தப்புரத்தினில் அப்போபடுத்துக்கொண்டான்
தாதிகளப்போது தயவுடனெழுப்பினார்
ஆருமெழுப்பினாலும் பாலகன்பேசவில்லை
இந்தசங்கதியை இசைந்துமேதாய்மாருக்கு
அப்போதுச்சென்னாரே அன்பாகதாதிமார்கள்
ஆறுபேர்தாய்மார்கள் அப்போதுவோடிவந்து
அழகுசுந்தரனே அன்புள்ளயென்குமாரா
ஸ்தானங்கள்செய்துமே தனிபுசிப்புகொண்டிட
எழுந்துமேவாடா நான்பெற்றசெல்வமே
இப்படியழைக்கவே யேதுமேபேசாமல்
தனக்குள்ளேதானும் தான்துக்கப்பட்டானே
இதனைப்பார்த்தார்கள் இன்பமாய்தாய்மார்கள்
என்னடாகுமாரா எழுந்திராயிப்போது
ஆராகிலும்உன்னை யடித்தார் திட்டினரோ
பந்தியத்திலேயாகிலும் பிழைவந்துநேர்ந்ததோ
வித்தைபரிக்ஷைதன்னில் வேதியன்தூஷித்தானோ
சாதனைகொட்டடியில் சமர்த்துகள்வந்ததோ
இந்தசங்கதியானாலும் எங்களுக்குச்சொல்லுமே
ஏதுபேசொல்லாமல் பாலகனிருந்தானே
அந்தச்சமயத்தில் எல்லோருமழுதாரே

தாயுமபிள்ளையும தனிநாரிகள் தானுமிலை
அக்கதந்தையார்த்திக்கொல்பி சிறைபுடன் வேழ்க்கலானூர்
நான்பெற்றசெல்வமே நலமுடனேயிவர் று
அழுதக்காரியத்தை அன்பாகச்சொல்லடா
அந்தமொழிக்கேட்டு வருச்சொன்னுன்பாலகனும்



பெரியதாயை பால்வர்த்திவேந்தன் தாய்தந்தைகளை விசாரிப்பது.

அம்மாவேநீகேளும் அன்புடனேயென்வார்த்தை
என்னுதந்தையார் என்னுதாயாருமம்மா
தாயுமேநாங்கள்தான் தந்தையுமிறந்துவிட்டார்
இந்த-ஆறுபேர்களில் என்தாயாராரம்மா
இப்படிக்கேகழ்க்கையிலே ஏதுமேசொல்லவில்லை
அந்தச்சமயத்தில் அரியபால்வர்த்திவேந்தன்
இடுப்பிலிருந்தகொரு பிச்சுவாதன்னைதானெடுத்து
உங்களைக்குத்துவேனென் உங்கதுயர் தீர்க்கவென்று இக்கொல்லுவேன்
ஐயோமகனே அதிவுள்ளசிகாமணியே
ஈந்துமணிடைதான் உன்றனுடன்சொன்னுவிடுவோ
ஆறுஇம்மியாணுமே அன்பாகச்சொல்லுகிறேன்
உன்னுதாயாராரும் உங்கிதாயான்மார்களே
ஏழுநாள்புருஷனுல் இன்பமாயிருக்கையிலே
நாகள்ளையாளப்பட்ட நலக்கிரிஷ்டைபெடுக்கான்



இந்தச்சங்கதிகேட்டு யின்பமாயுனதுதந்தைகள்
யுத்தசன்னுத்தராய் யப்போதுசென்றாரே
அவர்களையப்போ அதஞ்செய்தான்பக்கிரி
அப்போயிருந்து அன்பாகவுந்தனையே
பிரியமாகவளர்க்கிறோம் பெற்றபுதல்வனைப்போல்
இத்தனையுந்தான்கேட்டான் யின்பமாயப்போது
அம்மாவேநீகேளாய் அன்புடனென்வார்த்தை
என்தாயார்தன்னையே இப்பவேபார்த்துவாரேன்
எந்தனுக்குவுத்திரவு யிப்பவேகொடுமம்மா
இந்தமொழிக்கேட்டார் இசைந்துமேதாய்மார்கள்
ஐயோமகனே அழகுபால்வர்த்திவேந்தா
நீயங்குபோனால்தான் யுனைபிழைக்கச்செய்வானே
பனிரெண்டுலக்ஷம் சேனைகளைக்கொன்றவன்
எழுப்பேர்தந்தைகளை யதமாகச்செய்தவன்
நீசென்றால்நாங்கள் நீனிலத்தில்பிழைப்போமா
நீபோகும்பக்ஷத்தில் யெங்களுக்கிப்போது
விஷத்தைக்கொடுத்துமே யெங்களைக்கொன்றுவிட்டு
உன்கையால்மண்ணை யெந்தனுக்குக்கொடுத்துமே
அதன்பிறகுநீயுமே யின்பாகப்போகுவாய்
இந்தமொழிக்கேட்டான் இன்பமாய்பாலகனும்
அம்மாவேநீகேளாய் அன்புடனெந்தன்மொழி
மல்லிகைச்செடியை மகிழுடன்வைக்குறேன்
என்பிராணமிருந்தால் யிந்தசெடிபூக்குமம்மா
என்பிராணம்போனால் யிந்தச்செடிவதங்குமம்மா
இப்படியாகவே நம்பிக்கைதந்தானே
இத்தனையுங்கேட்டாரே யின்பமாய்மாதர்களும்
எத்தனைச்சொன்னாலும் யெங்கள்மொழிகேட்கவில்லை
உனதுயிஷ்டம்போல் போகுவாய்பாலகனே
அப்போதுபாலகன் யன்பாகஸ்தானஞ்செய்து
போஜனஞ்செய்தாரே பொறுமையுடனப்போது
அம்மாவேயிப்போது அன்புடன்வார்த்தைகேளீர்
உசிதமானவுடனே உப்போங்கிபோகவேண்டும்
கட்டுச்சாதமும் கட்டித்தாருமெந்தன்கையில்
அப்போதுமாதர்கள் யன்பாகபாலனுக்கு
கட்டுமுறைத்தான் கட்டித்தந்தாரப்போது

பாலகனப்போது பக்குவமாய்ப்பெட்டியை
திறந்துமே மேல்மூடியை இரும்படையினா லெடுத்தான்
பட்டுக்கரைவேஷ்டியை பக்குவமாய்க் கட்டினான்
இடுப்பினில்கட்டாரியை யிறுக்கியேகட்டினான்
ஈட்டிபிச்சுவாகத்தை பிடரியினில்சொருகினான்
காதில்கடுக்கனும் கழுத்தினில்சந்திரஹாரமும்
கையிலேயாழிபங்கம் வாகினிலேயோ திராபரம்
சரிகைப்பாகைதன்னை தலைதன்னில்போட்டானே
இப்படியலங்கரித்து இவர்த்தாயாரெதிரினில்
வந்துமேநின்று வந்தனங்கள்தான்செய்தான்
அப்போதுமாதர்கள் அன்புடனேபாலகனை
ஆசீர்வதித்துயன்பாய் தாம்பூலங்கொடுத்தார்கள்

வசனம்.

இப்படியாக பாலவர்த்தி வேந்தன் தாயாரிடத்தில் செலவுபெ
ற்றுக்கொண்டு பிரயாணமுடனே நடக்கலானார்.



பாலவர்த்திவேந்தன் தாயாரைப்பார்க்க புறப்பட்டுப்போவது.

பாலுகன்றிப்பட்டணத்தை பலமுடன்தாண்டினான்
பொழுதுமறியாமல் புகழுடன்நடந்தானே
காட்டுவோசனைதூரம் வந்தானேபாலகனும்
எங்குமேபார்த்தாலும் விடுமில்லைநாடமில்லை
போகிறவனந்தனில் பொழுதுமப்போசாய்ந்து
இராத்திரிக்குமப்போ அன்புடனேதங்கிட
அங்கிருக்கும்பாலமரம் யன்பாகப்பார்த்தானே
அந்தச்செடிக்கீழ யன்பாகக்குதிரையைப்போட்டு



நல்லவராயென்றுசொல்லி யின்பமாய்ப்படுத்தானே
மல்லுசல்லாவை மகிழ்ந்துமுக்காடிட்டானே
செடியின்கீழாக சிறந்துநித்திரைபோகுறான்
அந்தச்சமயத்தில் அங்கிருந்தநாகேந்திரன்
பாலகனருகில்வந்து பக்குவமாய்ப்பிணியடாமல்
குடம்போலபடமெடுத்துக் குளிர்ந்ததுபாலனுக்கு
அப்போதுகிழக்கு யன்பாகவுதிக்கது
பாலகனப்போது பக்குவமாய்யெழுந்தானே
இவனெழுந்தவுடன் யிந்தப்பாம்புமப்போது
காட்டுமார்க்கமாக கடுகவேநடந்தது
பார்த்தானேநாகமதை பாலகன்றன்னுடைய
கத்தியைக்கைப்பிடித்து கடுகவேவெட்டப்போறான்
அப்போதுநாகமது அறிந்துசொல்லுற்றது
கேட்டையாபாலகா கிருபையுடனென்வார்த்தை
உன்னைத்தின்பதற்கு யுகந்துயான்வந்தேனோ
வந்துன்னைப்பார்க்க வகையுடனுனதுதாயார்
நாகேந்திரன்வரத்தில் நலமாகபிறந்தவன்
அம்மாதுபுதல்வன் யறிந்தபோனச்சமே
என்றுமேசொல்லி யிசைந்துகாவலிருந்து
போகுறேனிப்போது புகழுடனிருப்பிடமே
ஆனால்கேள்பாலகனே யறிந்திடசொல்லுகிறேன்
பக்கிரியிருப்பிடம் பக்குவமாய்நீபோக
உனதுக்கையாலே யவன்சாகப்போகுறான்
அவனுக்குப்பாணுமே அகிருதினில்கட்டியது
உனதுதாயாரை யுகந்துகொண்டுவருவாய்
உந்தனுக்குகண்டமொன்று யுகந்துமேயிருக்குதப்பா
இப்படிச்சொல்லவே யினைந்துபாலகன்கேட்டு
யோவேநாகேந்திரா அந்தகெண்டம்சொல்லுமையா
அப்போதுநாகேந்திரன் அறிவிக்கசொல்லுகிறான்

வசனம்.

அப்பா! பாலகா நாகன்னாழிகைபரப்பில் இருக்கப்பட்ட நயனா
காதி பட்டணத்து எல்லைக்கோடியி லிருக்கப்பட்ட பராசக்தினுடைய
அந்த பக்கிரியவனிருக்கிறான் ஒருவன் ஏசுதப்பகைசாமியா
னுடைய கோட்டைமீது வந்தால் அவனைத்தின்பதற்கு உத்திரவு செய்

திருக்கின்றான் ஆகையால் நீ போகும்போது அந்த சத்திரமாயப்பெண் ரூபந்தரித்து புன்சிரிப்புக்காட்டி சந்தோஷ மொழிகளாடிக்கொண்டு உன்னெதிரில் வருவாள் அப்போது.

ஜாக்கிரதையாக நீபோகுவாய்பாலநா
அப்போதுபாலகன் அந்தப்பாம்பைசுற்றிவந்து
வந்தனஞ்செய்தானே வகையுடன்பாம்புக்கு
ஆசீர்வதித்தது அந்தநல்லநாகேந்திரன்
அங்கிருந்துபாலகன் யன்பாய்நடந்தானே
அந்தப்பொழுதெல்லாம் யக்காட்டில்நடந்தானே
புலிவேந்தன்பட்டணம் புகழுடன்வந்தானே

பாலவர்த்திவேந்தன் புலியைக்கொன்று வேந்தன்புதல்வியை கலியாணஞ் செய்வது.

அந்தப்பட்டணத்தில் அன்பாகநாகன்சென்றான்
சத்திரந்தேடியே சிறப்புடன்நடந்தானே
அந்தச்சத்திரத்தில் கிழவியைத்தான்பார்த்து
பாட்டியேயின்று பணந்தாரேன்யெந்தனுக்கு
சாதம்நீயிடுவாயா சம்பிரமாயிப்போது
அந்தமொழிக்கேட்டு அந்தநல்லக்கிழவியும்
நல்லதென்றுச்சொல்லி நலமாகசமைத்தாள்
அந்தச்சமயத்தில் அந்தநல்லபாலனுக்கு
நாவினிக்கக்கறியுடனே நலமாய்சாதமிட்டாள்
அந்தச்சாதந்தன்னை அன்பாகத்தான்புசித்து
கையலம்பிக்கொண்டு சுகசயனித்தானே
உத்தமனவனுடனே உட்பொங்கியெழுந்தானே
கேட்டையாபாட்டி இருவாயுடனேவார்த்தை
நேற்றுமுழுதுமே நடந்தேனேவெகுதூரம்
சாதம்புசியாமல் சம்பிரமாய்நடக்கமாட்டேன்
மறுபடிசாதம் மகிழுடனேசமைப்பாயடி

வசனம்.

இப்படிச்சொல்லவே அக்கிழவி சம்மதமடைந்து பாலகன்கொடுத்த வராகன் பெற்றுக்கொண்டு சாதம் சமைத்துக் கொண்டிருந்தாள் அச்சமயத்தில் பாலகன் அக்கிழவியைப் பார்த்து அம்மா பாட்டி இந்தப் பட்டணத்தில் ஏதாகிலும் புதுமை யுண்டாவென்றுக் கேட்க அந்த



ற்கு அக்கிழவி அப்பா பாலகா இந்நாட்டிலேதும் புதுமைக்கிடையாதாகுல் இந்நாட்டில் நல்லத்தண்ணீர் கிடையாது உப்புத்தண்ணீர் தான்குடிப்பது அதுயேனென்றால் இந்நாட்டில் நல்லதண்ணீர் கிணற்றருகில் திரைடிவேங்கை ஒன்றிருக்கின்றது அது தினத்திற்கு ஐந்து ப்பேரைக் கொன்றுப்போட்டு வருகிறது. அதையாரும் கொல்வதற்கு சக்தியற்று இருக்கின்றார் ஆகையால் இந்நாட்டின் வேந்தன், இந்தப் புலியை எவர் கொல்லுகின்றாரோ அவருக்கு தன் மகளாகிய சுபத்திராதேவியைத் தந்து கலியாணஞ் செய்துக்கொடுப்பதாய் பிரதிக்கினை செய்திருக்கின்றார் இதில்லாமல் நாலுமூலையிலும் எல்லோரும் அறியும்படி பலகையெழுதி விளம்பரஞ் செய்திருக்கின்றார் என்றுச்சொன்னவுடன் இம்மொழிக்கேட்டுப் பாலகன்,

ஸ்தானங்கள்செய்துதான் போஜனஞ்செய்தாமே
சந்திராயுதத்தை சீக்கிரமெடுத்துக்கொண்டு
இரத்தினகம்பிளியை யிடையில்தரித்தானே
அந்நாட்டின்வடகெவுனி அப்போதுவந்தானே
அக்கெவுனிக்கதவு தாளமிட்டியிருந்தது
அந்தவிடத்திலே அப்போபாராயிருந்தாரே
அவர்களைப்பார்த்து அப்போதுபாலகனும்
ஆரடாகாவலனே அன்புடனேநிற்கிறவன்



பாலவர்த்திவேந்தன் காவலரை வடகவுனி திறக்கும்படி சொல்வது.

தந்தைதானுந்திறப்பாய் கடுகயானும்போகவேண்டும்
இந்தமொழிக்கேட்டார் யின்பமாய்க்காவலாளும்
ஐயாவேசீக்கிரம் அன்புடனேயென்றன் வார்த்தை
இந்தவழியாக விப்போ போகலாகாதையா
மிஞ்சிநீர்போனால் மிருகந்துப்போபுலியென்று
அடித்துதான்கொல்லுமையா யன்பாகப்போகவேண்டாம்
கிழக்குவாயலாக கொப்பனவேநீர்போவீர்
இப்படிச்சொல்லவே யிதுகேட்டான்பாலகனும்
எங்களுக்குச்சிரேஷ்டமாகும் இந்தமார்க்கமாய்ப்போவ
இப்படிச்சொல்லவே யிதுகேட்டார்காவலர்
ஆனால்சந்தோஷந்தான் அப்படியேயிருமென்றும்
என்றுமேசொல்லி இவ்விதங்கதவுதிறந்தாரே
கதவைத்திறந்தது கண்டானேபாலனும்
சந்தோஷமாகவே தான்போனான்மார்க்கம்
போனவுடனே புகழ்ந்துமெச்சுவார்
கதவைதான்மூடிக் கனகதாழிட்டாரே
தண்ணீர்கிணற்றருகில் தான்போனான்பாலகனும்
நாலுதிசையும் நன்றாகத்தேடிப்பார்த்தான்
அந்தப்புலியுந்தான் அங்ககப்படவில்லை
கானகமப்போது கண்டுதானைத்தேடிப்போகவே
புலியிருக்குமிடம் புண்ணியனுங்கண்டானே
அந்தவிடத்தினில் யன்பாகக்கம்பிளியை
போட்டுப்படுத்துமே புகழுடனேசல்லாவை
முக்காடிட்டுக்கொண்டு முகந்துமேமெச்சிநிறுத்தத்தை
பக்கத்தில்வைத்துக்கொண்டு பண்புடன்நித்திரைசெய்தான்
அந்தச்சமயத்தில் அந்தப்புலிதானுமே
காட்டைதான்விட்டுமப்போ வகைவேவருகிறது

வசனம்.

இப்படியாக புலியானது இரையும் தேடிப்போனா நின்றுவிட்டு வருவது வழக்கம் அன்றையதினம் இரையும் அகப்படாமல் இருந்ததால் ஐயோ பகவான் நமக்கு இரைத்தராமல் நிறுத்திவிட்டார் நாம் செய்தபாக்கியம் இவ்வளவுதான் என்று எண்ணிக்கொண்டு வருஞ் சமயத்தில் கதவு இருப்பிடத்தில் பாலகனைக்கண்டு சந்தோஷமிட்டு இதுதான் சமயம் நமக்கு பகவான் தேடியழைத்துவந்து அந்தரியே



ன்று சந்தோஷமடைந்து வருக இதற்குள்ளாக தன்மனதில் திகிலடைந்து தூரமாய் நின்று கர்ஜித்து பாலகனைப்பார்த்து ஆரடாயென்று படுக்கைமீது படுத்திருப்பவன் என்றுக்கூச்சலிட்டு நிற்க இதற்குள் தனக்குத்தானே யோசித்து இவனைப்பார்த்தால் ஸ்ரீராமனைப்போல் இருக்கிறது இவர்கையில் நாம்செத்தால் கலக்கம் இல்லாமல் மனிதனுயிருந்தால் நமது கையால் சாகுவாரென்று யோசித்து சொல்லத் தொடங்கியது.

ஆரையாநீருமேதான் அன்புடன்பேசுமையா
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பாலகனும்
இடுக்கிட்டுயெழுந்து சிறப்புடன்தானமர்ந்து
அந்தப்புலியை யன்புடன்தான்பார்த்து
வாவென்றழைத்தான் வகையுடன்தானப்போ
அந்தமொழியை அப்போது கேட்டது
உந்தனைப்பார்த்தால் விஷ்ணுபோலிருக்குதையா
சாம்பவமூர்த்திபோல் நீயிருக்கின்றீரே
உந்தனருகில்வர எங்களுக்குபயமாகுது
அப்போதுபாலகன் அன்புடன்சொல்லலானார்
பயமொன்றுமில்லாமல் வருவாயென்னருகில்
திகிலுந்தானடைந்து தீவிரமாய்வந்தது
இடதுகையாலே பொட்டிப்பிடித்தானே
வலதுகைகத்தியாலே வீசினான்புலியையப்போ
இரண்டுதுண்டமாக விழுந்ததாம்புலிமீது
புலியைக்கொன்றபாபம் யெப்படிப்போகுமென்று
யோசித்துத்தானுமே நின்றுமேயப்போது
தேத்தையும்வாலையும் வெட்டிக்கொண்டால்தோஷந்தான்
போமென்றுபெரியோர்கள் புகழுடன்சொல்லக்கேட்டேன்
அப்போதுகியாபகம் அன்பாய்வந்தது
புலிதேகங்களை பூவாலையருத்துக்கொண்டான்
நடையாநடைநடந்தான் நாசயமாய்கிழக்குவாயல்
தானுமேதான்வந்து தனியேதான்சேர்ந்தான்
பாலகனைப்பார்த்து பண்புடன்கிழவியும்
எங்கடாபோயிருந்தாய் என்றுவப்பாலகனே
அம்மாநீகேளாய் அன்புடனானுமே
விதிபலங்காரம் வேடிக்கையாயிருந்தேன்

இதேகங்கள்கோருதப்பா இவிமாய்படக்காட்டேன்
இந்தமொழிகேட்டு வேந்தன்சொன்னான் புலிநான்
நீபோகவேண்டாமப்பா நீபாய்பிரம்மதேவன்

வசனம்.

இப்படிச் சொல்லிவே பாலவர்த்தி வேந்தன் அரண்மனை வீட்டில் தானே இருந்துவிட்டான். இப்படியிருக்க அவ்வேந்தன் புதல்வி பாலிய சுபத்திரா வென்று அக்கட்டத்தான்சொன்னால் பெண்ணை என் தந்தை பதினெட்டு ஊர் இருந்தார் ஆராகிலும் புலியைக்கொன்ருல் பெண்ணைக்கொடுப்பதாய் சொல்லியிருக்கின்ருர் இந்தப்புலியை யார் கொல்லுவார்களோ தன் தலையில் எதுவெழுதி இருக்கிறதோ என்று எண்ணமிட்டு ஆக்கிரம் விட்டு மேடையேறி பார்த்துக்கொண்டிருந்தாள் அந்தச்சமயத்தில் இவ்வேந்தக் குமாரன் புலியைக்கொன்றது பலகை படித்ததும் இறங்கிவிட்டால் இருப்பதும் பார்த்துக்கொண்டிருந்தாள் இதை யாரோடும் சொல்லாது கிடையாது.

வண்ணான் துணிமூட்டை யெடுத்துக்கொண்டு துறைக்குப்போகையில் புலியைக் காணுவது.

இப்படியிருக்கவே இசைந்தபட்டணத்தில் வண்ணான்
இப்பேயென்றவன் இராப்பகல் முன்புமாதமாய்
சலவைகள்செய்யாமல் தானேயிருந்துவிட்டான்
அன்றுதினத்திலே அன்புடனே வண்ணானும்
நாட்டுத்துணிகளை கட்டுடனேயெடுத்துக்கொண்டு
நல்லதண்ணீர்கிணற்றருகில் நலமாக நடந்தானே
வண்ணானும்போது வகையுடன்போகுறான்
இப்படியாக இவன்போகுஞ்சமயத்தில்
நாலுபக்கமும் நன்றாகப்பார்த்தானே
அப்போதுபுலியை அவ்விடத்தில்கண்டானே
ஐயோபுலியென்று அலரிக்கச்சவிட்டானே
இதின்வாயில்அகப்பட இப்போது நாமவந்நேரம்
என்றுமேசொல்லி இசைந்துதானின்றுமே
ஆ-ஆ-இதுப்போ அலர்ந்துதூங்குகிறது
இன்னாட்டின்வேந்தன் இதைப்புலியாயறிந்தானே
கொல்லப்பட்டவனுக்கு இராஜ்யமும்பெண்ணையும்
ஆ-ஆ-இப்புலியை நானேதான்கொல்லுவேனே



இந்தப்புலியைக்கொன்ருல் இசைந்துவேந்தனுகுவேன்
சுபத்திராதேவியை சுபகலியாணஞ்செய்குவேன்
இந்நாட்டிற்கு இசைந்துவேந்தனுகுவேன்
இப்படித்தன்மனதில் இசைந்துதானுமெண்ணமிட்டு
அழுக்குத்துணிகளை அக்காட்டில்போட்டுவிட்டு
ஓட்டமும்நடையாக ஓடிவந்தான்வீட்டிற்கு
வீட்டிலிருக்கிறது விந்தையானமொக்கையீட்டி
அந்தயீட்டியை அப்போதுயெடுத்தானே.
அந்தச்சமயத்தில் அவனுடையதேவியும்
நீயெங்குபோகுருய் இப்போதுயென்கணவா
இந்தமொழிக்கேட்டான் இசைந்துமேவண்ணானும்
வேந்தனுகுறேன் விந்தைசுபத்திரையைகூடுகிறேன்
உனக்குநல்லசக்காளத்தி உகந்துமேகொண்டுவாறேன்
இந்தமொழிக்கேட்டாள் இசைந்துமேவண்ணாத்தி
உன்தலையுடையாதோ உகந்துயிவ்வார்பேசுகிருய்
இந்தச்சந்தோஷம் இசைந்துதுக்கமடைவதற்கு
பாதகாவினுக பழியேண்டாசுமக்கிருய்
இத்தனையுங்கேட்டான் இசைந்துமேவண்ணானும்
அடியா-புலியைக்கொன்றுவிட்டு சுபமடையப்போகையிலே
மங்களமொழிகள் மகிழ்ந்துசொல்லுகின்ருயா
அடிமூதேவிசண்டாளி அடிக்குமேன்பாரென்று
உலக்கைதனையெடுத்து ஓட்டிவோட்டியடித்தானே
ஐயோதெய்வமேயென்று அழுதுமேநின்ருளே
பாதகாவுனக்கு பழிவந்துசம்பவிக்கும்
இப்படிச்சொல்லி இசைந்துயவள்வோடிவிட்டாள்
அப்போதுவண்ணானும் இசைந்துருமால்கைப்பிடித்தான்
ஈட்டியையெடுத்துக்கொண்டு இசைந்துகிணற்றருகில்
ஓட்டமும்நடையாக ஓடிவந்துபார்க்கையிலே
அந்தப்புலியும் அவ்விடத்திலிருந்தது
ஆ-ஆ-இந்தப்புலியைக்கொன்று இசைந்துசுபத்திரையை
கலியாணஞ்செய்ய சாதித்தோமிப்போது
கலியாணஞ்செய்கிறமோ கடுகவேசாகிறமோ.
இப்படிச்சொல்லி எரிகான்செடிமீது
கிளைகளைவொடித்து போட்டானேயதின்மீது
ஏதும்பேசாமல்தான் இருந்ததுயந்தப்புலி

இத்தனையும்பார்த்தானே இசைந்துமேவண்ணானும்
செடிமீதானாமிருந்தால் சிறப்புடனேபேரிவந்து
நம்மைக்கொன்றுவிடும் நலமாகவிருந்தப்புலி
இப்படியெண்ணமிட்டு இசைந்துமேசெடியிறங்கி
செத்தாலும்பெருதான் பிழைத்தாலும்பேரென்றுமே
தைரியங்கள்செய்துகொண்டு யீட்டியால்குத்தினான்
கொஞ்சமாகிலும் குத்தப்படவில்லையே
அந்தயீட்டிதான் அடர்ந்ததாப்புப்பிடித்தது
இதைதானறிந்து இசைந்துயதையெறிந்துவிட்டு
அதின்வயிற்றுமீது அன்பாகவேகுத்தி
கத்தியால்வயரை கண்டுக்கிழித்தானே
அப்போதுரத்தம் அன்பாகவெளிவரவே
ஈட்டியிறைய அந்தரத்தம்பூசிக்கொண்டான்
உடம்பெங்கும்ரத்தமாய் உகந்துபூசிக்கொண்டானே
புலியைக்கொன்றதொரு குறிப்புமேவனுமென்றுச்சொல்லி
நகத்தையும்வாலையும் அப்போதறுத்துமே
கையிலேவைத்துக்கொண்டு கடுகவேநடக்கலானான்
மதியோர்வந்தாலும் இடித்துக்கொண்டுவருகின்றான்
எங்குபோகிறாய்நீ வண்ணானேயென்றுகேட்டாலும்
என்டாபயலேயென்னை வண்ணானென்றுசொல்லுறாய்
வேந்தன்மருகன்நான்தான் வேந்தனென்றழையுமே
இப்படிச்சொல்லிக்கொண்டு இசைந்துமேநடந்தானே
அந்தச்சமயத்தில் அடர்ந்தகச்சேரிதன்னில்
வேந்தனெதிராக வேகமாய்தான்வந்து
ஈட்டியும்நகவாலை இன்பமாய்வைத்தானே.

## புலிவேந்தன் யெதிரில் வண்ணான் கலியாணஞ்செய்யும்படி சொல்வது.

### வசனம்.

புலிவேந்தன் கொலுவமர்ந்திருக்கும் சமயத்தில் வண்ணான் புலியுடைய பாதிநகமும் பாதிவாலையும் வேந்தன் எதிரில்வைத்து சாஷ்டாங்க வந்தனஞ்செய்து நிறைகயாளா ஓ இராஜோத்தமா உனதுபுறவில் கோடானகோடி சேனைகளிருந்து எதுபயன் மாதமானவுடனே சம்பளம் பெற்றுக்கொண்டு போகிறார்களேயன்றி இந்த ஆபத்தைத்தீர்த்தவர் யாருமில்லை ஆனால் உங்களுடைய திரவியத்தை எதுமரியாமல் யான் நாட்டிலிருந்து அழுக்குத்துணிகளை அடைக்கட்டிக்கொண்டு



தொரைக்குப் போகையில் அந்தப்புலி வந்து என்மேல் விழுந்து என்னை ரத்தமயமாகச் செய்தது அச்சமயத்தில் இந்த ஈட்டியால் குத்தியதைக் கொன்றேனையா இதோபாரும் அதின்நகமும் வாலும் என்றுக்காட்ட வேந்தன் விசனமடைந்து நிற்க அருகில் இருந்த மந்திரிகள் பார்த்து ஓ இராஜோத்தமா புலியை இவன் கொன்றவனல்ல வேறோவேந்தர் கொன்றதுபோல் தெரிகிறது என்றுச்சொல்லவே இதைக்கேட்டு வேந்தன் அப்பா மந்திரிகளே நீங்கள் எதைப்பார்த்து சொல்லுகிறீர் என்றுகேட்க அப்போது மந்திரிகள் பொண்டிவாலையும்மொண்டிநகத்தையும் பார்த்துச்சொல்லுகிறோம் என்றுச்சொல்லவே இம்மொழிக்கேட்டு வண்ணான் போதும்போதுமையா இந்தப்புலியானது வேந்தன் கோட்டையிலிருக்கும் கருங்கல்லைதனது நகத்தால்கீரி அதின்நகம் மொண்டியாகிவிட்டது எனச்சொல்லவே வேந்தன் மந்திரிகளைப்பார்த்து அப்பா மந்திரிகளே இந்தமொழியை துவரிறைல் பெருத்த பிரமாணம் செய்திருக்கின்றேன் அந்தப்பாபம் என்னைச்சுற்றும் இதில்லாமல் சொன்னமொழிதவறலாகாது இந்த வண்ணானுக்கே எனது குமாரத்தியைக்கொடுத்து கலியாணஞ்செய்வது நிச்சயம் இம்மொழி எந்த வேந்தருக்கும் சமானமில்லாமல் போச்சுது அப்போவேந்தன் விப்பிரவரையழைத்து முகூர்த்தம் விசாரிக்கவே அப்பிராமணர் ஐயா பொழுதுபோகும் லக்கினம் நன்றாயிருக்கிறது என்றுச்சொன்னவுடனே வேந்தன் சந்தோஷமடைந்து தன்னுடைய தேசமெங்கும் அலங்காரஞ்செய்யும் இதில்லாமல் தன்னுட்டில் இராநின்ற துரைகளும் உத்தியோகஸ்தரும் மந்திரிமார்களும் வித்வான்களும் கத்திக்காரர்களும் காவலாளிகளும் இவனை யாராகிலும் வண்ணானென்றுச்சொன்னால் அவன் தலையை கண்டிக்கப்படும் இவனை எக்காலத்திலும் திப்பவேந்தனென்று அழைக்கவேண்டுமென்று பறைசாட்டிவிட்டு,

எனதுதேசத்தை அவனுக்குக்கொடுக்கிறேன்
இதாம்பூமியை இன்பமாயாண்டுக்கொள்வான்
அந்தச்சமயத்தில் அறிவேந்தன்சொல்லலுற்றான்
ஆரடிதாதிகளே அன்புடனேயிப்போது
திப்பவேந்தனை சீக்கிரமாய்மாப்பிள்ளைப்போல்
அலங்காரஞ்செய்வீரே அன்புடனேயிப்போது
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்தாதிகளும்
சம்பக்கியென்னையிட்டு ஸ்நானங்கள்செய்துவைத்தார்

பட்டுக்கரைதோவத்தி பகரிவகட்டச்செய்தார்
இரண்டுக்காதிலும் இணையில்லாகடுக்கும்போட்டார்
செந்திரகாந்திப்பாகை சிறப்புடன்தலையில்போட்டார்
கலியாணமாப்பிள்ளைப்போல் கடுகவேசெய்தாரே

வசனம்.

இப்படியாக தயார்செய்த சங்கதியெல்லாம் வேந்தன் அறிந்து மேளவாத்தியங்களும் முழங்கவும் நாட்டியப்பெண்கள் ஆடவும் முத்து பல்லக்கு அலங்கரித்து அதின்மீது அமரும்படிச்செய்து கோலம்வரு ம்படிச்செய்யவே அச்சமயத்தில் அப்பட்டணத்திலிருக்கும் குடிகளும் கணக்கரும் இவன்பின்தொடர்ந்து ஐயா இப்பவேந்தனை மூன்றுவரு டமாக மழையில்லாமல் அதிக துன்பப்படுகிறோம் இந்த வருடம் நீர் அரசுக்கு வந்தபடியால் எங்கள் எல்லோரையும் காப்பாற்றவே ண்டும் சுவாமியென தெண்டனிட்டார் இதைக்கேட்டவுடன் மன் னனை இப்பவேந்தன்,

இதுசமயமல்ல இசைந்துபான்சொல்வதற்கு
ஆகட்டுமென்றுச்சொல்லி அப்போபல்லக்குமேறினான்
மேளமடியுமென்று மேளக்காரைத்திட்டஞ்செய்தான்
நாட்டியமாடுவீரென வேசியரைத்திட்டஞ்செய்தான்
தீவிட்டிக்காரு தீவட்டிபிடியுமென்றான்
அந்தக்கோலமது அழகாககிழக்குவீதி
சந்தோஷமாக சம்பிரமாய்வருகிறது

வசனம்.

அந்தச்சமயத்தில் புலிமகாராஜன் சேடிகளையழைத்து கலியாண மாப்பிள்ளை ஊர்கோலம் வருகின்றான் நீங்கள் சீக்கிரமாக எனது புதல்வியை அலங்காரஞ் செய்வீரென்று சேடிகளை அனுப்பினார் அச்ச மயத்தில் சேடிகள் ஓடிவந்து,

அம்மாசுபத்திராதேவி உன்தலையில்பாழும்பிரமன்
இப்படியெழுதுவானோ இசைந்துயிவ்வையகத்தில்
வேந்தர்க்கிடையாரோ வேண்டிமணம்புரிய
பிரந்தவுடனேயமன் புகழ்ந்துகொல்லாமல்போனானோ
இந்தமொழிக்கேட்டாள் இன்பமாய்சுபத்திராதேவி
அப்போ துதாதிகளை அன்புடன்கேழ்க்கலானாள்
என்னடிதாதிகளே இப்படிச்சொன்னீரே
ஓரியாமல்யெந்தனுக்கு உண்மையைச்சொல்லுவீரே





சுபத்திராதேவியை தாதிகள்கண்டு துயரமடைவது.

அப்போது தாதிகளும் அன்பாகசொல்லலானார்
அம்மாவேநீகேளாய் அன்புடன்யென்வார்த்தை
வண்ணாரப்பையன் வகுந்தகணவன்வேந்தனுக்கு
நாளுவீதிகோலமும் நலமாகவருகுறானும்
உன்னையலங்கரித்து உகந்துமேயழைத்துக்கொண்டு
வருகதான்சொன்னாரம்மா வகையுடன்வுந்தன்தந்தை
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்சுபத்திராதேவி
அந்தமொழிக்கேட்டு அப்போது தாதிகளை
அடித்தாளே தாடைமீது இணையில்லாகோபங்கொண்டு
அந்தபடிப்பட்டு அப்போது தாதிகளும்
வேந்தன்கொலுவில்வந்து வேகமாய்நின்றுமே
கண்ணில்ஜலஞ்சொரிய கடுகவேயழுதாரே
ஐயாவேநீர்கேளும் அன்புடன்யென்வார்த்தை
நாங்கள்போய்ச்சொல்ல நலமுடனேவுங்கள்புதல்வி
அடித்தாளே தாடைமீது ஐயாவேயிப்போது

வசனம்.

இந்தப்பிரகாரம் சேடிகள் வந்துச்சொல்லவே இதைக்கேட்டுவே ந்தன் இனிநமது புதல்விக்கு யாரும் சமாதானஞ் சொன்னாலும் கேழ் க்கமாட்டாள் என்று நானே புறப்பட்டு அந்தப்புரம்வருக இவர் வரு வதை சுபத்திராதேவி அறிந்து கடிதமெழுதி ஒ தங்கநேயே அந்தப்

புலியைக் கொன்றவன் இந்நாட்டில் இருக்கும் சத்திரத்தில் இருக்கின்றார் அவர் கொன்றபுலியை வண்ணான் கொண்டுவந்துக்காட்ட சம்மதிக்கீர் இது நியாயமா செடியைவைத்தவன் ஒருவன் பழத்தைபறிப்பது வொருவனோ இன்னதென்கேழ்ப்பீர்.

விருத்தம்.

தந்தையேசொல்லக்கேளீர் தனிபலவேங்கைதன்னை
அந்தமாய்க்கொன்றவரை அவனியில்விட்டோனும்
பந்தமாயிந்தவண்ணான் பலவானுப்வந்தானப்பா
சிந்தையில்நினைக்கமாட்டேன் சிரிபமாலையிட்டேன்.

வசனம்.

தந்தையே அவ்வேந்தனைவிட்டு இதரபுருஷரை நருக்காலும்விரும்படையேன் என்று கடிதமெழுதி தயாராய்வைத்திருக்க அச்சமையத்தில் வேந்தன் அந்தப்புரம்வந்து சுபத்திராதேவியைப் பார்த்து சொல்லத்தொடங்கினான்.

நான்பெற்றசெல்வமே நவரத்தினசெண்பகமே
தாதிமார்தன்னையே தானடித்தக்காரியமேது
வண்ணானென்றுநீயே வகைமோசம்போதியோ
உந்தனுக்குமேதாம் உலகத்தில்கஷ்டம்வர
நான்பார்க்கமாட்டேனம்மா நயமுடனேயெப்போதும்
இந்தராஜ்யம்தந்து இனிதிரவியம்தருகின்றேன்
கலியாணஞ்செய்யாவிட்டால் கபடமென்றுசொல்வாரே
சீக்கிரமெழுந்திரும் சிறப்புடன்பெண்புதல்வி
இத்தனையுங்கேட்டாள் இன்பமாய்சுபத்திராதேவி
காகிதமப்போது கனமுடனேகைக்கொடுத்தாள்
அந்தக்கடிதந்தை அன்பாகவேந்தனும்
படித்துமேசங்கதி பக்குவமாயறிந்திட்டான்

வசனம்.

அந்தக்கடிதம் வாசித்து சங்கதியறிந்துகொண்டு அருகில் இருக்கப்பட்ட சேவகரை பனிரெண்டுபேரை அழைத்து அடா சேவகரே நீங்கள் சென்று ஊருமெல்லாம் வரப்பட்டவண்ணானை என்கண்ணெதிரில் வாராதப்படிக்கு முன்னாப்பல்லக்கு தன்னிலிருந்து கோட்டைக்கு கொண்டு வருவதற்குள் பனிரெண்டு குடம் உதிரம் கக்கும்படி அடிக்கவேண்டுமென்று உத்திரவிட்டவே அப்போது சேவகர் ளுரி.



ஆரையா இப்பவேந்தா அன்புடனேயிரங்குமையா
இந்தமொழிகேட்டான் அப்போதுவண்ணானும்
உதியமானவுடனே உங்களுக்குபூமிதாரேன்
மேளமடியுமென்று மேன்மையாய்போகுறான்
இப்படிச்சொல்லிக்கொண்டு யவனுமேபோகுறான்
அந்தச்சமயத்தில் அந்தநல்லசேவகரும்
ஆனையைப்போது அன்பாய்படுக்கவைத்தார்
துப்பாக்கியாலே இடித்தாரேபக்கத்தில்
குத்தினகுத்துதன்னில் கொப்பனவேவிழுந்தானே
என்னையேன்யடிக்குறீர் இப்போதுசேவகரே
உங்கள்வஸ்திரத்தை உகந்துசலவைசெய்துதாரேன்
இந்தக்கலியாணம் யெந்தனுக்குவேண்டாமையா
இப்படிவருமென்று யரியாமல்போனேனே

வசனம்.

அப்போது வண்ணான் தரித்து இருந்த பூஷணங்களும் ஆடைகளும் பிடுங்கிக்கொண்டு கோட்டைக்கு அனுப்பிவிட்டு அதன்பிறகு கம்மாளனை யழைத்து இரண்டுகொரடா கொண்டுவரும்படி திட்டஞ்செய்து ஒன்பது செமைபுளியன்மலார் கொண்டுவந்து தயாருயிருந்தி வண்ணானை செடியருகில் கொண்டுவந்தார்.

புளியன்மலாரை புகழுடன்பார்த்தானே
இதுகள்யேனையா யெந்தனுக்குச்சொல்லுமிப்போ

வசனம்.

ஓ இப்பவேந்தனே உனது கலியாணத்திற்கு ஆராகிலும் திருடன் தொடர்ந்தால் அவர்களை யடிப்பதிற்கு வேந்தன் கொண்டுவரும்படி திட்டஞ்செய்தார் என்றுச்சொல்லி.

வண்ணானையப்போது வகையுடன்பிடித்தாரே
இரண்டுகைகளை இருக்கிதான்கட்டினார்
பெரியமரத்துக்கு பிகியவேகட்டினார்
ஒன்பதுசெமைமலார் வொடியயடித்தாரே
அவன்திரேகமெங்கும் பிளக்கயடித்தாரே
கொரடாவைதன்னை கொப்பனவேவைத்து
அவன்திரேகமெல்லாம் சுட்டாரேகொரடாலே
அங்கிருந்தசேவகர் அப்போதுவோடினார்

வன்னான்வீட்டைத்தேடி வகையுடன்வோடினார்
அவன்வீட்டிற்குச்சென்று யழைத்தாரேயவன்தேவியை
ஆரடிபெண்ணே யாரக்கூடைசுன்னங்கொட்டி
இத்தனைமொழிகேட்டாளிப்புமாய்வன்னாத்தி
வனையாசுன்னாம் மெந்தனுக்குச்சொல்லுமையா
அப்போதுகாவலர் யரியவேசொல்லுகிறார்
உந்தன்கனைவனை யுடம்பொடியபடிக்கேதாமே
இரத்தமும்வந்ததற்கு சுன்னும்புப்போட்டவேனும்
இந்தமொழிக்கேட்டு யேதுச்சொன்னாளப்போது
நன்றாய்யடியுங்கள் நானியங்கெட்டப்படுப்பாவிமய்
இப்படிச்சொல்லி கொடுத்தாள்கூடைசுன்னம்
கொண்டுவந்தசுன்னம் கொப்பனவேயவன்மீதில்
திரையபூசிவிட்டு நிர்மானமாய்வோட்டிவிட்டார்
அப்போதுவன்னான் யழுதுக்கொண்டுவீட்டைத்தேடி
ஓடி வருகவே பார்த்தாளேயவன்தேவியும்
சட்டியில்யாலாத்தி சிறப்புடன்கொண்டுவந்தாள்
இந்தயாலாத்தி யெனக்கேன்பாதகியே
நான்பட்டபாட்டை பூனிலத்தில்சொல்லலாமா
மானமும்யினம்போச்சு மரியாதிக்கெட்டுப்போச்சு
ஆனால்பானுமே யாண்டேன்வொருநிமிஷம்
வரினேன்பல்லக்கு யெடுத்தாரேயெந்தனை
இப்படியாகவே யிவனிருந்தான்தன்மனையில்

## புலிவேந்தன் பாலவர்த்திவேந்தனை யழைத்துவருவது.

### வசனம்.

இப்படியிருக்க புலிவேந்தன் பல்லக்குதூக்கிக்கொண்டு அந்நாட்டிலிருக்கப்பட்ட சத்திரமெதிரில்வந்து தனது மந்திரிகளை அனுப்பி இவ்விடத்தில் புலியைக்கொன்ற இராஜகுமாரன் இருக்கின்றான் அழைத்து வரும்படிச்சொல்லவே அதுபோல் மந்திரிகள்சென்று பார்க்க, அவ்விடத்தில் அப்பாலகன் இருந்தான் அவனைப்பார்த்து அய்யா! உம்மை புலிவேந்தன் அழைக்கிறாரென்றார் அப்போது யப்பாலகன் ஐயா என்னை புலிவேந்தர் யெப்படி யறிவார் யான் அவரையெப்படி யறிவேன் என்னுடன் வேந்தனுக்கு என்னக்காரியமிருக்கிறது எதுமில்லை வருவிறதில்லை என்றுச்சொல்ல அம்மொழிக்கேட்டு மந்திரிகள் வேந்தனுக்குச் சொல்ல வேந்தன் உடனே உட்பிரவேசித்து வாருமய்



பா வேந்தனே நீர் என்னாட்டில் வசித்துக்கொண்டிருந்த துஷ்டமிருகமாகியபுலியைக்கொன்றதாய் அறிந்திட்டேன் ஆகையால் உனக்கு என் புதல்வியைத்தந்து கலியாணஞ்செய்து வைக்குறேன் என்றுச்சொல்ல அம்மொழிகேட்டு பாலகன் இதுயென்ன அன்னீதம் நான்யென்ன புலிக்கொல்லப்படவல்லவனு அதுமேல்விழுந்து ஓர் அரையுரைந்தால் யான் எம்மாத்திரம் இதுயெல்லாம் வீண்சங்கதிகள் வன்னாதிப்பன் புலியைக்கொன்றவன் அவனுக்கு உமது புதல்வியை தந்து கலியாணஞ்செய்யலாகாதா என்றுச்சொல்ல இதைகேட்டப் புலிவேந்தன் அப்பா இராஜபுதல்வனே அந்தச்சங்கதி போகட்டும் நீரேப்புலியைக்கொன்றதாக நிஜமாகிறது என்றுச்சொல்லி அவன் கைப்பிடித்துயழைக்க அப்பாலகன் எழுந்துபல்லக்குமீதமர்ந்தான் அப்போது நாலுவீதியும் கோலமாகவந்து கோட்டைக்குள்சென்று இருவரும் அந்தப்புரமடைந்து ஸ்தானமுதலாகிய ஷட்கிரயங்களை தீர்த்துக்கொண்டு திவ்யபோஜனங்களருந்து தாம்பூலந்தரித்து லட்சுமிவிலாசத்தில் நித்திரையடைந்தார் உடனே சூரியன் கிழக்குத்திசையில் உதித்தான் புலிவேந்தன் எழுந்து கொலுச்சாவடியடைந்து விப்பிரவன்ரயழைத்து புதல்விக்கும் பாலவர்த்தி வேந்தனுக்கு பெயரமைப்புப்பார்த்து முகூர்த்தலக்கினமிடும்படிச் சொல்ல இதைக் கேட்ட பாலவர்த்தி வேந்தன் அய்யா அந்தப்புலியை நானே கொன்றதாய் தீர்மானித்தீர் அது நிஜயமே. இதோபாருமதனுடைய நகமும் வாலுமென்று எதிரில்வைத்துவிட்டு அய்யா நீர் யென்னைக் கலியாணஞ் செய்துக்கொள்ளும்படி சொல்லுகிறீர். இப்போது யேதும் தடையில்லை. ஆனால் எனது தாயாராகிய ஸ்ரீபாலநாகம்மாளை நாகள்ளபூடி கரைதன்னில் வசிக்கப்பட்ட பக்கிரிசிறையெடுத்துவைத்திருக்கிறானும், அவனைஜெயிக்க யான்போகுறேன். இச்சமயங் கலியாணஞ்செய்வது நலமல்ல நான் திரும்பிவரும்போது கலியாணஞ் செய்துக் கொள்ளுகிறேனென்றுச் சொல்ல அதற்கு புலி வேந்தன் சம்மதமடைந்து இவன் நமக்கே மருகனாகப்போகிறானென்று சந்தோஷமடைந்தான். அதன்பிறகு, பாலகனைப்பார்த்து அப்பா ராஜகுமாரா நீ நாகள்ளபூடிக்கு போவதால் எனது சேனைகளை அனுப்புகிறேன் அழைத்து செல்லுவாயென்றுச்சொல்ல, இதைக்கேட்டப்பாலகன் அப்பா சேனைகள்வேண்டாம் நானேபோகுறேனென்றுச்சொல்ல புலிவேந்தன்கேட்டு அய்யா என் நகரத்தில் சுப்பா சாஸ்திரியென்றொருப் பிராமணன் இருக்கின்றான் அவனை துணையாக யழைத்துக்கொண்டு போகுவாயென்றுச்சொல்ல அதற்கு சம்மதமடைந்து அப்பிராமணனை அழைத்துக்கொண்டு போகலானார்,

இருவருமப்போது இசைந்துநடக்கலானார்
இரண்டுஜாமமாக இருவரும்நடந்தாரே
பாலகனுக்கப்போது பார்க்காவுவரண்டது
அய்யாவேவிப்பிரவரே அன்புடன்கேளுமையா
எந்தனுக்குதாகம் யிப்போயெடுக்குதையா
ஜலமிப்போகொண்டுவாரும் தயவுடனெந்தனுக்கு
அந்தமொழிகேட்டான் யப்போதுவேதியனும்
கடையாநடைநடந்தான் நாலுபக்கந்தேடிபார்க்க
இவ்வழிதன்னிலேக் கண்டானேகிணறுவொன்றை



பாலவர்த்தி வேந்தனும் விப்பிரவனும் புறப்படுவது.

வசனம்.

அச்சமயத்தில் வேதியன் கிணற்றைக்கண்டு இராஜபுத்திரனை அழைத்துக்கொண்டுவந்து ஓ இராஜேந்திரா முந்தியென்னைக் கிணற்றில் இரக்கும் நான் தாகமீர்ந்தபின்பு தங்களை விடுகிறேனென்றுசொல்ல வேந்தன் சம்மதமடைந்து இரண்டுபேர்களுடைய பாகைகள்கட்டி ஒன்றாய் முடிப்போட்டு பிராமணன் இடுப்பில்கட்டி கிணற்றிலிரக்கினார் அப்போது விப்பிரவன் தனது தாகம் தீரும்படி ஜலமருந்தி கயற்றை அசக்கவே வேந்தன் சேந்திக்கொண்டார். கரைக்குவந்தப் பிறகு வேதியன் வேந்தனைபார்த்து அய்யா இக்கிணற்றில் செடிகள் சூழ்ந்திருக்கிறது. தாங்கள் இறங்கினால். காதில் இருக்கப்பட்ட கடுக்கன் சேந்திரஹாரம் இதுகள் சிக்கிக்கொண்டு தொந்திரவுபடுவீர் ஆகையால் இதையெல்லாங்கழட்டி. கரையில் வைத்துவிட்டுகிணற்றில் இறங்கினால் நலமென்றுசொல்ல அதுபோல் வேந்தனும் சம்மதித்து பூஷணங்களை கழட்டி கரைமீது வைத்துவிட்டு இடுப்புக்குக்கயர் கட்டிக்கொண்டு



கிணற்றில் இரக்கி ஜலமருந்தி கயற்றையசக்க அச்சமயத்தில்வேதியன் பாதிகயர்சேந்தி மத்தியில்வரும் சமயத்தில் செந்திராயுதமெடுத்து கயற்றை யறுத்துவிட்டான் அப்போது,

பாலவர்த்தி வேந்தனை கிணற்றில் தள்ளிவிட்டு வேதியன் ஓடிப்போவது.

வேந்தனும்கிணற்றினில் வேகமாய்விழுந்தானே
முழுகிதெப்பலாடி மூச்சுதள்ளிடுகின்றான்
அந்தச்சமயத்தில் யறிவுள்ளபாலகன்
தனதுபாட்டியைத் தன்மனதில்நினைந்தானே
அய்யோலட்சுமிதேவி யம்மாயென்னைக்காருமே
எந்தன்தாயாரை யேன்பெற்றாய்முந்திநீ
அந்தப்பாதகி அய்யோயென்னைப்பெற்றாளே
எந்தனுக்கெத்தனை இடுக்குகள்நேர்ந்ததம்மா
இனியான்பிழைப்பது யேதடியென்தாயே
இந்தக்கிணற்றினில் யென்னுயிர்விடுகிறேன்
என்னைக்காப்பவர் ஆருமில்லைகானகத்தில்
இப்படிச்சொல்லி அழுதானேபாலகன்
இப்படித்துயரப்பட இதுக்கண்டாலட்சுமிதேவி
அந்தக்கிணற்றினில் அறியதாலையுண்டாக்கவும்
முழங்கால்ஜலமாக செய்தாளேயக்கிணற்றில்
மாயக்கொடையொன்று மகிழுடநிர்மித்தால்
விஷபூச்சிகளொன்றும் இண்டாமல்செய்தாளே
இப்படியாகப்பாலன் இருந்தானேயேழுதினம்
அப்போதுவிப்பிரவன் அங்கிருந்தபூஷணத்தை
எடுத்துமூட்டைகட்டி இவ்சாந்துநடந்தானே
கெங்காவதிபட்டணம் வந்தானேவிப்பிரவன்
அந்தநல்லபட்டணத்தில் குடியிருக்கும்வேசியை
கண்டானேவிப்பிரவன் காமமதுவும்பொங்கி
மோகமதிகரித்து மோகனாங்கியைக்கண்டு
கொண்டுவந்தபூஷணத்தை கொப்பனவேதான்கொடுத்து
அந்தராத்திரி யாசைதீத்திடதான்செய்தான்
உதிபமானவுடனே யெழுந்தானேவிப்பிரவன்
குளத்தருகில்வந்து குந்தினான்விப்பிரவன்
அந்தச்சமயத்தில் யந்தவேதியனுக்கு

மேகரோகங்கள் மேன்மையாய்யுண்டாச்சு
இரந்திசெலந்தி இல்லாதப்போடக்குவாதம்
இரத்தவெள்ளையும் பிரமேகந்தாபுண்டாச்சு
இத்தனைவியாதியா யிதுக்கண்டு துயரமிட்டான்
இந்தவிப்பிரனை யெவருமேசேர்க்கவில்லை
அந்தத்தெருக்கோடியில் அயர்ந்துபடுத்திருந்தான்
இப்படியிவனிருந்தான் யிசைந்துமேயன்னாட்டில்
அன்னாட்டுவேந்தர் அருப்பேரப்போது
இன்பமாய்ப்புறப்பட்டார் யிசைந்துமேவேட்டையாட
கானகத்தில்வேட்டையாடி கலந்துவருஞ்சமயத்தில்
வேட்டைநாயிக்கு தாகமதுக்கொண்டது
அப்போதுயன்னாய்கள் வேந்தனுடையபல்லக்கை
போகவிடாமல் புகழ்ந்துமடக்கியது
இந்தவொருகோரத்தை வேந்தர்கள்கண்டாரே
அப்போதுகாவலரை யன்புடன்றானழைத்து
இந்தநாய்களுக்கு யிப்போதுஜலந்தான்
கொண்டுவருவீரென்று கொப்பனவேதிட்டஞ்செய்தார்
அப்போதுகாவலர் யன்பாகவோடினார்
ஆலமரத்தடியில் யிருந்ததுகிணறென்று
அந்தக்கிணற்றிலே அன்பாகத்தானிக்கட்டி
சொம்பையும்விடவே சிறப்புடன்பாலகனும்
சொம்புதன்னையே பிடித்துக்கொண்டானப்போது
இந்தக்காவலர்கள் யிழுத்துப்பார்த்தார் கயிற்றைதான்
கயிறும்மசயவில்லை கடுங்குரல்கேட்குதப்போ

## வசனம்.

இந்த தொனியைக்கேட்டு இதையாம் பலமாய்வலித்தால் பாகை யறுந்துவிடுமென்று சந்தேகமடைந்து அதில் இரண்டுபேர் ஓடி வேந்தரைக்கண்டு ஐயா அந்தக்கிணற்றில் ஆரோவிழுந்ததுபோல் இருக்கிறது அவர் துயரமடைகுறார் நாங்கள் போட்ட செம்பைப்பிடித்துக் கொண்டார் வரவில்லை என்றுக்சொல்ல இதைக்கேட்டு வேந்தர்கள் அடா காவலனே ஆரோ மனிதர் விழுந்திருப்பார் அவரைக்கரையேற்றினால் நமக்கு நல்லபலன்றான் என்றுச்சொல்லி அவர்களுடைய பாகையும் இடுப்பில் தரித்துக்கொண்டிருந்த காச்சாவும் கழட்டிக்கொடுத்து இதுகளையெல்லாம் சேர்த்துக்கிணற்றிலிட்டு அந்தமனிதனைகரையேற்றிவிடுவீர் என்றுச்சொல்ல அதுபோல சேருவர் விடவே,



அந்தக்கயிற்றைப் பிடித்தானேபாலகன்
தூக்கினார்காவலர் சிறப்புடன்பாலகனை
அப்போதுபாலகன் அரியகரைவந்திருந்தான்
பாலகன்தேகம் வற்றியிருந்ததப்போது
இன்னினால்பிரத்தம் கொஞ்சமானில்லைவில்லை
நாட்டுகட்டைக்கொண்டு கடுகதீமூட்டினார்
தீயைகாட்டச்சொல்லி திகழ்பாலகனையிறக்கினார்
அட்டைகள்தானும் அடையாயிருந்தது
இத்தனைக்கோலமதை அப்போதுக்கண்டாரே
பிச்சுவாதானெடுத்துத் தள்ளினார்யட்டைகளை
அப்போதுபாலகனை யன்புடன்பல்லக்கியில்
ஏற்றிக்கொண்டுமே நடந்தாரேயப்போது
கெங்கவாதிப்பட்டணம் வந்துமேசேர்ந்தாரே
பாலகனுக்கப்போ பக்குவஞ்செய்தாரே
இப்படிச்செய்ய யந்தநல்லப்பாலகனும்
தினத்திற்குதினம் தேறினன்பாலகன்
அந்தச்சமயத்தில் யங்கிருந்தவேந்தர்கள்
பாலகனைப்பார்த்து பண்புடன்கேழ்க்கலானார்
எந்தவூரெந்ததேசம் யிசைந்துவந்தன்னமேது
உனதுதாய்தந்தை யுகந்துபெயர்சொல்லுமே
இப்படியும்நீதான் யிசைந்துவந்தக்காரியமென்ன
இத்தனையுங்கேட்டான் யிசைந்துமேபாலகனும்
சொல்லத்தொடர்ந்தான் சொருசுடனப்போது
பானுகண்டிபட்டணம் பரிபாலித்துவந்த
கார்யவர்த்திவேந்தன் கருணையுள்ளயென்தந்தை
பாலநாகம்மாள் யென்னைப்பெற்றதாயாராகும்
என்தனைப்பெற்றதோர் யேழாந்தினந்தன்னில்
நாகள்ளபூடியில் நலமாகவாழப்பட்ட
மாயப்பக்கிரி மகிழ்ந்துசெனரயெடுத்தானும்
எங்கள்தந்தையேழ்பேரும் யிசைந்துயுத்தஞ்செய்யப்போனார்
அந்தநல்லதந்தைதகளை யதமாகச்செய்துவிட்டான்
எந்தனுடத்தாயாரை யிசைந்துமேபார்க்கப்போரேன்
இத்தனையுங்கேட்டாரே யப்போதுவேந்தர்களும்
ஆனபாலகனை யரிவுள்ளசீலனை
இந்தநல்கிணற்றினில் யென்விழுந்தாயிப்போது

இந்தமொழிக்கேட்டு யேதுச்சொன்னான்பாலகனும்
காட்டையான்பார்த்துக்கொண்டு கலக்கமுற்றலருகவே
காற்றயடிக்கவே காறுதகிணற்றில்விழுந்தேகல்

வசனம்.

இந்தப்பிரகாரமாக பாலகன் சொல்லவே இந்த வேந்தர் சந்தோஷமடைந்து எனது புதல்வியை உனக்கு கலியாணஞ் செய்துவைக்கு றேன் கலியாணஞ் செய்துக்கொண்டுப் போவீரென்றுசொல்ல அதற்குப் பாலகன்கேட்டு அய்யா நீர் சொல்வதுசரிதான் எனது தாயார் சிறையிலிருக்க யான் இங்கு கலியாணமாகுவது தகுதியாகுமா இது நீதிக்கு தர்மமா உத்தமற்கு யழகாகுமா யான் நாளைவரும்போது கலியாணஞ் செய்துக்கொள்கிறேன். நான்வந்து வெகுநாளாச்சுது போக வேண்டும் உத்திரவு தாருமையாவென்றுகேட்க அதற்கு வேந்தர்கள் சந்தோஷமடைந்து அப்பா பாலவர்த்திவேந்தனே நீவந்து வெகுநாளாச்சுது இதுவரைக்கும் யாங்கள் இந்நாட்டில்கட்டிய வேணுகோபாலசுவாமி சன்னதி நீர் பார்க்காமல்போவது நலமல்ல இந்தவேளை இருந்து நாம் கோவிலுக்குப்போய் வருதற்குள்ளாக சமயல் ஆகிறது வந்தவுடன் புசித்துவிட்டு உமதிஷ்டப்படி போவீரென்றுச்சொல்ல அதற்குசம்மதமடைந்து வேந்தரும் பாலகனும் சுவாமிக்கோவிலுக்கு வந்துக்கொண்டிருந்தார்.



பாலவர்த்திவேந்தனும் கெங்காதிபட்டணத்து வேந்தரும் வேணுகோபால சுவாமியைத் தெரிசிப்பது.



நேரடியருகினில் விப்பிரவன்யிருந்தானே
விப்பிரவனைக்கண்டு வேகமாய்பாலகனும்
வந்தனமையா விப்பிரவரேயுந்தனுக்கு
இப்படிச்சொல்லவே யிசைந்துமேபிராமணன்
பாலகனைக்காண பலமதாகுன்னியது
தலைதனைகுப்பிட்டு தானுமேகுந்திநான்
அப்போதந்தவேந்தர் யன்புடனேபாலகனை
கண்ணாலேதான்பார்த்து கடுகவேகேழ்க்கலானார்
இந்தநிர்பாக்கியனுக்கு யேன்வந்தனஞ்செய்தீர்
பாதகஞ்செய்தவன்போல் பார்க்கயிப்போதோனுதே
இந்தமொழிகேட்டான் யிசைந்துமேபாலகன்
அய்யாவேநீர்கேளும் யன்புடனென்வார்த்தை
இவன்குலமேதென்று யின்பமாயதிந்திரா
குலத்தில்வேதியன் குருபீடமானவன்
இத்தனையுங்கேட்டாரே யப்போதுவேந்தரும்
ஆனால்பாலகனே யந்தநல்லவிப்பிரவனை
எப்படியறிவீர் யெந்தனுக்குசொல்லுமப்பா

வசனம்.

இப்படியாக வேந்தர்கேட்க பாலவர்த்திவேந்தன் அய்யோ இவன்செய்தக் காரியத்தை நாம் சொல்வோமாகில் இந்தப் பிராமணனை அநியாயமாய்க் கொன்று விடுவார். அபகாரம் செய்தவனுக்கு உபகாரமேசெய்தால் நல்லமென்றுச்சொல்லி இருப்பதுபோல் இவனைக்காட்டலாகாதென்று தன் மனதில்தானே திடம்படுத்திக்கொண்டு ஓ வேந்தரே இந்த விப்பிரவனிருப்பது எங்களுடைய பட்டணமே இவர் யெனக்கு பால்ய சினேகிதரென்றுச்சொல்ல அதற்கவ்வேந்தர்கேட்டு ஆனால் இப்பட்டணத்திற்கு ஏன் வந்தானென்றுகேட்க. அய்யா, நான் நாகனூருடிபட்டணத்திற்கு பிரயாணமாகுமுந்தி இவரையனுப்பி பக்கிரியெம்மாத்திரம் விப்பத்தியோடு இருக்கின்றான். அறிந்துவாவென்றுயனுப்பினேனென்றுச்சொல்ல. அதற்கு யவ்வேந்தர் இவரிப்படி காயலாவாகயிருக்க எப்படி யனுப்பினீரென்றுகேட்க. அய்யா இவரை யனுப்பும்போது நன்றாயிருந்தார். ஆனால் மனிதருக்கு க்ஷணத்தில் வருவது யாருக்குத்தெரியும். இப்போதுதான் இவருக்கிப்படி வியாதியுண்டாயிற்றென்றுச்சொல்ல நல்லதென்று சந்தோஷமடைந்து யெல்லோரும் கோவிலுக்குச்சென்று சுவாமியைத் தியானஞ்செய்து வரும்போது அந்த விப்பிரவனைப் பாலகன் தன்னுடன் அழைத்துக்கொண்டு இருப

பிடம்வருக அத்தினத்தில் பிரயாணம் நியத்திவிட்டு பதினான்குதினம் அங்கிருந்து அவனுக்குத்தகுந்த அமுதுதான்கொடுத்து தேகத்தை திடப்படுத்தி பலம் வந்தப்பிறகு பாலகன் ஓர்தினத்தில் செங்கவாதி ப்பட்டண வேந்தரைப்பார்த்து அய்யா இந்த விப்பிரவன் வெகு கஷ்டப்பட்டான், இவன் கோரியபடி செலவுக்கொடுத்து காப்பாற்றவீர் செல்வாரும் பொருத்தத்தை யான் வரும்போது தருகுவேனென்றுச் சொல்லி அந்த விப்பிரவனை அவரிடம் வொப்பிவித்து சாதம் மூட்டை கட்டிக்கொண்டு பிரயாணப்படவே அவ்வேந்தர் இப்பாலகனுக்கு வேண்டியதிரவியங்களைக்கொடுத்து அனுப்பினர் அப்போது பாலகன்.

வெள்ளிமொளைந்திட வேகமாயெழுந்தானே
பொழுதுதெரியாமல் நடந்தானேபாலகனும்
கிளிப்பட்டணம் கிருபையுடன்வருகின்றான்
அந்தநல்லப்பட்டணம் யிருக்குதுயிரண்டுகாதம்
அந்தக்கானகத்தில் பொழுதுமேபோச்சுது
இனிகானகத்தில் யெப்படிநடக்கலாகும்
சாதமுங்கிடையாது ஜலமுமியக்குட்டைக்காணேம்
இந்தநல்லகானகத்தில் இருக்கலாமென்றுச்சொல்லி
எண்ணமிட்டுயவன் இருந்தானேயப்போது

வசனம்.

இந்தக்கானகத்தில் இருப்பதற்கு சத்திரம் காணேம் ஏதுசெய்வது என்று நாலுதிசைகளும் பார்க்குஞ்சமயத்தில் அங்கு பாழடைந்த கோவிலகப்பட இதுவே நமக்கு கோட்டையென்று எண்ணமிட்டு அந்தக்கோவிற்குள் சென்று பசியால் நித்திரைப்பிடிக்காமல் உட்கார்ந்துக் கொண்டிருந்தான்.

இப்படியிருக்க நடுஜாமத்தில் நாலுஜீவஜந்துக்கள் வந்து ஒருபக்கம் பெரியபுலியும் ஒருப்பக்கம் சிங்கமும் ஒருப்பக்கம் காட்டுநரியும் ஒருப்பக்கம் நல்லசர்பமும் இந்நாலும் கோவிலுக்கு வெளியில் உட்கார்ந்து ஆலோசனைச் செய்துக் கொண்டிருந்தது அச்சமயத்தில் நரியானது ஓ! புலிமாமா இந்தவேளை உமக்கு என்னபோஜனம் கிடைத்தது என்றுக்கேழ்க்க அதற்குப் புலியானது ஓ நரியே நான் கானகஞ்சென்று வேண்டிய எருதுகளைக் கொன்றுதின்றேன் என்றுச்சொல்ல அதின்பிறகு சிங்கத்தைப் பார்த்து ஓ சிங்கமாமா உனக்குயேது ஆகாரம் கிட்டியது என்றுகேழ்க்க அதற்குசிங்கம் அப்பாநரியே நான் கானகம் போகும்போது எதிரில் பெரிய யானை வருக அதைப்பிடித்து



மத்தகத்தை ஒடித்து மூளையை நன்றாய்த்தின்று வந்தேன் என்றுச் சொல்ல அதின்பிறகு ஓசர்பமே உனக்கு ஏது இரைக்கிடைத்ததுயென்றுக்கேட்க அப்பா நரியே நான் பெரிய மீன்களைத்தின்று வந்தேன் என்றுச்சொல்ல இதற்குள்ளாக புலியானது நரியைப்பார்த்து ஓநரியே உனக்கு ஏதுயிரைக்கிடைத்தது சொல்லென்றுக் கேட்க அப்போது நரியானது புலியைப்பார்த்து ஓ புலிவேந்தா யான் இந்நாட்டிலிருக்கும் ஏரியில்சென்று நண்டுகளை செவ்வையாய் தின்றுவந்தேன் இதில்லாமல் இன்னங்கேளும்.

புலியெநீகேளும் பெருமையுடனென்வார்த்தை
நாளையதினம் நல்லபோஜனமிருக்குதப்பா
இந்தமொழிதன்னை இன்பமாய்புலிகேட்டு
எங்கேபலகார மிருக்கிறதுவுந்தனுக்கு
எந்தனுக்குச்சொல்லுமே யிசைந்துமேயிப்போது
இப்படிகேழ்க்க யப்போதுயந்தநரி
ஆனால்நீகேளும் அன்புடனேயென்வார்த்தை
கிளிப்பட்டணத்தில் கிருபையுடனிருக்கப்பட்ட
வேந்தன்புதல்விக்கு வேகமாய்முதுகுதன்னில்
இராஜகட்டிவந்து ஆறுமாதமாச்சுது
அனேகவைத்தியர் வந்துமேபார்த்துவிட்டார்
ஆறல்முடியவில்லை யந்தகட்டியாற்றுவதற்கு
நான்-தினந்தினம்யத்தேசம் யருகினில்சென்றுமே
இரண்டுகூச்சல்போட்டு யின்பமாய்வருகுவேன்
நாளைசாயந்திரம் யம்மாதுசாகுவாள்
அந்தச்சமயத்தில் யிஷ்டம்போல்தின்குவேன்

வசனம்.

இப்படியாக நரிசொல்லவே இதின்வாயில் மண்ணைப்போடவேணும்மென்று மனமிட்டு ஓ நரியே அந்த ஔஷதம் இந்நாட்டில் கிடையாதா என்றுகேட்க அப்போதுநரியானது ஓபுலியே ஔஷதமென்னமோ இருக்கிறது மனிதருக்கு அகப்படாது என்றுச்சொல்ல அதற்கு புலியானது கேட்டு ஓ நரியே அதுயெங்கிருக்கிறது சொல்லென்று கேழ்க்க நரியானது ஓ புலியே நாமிருக்கப்பட்ட ஆலயத்தின் மேல் வெள்ளையாக எழுமிலையோடு கருத்தபுஷ்பம் பூத்து ஓர் செடியிருக்கிறது அந்தச்செடியில் எழுமிலைகள் அறுத்துக்கொண்டு அந்தச்செடியின் கீழ் சஞ்சீவி கொம்பிருக்கிறது அந்தக்கொம்பை யெடுத்துக்கொ

ண்டு சுத்தஜலத்தில் அந்தக் கட்டியைக்கழுவி இந்த இலைகளுக்கு ஏ ண்ணெயிட்டு அனல்காட்டி இலைமேலயிலையாகஏழுயிலைகள்போட்டு இந்த கொம்பால் அடித்து கட்டுக்கட்டி மூன்றாந்தினத்தில் அவிழ்த்தால் அ க்கட்டியிருந்தவிடம் இன்னதென்று தெரியாது என்றுச்சொல்லியது.

இந்தமொழிகளை பாலகன்கேட்டிருந்தான்
இதற்குள்சூரியன் உதயமானான்கிழக்குதிசையில்
அங்கிருந்தஜீவங்கள் அப்போதுபோச்சுதே
இமைப்பாலகனிருந்து மின்பமாய்வெளியில்வந்து
கோவில்மீதப்போ கொம்பனையேறினான்
அந்தயிலைகளை பண்புடனறுத்துக்கொண்டு
சஞ்சீவிகொம்பை தானுமேயொடித்துக்கொண்டு
இடுப்புதன்னில் பத்திரஞ்செய்துக்கொண்டான்
பொழுதுபோவதற்குமுந்தி போனானேகிரிப்பட்டணம்
அந்நாட்டுசத்திரத்தில் அழகானகிழவியைக்கண்டு
கேட்டானேயாபாட்டி கிருபையுடனென்வார்த்தை
காசுகள்தருகின்றேன் கனமுடன்சாதமிடுவாய்
அந்தமொழிக்கேட்டு அந்தநல்லகிழவிதான்
அப்பாநீகேளும் பண்புடனேயென்வார்த்தை
இந்தச்சமயத்தில் வேந்தனுக்குத்திருது
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பாலகனும்
என்னடியம்மா தீராது வேந்தனுக்குச்சொல்லுமே
பனைத்தைவிட இனிகாரியமென்னடி.
நீ-சத்திரக்கிழவி சாதமிடும்தாயாச்சே
இப்படிச்சாதமிட்டு இசைந்துபிழைக்குறாய்

பாலவர்த்திவேந்தன் சத்திரகிழவியை தேசவிந்தைவிசாரிப்பது.

வசனம்.

இப்படிச்சொல்லவே இதுகேட்டுக் கிழவி அப்பா இராஜகுமார னே இதுநான் பிழைப்பது நிட்சயமே ஆனால் இப்பட்டணம் பரிபாலி க்கும் வேந்தன்புதல்விக்கு இராஜக்கட்டிப்பிறந்து ஆறுமாதமாய் ஆரா தப்படிக்கி தொந்திரவுபட்டு இராத்திரி இரண்டு ஜாமமாய் நிலைக்கண் பட்டு மொழித்தமொரி ஆகாரமில்லாமல் இருக்க இன்றையம்மா து கை ச்சோர்ந்து விட்டாளென்று தலைக்கடையில் போட்டார் ஆகையால் அதிக துக்கத்துடன் இருக்கின்றோம் இதுவல்லாமல் அந்தசமஸ்தான



த்தில் பிழைக்கப்பட்டவள் நான் அங்குபோகின்றேன் என்றால் சமை யல் செய்யமுடியாது இனியெங்காகிலும் கொடுத்து சாப்பிடுவீர் என் றுச்சொல்ல இதை கேட்டப்பாலகன் ஓபாட்டி இராத்திரிமுதல் சாதம் கிடையாது அந்த இராஜக்கட்டியை நான் தீர்க்கின்றேன் யெனக்கு இந்தவேளை சாதம்போடுவாயென்று கேழ்க்க அதற்கு அந்தக்கிழவி அப்பா உனது கையால் அந்தக்கட்டியை ஆற்றுவாயா யென்றுக்கே ட்க அம்மா யான் அநேக ஜனங்களுக்கு சவுக்கியம் செய்திருக்கின் றேன் என்றுச்சொல்லி அந்தக்கிழவி தான் இராத்திரிப் பொழுதுக்கு வைத்துக்கொண்டிருந்த சாதம் அப்பாலகனுக்குப் போடவே அச்சா தம் தின்றுவிட்டு ஓ? பாட்டி நீபோகும்போது என்னையும் அழைத்து செல்லுவாய் என்றுச்சொல்ல அதுபோல அக்கிழவி பாலவர்த்தி வேந் தனையும் அழைத்துக் கொண்டமேடைக்குச் செல்லுஞ்சமயத்தில் அந்த இராஜன்புதல்வியை மேடையிலிருந்து தலைக்கடைக்கு எடுத்து வருஞ்சமயத்தில் அப்புதல்வி தந்தையும் அநேக வைத்தியரும் வே ந்தரும் பந்துக்களும் முகவாட்டமிட்டு சோகமடைந்து தலைக்குனிந் துக்கொண்டு வருக அச்சமயத்தில் கிழவி அவ்வேந்தனைப் பார்த்து ஐயா? இதோயென்னுடன் வந்திருக்கும் மஹானுபாவர் அந்தக்கட்டி யை சுவஸ்தம் செய்வாரென்று சொல்லுகிறார் என்றுச்சொல்ல இதைக் கேட்டவேந்தன் ஓகிழவி இதுவெல்லாம் வீண்வார்த்தை அநேகவை த்தியரும் பார்த்து தீரவில்லை இவரால் எதுமுடியும் இதில்லாமல் இப் பெண்ணுக்கு ஆயிசு யிவ்வளவுதான் ஆகையால் இந்தக்கட்டிப பிறந் தது என்றுச்சொல்ல, இதற்குள்ளாக அங்கிருந்த பெரியோர் இதைக் கேட்டு ஓ இராஜோத்தமா நீயிப்படிச் சொல்வது சரியல்ல எவர் கை பாக மெப்படியிருக்குமோ தெரியாது அப்படிருக்க அப்புதல்வனை யழைத்து அக்கட்டியைக் காட்டும்படி திட்டஞ்செய்ய அதுபோல் அவ்வேந்தன் அப்பாலகனையழைத்து அப்பா இந்தக்கட்டியைப்பார்த்து இதுலகுவாகுமா அல்லது இப்படித்தான் யிருக்குமா இதைப்பார்த்து சொல்லொன்னா அதுபோல் பாலகன் அந்தக்கட்டியைப் பார்த்து ஐயா இதைநான் லகுவாக்குகிறேன் என்றுச்சொல்லி நல்ல ஜலத்தைக் கொண்டு வரும்படி திட்டஞ்செய்ய அதுக்கொண்டு வந்தவுடன் அந்த ஜலத்தால் அக்கட்டியைக் கழுவி சுத்தப்படுத்தி தன் இடுப்பிலிருக்கும் இலைகளை எடுத்து யெண்ணெத்தடவி ஒன்றுமேலொன்றாய் ஏழுயிலை கள் போட்டு கந்தைத்துணியால் கட்டி தன் கையிலிருக்கும் சஞ்சீவிக் கொம்பால் அந்தக்கட்டியை ஓரடி யடித்து விட்டான்.

## பாலவர்த்திவேந்தன் கிளிப்பட்டணத்து இராஜபுதல்விக்கு வந்த இராஜக்கட்டியை அறுத்தல்.

சற்புரோகிதர்கள் சாமிகுருக்களாமல்
அந்தமாதிரிக்குமே அறியாதிருந்தது
கண்ணைத்திறந்துமே கட்டைப்பார்த்தானப்போது
அங்கிருந்தசிலபேர்கள் அப்போதுபேசிக்கொண்டார்
மயக்கமும்போச்சுது மரணமுந்தீர்ந்தது
இன்னுஞ்சிலபேர்கள் பேசிதன்றுச்சொல்லுகின்றார்
இனிபயமில்லைதான் யிந்தநல்லமாதுக்கு
இப்படிபேசிக்கொண்டு யிருந்தாரேபரிஜனங்கள்
அந்தநல்லசமயத்தில் யதிபாலவேந்தனும்
சிவனைநினைந்து சிவயோகஞ்செய்திருந்தான்
அப்போதுபாலகன் போஜனஞ்செய்யவில்லை
ஐயோசிவமே அஞ்ஞானமாகவேதான்
மிருகங்கள்சொன்னமொழி நிசமென்றுச்சொல்லி
இந்தவைத்தியத்தை இன்பமாயான்செய்தேன்
அபகீர்த்திவருகாமல் ஆதரிக்கவேணுமையா
நீயேகெதியென்று நின்றேனைவையகத்தில்
காக்கவேவாருமையா கைலாசபதிதேவா
இப்படிச்சொல்லிக்கொண்டு இருந்தானேபாலகனும்
இப்படியேமூன்றுதினம் இசைந்துமேபோச்சுது
அப்போதுபாலகன் யெல்லோரையும்வரச்சொல்லி.
அருகினில்வைத்துக்கொண்டு அப்போதுபாலகனும்
சொல்லத்தொடங்கினான் சிறப்புடனச்சமயம்
கேட்டீரோவேந்தர்களே கிருபையுடனெல்லோர்க்கும்
இந்தக்கட்டியைதான் இப்போதவிழ்க்கிறேன்
கட்டியிருந்தவிடம் காட்டுவேனெந்தனுக்கு
இப்படிச்சொல்லி யவிழ்த்தானேகட்டியை
வேந்தர்கள்அப்போது பார்த்தாரேகட்டியை
கட்டியிருந்தவிடம் காணவேதோற்றவில்லை
அப்போதுயவ்வேந்தன் யதிவுற்றப்பாலகனை
வாரியெடுத்துக்கொண்டு வண்மையாய்மடியில்வைத்து
அழகுசந்திரனே ஆஸ்தானத்தினமே
பிரமதேவனுன்னை பிரியமாயனுப்பினானோ



ஆதிசிவனுன்னை அன்பாகயனுப்பினானோ
சுந்திரப்பாலகனே சிறப்புடனிக்கனித்தை
எங்குநீகற்றாயடா இந்தவயதுதன்னில்
இப்படிச்சொல்லி அவ்வேந்தன்சந்தோஷித்தான்
இந்தச்சேதிதன்னை யன்றுடயங்குமே
இருக்கும்பிரஜைகளும் யறிந்தாரேசேதிதன்னை
எல்லோரும்வந்துமே பார்த்தாரேபாலகனை
இப்படிப்பார்க்க இசைந்துயவ்வேந்தனும்
இதுநீதியல்லவென்று அப்போதுபாலகனை
பல்லக்குதன்னிலேற்றி பக்குவமாய்நாலுவீதி
ஊர்கோலம்செய்யவைத்தார் ஒப்பொங்கிபாலகனை
நாலுவீதியுஞ்சுற்றி நலமாகவந்தபிறகு
வேந்தனும்பாலகனும் வேகமாய்ஸ்தானஞ்செய்து
போஜனம்தானருந்து புகழ்ந்துகொலுவில்வந்து
வைத்தியருக்கெல்லாம் வெகுமதிகள்தான்கொடுத்தார்
எல்லோரும்போனபின்பு இசைந்துமேவேந்தனும்
பாலகனைப்பார்த்து பக்குவமாய்சொல்லலானார்
எந்தன்மகளையிப்போதுநீ பிழைக்கச்செய்தீரையா

## கிளிப்பட்டணத்து வேந்தன் தன்மகளை பாலவர்த்திவேந்தனை கலியாணம் செய்துக்கொள்ளும்படி சொல்வது.

### வசனம்.

ஓ? இராஜபுத்திரனே நீ யென்புதல்வியை பிழைக்கச்செய்தபடியால் என்புதல்வியை,

நீரேகலியாணம் இன்பமாய்செய்துக்கொள்வாய்
அந்தமொழிக்கேட்டு அப்போதுபாலகனும்
வந்துவெகுநாளாச்சு அய்யாவேபோகவேண்டும்
இப்படிச்சொல்லவே இதுகேட்டார்வேந்தனும்
கலியாணஞ்செய்துக்கொண்டு கடுகவேநீபோவீர்
இப்படிச்சொல்லவே இதுகேட்டான்பாலகனும்

### வசனம்.

ஐயா இராஜோத்தமா எனது தந்தையான கார்யவர்த்தி வேந்தனும் என்று பெரியதந்தைகள் ஆறுபேரும் புஜானுகண்டி பட்டணாய்பரிபாலித்தவர் எனது தாயாராகிய ஸ்ரீ பாலநாகம்மாளை நாகன்

ளபூடியில் இருக்கப்பட்ட மாயப் பக்கிரியானவன் சிறை யெடுத்துக் கொண்டு போனான் அவன்மீது என் தந்தையார் யுத்தசன்னத்தராய் போக அவனை யதஞ்செய்து விட்டான். என் தாயார் சிறையிலிருக்கிறாள் இனிப்போது கலியாணஞ்செய்வது நீதியல்ல மறுபடியும் வரும்போது கலியாணஞ்செய்யுகிறேன் ஆனபடியால் எனக்கு செலவுக் கொடுக்க வேண்டுமென்று கேட்க அதற்கு அவ்வேந்தன் பாலகனைப் பார்த்து இராஜபுதல்வனே யின்று அஷ்டமி நாளையதினம் நவமி அதன் மறுநாள் தசமி ஆகையால் இதைத்தள்ளி போகலாமென்று அவர் பிரயாணத்தை நிறுத்தினார் இப்படிருக்க கெங்காவதி பட்டணத்தில் விட்டு வந்த விப்பிரவன் பதினோந்து தினத்திற்கெல்லாம் தேகத்திற்கு அதிக பலம்வந்து அப்போது அந்தப்பிராமணன் வேந்தனைப் பார்த்து ஐயா நீர் கொடுக்கும்படியான உமக்கு அரிசியை பார்ப்பது எனக்கு கிரஹசாரமா இதோ யான்சென்று அந்தப்பாலவர்த்தி வேந்தனைக் கலந்துக்கொண்டு போகிறேன் என்று அவருடன் சொல்லி பிறகு தன்மனதில் எவ்விதத்திலாவது அவனைக் கொன்று அவன் தரித்திருக்கும்படியான பூஷணங்களை அபகரித்துக்கொள்ள எண்ணமிட்டு உடனே உதயமானவுடன் செம்பு ஒன்றை யெடுத்துக்கொண்டு கத்தியொன்றை சம்பாதித்துக்கொண்டு பொழுது போவதற்குள்ளாக கிளிப்பட்டணம் வந்து சேர்ந்தான். அப்பட்டணம் வந்தவுடனே சத்திரக்கிழவியைக் கண்டு நீர் மோர் தாகம் பெற்றுக்கொண்டு அம்மா பாட்டி இந்தப்பட்டணத்தில் என்ன வர்த்தமானம் யென்று கேட்க அதற்கு அந்தக்கிழவி அப்பா எங்கள் வேந்தன் புதல்விக்கு முதுகில் இராஜகட்டிக் கண்டு அபாயப்பட அந்தப் பாலுகண்டிப்பட்டணத்து வேந்தர் புதல்வன் அக்கட்டியை ஆற்றினான் அவன்பெயரோ பாலவர்த்தி வேந்தன் என்பார் அவனுக்குயெங்கள் சூரியவர்த்தி வேந்தன் தன் புதல்வியைக் கொடுத்து கலியாணம் செய்குவேன் யென்றார் அதையெடுத்து தன் தாயாரை யழைத்து வருவதற்காக உதயமானவுடன்புசித்துப்போகிறான் என்று அக்கிழவிச்சொல்ல அதைக்கேட்டப்பிராமணன் அம்மா உதயத்திற்கு போகிறாரா அவருக்கு உமதுவேந்தன் ஏதாகிலும் வெகுமதிகள் கொடுத்தாரா என்றுக்கேட்க அம்மாது அப்பா யவருக்கு பதினாயிரம் வராகன் வெகுமதிகள் கொடுத்தார் என்றுச்சொல்ல அதற்கு யந்தச்சண்டாளப் பிராமணன்,

### பிராமணன் கிளிப்பட்டண சத்திரம் வந்துசாப்பாடு கேழ்ப்பது.

என்னசந்தோஷம் இந்தமொழிக்கேட்டேனம்மா
எனக்குஉதயமாகாமுந்தி பொழுதுசாதமிடுவாயா



சாதம்யான்புசித்து சம்பிரமாயானுமே
அவருடன்சென்றுமே அன்பாய்நான்போகுறேன்
நல்லதுயென்றுச்சொல்லி நயவார்த்தைசொன்னாள்கிழவி
அப்போதுவேதியன் அலர்ந்தநித்திரைச்செய்தானே
உதயமானவுடனே யெழுந்தானேபிராமணன்
எழுந்திரடிபாட்டி யிப்போதுநீயுமே
உதயமாச்சுதடி உகந்துசாதம்சமிப்பாயடி
இந்தமொழிக்கேட்டாள் இன்பமாயக்கிழவி
என்தன்வீட்டினில் அரிசியில்லையிப்போது
அரிசிக்கொண்டுவந்தால் அன்புடன்சாதம்செய்வேன்
கடைவீதிசென்றுமே கருணையாய்வாங்கிவந்தால்
சாதம்சமிப்பேன் சிறப்புடன்வட்டிப்பேன்
இத்தனையுங்கேட்டான் இன்பமாய்பிராமணன்

### வசனம்.

கிழக்கு வீதியிலிருக்கப்பட்ட கோமுட்டி வீட்டிற்குவந்து ஆரையா கோமுட்டி கதவுதிறப்பீர் என்றுக்கேட்டான் அதற்கு கோமுட்டி நீ ஆரையா யென்றுக்கேட்டான் இம்மொழிக்கேட்டப் பிராமணன் ஐயா ஒருபடி அரிசிவேண்டியது என்றுச்சொல்ல கோமுட்டிகேட்டு இதுமகா லாபமடையும்படியான பேரம்வந்தது ஆனால் இங்குபடியும் அரைப்படியும் உமக்கு இந்தயிருட்டினில் அகப்படாது ஆகையால் உதயமானபிறகு வந்தால் கொடுக்குறேன் என்றுச்சொல்ல யம்மொழி பிராமணன் கேட்டு உதயமாகிரவரைக்கும் அங்கு உட்கார்ந்திருந்து ஓய் செட்டியாரே அரிசிகொடும் யான்போகிறேன் என்றுக்கேட்டான் அதற்கு அந்தச்செட்டி போணிசெய்யுமென்று கேட்க விப்பிரவன் கேட்டு இப்போதென்னிடம் காசுக்கிடையாது இரண்டுமணி நேரமானப்பிறகு தருகிறேன் அதுவரைக்கும் இந்த சொம்பு வைத்துக்கொண்டு போணிசெய்யும் என்றுச்சொல்லிக் கொண்டிருக்க உதயமாகி இரண்டு மணிநேரமாச்சுது அச்சமயத்தில் பாலவர்த்தி வேந்தன் போஜனஞ்செய்துக்கொண்டு,

### பாலவர்த்தி வேந்தன் புறப்பட்டு நாகள்ளபூடிக்கு போகும் சமயத்தில் வேதியனைக்கண்டு விசாரிப்பது.

பிரயாணமென்று புறப்பட்டான்பாலகன்
வேந்தருமப்போது வழிவிட்டார்பாலகனை

இராஜவிதியாக வருகுறும்பாலகனும்
அந்தச்சமயத்தில் அறிவுகெட்டப்பிராமணன்
அரிசிவாங்காமல் அந்தச்சந்துவந்தானே
அந்தப்பிராமணனை பார்த்தானேபாலகனும்
வந்தவனையா வாருமையா பிராமணா
இங்குமேனுநீ இன்பமாய்வந்தீரையா
அந்தவிடத்தில் அன்பாகவிட்டுவந்தேன்
அந்தவிடம்விட்டு இங்குவாக்காரியமென்ன.

வசனம்.

ஐயா இராஜோத்தமா யான் இப்போது தான் வந்தேன் இந்த சந்நிதியில் கிழவியிடம் சாதம் செய்யும்படி திட்டஞ் செய்திருக்கின்றேன் இதோ யான் புசித்து வருகிறேன் என்றுச்சொல்ல அந்தமொழிக்கேட்ட பாலவர்த்தி வேந்தன் கேட்டு இதுவெல்லாஞ் சரிதான் நீ வந்தக்காரியம் ஏதென்றுநீ கேட்க அப்போது விப்பிரவன் சொல்லத்தொடங்கினான், ஐயா இந்நாட்டு சூர்யவர்த்தி வேந்தன் புதல்விக்கு யிருந்த இராஜகட்டி உன்னால் வருவாச்சுதென்ற சங்கதி புலிவேந்தன் கேட்டார் அவர் மாமன் குமாரத்திக்கு இதுப்போல் இருக்கிறதென்று உம்முடன் சொல்லும்படி சேவகரை அனுப்பினார் மறுபடியும் அவர் சொன்னது அவ்வேந்தன் தாயாரையழைத்து வருகப்போகுறார் நாங்கள் வரும்படிச்சொன்னால் வருகுவாரா ஓ பிராமணா உனக்கு மருக்கும் சிநேகிதமல்லவா நீசென்றால் வருவார் என்று யென்னை அனுப்பினார் என்றுச் சொல்ல இதைக் கேட்டப் பாலகன் இவன் யுக்தியை தெரிந்து நாமெங்கு வருகிறது போ கிழப்பிராமணாம் திரும்பலாகுமா அந்த கட்டிக்கு மருந்துச் சொல்லுகிறேன் நீ எடுத்துக்கொண்டுப் போகிறாயா என்றுச்சொல்ல நல்லதுநீர்சொல்லுமென்றுகேட்டான் அப்போது பாலகன் இதைக்கேட்டு சந்தோஷமடைந்து ஐயாவேதியரே இந்தக் கிளிப்பட்டணத்திற்கு வடமூலையில் இருக்குங் கானகத்தில் பாழுங்கோவில் இருக்கிறது நீ போஜனமருந்தி பொழுதுப்போனம் பிறகு அங்குசென்று அந்தக் கோவிலுக்குள் புகுந்து கதவு திறந்து வைத்துக் கொண்டிருந்தால் நடுஜாமத்திற்கு அந்தக்கோவில் நாலு பக்கமும் நாலுஜீவராசிகள் வந்து கூடிக்கொண்டு ஆலோசனை செய்துக் கொண்டிருக்கும் அந்தச்சமயத்தில் ஓ புலிவேந்தனே இராஜக்கட்டிக்கு மருந்து யென்னவென்றுக்கேளும் அந்தப்புலி அம்மருந்தைச்சொல்லுமென்றுச்சொல்லி,



பாலகனப்போது பகர்ந்துரைத்தானே
இதனைக்கேட்டப்பார்ப்பான் யின்பமாய்புசித்திருந்து
பொழுதுபோவதும் பார்த்தானேயப்போது
கோவிலுக்குவந்து யமர்ந்தானேவிப்பிரவன்
கதவுதிறக்கயப்போ கடும்பயங்கொண்டானே
கதவுயிரண்டையும் கனத்தாளமிட்டானே
அந்தச்சமயத்தில் வந்ததுநாலுஜீவம்

வசனம்.

இப்படியாக வந்த மிருகங்கள் அவரவர்கள் புசித்த ஆகாரத்தை நினைந்து பேசியது,

புலிவேந்தா நீயுமே புலிதன்னிலப்போது
என்ன ஆகாரம் இன்பமாய்தின்றுவந்தாய்
அப்போதுபுலியும் அன்பாகச்சொல்லியது
காட்டிலெனக்கு காடெருதகப்பட்டது
அந்தச்சமயத்தில் அந்தநரிதானெழுந்து
இந்தவிடத்தில் இனிபோதுமனிதர்நாற்றம்
அந்தமொழிக்கேட்டு யப்போது வேங்கையும்
பசித்திடம்பிடித்தவிளை பாழ்க்காட்டிலேமனிதரேது

வசனம்.

இப்படிச்சொல்லவே நரியானது இதோ யான் அந்தமனிதனைப் பிடித்து தருகின்றேன் என்று தன்வாலை அந்தக்கதவு சந்தில் விட்டுப் பார்க்க இவன் யிருப்பதை அறிந்து கதவைத்திறந்து யெல்லாம் ஜீவ ரும் கூட்டுகுந்து அவனைக்கொன்று தின்றுவிட்டது.

அப்போதுபாலகன் பண்பாகத்தானடந்து
நயனார் இப்பட்டணம் வந்துபசித்தானப்போ
நாகன்னிபூஜை நடுவெல்லவந்தானே
அப்போதம்மருந்தி அகப்பட்டதையவனுக்கு

வசனம்.

பாலகன் இந்த மருந்தைப்பார்த்து இந்நாட்டுநிதன்னிலே நான் நமது தாயார் இருப்பது அந்தக்கோட்டை சுற்றிலும்தான் நமது தந்தையார் அதமாய்விட்டது என்றுச் சொல்லிக்கொண்டு வருக அந்த எல்லைமீது பக்ஷிராஜர்த்தியை காவல் வைத்திருக்கிறான் எனென்றால் யாரானாலும் பகைவர் கோட்டைமீது வந்தால் அவர்களை கொல்லும்படி திட்டஞ்செய்து வைத்தான் இப்படிருக்க அந்தப்பாலகன்

வருவதைக்கண்டு ஆ-டு நாமெப்போது இப்படிக்கொத்த ரூபவந்தனைப் பார்த்தது கிடையாது நாம் இந்த கோரவேஷத்துடன் போனால் நம்மைக்கண்டு பயமடைந்து சாகுவான் அப்படிச்செத்தவனைத் தின்றால் ருசிகரமாயிருக்காது என்று மாறுவேஷம் போட்டுக் கொண்டு போய் அவனை பிரமையுடன் காமவெறியூட்டிய முழுங்கினால் எம்மனம் சந்தோஷமிக்குமென்று எண்ணமிட்டு மோகினிரூபந்தரித்து சில்லெனக்கொண்டைப்போட்டு இடது கையில் தாம்பூலம்பிடித்து புன்னகை நகைத்துக்கொண்டே அந்தபால்யனெதிராக தலைகுனிந்து நடந்து வந்தாள் அச்சமயம் பாலகன் பார்த்து யாரென்று கேட்க அய்யா? நாங்கள் தப்பி மந்தமாய் இந்த மார்க்கமாய் வருகிற இக்கானகத்தில் இரா நின்ற செடியின் ஷேமிப்பிரசவித்தேன் உங்கள் கடாக்ஷத்தால் ஆண்புருஷன் ஜனித்தான் அந்தப்புதல்வனுக்கு எங்களைப்போல எங்களிடம் முத்தைக்காக்க கிடையாதப்படியால் ஓர் மகாப்பிரபு கேற்றபதினம் நாழிக்காக தந்தார் அதை செலவழித்து விட இந்த வேலைக்கு ஏதும் கிடையாதப்படியால் விசனமடைந்திருக்க பகவான் உம்மைக்காட்டினார் ஆகையால் யோசியாம் கேட்கலாமென்று வருகலானேன் என்றுச்சொல்ல இதைக்கேட்டப் பாலகன்,



காளி பாலவர்த்திவேந்தனை மோகிப்பது.

எல்லையிலிருக்குமெனக்கு ஸரியல்லவோடி.
இதற்குமுந்திநான் உன்னைவதைபெண்ணே



இப்போதுநீதான் யில்வேஷமெடுப்பதேதண்டி
அப்போதுபாலகன் அன்பாய்த்திருவினான்
சக்தியைக்கண்டு சத்தியும்நடுங்கினாள்
அய்யாவே அய்யாவே அன்புள்ளவேந்தனே
உன்னைத்தின்பதற்கு வகைதானேவந்தேன்நான்
இப்போவுன்னைக்காணப் பிடிவிழுந்தது என்மனதில்
இந்தச்சமயத்தில் இச்சைக்கொண்டேனுன்மீது
மோகத்தைத்தீர்த்துவிட்டு முகந்தீர்போகுவீர்
இந்தமொழிக்கேட்டான் இன்பமாய்பாலகனும்
சின்னம்சிறுப்பிள்ளை சித்தம்வைத்தாயென்மீது
காயைத்தின்றால் கனிருசிக்கொள்ளுமோதான்
உனக்குவேண்டியிம்மோகம் வருதியாய்கொண்டாய்நீ
இப்படிச்சொல்வது பிறருனக்குபுத்தியல்ல
ஆரமாய்போடி ஆர்மதிகொண்டவளே
இப்படிச்சொல்லவே இதுகேட்டாள்சக்தியும்
ஐயாவேயெந்தனை யன்புடன்சேர்ந்திட்டால்
உன்தாயாரிடைக்க தருந்தமார்க்கம்காட்டுவேன்
பாதகியானமே பக்குவமறியாதவன்
மாதருடநடிப்பது மங்கையேநானறியேன்
இப்படிக்கொத்தவனை இச்சிக்கலாகுமடி
இதுகளைக்கேட்டாளே இன்பமாய்சத்தியும்
ஆனால்நீர்கேளுமே அன்புடனென்வார்த்தை
என்பலத்தையுந்தனுக்கு இப்போதுயான்தாரேன்
இப்படிச்சொல்லி இசைந்துபலந்தான்கொடுத்து
பாலகனோடுயப்போ பலக்கிரீடைதான்புரிந்தாள்
அந்தமோகத்தாலே அவள்கைப்பிரயப்படுத்தாள்
அந்தச்சமயத்தில் அறிவுபெற்றபாலகன்
என்னடிபராசத்தி யென்தாயார்கிடைக்குமார்க்கம்
இப்போவேசொல்லடி யின்பமாயெந்தனுக்கு
அய்யாவேந்தனே அன்புடனேநீகேளும்
நாகள்ளபுடிகரைக்கு நயந்துநீபோகுவீர்
அந்தக்கரைதன்னில் அன்பாகயிருக்கப்பட்ட
வணிகக்கிழவியொருத்தி வாழ்கிறாள்யங்குதான்
அந்தநல்லக்கிழவி அன்புடனேபக்கிரிக்கு
புஷ்பங்கள்கட்டி புகழுடன்வசிக்கிறாள்

அந்தப்பக்கிரி அந்தநல்லபாலகற்கு
தம்பள்ளக்கிழவியென நாவுமேபேருமிட்டாள்
அவள்-ஞாதியிலேவணிகர்சி ஜெகமெங்குமறிந்தவள்
அந்தக்கிழவிவீட்டை அன்பாகவேதேடி
அங்குதான்சென்று அறிவுள்ளவேந்தனே
தாகத்துக்குக்கேட்டால் தயவுடனேதந்தவள்
எந்தவூரென்று இன்பமாயவள்கேழ்ப்பாள்
மேற்குசீமையென்று மேன்மையாய்சொல்லும்
வீட்டின்பேர்தந்தைபெயர் வேகமாயவள்கேழ்ப்பாள்
அப்போதுநீதான் அன்பாகச்சொல்லுமே
எந்தன்தந்தைபெயர் தம்பள்ளசரடையா
எந்தன்தாயார்பெயர் தம்பள்ளநாகம்மாள்
எந்தன்வீட்டின்பெயர் தம்பள்ளகுலமென்பாய்
எந்தனுடையபெயர் வீரையனென்றுமே
இப்படிக்குநாக அப்போதுநீசொன்னால்
உன்னைப்பெற்றதாயார் உங்கள்துமேயகப்படுவாள்
பக்கிரிக்குநீதான் பகையாளியாகுவாய்
உந்தன்தாயாரை இன்பமாய்கொண்டுவருவாய்
இப்படிச்சொல்லவே இசைந்துமேபாலகன்
நல்லதுயென்றுசொல்லி நடந்தானேயப்போது
நாகள்ளப்பூடி நலக்கரைவந்துசேர்ந்தான்
தம்பள்ளவீட்டை தானுமேகேட்டுக்கொண்டு
அப்போதுபாலகன் அந்தவீட்டிற்குவந்து



பாலவர்த்திவேந்தன் நாகள்ளபூடியில் இராநின்ற புஷ்ப வணிகர்சி வீட்டிற்குப் போவது.



வசனம்.

ஆரம்மா இந்தவீட்டினில் என்றுக்கேட்டவுடன் அக்கிழவி ஓடிவந்து நீயாரென்று கேழ்க்க அதற்கு பாலகன் அம்மா ஆராகிலுமென்ன கொஞ்சம் குடிப்பதற்கு ஜலந்தாருமம்மா என்றுக்கேட்டவுடனே அம்மாது அதுபோல் தாகங்கொடுக்க அதைக்குடித்தப்பிறகு கிழவியானவள் இப்பாலகனைப் பார்த்து அப்பா நீ என்னூரென்றுகேட்க அதற்கு பாலகன் அம்மா எனது மேற்குராஜ்யம் எனது வீட்டின்பெயர் தம்பள்ளகுலம் என்றுச்சொல்லவே இதைக்கேட்ட கிழவி ஆச்சரியமுற்று அப்பா பாலகனே உனது தாய் தந்தை பெயரென்ன உன் பெயரென்ன தெரியச்சொல்லுமென்று கேட்க அப்போது பாலகன் அம்மா பாட்டி என்தந்தை பெயர் சரடையன் என் தாய்பெயர் நாகம்மா என்பெயர் வீரையன் என்றுச்சொன்னவுடனே,

எந்தன்மகள்புதல்வன் இவனுகுமென்றுசொல்லி
சந்தோஷந்தானடைந்து சிறப்புடன்வோடிவந்து
பாலகனையப்போ பக்ஷமாயெடுத்துக்கொண்டு
உச்சிமுகர்ந்து உள்ளங்கால்முத்தமிட்டு
சந்தோஷமடைய சம்பிரமாய்பன்னாட்டில்
அண்டையயலில் அண்டாகயிருப்பவர்கள்
எல்லோரும்வந்து இன்பமாயிவனைப்பார்த்து
ஆரம்மாயிவன் அன்பாகசொல்லுமென்றார்
அப்போதுக்கிழவி அவருக்குரைத்தாளே
எந்தன்புதல்விகுமாரன் இவனுகும்மம்மாமாரே
இப்படிச்சொல்லி அப்போதுபக்கிழவி
பாலகனைப்பார்த்து பண்புடன்கேழ்க்கலுற்றாள்
இத்தனைநாளாக எங்கிருந்தாய்பாலகனே
உன்தாய்தந்தைமார்கள் சிறப்புடனிருக்கிறார
இந்தமொழிக்கேட்டு அப்போதுபாலகனும்
அம்மாடியம்மாடி அன்புள்ளபாட்டியாரே
என்தாய்தந்தைமார்கள் சம்பிரமாய்மாண்டுவிட்டார்
இப்படிச்சொல்லவே இதுகேட்டுக்கிழவிதான்
குய்யோமுறையோவென கூச்சலிட்டழுதாளே

வசனம்.

இப்படிக்கிழவி அங்கு யிருப்பவர்களுக்கு எல்லாம் அம்மா என் புதல்விபெயர் நாகம்மாள் தான் என்மருமகன் பெயர் சரடையன் தான் அவளுக்கு ஒரே புதல்வன்தான் அவன்பெயர் வீரையன் முந்தி இங்



பாலவர்த்திவேந்தனை நாகள்ள பூடியிலிருக்கும் ஜனங்கள்வந்து பார்ப்பது.

குறிஜைப்பில்லாதப்படியால் மேற்கு சீமைபோய் விட்டார் ஆகையால் இவன் எங்கேபோய் இதல்வர் என்றுச்சொல்லிவிட்டு அடா பாலகா நீ எங்குபோக வந்தாய் என்றுக்கிழவி கேட்க அதற்கு அவ்வேந்தன் அம்மா பாட்டி. தாய் தந்தைமார் இறந்தபிறகு திக்கில்லாதப்படியால் எதாகிலும் இராஜ்யம் சென்று பிழைப்போம் என்று எண்ணமிட்டேன் பிறகு நான் சின்னவனாய் இருக்கும்போது என் தாய் தந்தைமார் இந் நாட்டில் எனது பாட்டி இருப்பதாய் சொல்லி இருந்தார் அம்மொழி ஞாபகம் வந்து நாடெங்கும் கேட்டுக்கொண்டு உன்னருகில் இருக்க லாமென்று இத்தனை தூரம் வரலானேன் என்றுச்சொல்ல இதைக் கேட்டக்கிழவி அடா கண்மணியே எனக்கும் ஆருமில்லை திக்கில்லா தப்படியால் தான் நான் இந்த பக்கிரிக்கு புஷ்பமாலைகள் கட்டிக்கொடு ப்பதாய் சம்மதமடைந்து இருக்க யவன் நித்தியமும் அரைப்படிசோ ளம் தருகின்றான் அதுவொருவேளைக்கு வருவது கஷ்டமாயிருக்கிற தென்றுச்சொல்லி நல்லது நீயென்றும் போகவேண்டாம் இங்குதானே இருப்பாய் யெனச்செப்பி நிறுத்திக்கொண்டாள் இப்படி மூன்றுநாள் சென்றபிறகு நாலாந்தினத்தில் அப்பாலகன் அக்கிழவியைப் பார் த்து அடிப்பாட்டி நீ கட்டும்படியான புஷ்பஹாரத்தை யான் கட் டுவேன் என்றுச்சொல்ல இதைக்கேட்டு அடா செல்வமே உனக்குத் தெரியுமா யென்றுக்கேட்க அதற்கு அப்பாலகன் அடிப்பாட்டி இத் தனை நாளாக நாங்கள் இந்தப்புஷ்பம் கட்டியல்லவா பிழைத்தோம் என்றுச்சொல்லவே,



உன்கையாலானால் கட்டுமென்றுதான்கொடுத்தாள்.
அப்போதுபாலகன் அன்பாகபுஷ்பங்களை
யோராகவொட்டிக்கொண்டு பெருமையாய்தானமர்ந்து
அப்போபக்கிரிக்கு அன்பாககட்டலானான்
மல்லிமொக்குமாலை மகிழ்ந்துமேகட்டினான்
புஷ்பத்தாலங்கி புகழ்ந்துமேகட்டினான்
பாரிஜாதகட்டில் பகர்ந்தானேபுஷ்பத்தால்
அளவுசரியாக அந்தக்கட்டில்செய்தானே
வேரேகயரெடுத்தான் வேகமாய்பாலகனும்
தன்னைப்பெற்றதாயிக்கு தானுமேயப்போது
ஒண்டிமாலைதான் வேகமாய்கட்டினான்
அந்தமாலைதன்னில் அன்பாகமோதிரம்
கழட்டியேவைத்து கடுகவேமாலைகட்டி
அம்மாடியம்மாடி அன்புள்ளபாட்டியாரே
இந்தபுஷ்பஆரம் இன்பமாநீயெடுத்து
பக்கிரிதனக்கு பக்குவமாய்கொடுப்பாயே
இந்தபுஷ்பஆரம் பாலநாகம்மாளுக்கு
இப்படிகொடுமென்று ரெண்டாய்பிரித்துதந்தான்
அந்தக்கிழவியும் அன்புடனே ஆரங்களை
கையில்பிடித்துக்கொண்டு கடுகநடந்துவந்தாள்
பக்கிரியெதிரில்வந்து பகுர்ந்த ஆரம்தான்கொடுத்தாள்
அந்தஆரங்களை அப்போதுபார்த்தானே

வசனம்.

அரே தம்பள்ளக்கிழவி இத்தனைநாளாக இந்தவேலை எங்கேவை த்திருந்தாய் இந்த புஷ்ப ஆரத்தின் விநோதத்தை நான் என்னவென் றுச் சொல்லுவேன் அரேக்கிழவி இதையார் கட்டியது என்றுக்கேட்க ஐயா எனது மகளுடைய குமாரன் கட்டினானையா யென்றுச்சொல்ல இதைகேட்டப் பக்கிரி அவன் எப்போவந்தான் ஐயா மூன்றுதினமாச் சு அதுசரிதான் இன்றைக்காகிலும் நாளைபதினம் அதிகசம்பிரமாய் இரு க்கட்டும் அந்த பையன் அதிகவேலைக்காரன் அவனைநன்றாய் காப்பா ற்றுவாய் என்றுச்சொல்ல இதைக்கேட்டக்கிழவி ஐயா நீர்கொடுப்பது அரைப்படி சோளம் அதுயெனக்கு ஒருவேளைக்கு வருவது மகா கஷ் டமாயிருக்கிறது அவனுக்கு எப்படி யான் போஷிப்பது நீங்கள் எதாகிலும்கொடுத்தால் காப்பாற்றுகிறேன் என்றுச்சொல்லவே இதை க்கேட்டப்பக்கிரி அக்கிழவியை அழைத்துக்கொண்டுபோய் உக்கிரா

வைவிட்டைந் திறந்து இரண்டுகரிசை அரிசியும் இந்துமாக்கால் பருப்பும் நாலுமாகைக்கு புளியும் மூன்றுமாகைக்கு மிளகாயும் ஒருசிந்தை செய்யும் கொடுத்து பாலகனை காப்பாற்றப்படி. இட்டஞ்செய்தவப்பி றன் அதைப்பெற்றுக்கொண்டு சந்தோஷமாய் பாலநாகம்மாள் மேடைக்கு வந்து அம்மா நுக்கு கொடுக்கவேண்டிய புஷ்ப ஆரத்தை கொடுக்க அந்த மாலைதனைப்பார்த்து அம்மா பாட்டி நான் சாந்த வேஷமாயிருக்கின்றேனே அந்த வேஷத்திற்கு தகுந்தபடி மாலை கொண்டுவந்து கொடுத்தாய் ஆனால் இதுவெனக்கு வேண்டாம் என் அழகு யார் பார்க்கப்போகுறார் என்றுசொல்லி அந்தமாலைதனை தரையிலே விட்டு அடித்தாள் அந்த மத்தியத்தில் அந்த தம்பள்ளக்கிழவி மோசி சங்கடம் அந்தக்கன்னிகை பார்த்தவுடனே;



பாலநாகம்மாளுக்கு தம்பள்ளக்கிழவி பூமாலைக்கொடுப்பது

இந்தன்பாவத்தில் பாலமப்போபோங்கியது
அப்போமகனே அருமையுள்ள கண்மணியே
நான்பெற்றசெல்வமே நயபாலகர்த்திலேவந்தா
என்குமாரன்தங்கமோ இம் இங்குவரக்காரியமென்ன
பார்க்கஉன்கூசுதே பாலன்னேமோ இருந்தது
எப்படிவந்தாய் பெண்புதல்வன்மோ இரமே
பாலகன்வாராமல் பார்க்கமோ இராஜப்பிராசேரு
நீயேன்வந்தாய்பாலகா இந்தபாவிசாட்டிற்கு
பாவிச்சண்டாளன் பிடிப்பாவிபக்கிரிதான்
உன்தந்தைதனை மோசம்பண்ணிசெய்தானே



இப்படிச்சொல்லி யிசைந்து துக்கங்கொண்டாளே
அந்தமோதிரத்தை அன்பாகயெடுத்துக்கொண்டு
மவுனமாயிருந்தாளே மங்கையுமப்போது
இந்தக்கிழவியும் யிசைந்துதன்விடுவந்து
பாலகனைப்பார்த்து பக்குவமாய்சொல்லலானாள்
உந்தன்கைமாலைதனை யுகந்துபார்த்துபக்கிரி
சந்தோஷப்பட்டு சரிபரிப்புபரிசுதந்தான்
இன்னம்மாலைகள் விந்தையாகநீகட்டுவாய்
மாலைதனைப்பார்த்து மகிழ்ந்துபரிசுதருவான்
அந்தச்சமயத்தில் அந்தநல்லபாலகனும்
புஷ்பங்கள்கொட்டிக்கொண்டு புகழுடனேகையரெடுத்து

வசனம்.

இப்படியாக பாலகன் அநேகவிதமாகிய புஷ்பங்கள் எதிரில்கொட்டிக்கொண்டு ஒருபடுக்கு வெண்மைபுஷ்பமும் ஒருபடுக்கு கருப்புபுஷ்பமும் ஒருபடுக்கு செகப்புபுஷ்பமும் குச்சுகள்கட்டி விந்தையான அங்கிசெய்து அந்த தம்பள்ளக் கிழவியைப்பார்த்து ஓ? பாட்டி நீ இந்த புஷ்ப ஆரமெடுத்துத் தொண்டுபோய் பக்கிரிக்கு கொடுமென்றுச் சொல்ல அம்மொழிக்கேட்டு அக்கிழவி சந்தோஷமடைந்து புஷ்பயங்கியை எடுத்துக்கொண்டுபோய் பக்கிரிக்குகொடுக்க இந்தயங்கியைப் பார்த்து பக்கிரி அதிக சந்தோஷமடைந்து அடிக்கிழவி நேற்றுக்காகிலும் இன்றைக்கு அதிக விந்தையாயிருக்கிறது அவனே மகாவேலை தெரிந்தவன் அவனை நன்றாய் காப்பாற்றுவாயென்றுச் சொல்லி அந்தக் கிழவியைப்பார்த்து நேற்றியதினம் தந்தது ஆகிவிட்டதாயென்று கேட்க அதற்கு அந்தக்கிழவி ஐயா அவன் சாதமென்று அதிக ஆவலடைந்தான் ஆகையால் ஆகிவிட்டது யென்றுச்சொல்ல மறுபடியும் முந்திபோலவே கொடுத்து அனுப்பினான் இதில்லாமல் அவனைநான் பார்க்கவேண்டும் நாளைதினம் அழைத்துவருவாய் என்றுச்சொல்ல அதற்குசம்மதித்து அக்கிழவி தனதுவீட்டிற்கு வந்தாள் வந்தவுடனே பாலகனைப் பார்த்து அடா விரையா இன்றைக்கு வெகு மேன்மையாக மாலைகள் கட்டுவாய் என்றுச் செப்பியவுடன் அதுபோல் பாலகன் வெகு விந்தையாக மாலைகள் கட்டிக்கிழவிகையில் கொடுத்தான் கொடுத்த மாத்திரத்தில்,

உன்னையழைத்துக்கொண்டு வுகந்துவரச்சொன்னான்
இந்தமொழிக்கேட்டு வுறுச்சொன்னான்பாலகனும்
நான்யேண்டிபாட்டி நலமாகநீபோடி
இப்படிச்சொல்ல யிதுகேட்டாளக்கிழவி
அப்பா உன்னையவன்பார்க்க அழைத்துவரச்சொன்னான்
இந்தமொழிநான் நிஜமென்னுவாய்
இந்தமொழியை பாலகன்கேட்டுமே

ஆனால்முந்திடைவாய் அன்புடன்மருதுக்கே
இப்படிச்சொல்லி இரண்டுபேர்நடந்தாரே
பக்கிரியிருக்கப்பட்ட மருதிக்குவந்தாரே.
அப்போதுபக்கிரியும் அன்புடனேபக்கிரிக்கு
கொண்டுவந்தமாலை கொப்பனவேதான்கொடுத்தான்.
மாலைதனைப்பார்த்து மகிழ்ந்துமேபக்கிரி
சந்தோஷம்தானடைந்து சம்பிரமாய்சொல்லலானார்
எங்கிருந்தான்போன் எந்தனுக்குகாட்டடி.
இப்படிச்சொல்லவே அப்போதுபக்கிரியும்
அந்தப்பாலகனை அப்போயெதிரில்நிறுத்தினாள்
அந்தநல்லப்பாலகனை கண்ணாலேபார்த்தானே
அரே-இளங்குமாரனைப்போல இவனுமேயிருக்கிறான்
உந்தன்பேரப்புதல்வன் இவன்தானோசொல்லடி.
எந்தன்பேரப்புதல்வன் இவதன்நிலைவருமுன்னேடா

வசனம்.

ஓ! பக்கிரி இவன் உனது பேரப்புதல்வன் நிசமாயென்று கேழ்க்க அதற்கு அக்கிழவி ஐயா இந்த ஊர்தன்னிலிருக்கும் நார்க்கிசாக்ஷியாய் இவன் எனதுபுதல்வியுடையபுதல்வன் என்றுச்சொல்ல இதைக்கேட்ட பக்கிரி அடிக்கிழவி உன்புதல்வி இருக்கின்றாளா ஐயா என்புதல்வி இறந்துபோய்விட்டாள் என்றுச்சொல்ல இதைக்கேட்டப் பக்கிரி அரேயல்லா அரேயல்லா உன்மகள் குமாரன் இந்தவயதாயிருக்க அம்மாது யெப்படிருப்பாள் அவளையும் சிறையெடுப்பேன் அல்லவா உன்மருமகனும் அந்த வம்சத்தாரும் நாசமடைந்து விட்டாரா எனக்கேட்டு அப்பாலகனைப் பார்த்து அடாப்பாலகா உனதுவீட்டின் பெயரென்னவென்று கேழ்க்க அதற்குப்பாலகன் ஐயா எங்கள்வீட்டின் பெயர் தப்பள்ளகுலத்தார் என் தந்தைபெயர் சாமப்பா தாய்பெயர் நாகம்மா என்பெயர் வீரய்யா என்றுச்சொல்ல இதைக்கேட்டு சந்தோஷமடைந்து அடாப்பாலகா உனக்கு குதிரைகள் யானைகள் இராஜியங்கள் வேண்டுமா என்றுக்கேட்க அதற்குபாலகன் ஐயா இதுவெல்லாம் எங்களுக்கேன் நான் அனுபவிக்கப்பட்ட பங்காளியா ஆனால் உனது பனிரெண்டுவருடம்தாலிகட்டியமக்காமருதி இருக்கிறது அந்தமருதியில் வெள்ளையானையும் தங்கநிரைகளும் சிங்காரப் புறாக்களும்கல்லால் செதுக்கி இருப்பதைப்பார்க்க ஆவலடைந்தேன் உத்திரவு தருவீரானால்பார்த்து வருகிறேனென்றுச்சொல்ல அதற்கு பக்கிரிசொன்னது அடாபாலகா அதைப்பார்ப்பதால் என்னவருகிறது இராஜ்யமானவேண்டும் சாதம் இன்னவேண்டும் என்றுச்சொல்ல இதைக்கேட்டு ஓ பக்கிரி யான் சிறுவன் அதைப்பார்க்க ஆவலடைந்தேன் என்றுச்சொல்ல இதைக்கேட்டு அடாப்பாலகா அங்குபோவதற்கு சாத்தியப்படமாட்டாது என்றுச்சொல்ல அதுயேனப்பா என்றுக்கேட்க அப்பா பாலகா மேற்கேயிருக்கும் பானுகண்டி பட்டணத்தில் இருந்து பாலநாகுயெ



ன்ற ஓர்மாதை சிறைக்கொண்டு வந்தேன் அந்தமருதியில் இருத்தினேன் அம்மாது பனிரெண்டு வருடம் நோம்பியென்று சாதித்தாள் நான் அருகில்போனால் பயமடைகுறாள் அவளுக்குமெனக்கும் இனி மூன்றுவருட காலமிருக்கிறது அதுவரைக்கும் அங்குபோவதற்கு தாமல்லவென்றுச்சொல்ல அப்பாலகன் ஓ பக்கிரியே நீரனுமதித்தால் யான் சென்று பார்த்து வருகிறேன் எனச்செப்ப இதைக்கேட்டு அடா போவதற்கு நலமல்ல எப்படியென்றால் மந்திரசாவிகள் பூட்டியிருக்கின்றேன் எனச்சொல்ல ஓ! பக்கிரி நாளையதினம் இன்னம் தமாஷாக மாலைகட்டித் தருகிறேன் எனக்கு இதுவெல்லாம் நீர்வந்துகாட்டுமையா எனச்சொல்ல அதற்கு பக்கிரி அடாபாலகனே அதற்கு ஒரு மொழியிருக்கிறது அதைச்சொல்லுகிறேன் அதை ஞாபகம் வைத்துக் கொள்வாயென்று சொல்லத்தொடர்ந்தான் அப்பா கோட்டையருகில் சென்று ஓம்மஹம்களி (ஙவீ) யென்றுச்சொன்னால் கதவுதிறந்துவிடும் உட்பிரவேசித்து வேடிக்கை பார்த்துவிட்டு மறுபடியும் வரும்போது (கியாரே அஸ்திகேடோரே) என்றுசசொன்னால் கதவுகள் மூடிக்கொள்ளும் நீசென்று ஒருமணிநேரத்தில் வரவேண்டுமென்றுச் சொல்லியனுப்ப அதுபோல் பாலகன் சம்மதித்து கோட்டைக்குவந்து ஓம் காளிஹ்ரீம் (ஙவீ) என்றவுடன் கதவுகள் திறந்துக்கொண்டது உடனே பாலகன் மருதிக்குள் சென்றான்.

மருதிக்குச்சென்றான் மகிழுடன்பாலகன்
தாயானநாகம்மாளை தானுமேபார்த்தானே
தலையைக்குனிந்துக்கொண்டு தானுமமர்ந்திருந்தாள்
அப்போதுபாலகன் யருகினில்போகையிலே
மணிதாயடிகள் மகிழ்ந்துமேகேட்டானே
தலையெடுத்துப்பார்த்தாள் யப்போதுநாகம்மாள்
அருகினில்வாராதடா அறிவுக்கெட்டபக்கிரியே
உன்-சிரசுவுடையும் சிறப்புடன்சாபமிடுவேன்
இந்தமொழிகளை பாலகன்கேட்டானே
மாயபக்கிரி நானல்லயம்மாடி
உன்னுடையபாலகன் யுத்தமியோனுந்தான்
என்னுடையபெயர்தான் இபல்பாலவர்த்திவேந்தன்
இப்படியுஞ்சொல்லியும் யம்மொழிநம்பவில்லை
நிமிஷத்திற்குநிமிஷம் நிகழ்வேடம்போடுவான்
உனதுமாயைகளெந்தனுக்குதெரியும்போடா
கொஞ்சமாகிலும் கொப்பனவேநம்பவில்லை
எப்படிச்சொன்னாலும் யெம்மொழிநம்பவில்லை
அப்போதுபாலகன் அன்புடனேயதுசெய்தான்
யெத்தனைச்சொன்னாலும் யென்மொழிகேழ்க்கவில்லை
ஆகாசவாணி நீயாகிலும்சொல்லுவாய்
பூமிதேவித்தாயே நீயாகிலும்சொல்லுவாய்

கைலாசபதியே நீயாகிலுஞ்சொல்லுவாய்
பார்வதிதேவியே நீயாகிலுஞ்சொல்லுவாய்

வசனம்.

இந்தப்பாலகன் இப்படித் துயரமடையுஞ் சமயத்தில் பார்வதி பரமசிவன் இஷபவாகனரூடராய் வந்துநின்று ஸ்ரீ பாலநாகம்மாளைப் பார்த்து ஓ அம்மணி இவன் உனதுகெர்ப்பத்தில ஜனித்தவன் நிசத யம் நீ ஏழுதினத்தில் விட்டுவந்தப்படியே அவன் பெரியதாய்மார்கள் இதுவரைக்கும் வளர்த்துவந்தார். இப்போது உன்னை பார்க்கவந்தப் படியால் அவனைக் கண்டுபார்த்து நலமொழி கூறலாகாதாவென் றுச்சொல்ல இம்மொழிகேட்டு நாகம்மாள்.

நலமெடுத்துப்பார்த்தாள் தன்மையுடன்பாலகனை
ஸ்நானபானத்தில் தனிபாலிபொங்கியது
அப்போகுமாரா அறிவுள்ளமென்புதல்வா
வாடாவென்றுச்சொல்லி வகையுடனெடுத்துக்கொண்டு
உச்சிமுகந்து யுள்ளங்காலேமுத்தமிட்டு
இடுப்பிலெடுத்துக்கொண்டு இசைத்துமேதான்பார்த்து
எந்தன்தவப்பாலகனை பெய்வந்தாயிருமேதான்
உந்தன்தந்தைமார்கள் புதைத்துமுழுக்கிவிட்டாரோ
தாயெல்லாதேதான் தனிபார்க்கவந்தாயோடா
உந்தனுக்குபாலும் புகந்ததாயாரல்லவே
உந்தன்மகன்சொல்லே உகந்தயார்தான்கேட்டாரோ
இன்பமாயுன்னை யெடுத்துவளர்த்தாரையா
அவரேயுனக்குத்தாய்மார் அறிந்துநீகொள்ளடா
நீயென்பிறந்துவந்தாய் நான்பெற்றசெல்வமே
பாவிசண்டாளன் பாம்பேலாடுபக்கிரி
மந்திரக்காறன் மாயக்காரவிவன்
மனிதரைக்கண்டால் மேல்க்கல்லாக்குவான்
நமதுபதிரெண்டாயிரம் நலமுள்ளசேனைகளை
கல்லாகச்செய்துமே கடுகவிட்டான்பாதகன்.
உன்னையுமிப்போது உகந்துகொல்லுவான்பாதகன்
சீக்கிரம்நீபோவாய் செல்வகுமாரனே
எனதாய்மேபாக்காமார் அன்புடன்வளர்த்தாரே
அவருக்குநீதான் ஆஸ்தானபுதல்வன்தான்
ஆசையாய்வளர்த்தாரே அவரைவிட்டுவரலாமா
செல்வமேநீபோடா சிறப்புடனிந்தவேளை

வசனம்.

இப்படி தாயார் சொன்னமொழிகேட்டு அம்மா உன்னுடன் பேசுவதற்கு காலமல்ல என்னைபக்கிரி மணிநேரத்துக்கெல்லாம் வரச் சொன்னான் ஆகையால் யான் சீக்கிரம்போகிறேன் ஆனால் நாளையதின



த்தில் பக்கிரி புஷ்பவனத்திற்கு ஷிகாரிபோகுவான் அவன்மறுபடியும் வீட்டிற்கு வருவதற்குள்ளாக அவனிருக்கும் மருதியெல்லாம் மொழு கி அவன்புசிக்கும் சாப்பாடு தயார்செய்குவாய் அதையெல்லாமவன் புசித்து சந்தோஷமாய் உட்காருஞ்சமயத்தில் யான்விந்தையானமாலை கள் கட்டி அனுப்புகிறேன் அதைப்பார்த்து சந்தோஷமடைகுவான் அந்தச்சமயத்தில் எனது தந்தையிடம் நீயெப்படி சந்தோஷமடைகு வாயோ அப்படி சந்தோஷமொழியாடி அவன் எறாகவந்து நிற்க அவன் உன்னைப்பார்த்து என்னடிபாலநாகு இன்றைக்குவெகுசந்தோ ஷமடைந்தாய் என்றுக்கேட்பான் அதற்கு நீ ஓ! பக்கிரி எனது பனி ரெண்டுவருட நோம்புதீர்ந்தது இனி ஒன்பதுதினமிருக்கிறது ஆகை யால் சந்தோஷமடைகுறேன் அப்போது அவன் சந்தோஷமாயிருப் பான் அச்சமயத்தில் ஐயா நான் இப்படிருக்க உனது உயிர் நிலையை எனக்குச் சொல்லாமல் இருப்பது நலமாகுமா என்றுகேளும் அதற்கு அவன் உனது உயிர்நிலைசொல்லும்படி கேட்ப்பான் அப்போது ஐயா எனது உயிர்நிலையானது பா[illegible]த்திற்கு மேறகு பாகத் திலிருக்கும் ஆலமரத்தில் பனிரெண்டாவது கிளைவெட்டினால் நான் மரணமடைகுவேன் என்றுச்சொல்லும் அவன்சந்தோஷமடைகுவான் அந்தக்காலத்தில் நீ அவனுடன் எனக்கு இனியார் ஆதரவு இருக்கிறார் என்று நயனமொழியாடுவீர் அப்போது அவன் சந்தோஷமிட்டு வா யால் ஏதுச்சொல்லுகிறானோ அந்தசங்கதி தம்பள்ளக்கிழவி வீட்டிற் க்கு அனுப்புப்படி சொல்லிவிட்டு கோட்டைக்கு வெளியில் வந்து (பொரே அஸ்திகேட்டோரே) என்றுச்சொல்ல கதவுகள் மூடிக்கொண் டது அந்தச்சமயத்தில் பாலகன் மருதிவிட்டு வரும்பரியந்தரீம் அக்கி ழவியைவிடாமல் நிருத்திவைத்தான் அப்போது அந்தக்கிழவியைப் பார்த்து அடி தம்பள்ளக்கிழவி அப்பாலகன் மகாயுக்திசாலி அதிக ரூபவந்தன் அந்த பாலகனுக்கு நெய்யைவிட்டு வளர்த்துக்கொண்டு வருவாய் என்றுச்சொல்ல அதற்கு அக்கிழவி நான் எதுவைத்து வளர்ப்பது இரண்டுவேளைக்குச் சரியாய் போகிறது இந்தவேளைக்கு எதுங்கிடையாது என்றுச்சொல்ல அப்போதுபக்கிரி அரேகிழவி கொடுக்கிறேன் வாவென்று கிடங்குயருகில் அழைத்துச் சென்று பத்துலக்ஷம்வராகன் கைக்கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண் டிருக்க இதற்குள்ளாக பாலகன் பக்கிரியெதிரில்வருக. அப்பாலகனை ப்பார்த்து இந்த மூன்றுதினத்தில் யேதுபார்த்தாயென்றுக்கேட்க. அய்யாநான் சகலமானவேடிக்கை பார்த்துவிட்டே னென்றுச்சொல்ல பக்கிரி சந்தோஷமடைந்து அப்பா பாலகனே அதிகயழகுடையமாலை

கள் கட்டிக்கொடென்று திட்டஞ்செய்தனுப்ப பாலகன் தன் மனைக்கு வந்துசேர்ந்தான்.

இப்படியிருக்க மறுதினத்தில் பக்கிரி நந்தவனத்திற்குப் போகவே இதையறிந்த பாலநாகம்மாள் அந்த மருதியெல்லாம் மொழிந்து அவனுக்குவேண்டிய வுபசாரங்களைத் தயார்செய்து வைத்திருந்தாள். இவன் வந்தவுடன் வுபசாரங்களை எதிரில்வைத்துச் சந்தோஷமாய் இன்னமிறகு பூவணிகச்சி விந்தையான அந்தப் புஷ்பத்தால் கட்டிக்கொண்டுவருக. அதைப் பூட்டிக்கொண்டு உல்லாசமாயிருக்குஞ் சமயத்தில், இதையறிந்த பாலநாகம்மாள், அவனுக் கெதிரில்வந்து நிற்கவே, இம்மாதைக்கண்டு ஆ! ஆ! பாலநாகு, ஏது இவ்வளவு சந்தோஷமாய்வந்தாயென்றுகேட்க. அதற்கு பாலநாகம்மாள், அய்யா? எனதுநோன்பு தீர்ந்துவிட இனி வொன்பதுதினமிருப்பதால், சந்தோஷமடைந்தேன். ஆனால் யான் உன்னை நம்பியிருந்தால் நலமென்னவென்றுச்சொல்ல. இதைக்கேட்டப்பக்கிரி மாதே உனக்கேதுங் குறை வொன்றுமில்லாமல் வைத்துக்கொண்டிருக்கிறேனே. இதில்லாமல், இந்த நகரத்திலிருப்பதெல்லாம் உன்னுடையதன்றி இனியார் அநுபவிப்பவரென்றுச் சொல்ல. இதைக்கேட்ட நாகம்மாள், இதுகளெல்லாம் பெருமைக்கேன் உன்னைநம்பியிருக்க எவராகிலும் பகையாளி உன்னைக்கொன்றால் ஏதுசெய்வேனென்றுச் சொல்ல. இதைக்கேட்டப் பக்கிரி நகைத்து, அடிமாதே, என்னைக்கொல்ல யெவராலுமுடியும். எப்படியென்றால், ஏழுக்கடல் தாண்டிப்போக. மண்கோட்டையகப்படும் அதின் மத்தியில் ஏழுகோட்டையிருக்கும், அந்தகோட்டைக்குள் ஒன்று வொராமரமும், மூன்றாவ முருங்கைச்செடியும், நாலு பனைமரம், ஐந்தாவ வேப்பமரம், இதுமத்தியில் முந்திரிச்செடியொன்றிருக்கும் அந்தச் செடிக்கிளையில் ஏழுபொக்குப்பானையிருக்கும், அந்தக்கீழுக்கில் தங்ககூண்டு வொன்றிருக்கும். அந்தக்கூண்டில் பஞ்சவர்ணக்கிளி இருக்கும் அந்தக் கிளிகண்டத்தில், எனது பிராணமிருக்கும். அதைக்கொன்றால், யான் சாகுவேன் தவிர இனி ஏதுசெய்தாலும் மரணமில்லை. மாதேயென்றுச்சொல்ல, இதைக்கேட்ட நாகம்மாள் ஐயா இப்போது சந்தோஷமடைந்தேன். இனி வொன்பதுதினம் பொறுப்பீர் உமதிஷ்டம் பூர்த்தியாகிறதென்றுச்சொல்லி மருதிக்குச் சென்றுவிட்டாள்.

அதன்பிறகு, பூவணிகச்சி புஷ்பங்கொண்டுவந்தவுடன் அவளைப் பார்த்து ஓ கிழவி நேற்றயதினங் கட்டிக்கொண்டுவந்த மாலைதனில், இருக்கப்பட்டபுஷ்பம் இந்தவூரென்று கணக்குத்தெரியுமா



யென்றுக்கேட்க. அதற்கு, அக்கிழவி அம்மாயெனக்கேதும் தெரியாதென்றுச்சொல்ல. அப்போது, பாலநாகம்மாள் கிழவியைப்பார்த்து அடிக்கிழவி யான் புஷ்பக்கணக்கு எழுதித்தருகிறேன். அதுபோல் மாலைகளைக்காகக் கட்டிக்கொண்டுவருவாய். ஆனாலிந்தக்கடிதம் பக்கிரி பார்க்கப்போகுதென்றுச்சொல்லி யனுப்ப அதுபோல் கிழவியோடி பாலகனையழைத்து அப்பா இந்தக்கடிதத்திலிருக்கும் கணக்குப்போல் மாலைக்கட்டும்படி திட்டஞ் செய்தாளென்றுஞ்சொல்ல அதைப் பாலகன்வாங்கி தன்னுள்வாசித்து சங்கதியறிந்துகொண்டு அப்படியே ஆகட்டுமென்றுச்சொல்லி மாலைகட்டிவிட்டு மறுநாள் உதியத்துக்குப் பாலகனெழுந்து அம்மாப்பாட்டி யெனதுதந்தை மரணமடையும்போது அடுத்தநாட்டிலிருக்கப்பட்ட கடன்காரர்பத்திரம் என்னிடங் கொடுத்துவிட்டார். நான் வரும்போதுகேட்க இத்தினம் வரும்படி திட்டஞ்செய்தார். ஆகையால், அங்குசென்றால். ஏதாகிலும் காசுவந்தால் நமக்கு நலமல்லவாவென்றுச்சொல்ல அம்மொழிக்குச் சம்மதமடைந்தாள். இதையறிந்த பாலகன் பாட்டி எனக்குக்கொஞ்சம் சாதங் கட்டிக்கொடுமென்றுச்சொல்ல அதுபோல் கிழவிக் கட்டிக்கொடுக்க அதை யெடுத்துக்கொண்டு அனேகமான காடு, வனம், மனுந்திரந்தாண்டி சமுத்திரகரையோரம்வந்து நின்றுக்கொண்டு நாமெப்படி இதைத் தாண்டுவதுயென்று துயரமடைந்து அங்கிருந்த ஆலமரத்தின்கீழ் சயனித்துக்கொண்டான். அச்சமயத்தில், அந்தச் செடிமீது இரண்டு கண்டபேருண்டபக்ஷியின் குஞ்சுகள் இருந்தது. இந்தக் குஞ்சுகளைத் தின்பதற்கு அங்குநாகமானது செடியேறுவதை பாலகன்பார்த்து தன்துசெந்திராயுதத்தால் வெட்டினான். அதில்வோர்சிரசானது இவன்கையில் கடித்தவுடன் விஷமேறி பூமியில்விழுந்து சாவுக்குச்சரியான மூர்ச்சையடைந்தான். இவன் இப்படிவிழ பாலுகண்டிப்பட்டணத்தில் இவன் வைத்துவிட்டுவந்த மல்லிகைச்செடியானது வொணர்ந்துபோய்விட இதைக்கண்ட பெரியதாய்மார்கள் பாலகன் இறந்தானென்று, சோகமடைந்தார். இது இப்படியிருக்க இந்த இரண்டுகுஞ்சுகளும் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்து நாம் நமது தாய் தந்தை இரையெடுத்துவந்தால் இன்றுதப்படிக்கி இருந்து இவரை யெழுப்பும்மார்க்கம் தேடியபிறகு இவர் வந்தக்காரியமும் பூர்த்தி செய்தப்பிறகு நாம் புசிப்பாரியவேண்டுமென்று மனதை திடஞ்செய்துக் கொண்டு இரண்டுகுஞ்சுகளும் இருந்தது.

இப்படியிருக்குஞ் சமயத்தில் அந்த இரண்டு கண்டபேருண்டபக்ஷிகள் ஆகாரமெடுத்துக்கொண்டு கூண்டில்வந்துப்பார்க்க இரண்டு குஞ்சுகளும் சோகமாயிருப்பதறிந்து அப்பா பாலகரே இப்படியிருக்க

க் காரணமேதென்றுகேட்க அதற்கு அந்தக்குஞ்சுகள் பிராணமற்று விழுந்திருக்கு வேந்தரில்லாமல்போனால் நாங்கள் இருவரும்நாகத்திற் கிரையாகுவோம். ஆகையால்நீ உன்றனைப்பெருமையிட்டு அவர்வந் தக்காரிய மென்னவென்று விசாரித்து அந்தகாரியத்தை பூர்த்திசெய் திடவரையில் நாங்கள் இரைதின்னமாட்டோமென்றுசொல்ல, அப் போது அந்த இரண்டுபக்ஷிகளும் பூமியைப்பார்க்கவே நாகம் இரண்டு துண்டமா விழுந்திருப்பதைபார்த்து சந்தோஷத்துடன் சஞ்சீவிமலைக் குப்போய் சஞ்சீவிக்கொண்டுவந்து இப்பாலனுக்குக்காட்ட பாலகன் நித்திரைசெய்தவன்போல் யெழுந்தான். இவனெழுந்தவுடன் பாலனு கண்டபட்டணத்தில் மல்லிகைச்செடி துளிர்பிடித்தது. அப்போது, பெரியதாய்மார்கள் சந்தோஷமடைந்தார். அதன்பிறகு, இந்த இரண் டுபக்ஷிகளும் இப்பாலகனைப்பார்த்து,

உந்தன்பெயரென்ன புகன்றிடுமேசொல்லுமப்பா
இந்தமொழிகேட்டு யினைந்திடுமேபாலகனும்
சொல்லத்தொடங்கினான் சிறப்புடனப்போது
பால்வர்த்திவேந்தன் பக்ஷிகளேயெந்தன்பெயர்
இப்படிச்சொல்லயிதுகேட்டதுபக்ஷிகளும்
ஆனால்பாலகனே யன்புடன்நீயுமேதான்
எங்குதான்போகுறாய் யெங்களுக்குச்சொல்லுமே
அப்போதுபாலகன் யன்புடன்சொல்லலானான்
நான்சஞ்சீவிமலைக்கு சப்பிரமாய்போகவேண்டும்
உனக்குயென்னக்காரியம் உகந்திடுமேயவ்விடத்தில்
இன்பமாய்ச்சொல்லுமே இப்போதெங்களுக்கு

வசனம்.

இந்தப்பக்ஷிகளை பக்கிரி வைத்திருந்தால் நாம் வந்தக்காரியம் பூர்த்தியாகாமல் போகுமென்று அப்பா யெனக்கங்கு காரியமிருக் கிறதென்றுச்சொல்ல அப்போது பக்ஷிகள்,

உன்னையெப்படி புகன்றுக்கொண்டுபோகுவோம்
ஆகாயமார்க்கமாய் க்ஷிப்ரமாய்போகவேண்டும்
போகுஞ்சமயத்தில் விஷக்காற்றுபடிக்குமே
அந்தக்காற்றடித்தால் அப்போநீசாகுவாய்
அப்போவுந்தனை யன்பாய்பிழைக்கசெய்யமாட்டோம்
இப்படிச்சொல்லி இரண்டுபக்ஷியிருந்தது
அப்போதுபாலகன் யன்புடன்பக்ஷியோடு
எப்படிச்செய்தாலும் யிதுவுந்தன்பாரமென்றான்
அந்தமொழிக்கேட்டு யந்தநல்லபக்ஷிகளும்
ஈந்தான்மட்ட யின்பமாய்க்கொண்டுவந்து
மூக்கால்ப்போது மூகந்துதொளைசெய்தது
அந்தத்தொளைதன்னில் யப்பாலகனையிருக்கச்செய்து



ஆண்பக்ஷிபெட்டைகளை அப்போவிரித்தது
பெண்பக்ஷிவேந்தனை பெருமையாய்தூக்கியது
ஆண்பக்ஷிமுதுகினில் அப்போதுவைத்தது
விஷக்காற்றுப்பட வழியேதுமிடாமல்
பெட்டைகளாலே போர்வைகள்செய்தது
சந்தோஷமாக க்ஷிப்ரமாய்பறந்தது
பாலசமுத்திரத்தை யன்புடன்தாண்டியது
ஏழுக்கடலை யின்பமாய்தாண்டியது
சஞ்சீவிமலையருகில் சப்பிரமாயிறங்கியது
பாலகனையப்போது பக்குவமாய்விட்டது
அந்தக்கானகத்தை அப்போதுபார்த்தானே
கோட்டைக்குள்ளாக காட்டையவன்கண்டானே
செந்திராயுதத்தை செப்புடன்கைப்பிடித்தான்

வசனம்.

இப்படியாகச் செந்திராயுதத்தை கைப்பிடித்து அந்தப்பக்கிரி கை தன்னில் என்தாயார் விரதம்கொடுத்தப்படிக்கி இருந்தால் இந்தசெந்தி ராயுதத்தால் இந்தச் செடிகளெல்லாம் வெட்டுக்கு விழுவெண்டியது இல்லாமல்போனால் விழலாகாது என்றுச்சொல்லி வெட்டத்துவங் கினான் அப்போது,

முந்நூறுவேலாம் மரத்தைதான்வெட்டினான்
ஏழுநூறுவேப்ப மரத்தையும்வெட்டினான்
அறுபத்திநான்கு பனமரத்தைவெட்டினான்
முத்திரிச்செடி சுற்றிலுமப்போது
வைதானம்செய்தானே மனமிட்டுப்பாலகன்
முந்நெடுந்து முந்திரிசெடிவெட்டினான்
செடியுங்கீழ்விழவே அக்குடாகளைதெரிந்தது
அந்தப்பக்ஷிகள் அப்போதுகேழ்க்கலாச்சுது

வசனம்.

அப்பா ராஜகுமாரனே அந்தமுந்திரிசெடியை வெட்டி அந்தயடு க்குபானை இருக்குமிடத்தில் போகின்றாய் அந்தயடுக்குப்பானை பக்கிரி யுடையது அவன்வந்தால் உன்னைக் கொன்றுப்போடுவான் என்றுச் சொல்ல அப்போது பாலகன் அப்பாபக்ஷிகளே யாதும் அவனிடம் வேலை செய்துக்கொண்டிருக்கிறேன் அந்தச்சமயத்தில் என்னைப்பார்க்க முடியாது ஆகையால் த்தாது? பாலகா யான்திருவாளுகிவிட்டேன்னடக்கமுடியாது ஆகையால்

இப்போது நீசென்று ஏழுக்கடலுக்கு அப்புறமிருக்கும் தீவிப்பிலேயில் ஏழுகோட்டை இருக்கிறது அந்தக்கோட்டை மத்தியில் முந்திரிச் செடி இருக்கிறது அந்தச்செடியில் ஏழுபிக்குபானை யிருக்கும் பிழுமிக் கில் தங்கக்கூண்டில் பஞ்சவர்ணக்கிளி இருக்கிறது அந்தக்கிளியை கொ ண்டு வரும்படி இட்டஞ்செய்தான் ஆகையால் நான்வந்தேன் என்றுச் சொல்ல இதைக்கேட்டு பக்ஷிகள் நீவந்ததுசரிதான் அவன்சொன்னது சரிதான் நாங்கள் வருவதற்குமுந்தி எனதுபாலருடைய பிராணத்தைக் காப்பாற்றி இந்நேரபடியால் உம்மை யிந்தவுதாரம் சொல்லுகிறோம் இப்போது இந்தச்செடிகளை வெட்டிவிட்டாய் அந்தக்கிளியை எப்படி கொண்டுவருவாய் என்றுக்கேட்க அப்போது பாலகன் சொன்னது இந்தப்பானைகளை உடைத்து கூண்டை கொண்டு வருவேனென அப் போது பக்ஷிகள் இவனைப்பார்த்து அப்பா இதையுடைத்தால் இதில் மந்திரவண்டுக்கள் இருக்கிறது அதுவொன்று யடித்தால் நீசாகுவாய் என்றுச் சொல்ல அதற்குப் பாலகன் எனதுசக்தியால் வெட்டித்தள் ளுவேன் என்றுச்செப்ப அதற்கு அப்பா ஒன்றைவெட்டினால் ஆயிர மாகுமே இதற்கேது செய்குவாம் என்றுச்சொல்ல அதற்கு பாலகன் இடிவிழுந்த மரம்போல் உட்கார்ந்தான்.

இப்படியிருக்க அந்த பக்ஷிகள் குமிலென்று பறந்து காட்டுக்குச் சென்று வயறு நிறைய தீனிதின்றுவிட்டு பாலருக்கு தீனிவெடுத்துக் கொண்டு பாலகன் எதிரில்வந்து பாலகனே வாருமென்று அழைக்க அதற்கு பாலகன் ஐயா யான் கொண்டுவருவதாய் சொல்லிவிட்டு இப் படிபோனால் எதுர்சொல்லுவான் இறந்தாகிலும் இங்குசாவது நலம் உமது பாலகர் எப்படிபசியால் வாடுமோ தெரியாது நீங்கள்போவீ ரெனச்சொல்ல இம்மொழிக்கேட்ட பெண்பக்ஷி தன் கணவனைப்பார் த்து நாயகா நாமும் நமதுபாலகரும் சந்தோஷமுமிட இப்பாலகன் கான கத்தில் துயர்படுவது நீதியாகுமா நீரெப்படியாகிலும் சாதித்து அந்த கிளியை கொடுமென்றுச்சொல்ல அப்போது இப்பாலகனை இருள்குழ் ந்த பொதரில் குந்தவைத்துவிட்டு ஆண்பக்ஷிவேட்டமாய் வந்து,

எட்டிபுதைத்தது அப்போதுபானைகளை
படபடவென்று பானைகள்புடைத்தது
கருத்தவண்டுகள் கர்ஜித்தவந்தது
அந்தகானகமெல்லாம் அடர்ந்துசூழ்ந்துவிட்டது
பெண்பக்ஷிபறந்து பிரட்டைகளாலடித்தது
அந்தவண்டுகள் அநியாமேபோச்சுது
ஆண்பக்ஷிபறந்து அக்கூட்டையப்போது
மூக்கால்கடித்துக்கொண்டு முன்னேபறந்தது



வசனம்.

ஓ! பாலகனே பக்ஷி இப்போ நீ தெரிந்திடுவாய் அவன்வந்தால் உன்னையும் என்னையும் கொன்றுவிடுவான் இந்தக்கிளியை பத்திரத்தி ம்மையென்றுச் சொல்லி அவன்காதிலிருக்கப்பட்ட கடுக்கனை கழட்டி அந்தக்கிளிக்கு இரண்டு காலுக்கும் விலங்குமாட்டிவிட அந்தபக்ஷி க்கு இரண்டுக் காலுக்கும் விலங்கு பூட்டியபடியினால் ஆகிவிட்டது அப்போது,

அதேசமயத்துயிர்க் கிளியை வெளிக்கொண்டுவாரும்
இல்லாவிடிலெந்தகிளி இனைக்கேட்டபோச்சுதோ
கானகக்கொடியில் கண்டுபகப்பட்டதோ
இப்படிபக்ஷி யோசித்துக்கொண்டிருந்தான்

வசனம்.

இப்படியிருக்க அந்தக்கிளியை பாலகன் பிடித்துக்கொண்டு சசன் பொந்திலில் புகுந்துயிருக்க பக்ஷிகள் அந்தப்பொந்துதனை எடுத்துமுந்து இல் வைத்துக்கொண்டு,

ஆகாயவீதியாக அப்போபறந்தது
ஏழுக்கடலை பின்பாயத்தாண்டியது
ஆமைத்தருகில் அப்போயிறங்கியது
பாலகன்அப்போ வெளியிலேவந்தானே
உதயபுரம்சேர்ந்து போகவேமென்றுசொல்ல
அப்போதுபாலகன் பக்ஷிகளைப்பார்த்து
நீங்கள்பின்வருகிறீர் நில்லுமென்வீட்டில்
நாங்கள்சிலநாள் வருகிறோம் உங்களுடன்
இதுகேட்டான்பாலகன் பின்பாயப்போது
வேண்டாமிங்கள் நில்லுங்கள்போகிறேன்
இப்படிச்சொல்லி நடந்தானேபாலகன்
காடுசெடிகள் பதிகமனத்தாண்டினான்
நாகன்பட்டிக்கு நன்மாகவந்துசேர்ந்தான்
தம்பன்னக்கிழவி வீடுவந்துசேர்ந்தானே
பாட்டியேபாட்டி பசிதாகமெடுக்குதே
தாகங்கொடடி தயவுடனிப்போது
இப்படிச்சொல்ல இதுகேட்டாளக்கிழவி
தாகங்கொண்டுவா தயவுடன்பெற்றுக்கொண்டு
தாகங்குடித்தானே தயவுடன்பாலகனும்

எந்தனுடைமேரனே எவ்வடாசெறியென்றால்
அம்மாடியம்மாடி கடக்காரர்செத்தாரே
இக்கிளையாகப்பார்த்து அப்பத்திரங்கிழிந்ததே
இதுகளைக்கேட்டு அழுதாளேயக்கிழவி

வசனம்.

அடிப்பாட்டி நீயேன் அழுகுறாய் எனக்கு ழியெடுக்கிறது சாதம் போடுவாய் இரண்டொன் பொருத்துக்கொண்டிருப்பாய் இந்தக்கோட்டையிலிருக்கும் திரவியமெல்லாம் உனக்கே தருகிறேனென்றுச்சொல்ல இதுகேட்டுக்கிழவி சந்தோஷமடைந்துபோயிப்பிட பாலகன்சாப்பிட்டு நித்திரைச்செய்ய அதின்பிறகு சந்தோஷமடைந்து சூரியன் கிழக்குதிசையில் உதயமானான் இப்பாலகன் எழுந்து பாட்டி எனக்கு பழைதுபோடுவாய் நான் விளையாடபோகவேண்டுமென்றுச் சொல்ல அதுபோல்பழைதுபோடபுசித்துபாலகன்கிளியையெடுத்து அக்களில் வைத்துக்கொண்டு வணிகச்சங்கு வீட்டிற்கு வந்து அம்மாயாள் இந்த செக்குமாட்டை வோட்டுகிறேன் எனக்கு புண்ணாக்கு தருகின்றாயாவென்றுக்கேட்க அதற்குவணிகச்சி சம்மதமடைந்து ஓட்டச்சொன்னாள் பாலகன் ஓட்ட நந்தவனத்திலிருக்கும் பக்கிரி சிக்கிரமென்று சுழன்றான் அப்படிச்சுற்றவே அவன்தள்ளாடிக்கொண்டு வணிகச்சிவீட்டை தேடிவந்தான்.

வணிகச்சங்குவீட்டிற்கு அப்போதுவந்தானே
செக்குபருகினில் சிறப்புடன்வந்தானே
பக்கிரிவருவதை பார்த்தானேபாலகன்
வேகமாய்மாட்டை ஓட்டினானப்போது
அந்தப்பக்கிரி யப்போதுகத்தினான்
வணிகச்சங்குகளை பார்த்தானேபக்கிரியும்
அப்போதுவணிகச்சங்கு அன்புடன்பாலகனை
நிறுத்தடாநிறுத்தடா ஓட்டவேண்டாம்செக்குதான்
பக்கிரிக்காலல் வாய்வுகள்வந்தது
பார்த்தாலிருக்கிறேன் பாலகாநிறுத்தடா
இப்படிச்சொல்லவே அப்போதுபாலகன்
செத்தாலெனக்கென்ன விழுந்தாலெனக்கென்னடி
அந்தச்சமயத்தில் அந்தவல்லபக்கிரி
செக்குபருகினில் சிறப்புடன்வந்தானே



வசனம்.

அயே வணிகச்சங்கு என் தேகமெல்லாம் பாரமாயிருக்குது கை கால்கள் நடக்க விலங்கு பூட்டியதுபோலிருக்கிறது எனது உயிர்தேகத்தை எவரோ கொண்டுவந்ததுபோல் இருக்கிறது என்றுச்சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில் பாலகன் அக்களில் இருந்தகிளியை எடுத்து செக்குமேலே வைத்து ஆட்டிக்கொண்டிருந்தான் அப்போது பக்கிரி பார்த்து,

அப்பாபாலகா அந்தக்கிளியென்னுதடா
உந்தன்கிளிதான் யெந்தன்கையில்வந்ததே
அப்பாபாலகா யிந்தக்கிளியென்னுதல்லவே
பஞ்சவர்ணக்கிளி யெந்தன்கிளியாகுமடா
இப்படிச்சொல்லவே மறுபடி திரும்பினான்
பக்கிரிசுழன்று பாலகாகிளியென்னுதென்றான்

வசனம்.

அப்போது பக்கிரி அயே பாலகா அந்தக்கிளி என்னுடையதென்றுகேட்க ஆனால் உனதானால் உனக்கே தருகின்றேன் அந்த பாலநாகம்மாள் உனக்கு என்னவேண்டுமென்று பாலகன்கேட்க அப்போது பக்கிரி.

எனதுகூத்தியாள் அவளாகுமிப்போது
இதைக்கேட்டுப்பாலகன் அப்போதுகிளியெடுத்து
கழுத்தையமுக்கினான் கடுகவேபக்கிரிக்கு
மூச்சுவாராமல் முழிகள்வெளிவருகிறது
அப்பாபாலகா அந்தக்கிளியைக்கொல்லவேண்டாம்
பாலநாகம்மாள் யெந்தனுக்குத்தாயாகும்

வசனம்.

இப்படிப் பக்கிரிச்சொல்ல இதைக்கேட்டுப் பாலகன் அடா பக்கிரி உந்தனிடம் நல்ல மந்திரமிருக்கிறது அதுயேதென்றால் வாவென்றால்வரும் போவென்றால்போகும் மூன்று நாகு இராக்ஷதபூதங்கள் ஏழுநாலு செகப்புபூதங்கள் இருக்கிறது அதையெனக்குச் சொல்லென்றவுடன் பக்கிரிக்கேட்டு அய்யா அது எனது ஜீவனம் யான் யாருக்கும் சொல்லமாட்டேனென்றவுடன் சொல்லாமல்போனால் இக்கிளியை கொல்லுகிறேன்.

அப்பாபாலகா அக்கிளியைக்கொல்லவேண்டாம்
உனக்குமந்திரங்கள் யுண்மையாய்ச்சொல்லுகிறேன்
மந்திரங்கள் தன்னை மகிழ்ந்துபுதேசஞ்செய்தான்

வசனம்.

இப்படிப்பாலகன் பட்டிதேசமடைந்து மறுபடியும் அடாபக்கிரி உந்தனிடத்தில் லட்டியிருக்கிறது அதை நீ இங்கிருந்து யுத்தஞ்செய்து வாவென்றால் வருகுமாம் அதை எனக்குக் கொடுமென்று கேட்க அப்பா பாலகா அது எனதுபிராணம் எவருக்குங் கொடுக்கமாட்டேனென்றுசொல்ல.

இல்லாமல்போனால் யிக்கிளியைகொல்லுகிறேன்
பாலகாகொல்லாதே பக்ஷமாய்தருகிறேன்
எந்தன்பிராணக்கிளியை யெடுத்தாய்க்காலில்லைத்தாயே
எந்தன்பிராணம்போனால் உனக்கென்னலாபமுண்டு
அந்தலட்டியை யன்பாகவதைக்கொடுத்தான்

வசனம்.

இதைப் பெற்றுக்கொண்டு அடா பக்கிரி உன்னிடத்தில் முத்துவோடு இருக்கின்றது அந்தவோடு கோட்டைகட்டும் ஆனைப்பாலதை எனக்குக் கொடுமென்றுகேட்க நான் கொடுக்கமாட்டேனென்று சொல்ல கொடுக்காமல்போய்விட்டால் கொல்லுகிறேன்கிளியை.

அப்பாபாலகா கொல்லவேண்டாமக்கிளியை
உயிருடனாயிருந்தால் பின்னுமொன்று கேட்கலாம்
இப்படிச்சொல்லியந்த வோட்டையுங்கைக்கொடுத்தான்
வோட்டையும்பெற்றுக்கொண்டு வேகமாய்பாலகனும்
சொல்லத்தொடர்ந்தானே சிங்காரமாய்திறந்து

வசனம்.

அடாபக்கிரி உன்னிடத்தில் மனிதனைச்செய்கிறதும் சாம்பலாக்கிறதும் நாயாகச்செய்கிறதும் இந்தவித்தைகளடங்கிய மூன்றுபிரம்பு இருக்கிறது அதை கொடென்றுகேட்க பக்கிரி இதைக்கேட்டு அப்பா பாலகா அது எனதுபிராணம் அதைக் கொடுக்கமாட்டேனென்றுச்சொல்ல அப்போது பாலகன்.

கொடுக்காமல்போனால் கிளியைக்கொல்லுகிறேன்
அப்பாநீபாலகா அக்கிளியைக்கொல்லவேண்டாம்
எந்தன்பிராணத்திற்கு பெலனாகவந்தாயடா
இதுயிருந்தென்ன யிப்போதுகாக்கிறது
பிராணமிருந்தால் யெத்தனையோசம்பாதிப்பேன்
இப்படிச்சொல்லியந்த பிரம்புகையில்கொடுத்தான்



வசனம்.

அந்தப்பிரம்பு பெற்றுக்கொண்டு மறுபடியும் அவனைப்பார்த்து அடாபக்கிரி கோட்டைவெளியில் செடிகளாகவும் கல்லாகவும் மலையாகவும் இருப்பது ஏதுவென்றுகேட்க அப்போது பக்கிரி பாலகனைப்பார்த்து அப்பா எழுபேர் வேந்தர் என்மீது யுத்தஞ்செய்யவந்தார் அவரை இப்படி செய்துவிட்டேனென்றுச்சொல்ல இதைக்கேட்டுப் பாலகன் அய்யோ பாவமாச்சுதே அவர்களை எழுப்புவாயென்றுகேட்க அப்பாயென் பகையாளிகளை எழுப்பமாட்டேனென்றுச்சொல்ல பாலகன் கிளியைக் கொல்லுவேனென்றான் அதற்கு பக்கிரி.

கிளியைநீகொன்றால் கொப்பனவேயுந்தனுக்கு
என்னலாபம் யிப்போகிடைக்குமப்பா
இந்தமொழிக்கேட்டு யப்போதுபாலகன்
பக்கிரியைப்பார்த்து பக்குவமாய்ச்சொல்லலானான்
நான்பார்க்கும்வரை நலமாகயெழுப்புவாய்
அந்தச்சமயந்தில் யந்தநல்லபக்கிரி
விபூதிபோட்டே யெழுந்தாரேவேந்தரும்
மந்திரிகளும்சேனைகளும் மகிழ்ந்துயெழுந்தாரே
பக்கிரிதன்னையே தூக்கிக்கொண்டுவந்தாரே
கோட்டைக்குள்ளாக போயெல்லாம் வந்தாரே
கத்தியால்வெட்ட கடுகவேவந்தாரே
அப்போதுபக்கிரி யந்தபாலகனிடம்
வோடிதான்வந்து வொளித்தானேயவனிடம்
நிறுத்தியிருந்துடையா நிர்மலவேந்தரே
ஒளித்தவரைக்கொல்ல புகந்துசாஸ்திரம்சொல்லுதா
அப்போதுவேந்தர் யன்பாகபாலகனை
எந்தவூரெந்ததேசம் யெங்களுக்குச்சொல்லடா
பாருகண்டிபட்டணம் யெந்தனுடபட்டணம்
உன்தாய்தந்தையாரடா நயமுடன்சொல்லடா
ஆர்யவர்த்திவேந்தன் கருணையுள்ளயென்தந்தை
பாலநாகம்மாள் யென்னைப்பெற்றத்தாயாராகும்
அப்போதுயவ்வேந்தர் யன்பாகபாலகனை
வாரியெடுத்து வருந்தமடி மீதுவைத்து
அப்பாபிறந்த யன்புடனேயெங்களை
எழுப்பிவிட்டாய்நீயும் யில்லாமல்போய்விட்டால்
எங்கள்பிழைப்பு யெப்படிபோயிருக்குமோ

இந்தமொழிகளை அப்போகேட்டான்பக்கிரி
நல்லசமர்த்தகாரன் நமதுகோட்டையைப்பிடித்தான்
என்னுடைய ராஜ்யத்தை அவன்கைவசமாக்கிக்கொண்டான்
கொண்டுவந்தக்கிழவியை கொப்பனைமேல்கொண்டுவந்தான்
என்றுசொல்லியவன் வியப்போடுநடந்தானே
அப்போதுபாலகன் வழிமறித்தானந்தவனே
அந்தக்கிளிக்காலே அப்போவொடித்தானே
பக்கிரியப்போது விழுந்தானே பூமிமீது
அப்பாபாலகா கொல்லவேண்டாமக்கிளியை

வசனம்.

இப்படிச்சொல்ல இதுகேட்டுப் பாலகன் கிளியிட்டுநீ வந்து அம்மாபாட்டி நீ இருந்தால் பக்கிரிகொல்லுவான் என்றேசம் வருகிறது என்றுகேட்க அதற்கு அக்கிழவி சம்மதமடைந்து நடக்க இக்கிழவியை அழைத்துக் கொண்டுபோய் வெந்நீரிடம்விட்டு எல்லோரும் சந்தோஷமாயிருக்க முத்துபல்லக்கு கொண்டுவந்து அப்பல்லக்கில் தன் தாயாராகிய நாகம்மாளை அமரச்செய்து,

வாடிவாடிக் கிளிகசக்கியப்போது
பின்னால்சென்று பிடியடியிக்கக்கொம்பை
அப்போதவனிகச்சி அலறியடித்துமே
இவன்தலையுடைய அப்போவேண்டாமென்றேனே
இந்தக்கர்மத்தை யாரிடஞ்சொல்லுவேன்
இப்படிச்சொல்லி பிடித்தானேபிந்திகொம்பை
வாடாநீபக்கிரி அறிவுகெட்டபயலே
முந்திக்கொம்பை எடுத்துக்கொண்டுமுன்னில்
இப்படியான்பிழைத்தா யிந்தபாதுக்குமே
பல்லக்குசுமக்க பாழும்பிராமனேழுதினானே
எடுக்கமாட்டேனென்றுச்சொல்லி வெட்டிதான்நின்றுமேனி
அப்போ கிளிக்கழுத்தை அமுக்கினான்பாலகன்
பக்கிரிக்கப்போ பிராணம்போகுந்தருவாயதால்
அப்பாபாலகா வெடிக்குதேண்டாபல்லக்கு
ஓர்தன்பலத்தால் யேந்துடாகொல்லுமென்று
பிந்திகொம்பை பிடித்தான்வனிகச்சியும்
முந்திக்கொம்பை பிடித்தானேபக்கிரி
பல்லக்குயப்போது புறப்பட்டுவருகிறது



நாகன்னபூடி கரைவிட்டுவந்தாரே
கோட்டையருகினில் யிரக்கினார்பல்லக்குதான்
ஆறுபேர் தந்தைகளை பார்த்தானேபாலகன்
கனதுதந்தையை தான்பார்த்தான்பாலகன்
பாலகனையப்போ பக்ஷமாயெடுத்துக்கொண்டார்
உச்சிமுகர்ந்து உள்ளங்கால்முத்தமிட்டார்
அப்போதுபாலகன் அன்பாகச்சொல்லலானான்
போகலாம்வருவீர் புகழுடன்நமதுதேசம்
இந்தமொழிக்கேட்டு யெழுந்தாரேபேருக்களே
குதிரைமீதுநடங்கா கொப்பனைவேபோட்டாரே
வேந்தரெல்லோரும் வேகமாய்ப்புறப்பட்டார்
அந்தச்சமயத்தில் அன்புள்ளபாலகன்
சிலதுசேனைகளை சிறப்புடன்தானழைத்து
நான்வருமளவும் நீங்களிக்கோட்டைதனை
ஜாக்கிரதையாக காவல்கள்செய்வீரே
இப்படிச்சொல்லி யெழுந்தானேபாலகன்
கருங்குதிரைமீது தானுமேயேறிக்கொண்டு
நடந்தாரேயெல்லோரும் நல்லுடனேகாட்டுமார்க்கம்

வசனம்.

இப்படியிருக்க பாலகன் தனதுபரிவாரத்தை அழைத்துக்கொண்டு எல்லையிலிருக்கும் சக்தி எதிரில்வருக. இப்பாலகனைப் பார்த்தவுடன் வெகுமேனசந்தோஷமாய் தந்தைகளை அழைத்து வந்தீரா என்று கேட்க. பாலகன் இதைக்கேட்டு தேவி யான் சந்தோஷமடைந்து அழைத்துவந்தேன் ஆனால் பக்கிரியிடமிருக்கும் பூதங்கள் மந்திரம் உன்னிடமிருக்கிறது அதை எந்தனுக்கு உபதேசஞ்செய்யவேண்டுமென்றுசொல்ல அதுபோல் தேவி உபதேசஞ்செய்ய அந்தப்பாலகன் அதைப்பார்த்த நிமிஷத்தில் ஸ்மரிக்க பூதங்கள் எதிரில்வந்து நின்றது அதைப்பார்த்து ஆ! பூதமே பக்கிரியழைத்தால் போகவேண்டாமென்று கட்டளைசெய்துவிட்டு எல்லோரும் புறப்பட்டு.

அந்தவிடத்தைவிட்டு அப்போதுபுறப்பட்டான்
பயன்வாதிட்டணம் வந்தானேமறுதினம்
அந்தவிடம்விட்டு புறப்பட்டானப்போது
கிளிப்பட்டணம்வந்து சேர்ந்தானேபாலகன்
அந்தநல்லநகரத்தில் பெருந்தன்படை...
எல்லோருந்தானப்பார்த்து இருக்குஞ்சமயத்தில்
...
சூரியவார்த்திவேந்தன் சொருபாகக்கேட்டானே

வசனம்.

இந்த ...டங்காசப்தத்தைக் கேட்டவுடன் சூரியவார்த்திவேந்தன்கேட்டு ...காவலரையழைத்து ஆரோ யாதிரியவந்திருக்கிறார் அதை அறிந்து

வரும்படி திட்டஞ்செய்ய பாருக்காரர் வந்து பாலகன் எதிரில் நின்று சந்தோஷமடைந்து அய்யா உம்முடைய தந்தை வேந்தர் அழைத்துவரும்படி திட்டஞ்செய்தார் என்றுச் சொன்னவுடனே எல்லோரும் புறப்பட்டு சூரியவர்த்திவேந்தன் எதிரில்வந்து நிற்க இவரைப்பார்த்து அய்யா பாலவர்த்திவேந்தா போனக்காரியஞ் சந்தோஷமடைந்ததோ வென்றுகேட்க, பாலகன் இதைக்கேட்டு ஓ ராஜேந்திரா யான் சந்தோஷத்துடன் இதோ யென்தந்தைமார் மூவரையும் என்தாயையும் அழைத்துவந்தேனென்றுச்சொல்ல வேந்தன் அதிகசந்தோஷமடைந்து தன் புதல்வியைத்தந்து நல்ல சுபமுகூர்த்தத்தில் கலியாணஞ் செய்து முடித்தார். அதின்பிறகு பாலவர்த்திவேந்தன் சூரியவர்த்தி வேந்தனைப்பார்த்து யான் போகவேணும் விடைதருவீரென்றுகேட்க அதுபோல் அவ்வேந்தன் சம்மதமடைந்தார் உடனே பாலகன் தன் பரிவாரத்துடன் புறப்பட்டு தெங்கால பட்டணம் வந்துசேர்ந்தான். சேர்ந்தவுடனே அவ்வேந்தர் இவர்களைப்பார்த்து சந்தோஷமடைந்து நல்ல சுபமுகூர்த்தத்தில் தன் புதல்வியைத்தந்து பாலவர்த்திவேந்தனுக்கு விவாகமுடித்தார். அதன்பிறகு பாலவர்த்திவேந்தன் தன் பரிவாரத்துடன் புறப்பட்டு புலிவேந்தன்பட்டணஞ் சேர்ந்தார்.

காட்டுக்குறிவழியில் கலமர்ந்தேறிப்போட்டார்
வந்துசேனைகளெல்லாம் இன்பமாயமர்ந்தாரே
இந்தச்சேதிகேட்டு இன்பமாய்ப்புலிவேந்தன்
மந்திரியுந்தானும்வந்து மகிழ [illegible]
கண்ணுசந்தோஷித்து கபடமழைத்துச்சென்றார்
சேஷாந்தமுசிசாரித்தார் சிறப்புடன்பாலகனை
அப்பா குமாரா அதிவன்னவேந்தனை
கட்டியணைப்பினை குருசோமனையெங்கே
அய்யாவேந்தர்களும் அன்புடன்சிரவன்
வருகும்வழிதனிலே வன்மைவேந்தனைதின்றதோ
உந்தன்திருமையாலே எந்தன்தாய்தந்தைகளை
கொண்டுவந்தீரய்யா கொப்பனவேயிப்போது
எந்தப்பட்டணம்போகவேண்டுமய்யனே
விடைதாருமையா வேகமாயிப்போது.

வசனம்.

இதைக்கேட்டவுடன் புலிவேந்தன் சந்தோஷமடைந்து அப்பா பாலவர்த்திவேந்தனே இனிகலியாணம் செய்துக்கொள்ள வேண்டுமென்றுச்சொல்ல இதற்கு சம்மதமடைய அப்போது வேதியரை அழைத்து முகூர்த்தங்குறித்து அந்தினத்தில் தன்னுடையெல்லாம் அலங்காரஞ்செய்து பாலவர்த்திவேந்தனுக்கு கலியாணமுடித்தந்து பத்து சவுட்டுநாள் வரையிருந்து பாலவர்த்திவேந்தனையும் தன்மகளையும் கட்டியணைப்பு சந்தோஷமாய் புறப்பட்டு தந்தை தாயையழைத்துக் கொண்டு வந்தான்.



வனமாய்வனங்கடந்து வருகுறாப்போது
காடுசெடிகளும் கண்டுமேதாண்டிவந்தார்
பாலகன்டிபட்டணத்தில் பூஞ்சோலைக்கண்டானே
அந்தநல்லபூஞ்சோலையில் அன்பாகவிறங்கிப்போட்டார்
வந்தசேனைகள்வேந்தர் ஆறுதலாய்தானமர்ந்தார்
இவர்களைவிட்டுமே இன்பமாய்பாலகனும்
ஒண்டியாய்வந்தானே உகந்துதன்மனைக்குமே
வந்துமேபெரியதாயை வாஞ்சையாயழைத்தானே
அம்மாடிநீகேளாய் அன்புடன்யென்வார்த்தை
எல்லோரையழைத்துக்கொண்டு இப்போதுவந்தேனென்றான்
இந்தமொழிக்கேட்டு யெங்குமில்லாசந்தோஷத்தை
சூரியநாகம்மாள் சிந்தையும்பொங்கினாள்
பாலகனையப்போது பூண்டுடனெடுத்துக்கொண்டு
இன்றைக்குவுன்முகத்தை யின்பமாய்பார்த்தோமப்போ
உனதுதந்தைகள்செய்த யிடர்களைபார்த்தாயோ

வசனம்.

அம்மா எனதுதந்தைகளையும் தாயாரையும் யழைத்துக்கொண்டு வந்தேன் என்றுச்சொல்ல இதைக்கேட்ட பெரியதாயார்கள் சந்தோஷமடைந்தார் இதற்குள்பாலகன் காவலரையழைத்து விலங்குகாரசெட்டியை அழைத்துவரும்படி திட்டஞ்செய்ய அதுபோல்காவலர் அழைத்துவருக ஆறுபேர் தாய்களுக்கும் விலங்கிட்டு பிறகு தன்னுடைய காரஞ்செய்ய அந்தச்சமயத்தில் தந்தையான சூரியவர்த்தி வேந்தன் பாலகனைப்பார்த்து அப்பா இதுயேனென்றுக்கேட்க இதை கேட்ட பாலகன் தந்தையே நீங்கள் நாகனாபூமியில் கல்லாலிவிட்டப் பிறகு என்தாய்மார்கள் அமங்கல்ய ஸ்திரீயானார் இப்போது இந்த பந்தலில் உங்கள் எழுபேருக்கும் கலியாணம்போல் செய்துநால்வர் அறிந்து சந்தோஷமடையச் செய்குவேன் என்றுச்சொல்ல இதுகேட்டு சூரியவர்த்திவேந்தன் அப்பாயிந்த ஆறுபேருக்கு உனதிஷ்டம்போல் செய்யாம் எந்தனுக்கு வேண்டாம் என்றுயிருக்க இதைக்கேட்ட பால கன் ஐயா அதியேன் எந்தனுக்குச்சொல்லும் என்றுக்கேட்க அப்போது சூரியவர்த்திவேந்தன் சொல்லத்தொடங்கினான்.

எந்தன்தாயாரான உகந்தபாலநாகம்மாளை
பத்திரிகையால் விரதமதுகேட்டாளே
இப்படிக்கொத்தவளை எப்படிப்பிரிக்கலாம்
இந்தமொழிக்கேட்டு யப்போது பாலகன்
தந்தையேகேளுமென்னிடமுடனேதாயை
செய்யாதபாதிகைகள் செய்யச்சொல்லுகிறேனிப்போ
பரிகைஷகள்பிரசுகிறேன் பண்புடன்வெட்டுவீர்
இப்படிச்சொல்லியே யிரைந்துமேபாலகன்

நாலுதுடையென்னை கலாகமொகாண்டுவந்து
எழுகுதிகாட்டு நகரில் பின்பாயர்தொட்டினூர்
அக்கினியிறப்புமே அனைவருமாக விழுந்தான்
அனாதமிருந்தபோதும் தன்னையுடன்தானுமேபோட்டு
அம்மாடியம்மாடி யம்பாவென்னை பெற்றதாயே
இந்தமோதிரத்தை இப்போவெடுத்துக்கொள்வாய்
இப்படிச்சொல்லி இதுகேட்டாள்நாகம்மாள்
குர்யன்சாகுதிவைத்தான் அருமிழுமேசாகுமிட்டாள்
அப்பாகுமாரா அன்புள்ளபாலகனே
உன்தந்தையன்றி ஒருவருமூட்டபார்த்ததில்லையே
இதுயென்னவென்று சொல்லி யெடுத்தானேமோதிரத்தை
கார்யவர்த்திவேந்தன் கண்டானேயப்போது
பக்கிரியிடத்தில் பகர்ந்தசித்திரமாய்தானப்பா
இந்தமோதிரத்தை யெடுப்பதுவேணிகாமோ
இதுவெல்லாம்கப்பமாட்டேன் இந்தவிந்தையானதிவ்வன்
இதுனையுங்கேட்டானே இப்படியுடன்பாலகனும்
அழுக்குளைய வெட்டிகுன்றப்போது
அந்தகுழிதன்னில் அன்பாகக்கட்டைகளை
போட்டுநெருப்பிட்டு பொரிபொரியாயெரியவே
அந்தத்தீயிதன்னில் அன்பாகவென்னைக்கொட்டி
எரியுஞ்சமயத்தில் இன்பமாய்த்தாயாரை
குதிக்கவேசொன்னானே கொப்பனவேயப்போது

**வசனம்.**

அந்தச்சமயத்தில் கார்யவர்த்திவேந்தன்பார்த்து அப்பா இது குழிப்பது எப்படியென்றால் அந்தக்குண்டத்தில் நாலுமணிநேரம் மொழியாடவேண்டும் பிறகு கரையேறவேணும் அப்போது கட்டிய சேலை பங்கமாகலாகாது. குங்குமம் அழியக்கூடாது. தேகம் கொப்பளிக்கலாகாது இப்படிருந்தால் யான் நம்புவேனென்று சொல்ல.

அப்போது நாகம்மாள் அன்பாகக்குதித்தானே
நாலுமணிநேரம் நலமாயிருந்தாளே
பின்புகரையேறி பிரியமாய்வருகவே
கட்டியசேலைதன்னில் வங்கமிடமில்லை
நெற்றியில்குங்குமம் நலமாயிருந்தது
பங்கமில்லாமல் பெருமையும்வைத்தாளே
அப்போது வேந்தன் அன்பாகமகிழ்ந்து
எந்தன்குலப்பாலா இப்போதமுமென்றான்னவை
இதைக்கேட்டுப்பாலகன் இன்பமாய்மகிழ்ந்தானே
என்னைப்பெற்றதாயார் யென்பதைத்திருவென்றான்



**வசனம்.**

இப்படிச்சொல்லி வேதியனையழைத்து இவர்களுக்குக் கலியாணசாங்கிய முதலானதுஞ்செய்து சம்பிரமமாயிருக்க அப்போது பனிரெண்டுவயது சேனைகளும்பார்த்து அய்யா பாலவர்த்திவேந்தா நாங்கள் எப்படி யெங்களுடைய மாதர்களைப் பார்ப்பதுவென்று சொல்ல அப்போது அவர்களுடைய மாதர்களையழைத்து வினையமிட்டு அந்த பந்தல்தன்னிலே அவர்களுக்குக் கலியாணஞ் செய்துயனுப்பினான். இப்படிநான்குதினமண்டந்தபிறகு ஐந்தாந்தினத்தில் பக்கிரியானவன்.

அப்பா பாலவர்த்திவேந்தா அக்கிளிகொடுமையா
இக்குகிளிக்கொடுக்கேன் உன்னுடபோகலாம்
என்றுமேசொல்ல இதுகேட்டான்பக்கிரி
வனிகச்சங்குவெண்ணை வருகிறாயிப்போது
அடபோடாபடுபாவி அழியெடுத்துவைக்கமாட்டேன்
இப்பாலகனிடத்தில் இன்பமாயானிருப்பேன்
இப்படிச்சொல்ல இதுகேட்டான்பக்கிரியும்
அவ்வண்ணமேசொல்லி நடந்தாரேயிருவரும்
நாலாந்தினத்தில் நாகன்ளமூடிவந்தார்
அப்போதுபாலகன் அன்பாகசொல்லலானான்
கேட்டையாபக்கிரி கிருபையுடனென்வார்த்தை
உந்தன் திரவ்யமெல்லாம் உகந்துமேகாட்டடா
இல்லாமல்போனால் இக்கிளியைகொல்லுகிறேன்
கிளியைநீகொல்லவேண்டாம் கிருபையுடன்காட்டுகிறேன்
தனமிருக்குமிடமெல்லாம் தைர்யமாய்காட்டினான்

**வசனம்.**

அப்போது பாலவர்த்திவேந்தன் கிளிபட்டணத்திலும் கங்காவதி பட்டணத்திலும் புலிவேந்தன் பட்டணத்திலும் இருந்து வண்டிகளும் ஆனைகளும் ஒட்டைகளும் வரவழைத்து பனிரெண்டு ஸ்தம்பத்தினிட நதியிலிருக்கும் தங்கமுதலாகிய நவரத்தினங்களையும் ஐவ்வாது புனுகு முதலான வாசனை திரவியங்களையும் எடுத்து வண்டிகள்மீதும் ஆனைகள் மீது ஒட்டைகள்மீது ஏற்றிதனது பட்டணத்துக்கொண்டுபோகும்படி திட்டஞ்செய்து விட்டு அன்னாட்டிற்கு சுற்றிலும் இராநின்ற ஒட்டரை யழைத்து அக்கோட்டைகளை இடித்து தாளிதஞ்செய்து அதில் எருக்கன் விதைத்து எட்டி முத்திக்கொட்டை இப்படிக்கொத்த விரைகள் விதைத்துவிட்டு வண்டிமீது ஏறுஞ்சமயத்தில் பக்கிரிபார்த்து அப்பா இன்னாட்டில் நானும் இயில் பிச்சையெடுத்து பிழைக்கிறேன் கிளிகொடுமென்று கேட்க அதற்கு பாலகன் அடா பக்கிரி உனக்கு ஆசையிருந்தால் அவருடன்சொல்லிக்கொள் பயமில்லையென்றுச் சொல்ல பக்கிரி தடியத்தக்கிளியை பிடித்தான் கிளிதலை பாலகன்கையிலும் கால்கள் பக்கிரிகையிலும் அகப்பட்டு இருக்கையப்போது,

விட்டாவிட்டா பாலவர்த்திவேந்தனே
விடமாட்டேன்விடமாட்டேன் பக்கிரிசகிப்பு
இப்படியிருவரும் இகலாத்துவேஷமிகுந்துப்போது
இனிகல்யாணம்போது கிள்ளிநாகன்பிழைத்து
நல்லநாகாவென்று அப்போ துடக்கிரி
பலிபோல்விழுந்தானே மண்மீதப்போது
பக்கிரிபிராணனும் போச்சுதிகிரிதாக

வசனம்.

இப்படி பக்கிரி செத்தபிறகு பாலவர்த்திவேந்தன் குருக்குள்நானே இந்த திரவியம் நமக்கென்று சொல்லி சோகுர்வண்டிகள் இருப்பிக்கொண்டு வந்து அன்பு நாபக்கிரிகளை பரைந்து அவனுக்குமேகமி கட்டச்செய்து அந்தகோரி சுற்றிலும் விந்தையான புஷ்பசோலைய மைத்துவிட்டு அவனுக்குச் செய்யவேண்டிய கர்மங்களைச்செய்துவிட்டு மிகுதி திரவியத்தை கொரியேல்லைத்து இவைகளாய்சோலை தாபமிடம்படி திட்டஞ்செய்து அந்த பக்கிரிகளிடத்தில் இதையெல்லாம் ஒப்பிவித்துவிட்டு பாலகன் பாஜகன்டி பட்டணம் வந்தவுடனே தந்தைதான் இராஜ்யபாரம் பூண்டுகொண்டிருந்தார் புத்ரகிரப்பட்டணத்தை தந்தைக்கு மருமகனுக்கு பிறகு மாமன்மார் காலத்திற்குப்பிறகு பாலவர்த்திவேந்தன் அந்நாட்டை பரிபாலித்துக்கொண்டு சுகமாய் நாடாளு வாழ்ந்திருந்தான் ஆகையால் இந்தபாலநாகம்மாள் கதை வாசிக்கின்றர்களும் கேட்டபேர்களும் அவரவர் கஷ்டாநிஷ்டம் தொலைந்து புத்ரகளத்ர சம்பத்தை அடைந்து இருக்கும்படி ஸ்ரீகைலாசபதியாகிய உமாநாயகனை தினந்தோறும் தியானிக்கிறேன்.

வாழ்த்து.

எண்சீர் ஆசிரியவிருத்தம்.

சீர்பெருக சிறப்புடனே ... யோர்பாதம்
சித்தமகிழ்ந்து ... வாழ்க
பேர்பெருக பாலநாகம்மாள்தானும்
பெண்பாவை ... வாழ்க
நீர்வாழ்க ... வாழ்க
ஸ்ரீகைலை ... வாழ்க
... வாழ்க
கன்னி... குருபாதம் சென்னிமேல்வாழ்க.

பாலநாகம்மாள் கதை

முற்றிற்று.

118116